1

BAHASA TAMIL TINGKATAN 1

KSSM

KURIKULUM BERSEPADU SEKOLAH MENENGAH

KEMENTERIAN PELAJARAN MALAYSIA

# தமிழ்மொழி

# BAHASA TAMIL

## TINGKATAN 1
## படிவம் 1

KEMENTERIAN PENDIDIKAN MALAYSIA

RM10.85
ISBN 978 - 983 - 9286 - 97 - 7
9 789839 286977
FT041001

# RUKUN NEGARA

**Bahawasanya Negara Kita Malaysia**
mendukung cita-cita hendak;

Mencapai perpaduan yang lebih erat dalam
kalangan seluruh masyarakatnya;

Memelihara satu cara hidup demokrasi;

Mencipta satu masyarakat yang adil di mana
kemakmuran negara akan dapat dinikmati bersama
secara adil dan saksama;

Menjamin satu cara yang liberal terhadap tradisi-tradisi
kebudayaannya yang kaya dan pelbagai corak;

Membina satu masyarakat progresif yang
akan menggunakan sains dan teknologi moden;

MAKA KAMI, rakyat Malaysia, berikrar
akan menumpukan seluruh tenaga dan usaha kami
untuk mencapai cita-cita tersebut berdasarkan
prinsip-prinsip yang berikut:

**KEPERCAYAAN KEPADA TUHAN**
**KESETIAAN KEPADA RAJA DAN NEGARA**
**KELUHURAN PERLEMBAGAAN**
**KEDAULATAN UNDANG-UNDANG**
**KESOPANAN DAN KESUSILAAN**

(Sumber: Jabatan Penerangan, Kementerian Komunikasi dan Multimedia Malaysia)

KURIKULUM STANDARD SEKOLAH MENENGAH

# தமிழ்மொழி

# BAHASA TAMIL

## Tingkatan 1
## படிவம் 1


**PENULIS** / ஆசிரியர்கள்

CHANDRAN VERAMUTTHU
சந்திரன் வீரமுத்து

SARASWATHY KANNAN
சரஸ்வதி கண்ணன்

**EDITOR** / பதிப்பாசிரியர்கள்

MALAR VALLI VELLOO
மலர்வள்ளி வேலு

THAMILSELVI SINGARAM
தமிழ்செல்வி சிங்காரம்

**PEREKA BENTUK** / வடிவமைப்பாளர்

AMOS RAJA
ஆமோஸ் ராஜா

PRABU PALANI
பிரபு பழனி

**ILUSTRATOR** / ஓவியர்

AZRUL HELMI BIN ABD. WAHAB
அஸ்ருல் ஹெல்மி பின் அப்துல் வஹாப்



Multi Educational Book Enterprise
2016

KEMENTERIAN PENDIDIKAN MALAYSIA

No Siri Buku : 0069

KPM2016 ISBN 978-983-9286-97-7
Cetakan Pertama 2016

© **Kementerian Pendidikan Malaysia**

Hak Cipta Terpelihara. Mana-mana bahan dalam buku ini tidak dibenarkan diterbitkan semula, disimpan dalam cara yang boleh dipergunakan lagi, ataupun dipindahkan dalam sebarang bentuk atau cara, baik dengan cara bahan elektronik, mekanik, penggambaran semula mahupun dengan cara perakaman tanpa kebenaran terlebih dahulu daripada Ketua Pengarah Pelajaran Malaysia, Kementerian Pendidikan Malaysia. Perundingan tertakluk kepada perkiraan royalti atau honorarium.

**Diterbitkan untuk Kementerian Pendidikan Malaysia oleh:**
**Multi Educational Book Enterprise**
No. 22A-2, Jalan PJS 8/4,
Dataran Mentari, Bandar Sunway,
46150 Petaling Jaya,
Selangor Darul Ehsan.
Tel: 03-5636 2568
Faks: 03-5636 0825
Laman Web: http://www.multiedu.com.my

**Reka Letak dan Atur Huruf**
**Multi Educational Book Enterprise**
Muka Taip Teks: Dhanyeta
Saiz Muka Taip Teks:12/11 poin

**Dicetak oleh :**
Aslita Sdn. Bhd. (146102-U)
No. 20, Jalan 4/10B, Spring Crest Industrial Park,
Batu Caves, 68100 Kuala Lumpur.
Tel:03-61867645
Faks:03-61867635

# PENGHARGAAN

Penerbitan buku teks ini melibatkan kerjasama banyak pihak. Sekalung penghargaan dan terima kasih ditujukan kepada semua pihak yang terlibat:

- Jawatankuasa Penambahbaikan Pruf Muka Surat, Bahagian Buku Teks, Kementerian Pendidikan Malaysia.
- Jawatankuasa Penyemakan Pembetulan Pruf Muka Surat, Bahagian Buku Teks, Kementerian Pendidikan Malaysia.
- Jawatankuasa Penyemakan Naskhah Sedia Kamera, Bahagian Buku Teks, Kementerian Pendidikan Malaysia.
- Jawatankuasa Peningkatan Mutu Penerbit.
- Kementerian Pelancongan dan kesenian Malaysia
- SMK Chaah, Johor
- SMK Vivekananda, Brickfields, Kuala Lumpur
- SJKT Serdang, Selangor
- Yayasan Sukan dan kebudayaan India, Malaysia
- Akhbar Harian Makkal Osai
- En.K.Murugan (Bekas Penyelia Sekolah-Sekolah Tamil Selangor)
- En.P. Richardsamy

Ribuan terima kasih juga diucapkan kepada pihak yang telah memberi sumbangan dalam menjayakan penerbitan buku teks ini. Pelbagai inisiatif telah diambil oleh pihak penerbit untuk mengesan semua pemilik hak cipta bahan dalam buku teks ini. Walau bagaimanapun, pihak penerbit mengalu-alukan jasa baik pihak berkenaan untuk membenarkan kami menerbit semula bahan itu. Diharapkan maklumat pihak berkenaan dapat kami peroleh supaya dapat merakamkan ucapan penghargaan dalam edisi yang akan datang.

# உள்ளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| | | முன்னுரை | iv |
| | | மொழிக்கூறுகளுக்கான படச் சின்னங்கள் | v |
| | | சிந்தனைக் குறிவரைவுகள் | vi |
| | | தொகுதி படர்ச்சி | vii |
| தொகுதி | 1 | மொழியும் கடமையும் | 1 |
| தொகுதி | 2 | தமிழர் பாரம்பரிய விளையாட்டுகள் | 10 |
| தொகுதி | 3 | பண்பாட்டைப் போற்றுவோம்! | 21 |
| தொகுதி | 4 | இயற்கையை நேசிப்போம் | 32 |
| தொகுதி | 5 | உடல் நலம் பேணுவோம் | 40 |
| தொகுதி | 6 | காலத்தைப் போற்றுவோம் | 51 |
| தொகுதி | 7 | தகவல்களும் பாதுகாப்பும் | 60 |
| தொகுதி | 8 | தமிழர் போற்றும் கலைகள் | 72 |
| தொகுதி | 9 | கவரும் விளம்பரங்கள் | 84 |
| தொகுதி | 10 | சுற்றுச்சூழலைக் காப்போம் | 96 |
| தொகுதி | 11 | தொண்டு மனப்பான்மை | 108 |
| தொகுதி | 12 | நன்மை செய்யும் நட்பு | 118 |
| தொகுதி | 13 | மலேசியக் கொண்டாட்டங்கள் | 128 |
| தொகுதி | 14 | பாதுகாப்பு வேண்டும் | 137 |
| தொகுதி | 15 | மனிதநேயம் | 147 |
| தொகுதி | 16 | அறிவியல் தொழில்நுட்பம் | 156 |
| தொகுதி | 17 | விளையாட்டுப் போட்டி | 166 |
| தொகுதி | 18 | அறிவோம்! போற்றுவோம்! | 176 |
| தொகுதி | 19 | நற்பண்புகள் | 189 |
| தொகுதி | 20 | தன்முனைப்பு | 199 |
| தொகுதி | 21 | சுற்றுலாத் துறை | 210 |
| | | மீள்பார்வைப் பயிற்சி - செய்யுள் மொழியணி | 221 |
| | | மீள்பார்வைப் பயிற்சி - இலக்கணம் | 226 |
| | | அகர நிரல் குறிப்பு | 229 |
| | | துணை நூல் பட்டியல் | 230 |

# முன்னுரை

'சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத் துலங்குக வையகமே'

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' எனும் கணியன் பூங்குன்றனாரின் பொன்மொழியை நெஞ்சத்தில் தாங்கி, 'தமிழ் எங்கள் உயிர் என்பதாலே வெல்லும் தரமுண்டு தமிழர்க்கு இப்புவிமேலே' எனும் பாவேந்தர் பாரதிதாசனின் வைர வரிகளை நினைந்து, அதில் நனைந்து வான்புகழ் கொண்ட தமிழ்த் தாய்க்குத் தரமான கல்வியைப் பெற்றுத் தலைவணங்குவது நம் அனைவரின் தலையாயக் கடமையாகும்.

தேமதுரத் தமிழோசை உலகமெங்கும் பரவும் வகை செய்து தமிழ்மொழியைச் சிறப்பிக்க வேண்டும் எனும் நோக்கில் தமிழ்மொழிப் பாட நூல்கள் பெரிதும் பங்காற்றுகின்றன. புரட்சிக் கவிஞர்கள் பாடிய புதுமைப் பாக்கள், சங்கத் தமிழ் இலக்கியங்கள், இதிகாச புராணங்கள், முறையான இலக்கணப் பயன்பாடுகள், தொல்காப்பியம் போன்ற தமிழினச் செல்வங்களை மாணவர்களின் மனத்தில் விதைத்துச் செழிப்பாகத் துளிர்விட்டு, அரும்பாக மலர அடிப்படையாகத் துணைபுரிவது தமிழ்ப் பாடநூலே. இந்நூலானது கற்றல் கற்பித்தலில் மிக முக்கியமான கூறாக அமைகிறது. இப்பாடநூல் மொழியை மட்டுமின்றி தேசியக் கல்வித் தத்துவமான இறைநம்பிக்கை, இறைவழி நிற்றல் எனும் அடிப்படையில் அறிவாற்றல், ஆன்மிகம், உள்ளம், உடல் ஆகியவற்றை ஒன்றிணைத்து தனி மனிதனின் ஆற்றலையும் உருவாக்கத் துணைபுரிகின்றது.

தமிழ்மொழியைக் கற்கும் மாணவமணிகள் ஆளுமைத் திறன், பொது அறிவு, நற்பண்பு, குடிமை, பிற சமுதாயப் பண்பாடுகளை மதித்தல், சமய நெறிகளைப் போற்றிப் பாதுகாத்தல் ஆகிய உயர்ந்த கூறுகளில் சிறந்து விளங்க இப்பாடநூல் ஒரு வழிகாட்டியாக அமையும் என்பதில் ஐயமில்லை.

கல்வி கற்ற சமுதாயமே ஒரு நாட்டை வளப்படுத்தும் ஆற்றல் படைத்ததாகக் கருதப்படுகின்றது. கற்றவர்களால் மட்டுமே உலக மாற்றத்தை உணர்ந்து, அதற்கேற்ப வாழ முடியும். எனவேதான், கற்றல் கற்பித்தலில் 21ஆம் நூற்றாண்டிற்குரிய திறனும் பண்பும் புகுத்தப்பட்டுள்ளன. இதன் அடிப்படையில் சிந்தனைத் திறன், தொழில், வாழ்வியல் திறம் கொண்ட மாணவர்களையும் உருவாக்க வேண்டும்.

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே"

என்பதற்கேற்ப மாற்றங்களையும் புதுமைகளையும் அனைவரும் ஏற்கும் வண்ணம் படைப்பதே சிறப்பு. அவ்வகையில் இப்பாட நூலானது படிவம் ஒன்றில் காலடி பதிக்கும் மாணவர்களுக்கு மிகச் சிறப்பான நூலாக அமையும்.

இப்பாடநூலில் மொத்தம் 21 தொகுதிகள் உள்ளன. ஒவ்வொரு தொகுதியும் கேட்டல் பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகிய கூறுகளைக் கொண்டுள்ளது. மேலும், செய்யுள் மொழியணிக் கூறுகளும் இலக்கணக் கூறுகளும் இதில் இணைக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு தொகுதியிலும் மாணவர்களின் சிந்தனையை மேம்படுத்த உயர்நிலைச் சிந்தனை நடவடிக்கைகளும் இணைக்கப்பட்டுள்ளன. மாணவர்களின் ஆர்வத்தைக் கற்றல் கற்பித்தலில் முழுமையாக ஈடுபடச் செய்ய ஆசிரியப் பெருந்தகைகள் பல மகிழ்ச்சியூட்டும் கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்வது சிறப்பாகும். சிக்கலுக்குத் தீர்வு காணும் அடிப்படையிலான கற்றல் போன்றவை விளைபயன்மிக்க கற்றலுக்கு வழிகோலும். எதிர்காலவியல் அணுகுமுறையையும் இணைத்துக் கொள்வது கற்றலை மேலும் வலுவாக்கும். இணையத்தள நோக்குக் குறியீடுகளான QR & AR பயன்பாடு, தகவல்களை மேலும் தெளிவாக அறிந்து கொள்ள உறுதுணையாக அமைகின்றன.

சிறந்த நல்லாசான்களாக விளங்கும் நாம் அனைவரும் ஒன்றிணைந்து தமிழ்க்கல்வி சிறக்கப் பாடுபட வேண்டும். இறுதியாக எங்களின் எண்ணங்களை எழுத்து வடிவமாக்கி அவற்றைத் தொகுத்துச் சிறந்த பாடநூலாக்க உதவி நல்கிய மலேசியக் கல்வி அமைச்சின் பாடநூல் பிரிவுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'தொடங்குக பணியைத் தொடங்குக அறத்தை
கடலிலும் வானிலும் கவினுறு நிலத்திலும்'
- பாரதிதாசன்

நன்றி,
ஆசிரியர்கள்

## மொழிக்கூறுகளுக்கான படச் சின்னங்கள்

தொகுதி

செய்யுளும் மொழியணியும்

கேட்டல் பேச்சு

வளப்படுத்துதல்

வாசிப்பு

குறைநீக்கல்

எழுத்து

உயர்நிலைச் சிந்தனை

இலக்கணம்

அறிந்துகொள்க

இணையத் தளம்

QR நோக்குக் குறியீடு

App Store

Google play

ஒரு தலைப்பின் உள்ளடக்கத்திற்குத் தொடர்புடைய அகப்பக்கத்தைத் தேட மாணவர்களை ஊக்குவித்தல்.

தொடர்புடைய தேடுபொருளைப் பயனீட்டாளர்கள் விரைவில் தேடிட (QR) நோக்குக் குறியீடு துணை புரிகிறது.

ஜாப்பரைப் (ZAPPAR) பெறவும்

Google play

App Store


முன்கூட்டியே ஜாப்பர் (Zapper) எனும் செயலியைப் பதிவிறக்கம் செய்து இந்நோக்குக் குறியீட்டை அடையவும்.

இங்கு நோக்குக

AR நோக்குக் குறியீடு


# சிந்தனைக் குறிவரைவுகள்

1




வட்ட வரைபடம்
(சூழலுக்கு ஏற்ப வரையறுத்தல்)

2




குமிழி வரைபடம்
(சொல் சொற்றொடர்களைக் கொண்டு விவரித்தல்)

3




பல்நிலை நிரலொழுங்கு வரைபடம்
(காரணங்களையும் விளைவுகளையும் ஆராய்தல்)

4




இரட்டிப்புக் குமிழி வரைபடம்
(ஒற்றுமை வேற்றுமைகளை அறிதல்)

5




இணைப்பு வரைபடம்
(முழுமைப் பொருளையும் பகுதியையும் பகுப்பாய்வு செய்தல்)

6




நிரலொழுங்கு வரைபடம்
(கருத்துகளை நிரல்படுத்துதல்)

7



மர வரைபடம்
(வகைப்படுத்துதல்; குழுமப்படுத்துதல்)

8



பால வரைபடம்
(ஒற்றுமையைக் காணுதல்)

## தொகுதி படர்ச்சி

| கருப்பொருள் | தலைப்பு | கற்றல் தரம் | மொழியணி / இலக்கணம் | சிந்தனைக் குறிவரைவுகள் | உயர்நிலைச் சிந்தனைத்திறன் |
|---|---|---|---|---|---|
| **தொகுதி 1**<br><br>மொழியும் கடமையும் | 1. சொற்போர்<br>2. மொழியும் சிறப்பும்<br>3. மொழி விழா<br>4. செய்யுளும் மொழியணியும் | 1.1.1<br>2.2.1<br><br>3.2.1<br>4.2.1 | திருக்குறள் (எண் 69) | நிரலொழுங்கு வரைபடம்<br><br>குமிழி வரைபடம் | பாடம் 4:<br>வளப்படுத்துதல் |
| **தொகுதி 2**<br><br>தமிழர் பாரம்பரிய விளையாட்டுகள் | 1. மறைந்துவரும் விளையாட்டுகள்<br>2. சிலம்பம்<br>3. விளையாட்டு மன்றம்<br>4. இலக்கணம் | 1.2.1<br><br>2.3.1<br>3.3.1<br><br>5.1.1 | இலக்கணம் - அகச்சுட்டு புறச்சுட்டு | குமிழி வரைபடம் | பாடம் 2:<br>இடுபணி 2<br><br>பாடம் 3:<br>இடுபணி 1 |
| **தொகுதி 3**<br><br>பண்பாட்டைப் போற்றுவோம்! | 1. பொங்கலோ பொங்கல்<br>2. பண்பாட்டு விழா<br>3. கலைகளைப் போற்றுவோம்<br>4. செய்யுளும் மொழியணியும் | 1.3.1<br><br>2.1.1<br><br>3.1.1<br>3.1.2<br>4.4.1<br>4.6.1 | இணைமொழி மரபுத்தொடர் | | பாடம் 2:<br>இடுபணி 3 |
| **தொகுதி 4**<br><br>இயற்கையை நேசிப்போம் | 1. அழிந்துவரும் காடுகள்<br>2. காடுகளைக் காப்போம்<br>3. காடுகளைக் காக்கும் வழிமுறைகள்<br>4. இலக்கணம் | 1.4.1<br><br>2.3.2<br><br>3.2.2<br><br>5.5.1 | இலக்கணம் - 3 ஆம் வேற்றுமை உருபு | | பாடம் 2:<br>இடுபணி 2 |
| **தொகுதி 5**<br><br>உடல்நலம் பேணுவோம் | 1. இரத்ததான முகாம்<br>2. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்<br>3. உடல் பருமன்<br>4. செய்யுளும் மொழியணியும் | 1.4.2<br><br>2.1.3<br><br>3.4.2<br>4.4.1<br>4.6.1 | இணைமொழி மரபுத்தொடர் | நிரலொழுங்கு வரைபடம் | பாடம் 2:<br>இடுபணி 2 |

| கருப்பொருள் | தலைப்பு | கற்றல் தரம் | மொழியணி / இலக்கணம் | சிந்தனைக் குறிவரைவுகள் | உயர்நிலைச் சிந்தனைத்திறன் |
|---|---|---|---|---|---|
| **தொகுதி 6**<br>காலத்தைப் போற்றுவோம் | 1. நேரத்தோடு செயல்படுவோம்<br>2. காலம் பொன்னானது<br>3. தகவல் தரும் வானொலி<br>4. இலக்கணம் | 1.4.1<br>2.4.1<br>3.2.1<br>5.5.2 | இலக்கணம்<br>- வலிமிகா இடங்கள் | நிரலொழுங்கு வரைபடம் | பாடம் 2:<br>இடுபணி 1 |
| **தொகுதி 7**<br>தகவல்களும் பாதுகாப்பும் | 1. பெருகிவரும் விபத்துகள்<br>2. சாலைப் பாதுகாப்பு<br>3. போக்குவரத்துக் குற்றங்கள்<br>4. செய்யுளும் மொழியணியும் | 1.5.1<br>2.4.1<br>3.3.1<br>4.7.1 | பழமொழி | - வட்ட வரைபடம்<br>- பல்நிலை நிரலொழுங்கு வரைபடம் | பாடம் 1:<br>இடுபணி 2<br>இடுபணி 6<br>பாடம் 2:<br>இடுபணி 2 |
| **தொகுதி 8**<br>தமிழர் போற்றும் கலைகள் | 1. இன்னிசை விழா<br>2. நயமிகு நாடகக் கலை<br>3. இசைக் கல்வி<br>4. இலக்கணம் | 1.4.2<br>2.3.3<br>3.4.3<br>5.2.2 | இலக்கணம் -<br>குன்றியவினை<br>குன்றாவினை | வட்ட வரைபடம் | பாடம் 2:<br>இடுபணி 2<br>பாடம் 3:<br>இடுபணி 2 |
| **தொகுதி 9**<br>கவரும் விளம்பரங்கள் | 1. கவர்ச்சியான விளம்பரம்<br>2. புத்தகக் கண்காட்சி<br>3. விளம்பரங்களும் விளைவுகளும்<br>4. செய்யுளும் மொழியணியும் | 1.2.1<br>2.1.2<br>3.4.5<br>4.1.1<br>4.5.1 | இரட்டைக்கிளவி<br>உவமைத்தொடர் | குமிழி வரைபடம் | பாடம் 2:<br>இடுபணி 1 |
| **தொகுதி 10**<br>சுற்றுச்சூழலைக் காப்போம் | 1. வளமான வாழ்வு<br>2. ஆறுகளை நேசிப்போம்<br>3. அழகை இரசித்தேன்<br>4. இலக்கணம் | 1.4.1<br>2.3.2<br>3.4.6<br>5.4.1 | இலக்கணம்<br>- வலிமிகும் இடங்கள் | குமிழி வரைபடம் | பாடம் 2:<br>இடுபணி 2<br>இடுபணி 3 |

| கருப்பொருள் | தலைப்பு | கற்றல் தரம் | மொழியணி / இலக்கணம் | சிந்தனைக் குறிவரைவுகள் | உயர்நிலைச் சிந்தனைத்திறன் |
|---|---|---|---|---|---|
| **தொகுதி 11**<br>தொண்டு மனப்பான்மை | 1. சேவையைப் போற்றுவோம்<br>2. தமிழவேள் கோ.சாரங்கபாணி<br>3. நன்றி மறவேல்<br>4. செய்யுளும் மொழியணியும் | 1.3.2<br>2.2.2<br>3.4.4<br>4.3.1 | மூதுரை - மன்னனும்... | | பாடம் 2: இடுபணி 3<br>பாடம் 4: இடுபணி 1 |
| **தொகுதி 12**<br>நன்மை செய்யும் நட்பு | 1. நண்பர்கள் பலவிதம்<br>2. நட்புக்கு இலக்கணம்<br>3. அன்பின் எல்லை<br>4. இலக்கணம் | 1.1.1<br>2.2.2<br>3.4.7<br>5.3.1 | இலக்கணம் - உடம்படுமெய்<br>- யகர உடம்படுமெய்<br>- வகர உடம்படுமெய் | இணைப்பு வரைபடம் | பாடம் 1: இடுபணி 2<br>பாடம் 2: இடுபணி 2 |
| **தொகுதி 13**<br>மலேசியக் கொண்டாட்டங்கள் | 1. நோன்புப் பெருநாள்<br>2. தீபத் திருநாள்<br>3. நிகழ்ச்சியறிக்கை<br>4. செய்யுளும் மொழியணியும் | 1.3.1<br>2.1.1<br>3.4.1<br>4.2.1 | திருக்குறள்<br>- அழுக்காறு... (எண் 35) | குமிழி வரைபடம் | பாடம் 2: இடுபணி 2 |
| **தொகுதி 14**<br>பாதுகாப்பு வேண்டும் | 1. வாழ்ந்து காட்டுவோம்<br>2. பாரம்பரிய நடனங்கள்<br>3. துளிர்ந்தது நட்பு<br>4. இலக்கணம் | 1.1.1<br>2.3.3<br>3.4.7<br>5.2.1 | இலக்கணம்<br>- காரணப்பெயர்<br>- இடுகுறிப்பெயர் | | பாடம் 2: இடுபணி 2<br>பாடம் 3: இடுபணி 1 |
| **தொகுதி 15**<br>மனிதநேயம் | 1. சிறார் வதை<br>2. பரிவுமிக்க சமுதாயம்<br>3. நற்பண்புகள்<br>4. செய்யுளும் மொழியணியும் | 1.5.1<br>2.4.1<br>3.2.2<br>4.3.1 | தேவாரம்<br>- விறகில் தீயினன்.... | வட்ட வரைபடம் | பாடம் 1: இடுபணி 2<br>பாடம் 2: இடுபணி 3 |


| கருப்பொருள் | தலைப்பு | கற்றல் தரம் | மொழியணி / இலக்கணம் | சிந்தனைக் குறிவரைவுகள் | உயர்நிலைச் சிந்தனைத்திறன் |
|---|---|---|---|---|---|
| **தொகுதி 16**<br>அறிவியல் தொழில்நுட்பம் | 1. நவீன உலகம்<br>2. தொலைத் தொடர்பு<br>3. இயந்திர மனிதன்<br>4. இலக்கணம் | 1.2.1<br>2.2.1<br>3.4.6<br>5.2.2 | இலக்கணம் - குன்றியவினை குன்றாவினை | குமிழி வரைபடம் | பாடம் 1:<br>இடுபணி 3 |
| **தொகுதி 17**<br>விளையாட்டுப் போட்டி | 1. திடல் தடப்போட்டிகள்<br>2. ஒரு மாணவர் ஒரு விளையாட்டு<br>3. குறுக்கோட்டம்<br>4. செய்யுளும் மொழியணியும் | 1.4.2<br>2.3.1<br>3.4.1<br>4.2.1 | திருக்குறள்<br>- குணம்நாடி...<br>(எண் 504) | நிரலொழுங்கு வரைபடம் | பாடம் 2:<br>இடுபணி 2 |
| **தொகுதி 18**<br>அறிவோம்! போற்றுவோம்! | 1. இலக்கிய இன்பம்<br>2. கதை சொல்வோம் வாரீர்!<br>3. அறிவாயா!<br>4. இலக்கணம் | 1.4.1<br>2.1.2<br>3.4.3<br>5.4.1 | இலக்கணம் - வலிமிகும் இடங்கள் | - குமிழி வரைபடம்<br>- பல்நிலை நிரலொழுங்கு வரைபடம் | பாடம் 1:<br>இடுபணி 4 |
| **தொகுதி 19**<br>நற்பண்புகள் | 1. நன்றி நவில்வோம்<br>2. அன்புள்ள தோழி<br>3. நலம் விசாரித்தல்<br>4. செய்யுளும் மொழியணியும் | 1.3.2<br>2.1.3<br>3.4.2<br>4.7.1 | பழமொழி -<br>தொட்டிற்...<br>ஒரு காசு... | மரவரைபடம் | பாடம் 4:<br>இடுபணி 1 |
| **தொகுதி 20**<br>தன்முனைப்பு | 1. வெற்றி நிச்சயம்<br>2. முயற்சி திருவினையாக்கும்<br>3. ஒழுக்கம்<br>4. இலக்கணம் | 1.3.1<br>2.2.1<br>3.4.5<br>5.3.1 | இலக்கணம் - உடம்படுமெய் | - குமிழி வரைபடம்<br>- இணைப்பு வரைபடம் | பாடம் 4:<br>இடுபணி 4 |
| **தொகுதி 21**<br>சுற்றுலாத் துறை | 1. மலேசியாவுக்கு வாரீர்!<br>2. சுகமான சுற்றுலா<br>3. உழவுத்தொழில்<br>4. செய்யுளும் மொழியணியும் | 1.5.1<br>2.2.2<br>3.1.1,<br>3.1.2<br>4.5.1 | உவமைத்தொடர் | குமிழி வரைபடம் | பாடம் 1:<br>இடுபணி 2<br>இடுபணி 4 |

# தொகுதி 1

# மொழியும் கடமையும்

## பாடம் 1 சொற்போர்

உரையாடி நிரல்படக் கூறுக.




1.1.1

- செவிமடுத்தவற்றிலுள்ள கருத்துகளை நிரல்படக் கூறுவர்.

## இடுபணி 1

**கலந்துரையாடலில் காணப்படும் கருத்துகளை நிரல்படுத்திக் கூறுக.**


## இடுபணி 2

**செவிமடுத்த கருத்துகளை நிரல்படக் கூறுக.**

- இறுதியாகத் தமிழ்மொழிக் கழகத்தின் மதியுரைஞர் திரு. மணிமுரசு நன்றியுரை நிகழ்த்தினார்.
- நிகழ்ச்சியின் உச்சமாக மாணவர்களின் படைப்பான ஓரங்க நாடகம் ஒன்று இடம் பெற்றது.
- நிகழ்ச்சியில் முதல் அங்கமாகக் கழகச் செயலாளர் செல்வி தமிழினியாள் வரவேற்புரை நிகழ்த்தினார்.
- மாணவர்களும் ஆசிரியர்களும் சிறப்பு விருந்தினர்களும் பெற்றோர்களும் பள்ளி மண்டபத்தில் அமர்ந்தவுடன் நிகழ்ச்சி இனிதே தொடங்கியது.
- நிகழ்ச்சியின் மூன்றாவது அங்கமாகப் படிவம் ஒன்றைச் சார்ந்த மாணவர்களின் பரத நாட்டியம் சிறப்பாக இடம் பெற்றது.
- நிகழ்ச்சியின் தொடக்கத்தில் தமிழ் வாழ்த்துப் பாடல் பாடப் பெற்றது.
- இந்நிகழ்ச்சியில் பள்ளி முதல்வர் திரு.க.இளங்குமரனாரின் சிறப்புரை இரண்டாம் அங்கமாக இடம் பெற்றது.

## இடுபணி 3

**மேற்காணும் கருத்துகளை நிரலொழுங்கு வரைபடத்தில் நிரல்படுத்துக.**



## இடுபணி 4

**பள்ளியில் பரிசளிப்பு விழாவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சி நிரலை நிரல்படுத்தி வகுப்பில் படைத்திடுக.**

| | | |
|---|---|---|
| இறைவாழ்த்து | சிறப்புரை | மாணவர் படைப்பு |
| தேசியப் பண் | நன்றியுரை | பரிசளிப்பு |
| வரவேற்புரை | சிறப்பு விருந்தினர்களை வரவேற்றல் | தேநீர் விருந்து |

# பாடம் 2 மொழியும் சிறப்பும்

**கருப்பொருளையும் கருச்சொற்களையும் அடையாளம் காண்க.**

## அ தமிழ் இலக்கியம்

தமிழ் இலக்கியம் ஓர் இனத்தின் பண்டைய மரபுகளையும் பண்பாட்டையும் காத்து நிலைநிறுத்துகின்றது. தமிழ்மொழியையும் கலைகளையும் வளர்த்துச் செம்மைப்படுத்தத் துணைபுரிகின்றது. தமிழ் இலக்கியத்தை வளர்க்க மின்னியல் ஊடகங்களும் அச்சு ஊடகங்களும் முக்கியப் பங்காற்ற முடியும். இலக்கிய உரை, கவிதைக் களம், பட்டி மன்றம், வழக்காடு மன்றம் போன்ற நிகழ்ச்சிகளை மின்னியல் ஊடகங்களில் ஒலி, ஒளிபரப்பலாம். நாளிதழ்கள், வார மாத இதழ்கள், சஞ்சிகைகள் போன்ற அச்சு ஊடகங்களின்வழி தமிழ்ச் சமுதாயத்தின் மனத்தை ஈர்க்கும் இலக்கியப் படைப்புகளை வெளியிடலாம்.

## ஆ செம்மொழி

ஒரு மொழி செம்மொழித் தகுதியை அடைவதற்குப் பல விதிகள் வகுத்துள்ளனர். செம்மொழி நிலைக்கு வருவதற்கு அம்மொழி ஆயிரம் ஆண்டு காலம் தொன்மை பெற்றதாக இருக்க வேண்டும். இவ்விதிகளுக்கேற்ப தமிழ்மொழியைப் பற்றி ஆராய்வோமானால், அம்மொழி ஆயிரம் ஆண்டுகள் மட்டுமல்ல ஈராயிரம் ஆண்டுகளுக்கும் மேலாகப் பேசப்பட்ட மொழியாக விளங்குகின்றது. இம்மொழி உலகமெங்கும் பரவியுள்ள தமிழர்களின் பேச்சு மொழியாகவும் எழுத்து மொழியாகவும் கல்வி கற்கும் மொழியாகவும் பல மொழிகளுக்கு ஈடாகவும் திகழ்கின்றது.

- செம்மொழி சிறப்பிதழ்

## இ அறிவியலும் தமிழரும்

அறிவியல் என்ற சொல்லைக் கேட்கும் போதெல்லாம் மேல் நாடுகள்தான் நம் அனைவரின் நினைவுக்கும் வருகின்றன. அறிவியல் அறிஞர்கள் என்றால் கலிலியோ, நியூட்டன் போன்றவர்கள் நம் கண் முன் நிற்பதுபோல் தோன்றும். ஆனால், இவர்கள் கண்டு அறிந்த பல உண்மைகளை இவர்களுக்கு முன்பாகவே தமிழர்கள் அறிந்திருந்தனர் என்பதை உலகம் இன்றுவரை அறியவில்லை. நீருக்கு அழுத்தம் உண்டு என்பதையும் எவ்வளவு அழுத்திச் செல்கிறோமோ அதற்கும் மிகுதியாக நீர் நம்மை அழுத்தும் என்பதைக் கம்பர் காலத்தில் வாழ்ந்த ஔவை தமது பாடலில் பாடியுள்ளார்.

- குழந்தைகள் கலைக்களஞ்சியம்

2.2.1

- வாசிப்புப் பகுதியிலுள்ள கருப்பொருளையும் கருச்சொற்களையும் அடையாளம் காண்பர்.

### ஈ தமிழின் பண்பு

தமிழ்மொழியை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். இயல், இசை, நாடகம் என்று முத்தமிழாகப் போற்றப்படுகின்றது. சங்க கால இலக்கியங்கள் அக இலக்கியம், புற இலக்கியம் என இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அதற்கும் மேலாக நிலப் பகுதியை ஐந்தாகப் பிரித்து குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனப் பெயரிட்டு அவற்றின் தன்மைக்கு ஏற்ப வாழ்வியலை இலக்கியமாக்கியுள்ளனர். மேலும், மனித வாழ்க்கையையும் அக வாழ்க்கை புற வாழ்க்கை எனப் பிரித்து வாழ்வியல் உணர்வுகளை விளக்கியுள்ளனர். உலகின் எந்த மொழிக்கும் இல்லாத கட்டமைப்பு நம் தமிழ்மொழிக்கு உண்டென்பதைப் பல சான்றுகளின் மூலம் மெய்ப்பித்துள்ளனர்.

- தமிழ்ச்செல்வம். கி.ஆ.பெ

### உ கடமையும் தொண்டும்

ஒவ்வொருவருக்கும் இரு கடமைகள் உள்ளன. ஒன்று வீட்டுக் கடமை, மற்றொன்று சமுதாயக் கடமை. வீட்டுக் கடமை என்பது வெளிப்படையானது. பெற்றோருக்கும் சுற்றத்தாருக்கும் குடும்பத்தாருக்கும் செய்வன எல்லாம் மிக இயல்பான கடமைகளாகும். அவற்றைச் செய்வதால் புகழ் வருவதில்லை. ஆனால், செய்யாவிட்டால் பழி வந்துவிடும். பேராறு நேரே வயல்களை வளப்படுத்தாது. சிறுசிறு வாய்க்கால்கள்தான் வயலை வளமாக்கும். எனவே, நன்றாகக் குடும்பத்தை நடத்திச் செல்பவரைத் தம் கடமையைச் செவ்வனே செய்பவர் என்று மதிப்பளிப்பர். குடும்பங்களைத் தாண்டிச் செய்யும் சமுதாயக் கடமைகளையே தொண்டு என்கிறோம். தொண்டினைச் சிறியன, பெரியன என்றும் பிரித்துப் பார்க்க இயலாது. வீதியில் கிடக்கும் கண்ணாடித் துண்டினை எடுத்துப் பிறருக்குப் பாதகமில்லாமல் ஒதுக்குப்புறமாகப் போடுவதும் ஒரு தொண்டுதானே?

தம்பிக்கு - டாக்டர். மு.வ

### இடுபணி 1

**பத்தியில் உள்ள கருப்பொருளையும் கருச்சொல்லையும் அடையாளம் கண்டு கூறுக.**

ஓர் இலக்கு என்பது எதிர்காலம் பற்றிய நமது பார்வை. நமது எதிர்காலத்தை நிர்ணயிக்கும் உரிமை நமக்குத்தான் உண்டு. நாம் எதிர்காலத்தில் எப்படி வாழ விரும்புகின்றோம்; என்ன சாதிக்க நினைக்கின்றோம் என்பதை நாமே முடிவு செய்ய வேண்டும். இலக்குகளை நிர்ணயம் செய்து வாழ்ந்தவர்கள் பல அரிய சாதனைகளைப் புரிந்துள்ளனர் என்பது முற்றிலும் உண்மை.

### இடுபணி 2

**வாசிப்புப் பகுதியிலுள்ள கருப்பொருளையும் கருச்சொல்லையும் அடையாளம் கண்டு கூறுக.**

உலகின் மிக நுட்பமான தொடர்புக் கருவியாக மொழி விளங்குகின்றது. நிலம், நீர், இனம், சமயம் போன்ற எல்லைகளைக் கடந்து மாந்தரிடையே தொடர்பினை ஏற்படுத்துவதற்கு மொழி பயன்படுகிறது. இன்றைய நவீன உலகில் மொழியின் பயன்பாடு பல்கிப் பெருகியுள்ளது. மொழி தொடர்பான ஆய்வுகள் பல்நிலை வளர்ச்சியினைப் பெற்றுள்ளன. இன்றைய பொழுதில் உலகில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மொழிகள் இருப்பதாக மொழியியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இவற்றுள் பல மொழிகள் அழியும் நிலையில் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளன.

# பாடம் 3 மொழி விழா

**குழுவில் கலந்துரையாடுக.**

ஒவ்வோர் ஆண்டும் இடைநிலைப் பள்ளிகளுக்கிடையிலான தமிழ்மொழிப் போட்டிகள் நடைபெறும். → போட்டியாளர்கள் பதிவுக்குப் பிறகு காலை 8.00 மணியளவில் அனைத்துப் போட்டிகளும் தொடங்கின. → இவ்வாண்டு மொழி விழா டேசா மெக்கார் இடைநிலைப் பள்ளியில் ஏற்பாடு செய்யப்பட்டது. → நிகழ்ச்சியின் இறுதியில் கல்வி அதிகாரி உரையாற்றியதோடு போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகளை வழங்கினார். → இவ்விழாவிற்கு மாநிலக் கல்வித் துறையின் தமிழ்மொழி உதவி இயக்குநர் தலைமை தாங்கினார். → பள்ளியின் நுழைவாயிலில் கோலம் போடப்பட்டு, மாவிலை தோரணம் கட்டப்பட்டிருந்தது.



## இடுபணி 1

**மொழி விழா பற்றிய நிகழ்ச்சி நிரலைப் பத்தியில் எழுதுக.**

## இடுபணி 2


**வாக்கியங்களை நிரல்படுத்துக; பத்தியில் எழுதுக.**

- சபை கலைந்ததும் மாணவர்கள் அமைதியாக அணிவகுத்துத் தங்கள் வகுப்பறைகளுக்குச் சென்றனர்.
- மாணவர்களும் ஆசிரியர்களும் இணைந்து தேசியப் பண் ‘நெகாராகூ’வைப் பாடினர்.
- அதன் பிறகு மாணவர் தலைவன் தேசியக் கோட்பாடான ‘ருக்குன் நெகாரா’வைக் கூற அனைவரும் பின் தொடர்ந்தனர்.
- பள்ளி மணி ஒலித்ததும் மாணவர்கள் அனைவரும் பள்ளியில் சபை கூடும் இடத்தில் அணிவகுத்து நின்றனர்.
- மாணவர்கள் சபையில் அமர்ந்து, பத்து நிமிடங்கள் அமைதியாய்ப் புத்தகங்களை வாசித்தனர்.
- பள்ளியின் முதல்வர் தமதுரையில் இப்பள்ளி மாணவர்கள் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்குவதோடு புறப்பாட நடவடிக்கைகளிலும் சிறந்து விளங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.
- அவ்வாரத்திற்கான பொறுப்பாசிரியர் சில அறிவிப்புகளைச் செய்து, கடந்த வாரத்தில் பள்ளியின் கட்டொழுங்கைப் பற்றியும் தூய்மையைப் பற்றியும் சுருக்கமாக அறிக்கை சமர்ப்பித்தார்.

3.2.1 • வாக்கியங்களை நிரல்படுத்திப் பத்தியில் எழுதுவர்.

## வளப்படுத்துதல்

**கொடுக்கப்பட்டுள்ள கருச்சொற்களைக் கொண்டு முழு வாக்கியங்கள் எழுதுக; அவற்றை நிரல்படுத்திப் பத்தியில் எழுதுக.**






## குறைநீக்கல்

**அட்டவணையிலுள்ள வாக்கியங்களை நிரல்படுத்திப் பத்தியில் எழுதுக.**

| நடவடிக்கை | எண் |
|---|---|
| ஆலய வழிபாட்டிற்குப் பிறகு மற்றவர்களுடன் அமர்ந்து திருமுறைகளை ஓதினான். | |
| கை கால்களை நன்கு கழுவிய பிறகு ஆலயத்திற்குள் சென்றான். | |
| பூவரசன் மாலையில் குளித்துவிட்டு வேட்டியும் சட்டையும் அணிந்து கொண்டான். | |
| பிறகு மூல மூர்த்தியை வழிபட்டுவிட்டு ஆலயத்தை வலம் வந்தான். | |
| பெற்றோரோடு பக்கத்திலுள்ள சிவனாலயத்திற்குச் சென்றான். | |
| முதலில் கொடிமரத்திற்கு அருகில் சென்று தரையில் வீழ்ந்து வணங்கினான். | |

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## வாசித்து அறிக.

அன்று பிதி3 தேர்வு முடிவுகள் அறிவிக்கப்படும் நாள். காருண்யனின் தாயார் மிகுந்த எதிர்பார்ப்புடன் இருந்தார். சிறுவயதிலேயே தந்தையை இழந்த அவனைப் பாலூட்டிச் சீராட்டி வளர்த்ததோடு ஒழுக்கத்தோடும் வளர்த்தார். அவன் கல்வியில் சிறந்து விளங்குவதற்கு ஊக்கமும் ஆக்கமும் ஊட்டினார். அனைவரும் பள்ளி மண்டபத்தில் குழுமியிருந்தபோது பள்ளி முதல்வர் சிறப்புத் தேர்ச்சி பெற்ற மாணவர்களின் பெயர்களை வாசிக்க ஆரம்பித்தார். மூன்றாவதாகக் காருண்யனின் பெயர் வாசிக்கப்பட்டபோது அவன் மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தான். பதற்றத்தோடு காத்திருந்த அவனது தாயாரின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் அருவியாய்க் கொட்டியது. அவர் காருண்யனை ஆரத் தழுவி அவன் கன்னங்களில் முத்த மழை பொழிந்தார்.




நற்பண்புகளோடு ஒழுக்கத்திலும் சிறந்து விளங்கி நல்ல தேர்ச்சியும் பெற்ற காருண்யனுக்கு மேடையில் பேசுவதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. முதலில் தனது வெற்றிக்குக் காரணமாயிருந்த ஆசிரியர்களுக்கும் நண்பர்களுக்கும் தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டான். தனது இந்த நிலைமைக்குக் காரணமான தனது தாயை மேடைக்கு அழைத்தான். தேர்வு முடிவுகளை அவர் கையில் கொடுத்து அவர் பாதங்களில் விழுந்து வணங்கினான். அவர் கண்களில் கண்ணீர் வழிந்தோடியது. தந்தையற்ற தன்னை வளர்த்தெடுப்பதற்குத் தன் அன்னை கடந்து வந்த போராட்டங்களை அவன் கூறியபோது அவையினர் சோகத்தில் மூழ்கினர்.

காருண்யனின் தாய் அவன் பெற்ற வெற்றியைக் கண்டு உள்ளம் பூரித்தார். தன் மகனின் அயரா உழைப்புக்கும் விடா முயற்சிக்கும் வெற்றிக் கனிகளை ஈட்டித் தந்த இறைவனுக்கு நன்றி கூறினார்.

**ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்**
**சான்றோன் எனக்கேட்ட தாய். (69)**

எனும் குறளைப் பள்ளியின் முதல்வர் திரு. முத்தமிழரசு கூறி, காருண்யனின் தாயை வெகுவாகப் பாராட்டினார். தன் மகனை நற்பண்பு நிறைந்தவன் எனப் பிறர் சொல்லக் கேள்வியுறும் தாய் தான் அவனைப் பெற்றெடுத்த காலத்தில் அடைந்த மகிழ்ச்சியைக் காட்டிலும் அதிகமான மகிழ்ச்சியை அடைவார் என்பதைக் காருண்யனின் தாய் உணர்ந்து உள்ளம் நெகிழ்ந்தார்.

**அறிந்துகொள்க**

திருக்குறள் 2047 ஆண்டுகளுக்கு முற்பட்டது. இதற்கு முப்பானூல் என்றும் பெயருண்டு. அறம், பொருள், இன்பம் என்ற முப்பகுதிகளைக் கொண்டது. முதல் எழுத்தான ‘அ’கரத்தில் தொடங்கி இறுதி எழுத்தான ‘ன’கரத்தில் முடிகிறது.

4.2.1

- ஒன்றாம் படிவத்திற்கான திருக்குறளையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

## திருக்குறளும் பொருளும்

**ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்**
**சான்றோன் எனக்கேட்ட தாய். (69)**



பொருள்: தன் மகனை நற்பண்பு நிறைந்தவன் எனப் பிறர் சொல்லக் கேள்வியுறும் தாய் தான் அவனைப் பெற்றெடுத்த காலத்தில் அடைந்த மகிழ்ச்சியைக் காட்டிலும் அதிகமான மகிழ்ச்சியடைவாள்.

கருத்து: மகன் சான்றோன் எனக் கேள்வியுறும் தாய் பெருமகிழ்ச்சி அடைவாள்.

### இடுபணி 1

**குறளையும் பொருளையும் மனனம் செய்து கூறுக; எழுதுக.**

### இடுபணி 2

**குழுவில் கலந்துரையாடி குறளுக்குப் பொருத்தமான சூழல் ஒன்றனை எழுதுக.**

### அறிந்துகொள்க

எவ்வளவுதான் உயர்ந்த நிலையில் இருந்தாலும் தாய் தந்தையருக்கு அன்பு, பணிவின் மூலம் பணிவிடை செய்ய முற்படுங்கள்.

- உயர் ஞான தீபம்

### வளப்படுத்துதல்

**குறளோடு தொடர்புடைய வேறு செய்யுள்களையும் மொழியணிகளையும் பல்வேறு மூலங்களிலிருந்து திரட்டுக; எழுதுக.**

### இணையத் தளம்

http://www.tamilvu.org/library/nationalized/pdf/59-puliyurkesigan/013.thirukuralputhiyaurai.pdf

### குறைநீக்கல்

**1. திருக்குறளை நிறைவு செய்க.**

____________________

சான்றோன் எனக்கேட்ட தாய்.

**2. குறளுக்குப் பொருத்தமான சூழலை அடையாளம் காண்க; எழுதுக.**

**அ**

மரகதம் தம் மகன் மலர்க்கண்ணனின் கல்வியில் சிறிதும் அக்கறையில்லாமல் இருந்தார். அவர் தமது தொழிலிலேயே கவனம் செலுத்தினார். பள்ளியில் அவன் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டதை ஆசிரியர்கள் தெரிவித்தபோது அதை ஏற்க மறுத்தார். இறுதியில் அவன் பள்ளியைவிட்டு நீக்கப்பட்டபோது அதிர்ச்சியில் கண்ணீர் சிந்தினார்.

**ஆ**

அன்பரசனின் பெற்றோர் அவனைப் படிக்க வைக்க அல்லும் பகலும் உழைத்தனர். அன்பரசனும் பெற்றோரின் அயராத உழைப்பை நினைத்து ஒழுங்குறப் படித்து வந்தான். ஒழுக்கசீலனாகவும் நற்பண்பு மிக்கவனாகவும் விளங்கினான். எஸ்.பி.எம். தேர்வில் சிறப்புத் தேர்ச்சி பெற்றான். மேலும், மாவட்டத்திலேயே சிறந்த மாணவனாகத் தெரிவு செய்யப்பட்டான். அவனது பெற்றோர் ஆனந்தக் கண்ணீர் வடித்தனர்.

## வாசித்து மகிழ்க

### மனோன்மணீயம் சுந்தரனார்



'நீராறும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்' எனத் துவங்கும் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலைத் தமிழ்கூறும் நல்லுலகிற்காக எழுதியவர். அப்பாடல் இடம்பெறும் மனோன்மணீயம் எனும் நாடக நூலின் ஆசிரியர் தமிழ் வரலாற்றை ஆய்வு செய்த சுந்தரனார், இத்துணைப் பாரம்பரியமிக்க தமிழ்மொழியில் ஆங்கில மொழிக்கு உள்ளது போல நாடகமாக்கங்கள் இல்லையே என மனக் குறைபட்டார். அக்குறை நீங்க, தானே நாடகம் ஒன்றையும் எழுதத் துவங்கினார்.

இவரது தமிழ்ப்பற்று, வரலாற்று ஆர்வம், தத்துவ நாட்டம் இவையனைத்தும் இணைந்து மனோன்மணீயம் நாடகத்தை எழுதத் தூண்டின. தமிழ் மீதான இவரது பற்று, நூலின் முதல் பாடலாக 'நீராறும் கடலுடுத்த' எனத் துவங்கும் பாடலில் வெளிப்பட்டது.

"தமிழுக்குத் தொண்டு செய்வோர் இரண்டு கடமைகளை மேற்கொள்ள வேண்டும். ஒன்று பைந்தமிழ் இலக்கியங்களைப் பாதுகாக்க வேண்டும். இரண்டாவது புதிய துறைகளில் நூல்கள் இயற்ற வேண்டும்" என்று கூறியுள்ளார் சுந்தரனார். இவர், மனோன்மணீயம் தவிர சிவகாமியின் சரிதம், ஒரு நற்றாயின் புலம்பல் போன்ற நூல்களையும் திருஞான சம்பந்தர் கால ஆராய்ச்சி போன்ற ஆய்வு நூல்களையும் எழுதியுள்ளார். ஆன்மிகத்தின் மேல் இருந்த அதீத நாட்டம் காரணமாகப் பல துறவிகள் இவரை வந்து சந்தித்துள்ளனர். அவர்களுள் விவேகானந்தரும் ஒருவர்.

### திருவாரூர் விருத்தாசலம் கலியாண சுந்தரனார்

தந்தையாரின் பெயர் விருத்தாசலம். தாயார் சின்னம்மாள். தந்தையின் பூர்வீகமான திருவாரூரையும் அவரது தந்தை பெயரான விருத்தாசலத்தையும் தன்னோடு சேர்த்துக் கொண்டதால் திரு.வி.க. ஆனார்.

திரு.வி.க. மகாத்மா காந்தியடிகளின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டுச் சுதந்திரத்திற்காகப் பாடுபட்டார். உரைநடை இலக்கியத்தை வளப்படுத்தியது இவரது சாதனை. இலக்கணங்களால் கட்டுண்டு கிடந்த தமிழைக் கால மாறுதல்களுக்கேற்ப கவிதையில் எளிமைப்படுத்தியது பாரதி என்றால், அவருக்கிணையாக உரைநடையில் அதனைச் சாத்தியப்படுத்தியவர் திரு வி.க. அவர்களே! சுருக்கமாகக் கூறினால் அவர் இன்றைய நவீன தொழில் முன்னோடியாவார்.



சைவத் திறவு, நாயன்மார் வரலாறு, உள்ளொளி இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம், இளமையிலிருந்து சுய வாழ்க்கைக் குறிப்புகள் போன்ற நூல்கள் அவரின் ஆற்றலுக்குச் சான்றுகளாகும். பேச்சுத் தமிழிலும் அவரது ஆற்றல் அளப்பரியது. மேலும் இவரைப் பேச்சுக் கலையின் தந்தை என்றும் சிறுவாக்கியங்களின் ஆசான் என்றும் புகழ்வர்.

தொகுதி 2

# தமிழர் பாரம்பரிய விளையாட்டுகள்

## பாடம் 1 மறைந்துவரும் விளையாட்டுகள்

குழுவில் கலந்துரையாடுக.







1.2.1

• விவரங்களை அறிய கேள்விகள் கேட்பர்.
















இடுபணி 1

**தமிழர் பாரம்பரிய விளையாட்டுகளின் விவரங்கள் அறிய கேள்விகள் கேட்டிடுக.**




**அறிந்துகொள்க**

**வினா எழுத்துகள்**
எ, ஏ, யா, ஆ, ஓ
என்பனவாகும்.

**வினாச் சொற்களுள் சில**
என்ன
ஏன்
யார்
அவனா
இவரோ
எப்படி
எதற்கு

இடுபணி 2

**கொடுக்கப்பட்ட படத்தைக் கொண்டு விவரங்களை அறிய கேள்விகளைக் கேட்டிடுக.**



# பாடம் 2 சிலம்பம்

## வாசித்து அறிக.



சிலம்பம் என்பது தமிழர்களின் **தற்காப்புக்** கலையாகவும் வீர விளையாட்டாகவும் திகழ்கின்றது. வழக்கில் இவ்விளையாட்டைக் கம்பு சுற்றுதல் என்றும் கூறுவர். இது கழியைக் **கையாளும்** முறை, கால் அசைவுகள், உடல் அசைவுகள் மூலம் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் தற்காப்புக் கலையாகும். சிலம்பாட்டத்தில் எதிராளி வீசும் கம்பினைத் தடுத்தல், எதிராளியின் உடலைச் சிலம்புக் கம்பினால் தொடுதல் (தொடு புள்ளி) போன்றவை அடிப்படையாகக் கொள்ளப்படுகின்றன. சிலம்பாட்டம் ஆடுவதற்குக் குறைந்தது இருவர் வேண்டும். தற்காலத்தில் ஆண்கள், பெண்கள் என்று இருபாலரும் சிலம்பாட்டத்தைக் கற்று விளையாடி வருகின்றனர். திருவிழா, கோயில் விழாக்கள், ஊர்வலம் ஆகியவற்றுள் சிலம்பாட்டம் தவறாது இடம் பெற்றுவருகின்றது.

மக்கள் தம்மைச் சிங்கம், புலி போன்ற விலங்குகளிடமிருந்து காத்துக் கொள்ளக் கையாண்ட முறையே சிலம்பம் என்பர். தமது கைகளில் எப்போதும் இருக்கக்கூடிய சிறிய ஆயுதங்களான கம்பு (கழி), சிறு கத்தி, கோடரி போன்ற ஆயுதங்களைப் **பயன்படுத்தி** விலங்குகளிடமிருந்து தற்காத்துக் கொள்ள இந்தக் கலையைப் பயன்படுத்தினர்.

ஆதிகாலத்தில் மனிதர்கள் சண்டை செய்ய ஈட்டி, கத்தி, வேல், வாள், கம்பு போன்ற பலவிதமான ஆயுதங்களைப் பயன்படுத்தினர். அவற்றுள் மிகவும் பழைமை வாய்ந்த ஆயுதம் கம்பு எனப்படும் சிலம்பு ஆகும். முற்காலத்தில் இக்கலையை வீர **மறவர்கள்** பயன்படுத்தினர்.

சிலம்பம் என்ற பெயர் சிலம்பு என்ற வார்த்தையில் இருந்து **உருவானது.** சிலம்பு என்பதற்கு ஒலித்தல் என்று பொருள். சிலம்பம் ஆடும் போது உருவாகும் ஒலிகளைக் குறிக்கும் விதமாகச் சிலம்பம் என்று பெயர் **சூட்டப்பட்டதாகச்** சொல்லப்படுகிறது. ‘சிலம்பம்’ என்ற சொல் ‘சிலம்பல்’ என்ற வினையின் அடியாகப் பிறந்தது.

சிலம்பம் விளையாடுவதால் வாதம், பித்தம், கபம் ஆகியவை நீங்கும் எனப் பதார்த்த குண சிந்தாமணி என்ற நூலில் கூறப்பட்டுள்ளது. சிலம்பத்தில் எடுத்தெறிதல், நெடுங்கம்படி, வாள் வீச்சு, சுருள் பட்டா, செண்டாயுதம், இடிகட்டை, வீச்சரிவாள், வெட்டரிவாள், கட்டாரி போன்ற ஆயுதப் பிரிவுகளும் உள்ளன. இந்தியாவில் தமிழ்நாடு, கேரளா ஆகிய மாநிலங்களிலும் இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், மியன்மார், பிரான்சு, கனடா போன்ற நாடுகளிலும் சிலம்பம் **பயிற்றுவிக்கப்படுகிறது.**

- கலைக்களஞ்சியம் (சில மாற்றங்களுடன்)

2.3.1

- விளையாட்டு தொடர்பான உரைநடைப் பகுதியை வாசித்துக் கருத்துணர்க் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.

## இடுபணி 1

**வண்ணமிடப்பட்ட அருஞ்சொற்களுக்கு அகராதியின் துணைகொண்டு பொருள் அறிக; கூறுக.**

## இடுபணி 2

**வினாக்களுக்கு விடை கூறுக.**

1. சிலம்பம் என்று எதனைக் குறிக்கின்றனர்?
2. சிலம்பம் பயிற்றுவிப்பதன் நோக்கம் என்ன?
3. முற்காலத்தில் இந்தச் சிலம்பக் கலையை ஏன் கற்றுக்கொண்டனர்?
4. சிலம்பம் என்ற பெயர் எவ்வாறு ஏற்பட்டது?
5. ஒருவர் சிலம்பக் கலையைக் கற்றுக் கொள்வதால் என்னென்ன நன்மைகளை அடைவர் என்பதை விளக்கி எழுதுக.
6. சிலம்ப விளையாட்டை மாணவர்களிடையே அறிமுகப்படுத்துவதற்கான வழிமுறைகளைக் குழுவில் கலந்துரையாடுக. வகுப்பில் படைத்திடுக.
7. தமிழர் பாரம்பரிய விளையாட்டுகளைப் பற்றி பிற இனத்தவர்கள் அறிந்து கொள்வதற்கு நாம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை விவரித்து எழுதுக.

### அறிந்துகொள்க

**பிரபல கபடி பாடல்**

நான்தான் வீரன்டா
நல்லமுத்து பேரன்டா
வெள்ளிச் சிலம்பெடுத்து
விளையாட வாரன்டா
தங்கச் சிலம்பெடுத்துத்
தாண்டிக் குதிக்க வாரன்டா
சடுகுடு சடுகுடு சடுகுடு
சடுகுடு

**மூன்றாங்கல் பாடல்**

ஒன்றாவது ஒன்றாங்காய்
இரண்டாவது ஈச்சங்காய்
மூன்றாவது முத்துச்சரம்
நாலாவது நாற்காலி
அஞ்சாவது பஞ்சவர்ணம்
ஆறாவது பாலாறு
ஏழாவது எழுத்தாணி
எட்டாவது கொட்டாரம்
ஒன்பதாவது ஓலைப்பூ
பத்தாவது பனங்கொட்டை
பதினொன்றாவது
தென்னம்பிள்ளை
தென்னை மரத்தடியிலே
தேரோடும் பிள்ளையார்.

நாட்டுப்புறவியல்

## இடுபணி 3

**கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளுள் ஏதேனும் ஒன்றைத் தெரிவு செய்து குழுமுறையில் திரட்டேடு ஒன்றனைத் தயார் செய்க.**

1. பல்லாங்குழி
2. சடு குடு
3. உறி அடித்தல்
4. ஆடு புலி ஆட்டம்



## இடுபணி 4

**தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுகளைக் கட்டிக் காப்பதன் அவசியத்தையும் முக்கியத்துவத்தையும் பற்றிய குறிப்புகளைத் தயார் செய்து வாசித்துக் காட்டுக.**

# பாடம் 3 விளையாட்டு மன்றம்

**குழுவில் கலந்துரையாடுக.**

தேசிய இடைநிலைப்பள்ளி ஒன்றில் பாரம்பரிய விளையாட்டு மன்றம் நடத்திய போட்டிகளில் பங்கெடுத்த மாணவர்களின் எண்ணிக்கை.

| விளையாட்டு | ஆண்கள் | பெண்கள் |
|---|---|---|
| பல்லாங்குழி | 26 | 38 |
| சிலம்பம் | 38 | 16 |
| தட்டாங்கல் | 30 | 34 |
| கிளிதட்டு | 40 | 36 |
| உறி அடித்தல் | 42 | 24 |
| கபடி | 38 | 30 |
| **மொத்தம்** | **214** | **178** |

**அறிந்துகொள்க**

**தொகுத்து எழுதுதல் வழிமுறை**

- பத்திகளிலுள்ள தெரிநிலைக் கருத்துகளை அடையாளம் காணுதல்.
- பத்திகளிலுள்ள புதைநிலைக் கருத்துகளை ஆராய்ந்து அறிதல்.
- ஒரே பத்தியில் எழுதுதல்.
- சொந்த நடையில் கோவையாக எழுதுதல்.
- ஏற்ற இடைச்சொற்களைப் பயன்படுத்துதல்.





**இடுபணி 1**

**அட்டவணையிலுள்ள தகவல்களைக் கொண்டு வினாக்களுக்கு விடையளித்திடுக.**

1. மாணவர்கள் அதிகமாக ஆர்வம் காட்டும் விளையாட்டு எது? ஏன்?
2. மிகக் குறைந்த அளவில் ஈடுபாடு காட்டும் விளையாட்டு எது? ஏன்?
3. ஏன் பாரம்பரிய விளையாட்டுகளில் பெண்களைவிட ஆண்கள் அதிகம் ஈடுபடுகின்றனர்?

3.3.1

• அட்டவணையிலுள்ள விவரங்களைத் தொகுத்து எழுதுவர்.

## இடுபணி 2

**அட்டவணையிலுள்ள விவரங்களைத் தொகுத்து எழுதுக.**

| **விளையாட்டு** | **எண்ணிக்கை** | **விளையாடும் களம்** | **விளையாடும் முறை** | **நன்மைகள்** |
|---|---|---|---|---|
| கபடி | • 7 பேர் (5 வைப்பு விளையாட்டாளர்) | • திடல்<br>• உள்ளரங்கு | • மூச்சை அடக்குதல்<br>• எல்லைக் கோடு தொடுதல்<br>• எதிராளியைப் பிடித்தல் | • துணிவு<br>• வீரம்<br>• மனமகிழ்வு<br>• உடற்பயிற்சி<br>• நம்பிக்கை |
| பல்லாங்குழி | • 2 அல்லது அதற்கு மேற்பட்டோர் | • உள்ளரங்கு<br>• வெளிப்புறம் | • மரப்பலகையில் 2 வரிசையில் ஏழு சிறிய குழிகள்<br>• ஒவ்வொரு குழியிலும் 5 புளியங்கொட்டை<br>• ஒரு குழியில் இருப்பதை எடுத்து அடுத்தடுத்த குழியில் போடுதல் | • வேகம்<br>• விவேகம்<br>• அறிவு நுட்பம் பெறுதல்<br>• நம்பிக்கை<br>• விடாமுயற்சி |
| சிலம்பம் | • 2 அல்லது அதற்கு மேற்பட்டோர் | • உள்ளரங்கு<br>• வெளிப்புறம் | • கழி சுற்றுதல்<br>• கால் அசைவு, உடல் அசைவு மூலம் பாதுகாத்துக் கொண்டு எதிராளியைத் தாக்குதல்; தற்காத்தல் | • துணிவு<br>• வீரம்<br>• நம்பிக்கை<br>• உடலுறுதி<br>• மனவலிமை<br>• நோய் குணமடைதல் |

## இடுபணி 3

**உன் வகுப்பறை கால அட்டவணையை வரைந்து வாசித்துக் காட்டுக.**

## இடுபணி 4

**உன் வகுப்பறையின் பணி அட்டவணையில் உள்ள விவரங்களைக் குழுவில் கலந்துரையாடித் தொகுத்து எழுதுக.**

## இடுபணி 5

**கால அட்டவணை அமைத்துச் செயல்படுவதன் நோக்கத்தை விளக்கி எழுதுக.**

### அறிந்துகொள்க

- எண்ணிக்கையில் கூட்டலையும் பெருக்கலையும் விளையாட்டாய்க் கற்றுக் கொடுத்தது **கிட்டிப்புள்.**
- வெட்டி வெளியில் எறிந்தாலும் மீண்டும் தொடக்கத்திலிருந்து துவங்கி இலக்கையடைய கற்றுக் கொடுத்தது **தாயம்.**

## வளப்படுத்துதல்

**அட்டவணையிலுள்ள விவரங்களைத் தொகுத்து எழுதுக.**

தேசிய இடைநிலைப்பள்ளி ஒன்றில் மாணவர்கள்
பள்ளிக்கு வரும் விதம்.

| பள்ளிக்கு வரும் விதம் | எண்ணிக்கை | விழுக்காடு % |
|---|---|---|
| பள்ளிப் பேருந்து | 400 | 49.4 |
| நடந்து வருதல் | 200 | 24.7 |
| பெற்றோரின் வாகனம் | 80 | 9.9 |
| கூட்டுச் சவாரி | 60 | 7.4 |
| மிதிவண்டி | 40 | 4.9 |
| விசையுந்து | 30 | 3.7 |
| மொத்தம் | 810 | 100 |



## குறைநீக்கல்

**கொடுக்கப்பட்ட குறிப்புகளைத் துணையாகக் கொண்டு, அட்டவணையிலுள்ள விவரங்களைத் தொகுத்து எழுதுக.**

தேசிய இடைநிலைப்பள்ளி ஒன்றில் 1000
மாணவர்களின் மனமகிழ் நடவடிக்கைகள்.

| மனமகிழ் நடவடிக்கை | எண்ணிக்கை |
|---|---|
| காணொளி விளையாட்டு | 250 |
| வாசித்தல் | 200 |
| தொலைக்காட்சி பார்த்தல் | 200 |
| பந்து விளையாடுதல் | 150 |
| சுற்றுப் பயணம் மேற்கொள்ளுதல் | 120 |
| வானொலி கேட்டல் | 40 |
| பெற்றோருக்கு உதவுதல் | 40 |
| மொத்தம் | 1000 |

**குறிப்பு:**

- தலைப்பு
- மிகக் குறைவு
- வகை
- மிக அதிகம்
- மொத்த மாணவர்கள்
- நூற்றுக்கு மேல்
- நூற்றுக்குக் குறைவு

### அறிந்துகொள்க

உறியடி என்பது காளையர் (இளையோர்) விளையாடும் விளையாட்டாகும். தமிழர் திருநாள், திருவிழா போன்ற நாள்களில் இவ்விளையாட்டு விளையாடப்படும்.

கண்ணைக் கட்டிக் கொண்டு கையிலுள்ள கொம்பால் தொங்கும் உறியை அடிக்க வேண்டும். தொங்கும் உறி கயிற்றால் கட்டி ஏற்றி இறக்கப்படுவதால் அடிப்பது மேலும் சிக்கலைத் தரும். உறியில் மண் கலயங்களில் தயிர் கட்டப்பட்டிருக்கும்.

உறியடித்தல் விளையாட்டில் தொங்கும் உறியை அடித்து நொறுக்குபவர்களே வாகையாளராக அறிவிக்கப்படுவர்.

- கலைக்களஞ்சியம் - சில மாற்றங்களுடன்

## பாடம் 4 இலக்கணம்

### அகச்சுட்டு, புறச்சுட்டு அறிக.

**சுட்டெழுத்து**

ஒன்றைச் சுட்டிக் காட்ட வரும் எழுத்திற்குச் சுட்டெழுத்து என்று பெயர். அது சொல்லின் முதலில் நின்று பொருளை உணர்த்தும். இது மொழிக்கு முதலில் நின்று ஒரு பொருளைச் சுட்டிக்காட்டும். அ, இ, உ என்பன சுட்டெழுத்துகளாகும். சுட்டெழுத்துகள் அகச்சுட்டு, புறச்சுட்டு என்று இரண்டு வகைப்படும்.

**எடுத்துக்காட்டு**

| சொல் | பகுப்பு | சுட்டெழுத்து |
|---|---|---|
| அவள் | அ + அள் | அ |
| இவன் | இ + அன் | இ |
| உவள் | உ + அள் | உ |
| அப்பள்ளி | அ + பள்ளி | அ |
| இக்கடை | இ + கடை | இ |

**சுட்டுப்பெயர்**

**அகச்சுட்டு**

ஒரு சொல்லின் அகத்தே (உள்ளேயே) சுட்டெழுத்து அடங்கி வருமாயின் அஃது அகச்சுட்டாகும்.

**எடுத்துக்காட்டு**

| சொல் | பகுப்பு |
|---|---|
| அவன் | அ + அன் |
| இவள் | இ + அள் |
| உவன் | உ + அன் |

**புறச்சுட்டு**

ஒரு சொல்லுக்குப் புறத்தே (வெளியே) சுட்டெழுத்து நின்று இயங்குவதால் அது புறச்சுட்டு என்று அழைக்கப்படும். இவ்வகைச் சொல்லில் உள்ள சுட்டெழுத்தைப் பிரித்து விட்டாலும் அது பொருள் சுட்டும்.

**எடுத்துக்காட்டு**

| சொல் | பகுப்பு |
|---|---|
| அக்குதிரை | அ + குதிரை |
| இப்புத்தகம் | இ + புத்தகம் |
| உப்பையன் | உ + பையன் |

### இடுபணி 1

**வாக்கியங்களில் இடம்பெற்றுள்ள சுட்டுப் பெயர்களை அடையாளம் காண்க; அவற்றை வகைப்படுத்துக; அட்டவணையில் எழுதுக.**

1. நேற்றிரவு அப்பள்ளியில் கலைநிகழ்ச்சி நடைபெற்றது.
2. அவன் மிக வேகமாக ஓடி முதல் பரிசை வென்றான்.
3. மேடையில் நடனம் ஆடிய அப்பெண் அழகாக இருந்தாள்.
4. அவ்விருவரும் நூலகத்திற்குச் சென்று படித்தனர்.
5. சாலையோரத்தில் அம்மாடு புல் மேய்ந்து கொண்டிருந்தது.
6. வீட்டிற்குள் நுழைந்த அவள் புத்தகப் பையை அறையில் வைத்தாள்.



5.1.1

• அகச்சுட்டு, புறச்சுட்டு அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

## இடுபணி 2

**பொருத்தமான சுட்டுப் பெயர்களைக் கொண்டு வாக்கியங்களை நிறைவு செய்க.**



1. திரு. குமார் சிலம்பக் கலையில் சிறந்து விளங்கினார். ______ (அவர் / இவர்) இன்று ஒரு சிலம்பப் பயிற்றுனராகத் திகழ்கின்றார்.


2. குமரன் திடலில் விளையாடினான். அப்பொழுது ______ (இவன் / அவன்) கால் இடறிக் கீழே விழுந்தான்.



3. இங்கு நிறைய மாணவர்கள் விளையாடுகின்றனர். ______ (அம்மாணவர்கள் / இம்மாணவர்கள்) இங்குக் கல்வி பயில்கின்றனர்.

4. தோட்டத்தில் மல்லிகை மலர்கள் மலர்ந்து மணந்தன. ______ (இம்மலர்களை / அம்மலர்களை) மாலதி பறிக்கச் சென்றாள்.

5. பள்ளி மணி ஒலித்ததும் மாணவர்கள் சிற்றுண்டிச் சாலைக்குச் சென்றனர். ______ (இங்கு /அங்கு) அவர்கள் உணவு வாங்கி உண்டனர்.



6. தேசிய விலங்கியல் சாலையில் என் நண்பன் குமணனைச் சந்தித்தேன். “அதோ ______ (இப்பக்கத்தில் / உப்பக்கத்தில்) இருந்து வரும் யானையைப் பார்” என்று காட்டினான்.

7. இந்த வகுப்பறை மிகவும் சுத்தமாக உள்ளது. ______ (இவ்வகுப்பறையின் / அவ்வகுப்பறையின்) ஆசிரியர் திரு. மூர்த்தி.



8. ஆசிரியரின் மேசை மீது பயிற்சிப் புத்தகங்கள் இருந்தன. ______ (இப்புத்தகங்களை / அப்புத்தகங்களை) எடுத்துவர என்னைப் பணித்தார்.

9. இதோ என் அருகில் நிற்பவள் என் தோழி ______ (அவள் / இவள்) மிகவும் பண்பானவள்.

10. ______ (அப்பையனிடம் / இப்பையனிடம்) இனி நட்பு கொள்ளாதே” என்று அவ்வழியே சென்று கொண்டிருந்த வாசுவைச் சுட்டிக்காட்டினார் அம்மா.

## இடுபணி 3

**வாக்கியம் அமைத்திடுக.**

| | | |
|---|---|---|
| 1 அங்கு | 2 இங்கு | 3 இவள் |
| 4 இப்பையன் | 5 அச்சிறுமி | 6 இப்படம் |

## இடுபணி 4

**பனுவலில் இடம்பெற்றுள்ள சுட்டுப் பெயர்களை அடையாளம் கண்டு எழுதுக.**

இவள் பெயர் கண்ணகி. இவளுக்கு வாசிப்பது என்றால் மிகுந்த ஆர்வம். அறையில் நிறைய கதைப் புத்தகங்களை வைத்திருக்கிறாள். அப்புத்தகங்களை மிகவும் பாதுகாப்பாக வைத்திருக்கிறாள். "இப்பெண்ணைப் போல நீயும் வாசிக்க வேண்டும்," என்று அப்பா அடிக்கடி என்னிடம் கூறுவார். அவர் கூறுவதைக் கேட்டு நானும் வாசிக்கத் தொடங்கினேன். வாசிப்புப் பழக்கத்தின் சிறப்பை இப்பொழுது உணர்கிறேன். கண்ணகியிடமிருந்து பெறுகின்ற அக்கதைப் புத்தகங்களைப் படித்துவிட்டு அவளிடம் பத்திரமாக ஒப்படைத்துவிடுவேன்.

## வளப்படுத்துதல்

**சுட்டுப் பெயர்கள் கொண்ட பத்தி ஒன்றனை எழுதுக; வகுப்பறையில் படைத்திடுக.**

## குறைநீக்கல்

**காலி இடங்களில் பொருத்தமான சுட்டுப் பெயர்களைத் தெரிவு செய்து நிறைவு செய்க.**



சிவபாலன் படிவம் ஒன்றில் பயில்கிறான். .........(1)......... பள்ளி வீட்டிற்கு அருகில் இருந்தது. .........(2)......... மிகவும் பெரிய பள்ளி. அவன் அக்காள் படிவம் ஐந்தில் படிக்கிறாள். .........(3)......... சிவபாலனைப் பள்ளிக்குக் கூட்டிச் செல்வாள். அவர்கள் செல்லும் வழியில் ஒரு கடை இருந்தது. .........(4)......... நிறைய மிட்டாய்கள் விற்கப்பட்டன. .........(5)......... சிவபாலன் வாங்கி உண்பான். அடிக்கடி மிட்டாய்களை உண்பதால் அவன் பற்கள் பழுதாயின. ஒரு முறை பல் மருத்துவர் ஒருவர் பள்ளிக்கு வந்தார். .........(6)......... சிவபாலனின் பற்களைச் சோதித்தார். .........(7)......... சில பழுதடைந்திருப்பதைக் கண்டார். அவற்றை நன்கு கழுவிச் சுத்தம் செய்து சிகிச்சை அளித்தார். .........(8)......... சிவபாலனுக்குப் பற்களைப் பாதுகாக்கும் வழிமுறைகளை விளக்கினார். அவன் .........(9)......... பின்பற்றுவதாக உறுதியளித்தான்.

| | | | |
|---|---|---|---|
| அவர் | அப்பள்ளி | அவ்வழிமுறைகளைப் | அம்மருத்துவர் |
| அம்மிட்டாய்களை | அப்பற்களில் | அக்கடையில் | அவன் |
| | அவள் | | |

# தொகுதி 3

# பண்பாட்டைப் போற்றுவோம்!

## பாடம் 1 பொங்கலோ பொங்கல்


**குழுவில் கலந்துரையாடுக.**

### மகிழம்பூ தேசிய இடைநிலைப்பள்ளியில் பொங்கல் திருநாள்



ஏற்பாடு: தமிழ்மொழிக் கழகம்
இடம்: பள்ளி மண்டபம்
தேதி: 29.01.2017 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம்: மாலை மணி 3:00 முதல்





மகிழம்பூ தேசிய இடைநிலைப்பள்ளியின் தமிழ்மொழிக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொங்கல் திருநாள் விழாவுக்கு வருகை புரிந்திருக்கும் அனைவரையும் வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். இப்பொங்கல் திருநாள் விழாவை முன்னிட்டுப் பல போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இந்த மண்டபத்திற்கு வெளிப்புறத்தில் கோலம் போடும் போட்டியும், தோரணம் பின்னும் போட்டியும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மாணவர்கள் மனமகிழ்ச்சியுடனும் மிகுந்த ஈடுபாட்டுடனும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இம்மண்டபத்தின் பின்புறத்தில் ஓவியம் வரைதல் போட்டியும் பூத்தொடுத்தல் போட்டியும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்போட்டிகளைத் தொடர்ந்து கிராமிய நடனத்தை நமது படிவம் ஒன்று மாணவர்கள் படைக்கவிருக்கின்றனர். மேலும், நிகழ்ச்சியின் உச்சக்கட்டமாக உறி அடித்தல் போட்டி நிகழவிருக்கின்றது. நிகழ்ச்சியின் இறுதியில் பரிசளிப்பு விழா நடைபெறும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

1.3.1 • நிகழ்ச்சியை அறிவிப்புச் செய்வர்.

## இடுபணி 1

**குழுவில் கலந்துரையாடிக் கொடுக்கப்பட்ட தலைப்பையொட்டி வகுப்பறையில் நிகழ்ச்சியை அறிவிப்புச் செய்திடுக.**

1. கட்டுரை எழுதும் போட்டி
2. சமயச் சொற்பொழிவு
3. தேர்வு வழிகாட்டிக் கருத்தரங்கு

### அறிந்துகொள்க

**அறிவிப்பின் கூறுகள்**

- நிகழ்ச்சியின் தலைப்பு
- ஏற்பாடு செய்பவர் / இயக்கம்
- நாள்
- நேரம்
- இடம்
- இதரத் தகவல்கள்
- அறிவிப்பில் பண்பான சொற்களைப் பயன்படுத்த வேண்டும்.

## இடுபணி 2

**குழுவில் கலந்துரையாடி கொடுக்கப்பட்ட தகவல்களைக் கொண்டு வகுப்பறையில் நிகழ்ச்சியை அறிவிப்புச் செய்திடுக.**

**அ**

**அறிவிப்புக்கான குறிப்புகள்**

நிகழ்ச்சி: கூட்டுப்பணி
ஏற்பாடு: குடியிருப்பாளர் சங்கம்
இடம்: தாமான் அசோகன், சுங்கைப்பட்டாணி
பங்கேற்பாளர்: தாமான் அசோகன் குடியிருப்பாளர்கள்

**ஆ**

**அறிவிப்புக்கான குறிப்புகள்**

நிகழ்ச்சி: தமிழ்ச் சொற்போர்
ஏற்பாடு: சிப்பாங் மாவட்ட எழுத்தாளர் சங்கம்
இடம்: சாலாக் பொது மண்டபம்
பங்கேற்பாளர்: தமிழ் ஆர்வலர்கள்

**இ**

**அறிவிப்புக்கான குறிப்புகள்**

நிகழ்ச்சி: கோலப்போட்டி
ஏற்பாடு: தமிழ்மொழிக் கழகம்
இடம்: பள்ளி மண்டபம்
பங்கேற்பாளர்: கழக உறுப்பினர்கள் பல்லின ஆர்வலர்கள்
பரிசு வழங்குதல்: பள்ளி முதல்வர்

**கொடுக்கப்பட்டுள்ள அறிவிப்பைச் சரியான தொனியுடன் வாசித்திடுக.**



அன்பார்ந்த பெற்றோர்களே, ஆசிரியர்களே, நண்பர்களே, மாணவ மாணவிகளே! உங்கள் அனைவருக்கும் இனிய மாலை வணக்கம் உரியதாகுக. டெங்கில் தேசிய இடைநிலைப்பள்ளியின் முன்னாள் மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற பண்பாட்டு விழாவில் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இவ்விழாவில் பல அற்புதமான நிகழ்ச்சிகள் மூன்று அரங்குகளில் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நமது பிரதான மேடையில் தமிழர் பாரம்பரிய நடனம் அரங்கேறிக் கொண்டிருக்கிறது. அதே வேளையில் அரங்கம் இரண்டில் தனிநபர் மற்றும் குழுப் பாடல் படைப்புகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நமது பள்ளியின் முன்னாள் மாணவர்கள் அரங்கம் மூன்றில் இப்பொழுது ஓரங்க நாடகம் ஒன்றனைப் படைத்துக் கொண்டிருக்கின்றனர். நமது பிரதான அரங்கில் அடுத்த அங்கமாகத் ‘தமிழர் பண்பாடு’ எனும் தலைப்பில் ஓர் அற்புதமான உரையை நிகழ்த்த நமது சொற்பொழிவாளர் திரு. அன்பரசன் அவர்கள் காத்துக் கொண்டிருக்கிறார். அவரை அன்பு கூர்ந்து வரவேற்கின்றேன்.







2.1.1

• அறிவிப்பைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கு ஏற்ப வாசிப்பர்.

## இடுபணி 1

**வானொலி அறிவிப்புகளை வாசித்து அறிக.**

அன்பார்ந்த நேயர்களுக்கு, இப்பொழுது முக்கியமான அறிவிப்பைச் செய்யவிருக்கின்றேன். உங்கள் அனைவருக்கும் சிறந்ததொரு வாய்ப்பு. நீங்களும் மேடை நாடகங்களில் பங்குபெற வேண்டுமா? இன்றே தயாராகுங்கள். குரல் தேர்வுக்குச் சிறந்த கலைஞர்களைக் கண்டறியும் முயற்சியில் இத்தகைய வாய்ப்பினை நேயர்களுக்கு அளிப்பதில் மிகவும் பெருமையடைகின்றோம்.

குரல் தேர்வுக்கான விவரங்களை இதோ தருகின்றேன்.

தேதி: 20 மே 2017
கிழமை: சனிக்கிழமை
நேரம்: காலை 9:00 முதல் நண்பகல் 12:30 வரை
இடம்: நகராண்மைக் கழகப் பொது மண்டபம், கோலாலம்பூர்.

குரல் தேர்வில் பங்குகொள்ள விரும்புபவர்கள் ஒரு மணி நேரத்திற்கு முன்பாகவே தங்களின் பெயரைப் பதிந்துகொள்ள வேண்டும்.

குரல் தேர்வுக்குப் பதிய விரும்புவோர் 16 முதல் 30 வயதுக்கு உட்பட்டவராக இருக்க வேண்டும்.

தமிழில் சரளமாகப் பேசக் கூடியவராகவும் படிக்கக் கூடியவராகவும் இருக்க வேண்டும்.

உங்கள் அடையாள அட்டையை மறவாமல் எடுத்து வர வேண்டும்.

குரல் தேர்வில் வெற்றி பெறுவோருக்கு உள்நாட்டு நாடகங்களில் நடிக்கும் வாய்ப்புகள் வழங்கப்படும்.

அறிவிப்பினைச் செவிமடுத்த அன்பான நேயர்கள் அனைவருக்கும் நன்றி.

## இடுபணி 2

**மேற்காணும் அறிவிப்புத் தொடர்பான தகவல்களை இணையராகத் திரட்டுக; கூறுக.**

| | | |
|---|---|---|
| ஏற்பாடு | யார் | தலைப்பு |
| பங்கேற்பு | நேரம் | இடம் |
| நிகழ்ச்சி | நாள் | தேதி |

## இடுபணி 3

**குழுவில் கலந்துரையாடி வகுப்பில் படைத்திடுக.**

பள்ளியின் செம்பிறைச் சங்கம் சீர்நடைப் போட்டி ஒன்றனை நடத்திக் கொண்டிருக்கிறது. அப்போட்டிக்கான அறிவிப்பைத் தயார் செய்து வகுப்பறையில் படைத்திடுக.

# பாடம் 3 கலைகளைப் போற்றுவோம்

## வாசித்து அறிக.

### யோகாசனம்



யோகாசனம் இந்தியர்களின் பழம்பெரும் கலையாகும். இக்கலை பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இந்தியர்களால் பயிலப்பட்டு வருகின்றது. இக்கலை இப்போது உலகம் முழுவதும் பரவியுள்ளது.

இப்பயிற்சிகளைத் தக்க முறையில் பழகினால் நோயின்றி வாழலாம்; உடல் கட்டழகுடன் திகழும். உடலை வலிமையுடன் வைத்துக்கொள்ள உதவுவதோடல்லாமல் மனத்தைக் கட்டுப்படுத்தும் ஒழுங்கினையும் யோகாசனப் பயிற்சி வழங்குகிறது. இப்பயிற்சிகள் மன உளைச்சலைப் போக்கி மகிழ்ச்சியையும் ஏற்படுத்துகிறது. இக்கலையைத் தேர்ந்த ஓர் ஆசிரியரிடமிருந்தே நாம் கற்க வேண்டும்.

### மஞ்சு விரட்டு



மஞ்சு விரட்டு என்பது தமிழர்களின் ஒரு வீர விளையாட்டாகும். பொங்கல் திருநாளைக் கொண்டாடும் தமிழர் பண்பாட்டில் இரண்டாம் நாளான மாட்டுப் பொங்கலன்று இவ்விளையாட்டை ஏற்பாடு செய்வது மரபாகும்.

இவ்விளையாட்டு தமிழர்கள் மறவர்கள் என்பதற்கு ஓர் அடையாளமாகும். அன்றைய நாளில் வீரமான காளைகளை இவ்விளையாட்டிற்கு ஏற்பாடு செய்வார்கள். நலமும் வீரமும் நிறைந்த இளைஞர்கள் இவ்விளையாட்டில் கலந்துகொண்டு மனம் மகிழ்வர்.



காளையை அடக்குகின்ற வீரனுக்குப் பொருளோ பணமோ பரிசாக வழங்கப்படும். ஊரே கூடி இதைக் கண்டு களிக்கும். அன்றைய நாளில் இவ்விழா மிக விமரிசையாகக் கொண்டாடப்படும்.

காளையை அடக்குகின்ற வீரனுக்குப் பெண்ணைத் திருமணம் செய்து வைக்கும் மரபு இருந்ததைப் பண்டைய இலக்கியங்கள் காட்டுகின்றன.

- கலைக்களஞ்சியம்

3.1.1
3.1.2

- லகர, ழகர, ளகர வேறுபாடு விளங்க வாக்கியங்கள் அமைப்பர்.
- ணகர, நகர, னகர பொருள் வேறுபாடு விளங்க வாக்கியம் அமைப்பர்.

## இடுபணி 1

**பத்திகளில் இடம்பெற்ற லகர, ழகர, ளகரச் சொற்களை அடையாளம் கண்டு பட்டியலிடுக.**


## இடுபணி 2

**கொடுக்கப்பட்ட லகர, ழகர, ளகரச் சொற்களைப் பொருள் விளங்க வாக்கியத்தில் அமைத்திடுக.**

1. பலம் - பழம்
2. அலகு - அழகு
3. காலை - காளை
4. கிளி - கிழி
5. புலி - புளி
6. வேலை - வேளை


## இடுபணி 3

**கவிதை வரிகளில் காணும் லகர, ழகர, ளகரச் சொற்களைப் பட்டியலிட்டுப் பொருளை விளக்கி எழுதுக.**



## இடுபணி 4

**பனுவலில் இடம்பெற்றுள்ள ணகர, நகர, னகரச் சொற்களை அடையாளம் காண்க. அவற்றை அட்டவணையில் நிறைவு செய்க.**




செம்மொழியான தமிழ்மொழி பழைமையானது; இனிமையானது; இளமை குன்றாதது. பரந்தளவில் இலக்கியங்களைத் தன்னகத்தே கொண்டது. கருத்துச் செறிவுடைய நூல்கள் தமிழ்மொழியில் நிறைய உள்ளன. கன்னித் தமிழைத் தமிழர்கள் மூன்றாகப் பிரித்து முத்தமிழ் என்று பெயரிட்டு அழைத்தனர். பிற மொழியில் இது போல் இல்லை. முத்தமிழ் என்பது இயல், இசை, நாடகம் என்பதாகும்.

இந்த முத்தமிழை மூவேந்தர்கள் கண்ணுக்கு ஒப்பாகக் காத்தனர். அவர்கள் சேர, சோழ, பாண்டியர்களாவர். தமிழை முச்சங்கங்கள் வளர்த்தன. அவை முதல், இடை, கடைச் சங்கங்கள் ஆகும். தொல்காப்பியம், எட்டுத் தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு என்பவை நமது பண்டைய நூல்களாகும். இவை யாவும் செய்யுள்களாக இருக்கின்றன. தொல்காப்பியம் என்பது ஓர் இலக்கண நூல். இதனை இயற்றியவர் தொல்காப்பியர் என்னும் புலவராவார்.

அறம், பொருள், இன்பம் என்னும் முப்பாலைக் கொண்டது திருக்குறளாகும். இஃது ஒரு பொதுமறை; நீதி நூல்; இது தமிழுக்கு மகுடம் போன்றது. இதை இயற்றியவர் திருவள்ளுவர் ஆவார். சங்க கால நூல்களைப் போன்றே தமிழுக்கு உயிர் ஊட்டுவன ஐம்பெருங்காப்பியங்கள் ஆகும். அவை சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி, சீவகசிந்தாமணி என்பன.

எண்ணிறந்த நூல்களைத் தன்னகத்தே கொண்ட தமிழை விரும்பிக் கற்பவர்கள் சொல்வளம் பெற்று, ஒழுக்கமுடன் ஆற்றல் மிக்கவராய் வாழ்வர் என்பதில் ஐயமில்லை. தமிழை நேசிப்போம்; தமிழைச் சுவாசிப்போம்.

- ஐந்து செல்வங்கள், கி.ஆ.பெ

| ணகர | நகர | னகர |
|---|---|---|
| கண்ணுக்கு | | |

## இடுபணி 5

**கொடுக்கப்பட்டுள்ள ணகர, நகர, னகரச் சொற்களின் பொருளை அகராதியின் துணைகொண்டு அறிக. பொருள் வேறுபாடு விளங்க வாக்கியத்தில் அமைத்திடுக.**

1. மனம் - மணம்
2. ஊன் - ஊண்
3. பானம் - பாணம்
4. இவன் - இவண்
5. ஆனை - ஆணை

## வளப்படுத்துதல்

**பின்வரும் ணகர, நகர, னகர, லகர, ழகர, ளகரச் சொற்களின் பொருள் வேறுபாட்டை அறிந்து வாக்கியம் அமைத்திடுக.**

1. நலம் - நளம்
2. கனம் - கணம்
3. தலை - தழை
4. வலை - வளை
5. விளை - விழை
6. கனை - கணை

## குறைநீக்கல்

**வாக்கியங்களில் சரியான ணகர, நகர, னகர, லகர, ழகர, ளகரச் சொற்களை எழுதுக.**



1. உடல் நலக்குறைவினால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த தாத்தா உடல் ________ காணப்பட்டார். (நலிந்து / நளிந்து)
2. அக்காள் ________ நனைந்து வீடு திரும்பினாள். (மழையில் / மலையில்)
3. “________ அறிந்து கொண்ட ரகசியத்தை யாரிடமும் கூறமாட்டேன்” என்றாள் சுசிலா. (நாண் / நான்)
4. வாழ்க்கையில் வெற்றி பெற பொறுமையும் மனத் ________ யும் பெற்றிருத்தல் வேண்டும். (திண்மை, தின்மை)



5. மான் குட்டி காட்டிற்குள் ________ குதித்து ஓடியது. (துள்ளிக் / துல்லிக்)
6. திருமதி அமுதா மூலிகைகளின் ________ களையும் அவற்றின் பயன்பாட்டையும் பற்றி ஆராய்ந்து வருகிறார். (தண்மை / தன்மை)
7. ________ சாப்பிடுவது உடல்நலத்திற்கு நன்மை விளைவிக்கும். (பலம் / பழம்)

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## இணைமொழிகளையும் பொருளையும் அறிக.



மணிமேகலை எனும் நூல் ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றாகும். சிலப்பதிகாரத்தைத் தொடர்ந்து வருவதால் இவற்றை இரட்டைக் காப்பியங்கள் என்பர்.

மணிமேகலையும் அவளின் தோழி சுதமதியும் மலர் பறிப்பதற்காகச் சோலைக்குச் சென்றிருந்தனர். மணிமேகலை அங்கு இருப்பதை அறிந்த சோழ இளவரசன் அவளருகில் சென்றான். அவளைப் பார்த்துப் பரவசமடைந்தான். மணிமேகலையின் **அகமும் புறமும்** இளவரசனை ஈர்த்தது.

இளவரசனிடமிருந்து தப்பித்துக் கொள்ள மணிமேகலை பளிங்கறைக்குள் ஒளிந்துகொண்டாள். மணிமேகலை களைப்பால் அங்கேயே உறங்கிப் போனாள். அச்சமயம் மணிமேகலா தெய்வம் மனித உருவில் வந்து மணிமேகலையைத் தூக்கிச் சென்றது. மணி பல்லவத்தீவில் விடப்பட்ட மணிமேகலை தூக்கம் தெளிந்தாள். அவளின் கண்ணெதிரில் புத்த பீடம் ஒன்று தோன்றியது. புத்த பீடம் மணிமேகலையிடம் அவளின் முற்பிறவியைப் பற்றிக் கூறியது. மணிமேகலை கோமுகி எனும் பொய்கையை வலம் வந்து அமுதசுரபி எனும் பாத்திரத்தைப் பெற்றாள்.

அப்பாத்திரத்தை ஏந்திக் கொண்டு, பல இடங்களுக்குச் சென்றாள். எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும் என்ற உயரிய சிந்தனையில் **உயர்வு தாழ்வு** பாராமல் பசியோடு இருந்த அனைவருக்கும் அமுதசுரபி பாத்திரத்தின் மூலம் உணவு வழங்கினாள்.

**இணைமொழிகளும் பொருளும்**

**அகமும் புறமும்** - மன உணர்வும் வெளித் தோற்றமும்
**உயர்வு தாழ்வு** - பாகுபாடு / வேறுபாடு

### இடுபணி 1

**சூழலுக்கு ஏற்ற இணைமொழியை எழுதுக.**

1. வீட்டிற்கு வந்த விருந்தினர்களை அம்மா மகிழ்வோடு வரவேற்று உபசரித்தார்.
2. ஏழை பணக்காரர் என்ற வேற்றுமைகளைப் பார்க்காமல் பழகுவது நல்லது.
3. பள்ளியில் ஆசிரியர் பாகுபாடின்றி கல்வி போதித்தார்.
4. உயர் அதிகாரி தனக்குக் கீழ் பணிபுரிபவர்களிடம் அன்பாகப் பழகினார்.
5. பிரதமர் மக்களைப் பாகுபாடு பார்க்காமல் ஒன்றாகக் கருதித் தேவையானவற்றைச் செய்தார்.

4.4.1
4.6.1

- ஒன்றாம் படிவத்திற்கான இணைமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.
- ஒன்றாம் படிவத்திற்கான மரபுத்தொடர்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

## மரபுத்தொடரை அறிக.


சூழல் : ஒரு நாள் மாலை வேளையில் குமரனின் தாத்தா பூங்காவில் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தார். அவ்வழியே வந்த குமரன் தாத்தாவைப் பார்த்து வணக்கம் கூறினான். தன்னுடைய ஐயத்தைப் போக்கிக்கொள்ள குமரன் தாத்தாவிடம் சில கேள்விகள் கேட்டான்.

குமரன்: தாத்தா, நான் உங்களிடம் சில விவரங்கள் கேட்டுப் பெற வேண்டும்.

தாத்தா: தாராளமாகக் கேள் குமரா. எனக்குத் தெரிந்ததைச் சொல்கிறேன்.

குமரன்: நேற்று நான் அக்காவுடன் கோவிலுக்குச் சென்றேன். அங்கே அக்காள் அரச மரத்தைச் சுற்றி வந்தாள். ஏன் அப்படிச் சுற்ற வேண்டும் தாத்தா?

தாத்தா: அரச மரம் மட்டும் அல்ல. அங்கே வேப்ப மரத்தையும் ஒன்றாகச் சேர்த்து வைத்திருப்பார்கள். அறிவியல் ரீதியாகப் பார்த்தால் அரச மரமும் வேப்ப மரமும் நச்சுக் கிருமிகளைக் கொல்லும் தன்மை உடையவை. அதனால்தான் **வாழையடி வாழையாக** நம் முன்னோர்கள் இந்த நம்பிக்கையைக் கடைப்பிடிக்கின்றனர். மேலும் பூமியின் காந்த சக்தியை அதிகமாகக் கொண்டது அரச மரம். இந்த இரண்டு மரங்களும் சேரும் போது அவற்றிலிருந்து வெளிப்படும் கதிர்வீச்சு நம் உடலுக்கு நல்ல ஆரோக்கியத்தைக் கொடுக்கின்றது.




தாத்தா: குமரா! நீ நினைப்பது போல உன் நண்பர்கள் பேசுவது **வெட்டிப் பேச்சு** அல்ல. காரணம் அறிந்துதான் பேசுகிறார்கள். வீட்டினுள் நகம் வெட்டினால் அஃது எங்காவது போய் விழுந்துவிடும். ஒரு வேளை நாம் உண்ணும் உணவுப் பொருளில்கூட விழலாம். நாம் அந்த உணவைச் சாப்பிட்டால் பலவகையான வயிற்றுத் தொல்லைகள் வரக்கூடும். அதனால்தான் அப்படிக் கூறுகிறார்கள்.

குமரன்: நிறைய விவரங்களைக் கூறியதற்கு மிக்க நன்றி தாத்தா.

தாத்தா: இவ்வளவு நேரம் நான் சொல்வதைக் கேட்டுக் கொண்ட நீயும் இவற்றை உன் நண்பர்களுடன் பகிர்ந்துகொள். தாத்தா **அரைப்படிப்பு** படித்துவிட்டு ஏதோ உளறுவதாக நினைத்துவிடாதே!

### மரபுத்தொடரும் பொருளும்

| | |
|---|---|
| **வாழையடி வாழை** | - தலைமுறை தலைமுறையாக |
| **வெட்டிப் பேச்சு** | - வீண் பேச்சு / பயனற்ற பேச்சு |
| **அரைப்படிப்பு** | - முழுமையற்ற படிப்பு / நிரம்பாக் கல்வி |

## இடுபணி 2

**சூழலுக்கு ஏற்ற மரபுத்தொடர்களை எழுதுக.**

1. இந்நாட்டில் தமிழர்கள் பல தலைமுறையாகப் பல்வேறு பண்டிகைகளைக் கொண்டாடி வருகின்றனர்.
2. அக்குடியிருப்புப் பகுதியில் சில இளைஞர்கள் மாலை வேளையில் ஓரிடத்தில் கூடிப் பயனற்றவற்றைப் பேசிப் பொழுதை வீணாகக் கழித்தார்கள்.
3. இன்று பல்கலைக்கழகங்களில் படித்த பட்டதாரிகளுக்கே வேலை வாய்ப்புகள் கிடைப்பதால், படிவம் மூன்றோடு படிப்பை நிறுத்தியவர்கள் வேலை பெறுவதில் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.
4. பாட்டன் முப்பாட்டன் காலம் தொட்டு கவிமாறனின் குடும்பம் அந்த வீட்டில் வாழ்ந்து வருகின்றனர்.
5. பாடவேளையின்போது பாடத்தில் கவனம் செலுத்தாது வீணே பேசிக் கொண்டிருக்கும் மாணவர்கள் கல்வியில் பின்தங்கிவிடுவார்கள்.

## இடுபணி 3

**கொடுக்கப்பட்ட மரபுத்தொடர்களைப் பொருள் விளங்க வாக்கியங்களில் அமைத்திடுக.**

வாழையடி வாழை | வெட்டிப் பேச்சு | அரைப்படிப்பு

## வளப்படுத்துதல்

**மேற்காணும் மரபுத்தொடர்களைக் குழுவில் கலந்துரையாடிப் பொருத்தமான சூழல்களை உருவாக்கிப் படைத்திடுக.**

## குறைநீக்கல்

**பொருத்தமான மரபுத்தொடர்களைக் கொண்டு பனுவலை நிறைவு செய்க.**

மாறனின் குடும்பத்தினர் ______________ யாக வியாபாரம் செய்து வந்தனர். அதனால், அவர்களின் குடும்பத்தினர் செல்வச் செழிப்போடு வாழ்ந்து வந்தனர். அவன் குடும்ப உறுப்பினர்கள் வீணே ______________ பேசிப் பொழுதைக் கழிப்பதில்லை. ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு வகையில் வியாபாரத்திற்கு உதவி வந்தனர். ______________ வியாபார முன்னேற்றத்திற்கு உதவாது என்பதால் மாறனின் குடும்ப உறுப்பினர்கள் நன்கு படித்து வணிகவியல் கல்வியில் இளங்கலைப் பட்டம் பெற்றிருந்தனர்.



அரைப்படிப்பு | வாழையடி வாழை | வெட்டிப் பேச்சு

தொகுதி 4

# இயற்கையை நேசிப்போம்

## பாடம் 1 அழிந்துவரும் காடுகள்

**குழுவில் கலந்துரையாடுக.**

காரணங்கள்

- தொழிற்சாலைகள் நிர்மாணிப்பதற்கு
- வீடுகள் கட்டுவதற்கு





**காடுகள் அழிப்பு**

அழியும் விதம்

- தீ விபத்து
- கட்டுப்பாடற்ற வெட்டுமரத் தொழில்





1.4.1

• படித்தவற்றை விவரித்துக் கூறுவர்.

### பாதிப்புகள்

- திடீர் வெள்ளம்
- மண் சரிவு
- மண் அரிப்பு
- சுற்றுச்சூழல் பாதிப்பு
- தூய்மைக்கேடு ஏற்படுதல்
- உலக வெப்பம் பெருகுதல்
- உயிர்வளி குறைதல்





### தவிர்க்கும் வழி

- இயற்கைப் பாதுகாப்புத் திட்டம்
- சட்டத்தை வலுப்படுத்துதல்
- இயற்கையை நேசிக்கும் விழிப்புணர்வு





**இடுபணி 1**

**குழுவில் கலந்துரையாடிப் படித்தவற்றை விவரித்துக் கூறுக.**

**இடுபணி 2**

**காடுகளை அழிப்பதனால் ஏற்படும் பிற பாதிப்புகளைக் குழுவில் கலந்துரையாடி வகுப்பில் படைத்திடுக.**

**இடுபணி 3**

**‘வளமான காடு ஒரு நாட்டின் விலை மதிப்பற்ற சொத்தாகும்’ கருத்துரைத்திடுக.**

# பாடம் 2 காடுகளைக் காப்போம்

**வாசித்து அறிக.**



மரங்கள் அடர்ந்த நிலப்பகுதி காடு என்றழைக்கப்படுகிறது. தமிழில் வனம், கானகம், அடவி, புறவு, பொதும்பு போன்ற பல சொற்களால் இது குறிக்கப்படுகின்றது. தற்போதைய நிலையில் **புவி** மேற்பரப்பில் முப்பது விழுக்காடு காடுகளினால் **மூடப்பட்டுள்ளது**. முன்னர் காடுகள் நிலப்பரப்பின் ஐம்பது விழுக்காடு வரை மூடியிருந்ததாக மதிப்பிட்டுள்ளனர்.

உலகின் பல பகுதிகளில் உள்ள காடுகள் காற்றிலுள்ள **கரிவளியை** உட்கொண்டு **உயிர்வளியை** வெளியிடுகின்றன. காடுகள் பல உயிரினங்களுக்குப் **புகலிடமாக** விளங்குகின்றன. காடுகள் வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்துவதுடன் மண் அரிப்பையும் **தடுக்கின்றன.**



**வேளாண்மை, நகராக்கம்** போன்ற காடல்லாத நிலப் பயன்பாடுகளுக்கும் அதன் வளங்களுக்கும் காட்டை வெட்டி நிலத்தைத் **தரிசாக** மாற்றுவதே காடழிப்பு என்பதன் முழுமையான பொருளாகும். முற்காலத்தில் காடழிப்பு மேய்ச்சல் நிலங்களை உருவாக்குவதற்கு அல்லது வேளாண்மை நிலங்களை உருவாக்கும் நோக்கத்துடனேயே நடைபெற்றது.

உலகின் பல பகுதிகளில் குறிப்பாகக் கிழக்கு ஆசிய நாடுகளில் காடாக்கல் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. காடுகளைப் பராமரிப்பது, காடுகளை வளர்ப்பது போன்ற முயற்சிகளின்வழி இயற்கை வளங்களைப் பாதுகாக்க முடியும் என்பது திண்ணம்.

2.3.2

- சுற்றுச்சூழல் தொடர்பான உரைநடைப் பகுதியை வாசித்துக் கருத்துணர்க் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.

### இடுபணி 1

**வண்ணமிடப்பட்ட சொற்களுக்குப் பொருள் கூறுக; எழுதுக.**

**அறிந்துகொள்க**

காடுகளை நிலமாக்கும் மனிதச் செயல்பாடுகள் உலக அளவில் இயற்கைச் சூழலை அழித்து வருகின்றன.

### இடுபணி 2

**வினாக்களுக்கு விடை கூறுக.**

1. காடுகளைக் குறிக்கும் வேறு சொற்களைப் பட்டியலிடுக.
2. காடுகளினால் ஏற்படும் நன்மைகள் யாவை?
3. காடழிப்பு என்றால் என்ன? விளக்குக.
4. காடழிப்பினால் ஏற்படக்கூடிய விளைவுகள் யாவை?
5. காடுகளை அழிவிலிருந்து காப்பதற்கான நடவடிக்கைகளை ஆராய்ந்து கூறுக.
6. மக்களிடையே காடுகளை நேசிக்கும் பண்பை உருவாக்குவதற்கான வழிமுறைகளைக் குழுவில் கலந்துரையாடி வகுப்பில் படைத்திடுக.

### இடுபணி 3

**காடுகளை அழிப்பதன் காரணம், பாதிப்பு, நிவர்த்தி செய்யும் வழிமுறைகள் பற்றிய விவரங்களைப் பொருத்தமான சிந்தனைக் குறிவரைவில் எழுதிக் காட்டுக.**

### இடுபணி 4

**பனுவலை வாசித்து வினாக்களுக்கு விடை காண்க.**

பூமியில் மூன்றில் இரு பகுதி நீர்நிலையாகும். நீரின்றி உயிரினங்கள் உயிர் வாழா. ஆனால், மனிதர்களின் பொறுப்பற்ற நடவடிக்கைகளினால் நீர்த் தூய்மைக்கேடு ஏற்படுகின்றது. தொழிற்சாலைகளிலிருந்து வெளியாக்கப்படும் கழிவுப் பொருள்களினால் நீர்நிலைகளில் நீர்வாழ் உயிரினங்கள் அழிவை எதிர்நோக்குகின்றன. இதனால் மக்களுக்கும் பல்வேறு பாதிப்புகள் ஏற்படுகின்றன; நோய்கள் பீடிக்கின்றன. எனவே, நீரின் தூய்மைக்கேட்டைத் தடுக்க அரசாங்கம் பல வழிகளைக் கையாள வேண்டும். 'நீர்நிலைகளை நேசிப்போம்' எனும் பரப்புரை தொடங்கப்பட வேண்டும். நீர்நிலைகளில் கழிவுகளைக் கொட்டுவோருக்குத் தண்டனை வழங்க வேண்டும்.

1. நீர்த் தூய்மைக்கேட்டிற்கு இட்டுச்செல்லும் மனிதர்களின் பொறுப்பற்ற செயல்களைக் குறிப்பிடுக.
2. நீர்நிலைகளின் தூய்மைக்கேட்டைத் தடுக்கும் வழிமுறைகளைக் குறிப்பிடுக.

## பாடம் 3 காடுகளைக் காக்கும் வழிமுறைகள்

### வாசித்து அறிக, எழுதுக.

வளமான காடுகளைக் காப்பது மலேசியர்களின் கடமையாகும். அதற்கு நாம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அவற்றுள் ஒன்று விழிப்புணர்வு இயக்கமாகும். பல்வேறு மூலங்களின்வழி நாம் இவ்வியக்கத்தை மேற்கொள்ளலாம். வானொலி, தொலைக்காட்சி, இணையம் ஆகியவற்றோடு அச்சு ஊடகங்களையும் பயன்படுத்தலாம். படங்கள், செய்திகள், தொகுப்பு நிகழ்ச்சிகள், கட்டுரை ஆகியவற்றின்வழி மக்களுக்குத் தெளிவை ஏற்படுத்தலாம். மக்களைக் கவரும் வகையில் நவீன உத்திகளைப் பயன்படுத்தினால் மக்கள் மனங்களில் காடுகளை நேசிக்கும் எண்ணத்தை உருவாக்க முடியும்.

| | |
|---|---|
| முதன்மைக் கருத்து | காடுகளைக் காப்பது மலேசியர்களின் கடமை |
| துணைக் கருத்து | விழிப்புணர்வு இயக்கம் |
| விளக்கம் | பல்வேறு மூலங்களின் வழி |
| சான்று | வானொலி, தொலைக்காட்சி, இணையம், அச்சு ஊடகம், படங்கள், செய்திகள், தொகுப்பு நிகழ்ச்சிகள் |
| முடிபு | காடுகளை நேசிக்கும் எண்ணம் |

### இடுபணி 1

**பனுவலில் இடம்பெற்றுள்ள முதன்மைக் கருத்து, துணைக் கருத்து, விளக்கம், சான்றுகள், முடிபு ஆகியவற்றை அடையாளம் காண்க; எழுதுக.**

இயற்கைத் தாயின் படைப்புகளுள் காடும் அடங்கும். காடுகள் இன்று பேரழிவை எதிர்நோக்குகின்றன. மனிதர்களின் தன்னலப்போக்கினால் காட்டு மரங்கள் அதிகமாக வெட்டப்படுகின்றன. காடுகளுக்குத் தீ வைக்கின்றனர். இதனால் இயற்கையில் உயிர்வளி குறைகின்றது. மிருகங்கள் உறைவிடங்களை இழக்கின்றன. சுற்றுச்சூழல் பாதிப்பு அடைகின்றது. இந்நிலை தொடருமானால் புவி வெப்பம் அதிகரித்து உலகம் அழிந்துவிடும். அரசாங்கம் காடுகளைப் பாதுகாக்கச் சட்டமுறைகளை வலுப்படுத்தி நெறிப்படுத்த வேண்டும். இல்லையேல் உலக அழிவைத் தடுக்க இயலாது. மனிதர்கள் மனிதநேயத்துடன் நடந்து கொள்ள வேண்டும்.

3.2.2

- முதன்மைக் கருத்து, துணைக் கருத்து, விளக்கம், சான்றுகள், முடிபு ஆகியவற்றை உள்ளடக்கிய பத்தியை எழுதுவர்.

## இடுபணி 2

**பின்வரும் படத்தைத் துணையாகக் கொண்டு முதன்மைக் கருத்தையும் துணைக் கருத்தையும் எழுதுக.**



## வளப்படுத்துதல்

**படத்தைத் துணையாகக் கொண்டு முதன்மைக் கருத்து, துணைக் கருத்து, விளக்கம், சான்றுகள், முடிபு ஆகியவற்றை உள்ளடக்கிய பத்தியை எழுதுக.**



## குறைநீக்கல்

**கீழ்க்காணும் வாக்கியங்களை வாசித்து, அவற்றுள் முதன்மைக் கருத்து, துணைக் கருத்து, விளக்கம், சான்றுகள், முடிபு ஆகியவற்றை அடையாளங்கண்டு எழுதுக.**

- மனிதர்களின் தன்னலப் போக்கினால் காட்டு மரங்கள் அதிகமாக வெட்டப்படுகின்றன.
- இயற்கைத் தாயின் படைப்பான காடுகள் இன்று பேரழிவை எதிர்நோக்குகின்றன.
- இந்நிலை தொடர்ந்தால் சுற்றுச்சூழல் பாதிப்படைந்து புவி வெப்பம் அதிகரிக்கும்.
- எனவே, அரசாங்கம் காடுகளைப் பாதுகாக்கச் சட்டமுறைகளை வலுப்படுத்தி நெறிப்படுத்த வேண்டும்.
- இதனால் இயற்கையில் உயிர்வளி குறைகின்றது; மிருகங்கள் உறைவிடங்களை இழக்கின்றன.

முதன்மைக் கருத்து:

துணைக் கருத்து:

விளக்கம்:

சான்றுகள்:

முடிபு:


## பாடம் 4 இலக்கணம்

### வேற்றுமை உருபுகளை அறிக.

மூன்றாம் வேற்றுமை உருபுகளான ஒடு, ஓடு ஆகியவற்றின் பின் வலிமிகாது.

**எடுத்துக்காட்டு**




**தந்தை + ஒடு = தந்தையொடு**
**அறிவு + ஓடு = அறிவோடு**

### இடுபணி 1

**கீழ்க்காணும் வாக்கியங்களில் காணப்படும் மூன்றாம் வேற்றுமை உருபின் பயன்பாட்டின் பிழைகளை அடையாளம் காண்க; அவற்றைத் திருத்தி எழுதுக.**

1. அமரர் டாக்டர் இரா.தண்டாயுதம் அவரொடுப் படித்த நண்பர்களை உடன்பிறப்புகள் போல் வழிநடத்தினார்.
2. அவன் தீய பழக்க வழக்கங்களை உடையவனானதால் அவனோடுச் சேர வேண்டாம் என்று அம்மா அறிவுரை கூறினார்.
3. தமிழாசிரியர்கள் தமிழகப் பயணம் சென்றபோது, கவிப்பேரரசு வைரமுத்துவைச் சந்தித்து அவரோடுக் கலந்துரையாடும் வாய்ப்பைப் பெற்றனர்.
4. முகிலன் மாலையில் தன் தம்பிகளோடுப் பந்து விளையாடுவதற்குத் திடலுக்குச் சென்றான்.
5. வகுப்பாசிரியர் மாணவர்களொடுப் பள்ளிச் சுற்றுலாவில் கலந்துகொண்டார்.
6. அவன் தன் நண்பர்களோடுப் படம் பார்ப்பதற்காகத் திரையரங்கிற்குச் சென்றான்.




5.5.1

• மூன்றாம் வேற்றுமை உருபுகளாகிய ஒடு, ஓடு என்பனவற்றின் பின் வலிமிகாது என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

## இடுபணி 2

**மூன்றாம் வேற்றுமை உருபுகளான ஒடு, ஓடு ஆகியவற்றின் பின் வலிமிகாது என்ற விதிக்கேற்ப கொடுக்கப்பட்ட சொற்களை வாக்கியங்களில் அமைக்கவும்.**

| | | |
|---|---|---|
| அண்ணன் | பாரதி | புத்தகம் |
| மாணவன் | கல்வி | தங்கை |

## வளப்படுத்துதல்

**மூன்றாம் வேற்றுமை உருபுகளான ஒடு, ஓடு ஆகியவற்றின் பின் வலிமிகாது என்ற விதிக்கேற்ப சுயமாக ஐந்து வாக்கியங்களை எழுதுக.**

## குறைநீக்கல்

**அ கீழ்க்காணும் சொற்றொடர்களின் பிழைகளைத் திருத்தி எழுதுக.**



1. தம்பியோடுச் சென்றான்.
2. பண்பொடுக் கேட்டான்.
3. உயிரோடுத் திரும்பினான்.
4. அடக்கத்தொடுப் பேசினான்.
5. மாமாவொடுத் தங்கினான்.
6. பாட்டியோடுத் தேடினான்.
7. குழுவோடுப் பாடினான்.
8. அதிகாரியொடுக் கலந்துரையாடினான்.

**ஆ ஒடு, ஓடு எனும் வேற்றுமை உருபுகளைப் பயன்படுத்தி வாக்கியங்களை மீண்டும் எழுதுக.**



1. கடிதம் ______ பணமும் வந்தது.
2. கிராமத்துத் தலைவர் ______ தொண்டர்களும் வந்தனர்.
3. கலைநிகழ்ச்சியில் ஆடல் ______ பாடல்களும் பாடப்பட்டன.
4. ஆசிரியர் ______ மாணவர்களும் வாசித்தனர்.
5. மாமா ______ அத்தையும் இரவுச் சந்தைக்குச் சென்றார்.
6. முத்தரசு ஏன் அக்காள் ______ சந்தைக்குச் சென்றான்?
7. அவன் வட்டி ______ ரொக்கத்தையும் வங்கியில் செலுத்தினான்
8. மைதிலி பூசைப் பொருள்கள் ______ கோவிலுக்குச் சென்றாள்.

தொகுதி 5

# உடல்நலம் பேணுவோம்

## பாடம் 1 இரத்ததான முகாம்

குழுவில் கலந்துரையாடுக.



இடுபணி 1

**படத்தைத் துணையாகக் கொண்டு வகுப்பில் கலந்துரையாடுக.**

1.4.2 • பார்த்த நிகழ்ச்சியை விவரித்துக் கூறுவர்.

## இடுபணி 2

**அ** நீர் பார்த்த நிகழ்ச்சியை விவரித்துக் கூறுக.





**ஆ** மருத்துவமனையில் அவசரச் சிகிச்சைப் பிரிவை அடைந்தவுடன் நீ பார்த்த நிகழ்ச்சியை விவரித்திடுக.

**இ** பின்வரும் நிகழ்ச்சியை விவரித்துக் கூறுக.



## பாடம் 2 நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்



**கடிதத்தை வாசித்திடுக.**

எண் 11, ஜாலான் 6,
தாமான் மெலூர்,
30100 ஈப்போ, பேரா.
20 ஏப்ரல் 2017

அன்புத் தோழி ஓவியாவிற்கு,

வணக்கம். இறையருளால் நானும் என் குடும்பத்தாரும் நலமாக உள்ளோம். அங்கு நீயும் உன் குடும்பத்தாரும் நலமோடு வாழ எல்லாம் வல்ல இறைவனை **இறைஞ்சுகிறேன்**. கடந்த கடிதத்தில் நீ உடல்நலத்தோடு வாழ்வதற்கான வழிமுறைகளைப் பற்றி என்னிடம் சில தகவல்களைக் கேட்டிருந்தாய். இதோ! அதனைப் பற்றி விளக்கியே இக்கடிதத்தை நான் எழுதுகின்றேன்.

எல்லாச் செல்வங்களையும்விட உடல்நலமே சிறந்த **செல்வமாகப்** போற்றப்படுகிறது. சுவர் இருந்தால்தானே சித்திரம் தீட்ட முடியும்? உடல் ஆரோக்கியத்தைப் **பேணுவதற்கு** முதலில் நாம் நமது அன்றாட உணவு முறையில் கவனம் செலுத்த வேண்டும். சமச்சீர் உணவை உட்கொள்வதோடு பழங்களையும் உண்ண வேண்டும். அதிகமான கொழுப்பு, இனிப்பு வகை உணவுகளைத் **தவிர்க்க** வேண்டும். **புலால்** வகை உணவுகளைக் குறைத்துக் கொண்டு அதிகமான காய்கறி உணவுகளை உண்பது சிறப்பாகும்.

தோழியே, மேலும் உடல்நலத்தைப் பேணுவதற்கு உடற்பயிற்சி இன்றியமையாததாகும். குறைந்தது இருபது நிமிடமாவது உடற்பயிற்சி செய்ய வேண்டும். வாரத்தில் மூன்று நாள்களாவது உடற்பயிற்சி செய்தால் உடல்நலமும் மனநலமும் அதிகரிக்கும் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர்.

உடல்நலத்தைப் பேணுவதில் தூய்மையைப் **போற்றுவதும்** ஒரு சிறந்த வழியாகும். வீடு எப்பொழுதும் தூய்மையாக இருந்தால் நோய்க்கிருமி **அண்டாது.**

நல்ல எண்ணங்களும் ஆரோக்கியமான சிந்தனைகளும் நம் உடல்நலத்தைக் காக்கும். புகைப்பது, மது அருந்துவது, போதைப் பொருள் உட்கொள்வது ஆகிய நடவடிக்கைகள் நமது உடல்நலத்தைக் கெடுப்பதோடு ஆயுளையும் குறையச் செய்யும்.

இக்கடிதத்தில் உடல்நலத்தைப் பேணுவதற்கான வழிமுறைகளை ஓரளவிற்கு விளக்கியுள்ளேன். நேரில் சந்தித்தால் இதைப் பற்றி இன்னும் விரிவாக அளவளாவலாம். உன் கடிதத்தையும் வருகையையும் ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

இப்படிக்கு,
உன் அன்புத் தோழி,

ம. குழலினி
..........................
*(ம. குழலினி)*

2.1.3

- கடிதத்தைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கு ஏற்ப வாசிப்பர்.

## இடுபணி 1

**கடிதத்தைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசித்திடுக.**

## இடுபணி 2

**வண்ணமிடப்பட்ட சொற்களின் பொருளை ஊகித்துக் கூறுக.**

'சுவர் இருந்தால்தானே சித்திரம் தீட்ட முடியும்' என்று குழலினி கூறியதற்கான காரணகாரியங்களை ஆராய்ந்து கூறுக.

**அறிந்துகொள்க**

உணவு வகைகளும் சத்துகளும் :-

- மாவுச்சத்து - அரிசி, கிழங்கு, தானியங்கள்.
- நார்ச்சத்து - கீரை வகைகள், பழங்கள்
- புரதச்சத்து - மீன், முட்டை, இறைச்சி வகைகள்.
- ஊட்டச்சத்து - ஏ, பி, சி, டி.


## இடுபணி 3

**கீழ்க்காணும் கேள்விகளுக்கு விடை கூறுக.**

1. ஓவியா முன் வைத்த கோரிக்கை என்ன?
2. உடல்நலம் ஏன் சிறந்த செல்வமாய்ப் போற்றப்படுகின்றது?
3. எவ்வகையான உணவு நம் உடல்நலத்தைப் பாதிக்கும்?
4. உடல்நலமும் மனநலமும் பெறுவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்?

## இடுபணி 4

**பின்வரும் உணவுக் கூம்பில் (food pyramid) பொருத்தமான உணவு வகைகளின் பெயர்களை எழுதி விளக்கிடுக.**



## பாடம் 3 உடல் பருமன்

**குழுவில் கலந்துரையாடுக.**



விரைவு உணவு அல்லது திடீர் வகை உணவுகளைத் தவிர்க்க வேண்டும்.

அதிகக் கொழுப்பு, மற்றும் இனிப்பு வகை உணவைத் தவிர்க்க வேண்டும்.

தொடர்ந்து உடற்பயிற்சிகளைச் செய்ய வேண்டும்.

உடல் பெருத்துப் பல சிரமங்களை ஏற்படுத்துகிறது.

உடல் பரிசோதனை செய்து மருத்துவரின் ஆலோசனையைப் பெற வேண்டும்.

பழங்கள், காய்கறிகள் ஆகியவற்றை அதிகம் உண்ண வேண்டும்.

### இடுபணி 1

**உடல் பருமனால் அவதியுறும் உன் நண்பனுக்கு, குறிவரைவில் கொடுக்கப்பட்ட குறிப்புகளைக் கொண்டு ஒரு கடிதம் எழுதுக.**

### இடுபணி 2

**பல நாள்களாக நோய்வாய்ப்பட்டு மருத்துவ விடுப்பில் இருக்கிறாய். பள்ளியில் கற்றுக் கொடுத்த பாடங்கள், புதிய ஆசிரியர் வருகை ஆகியவற்றைக் கேட்டு நண்பனுக்குக் கடிதம் எழுதுக.**

**இணையத் தளம்**
http://www.myhealth.gov.my/berlebihan-berat-badan-a-obesiti/

3.4.2 • 140 சொற்களில் நட்புக் கடிதம் எழுதுவர்.

## குறைநீக்கல்

**அ கொடுக்கப்பட்ட குறிப்புகளை நிரல்படுத்திக் கடிதத்தை எழுதுக.**

முதலில் நீ நிறைய வாசிக்க வேண்டும். கதைகள், கவிதைகள், கட்டுரைகள் ஆகியவற்றைத் தொடர்ந்து வாசிக்க வேண்டும். நாளிதழ் வாசிப்பதும் உன் மொழிவளத்தைப் பெருக்கும். உன் வீட்டில் நூல்கள் இல்லையென்றால் பள்ளி நூலகத்தில் இரவல் பெற்று வாசிக்கலாம்.

மேலும் வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையும் கேட்கவும் பார்க்கவும் வேண்டும். திரைப்படங்கள், தொடர் நாடகங்கள் மட்டுமல்லாமல் பயனுள்ள பிற நிகழ்ச்சிகளையும் பார்க்க வேண்டும். அறிவியல், பூகோளம், சுற்றுச்சூழல் தொடர்பான நிகழ்ச்சிகளைப் பார்ப்பதும் கேட்பதும் மொழிவளத்திற்குப் பெரும் உதவியாக இருக்கும்.

இத்துடன் விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

இறையருளால் நானும் என் குடும்பத்தினரும் நலமாக உள்ளோம். அங்கு நீயும் உன் குடும்பத்தினரும் நலமுடன் வாழ எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

உன் கடிதம் கிடைக்கப் பெற்றேன். மிக்க மகிழ்ச்சி. இக்கடிதத்தில் மொழிவளத்தைப் பெருக்குவதற்கான வழிமுறைகளை விளக்க உள்ளேன்.

மொழிவளத்தைப் பெருக்குவதற்கான வழிமுறைகள் உனக்குப் பயனளித்திருக்கும் என நம்புகிறேன். உன் பதில் கடிதத்திற்காகக் காத்திருப்பேன்.

______________ } முகவரி தேதி

______________ } விளிப்பு

______________ } நலம் விசாரித்தல்

______________ } கடிதத்தின் நோக்கம்

______________ } கருத்து 1

______________ } கருத்து 2

______________ } எதிர்பார்ப்பு

______________ } முடிவு

______________ } ஒப்பம்

**ஆ** **விடுமுறையைக் கழிக்க வரும்படி நண்பனுக்குக் கடிதம் எழுதுக.**

முகவரி - தேதி
அன்புள்ள நண்பர்
நலம் விசாரித்தல்
பெற்றோர், குடும்பத்தினர்

→ சென்ற விடுமுறையில் சுற்றுலா சென்ற விவரங்கள் - வரலாற்று இடங்கள்

→ கண்கவர் இடங்கள், குறிப்பெழுதுதல் - இயற்கைக் காட்சி - மனத்திற்கு இதம்

→ விடுதியில் தங்குதல் - கடுமையான குளிர் -

→ மறுநாள் நீர்வீழ்ச்சி, குளித்து மகிழ்தல் - நீச்சல் திறமை - ஆசிரியர் கண்காணிப்பு

→ அடுத்த விடுமுறையைக் கழிக்க அழைத்தல் - மன அமைதி

## வளப்படுத்துதல்

அ. நீ விடுதிப்பள்ளியில் தங்கிப் படித்துக் கொண்டிருக்கிறாய். அங்குள்ள உன் நிலையை விளக்கி உன் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுதுக.

ஆ. கீழ்க்காணும் கடிதத்தைத் தொடர்ந்து எழுதுக.

எண் 16, ஜாலான் அங்கிரிக்,
40000 காஜாங்,
சிலாங்கூர்.
15 ஆகஸ்ட் 2017

அன்புள்ள முகிலனுக்கு,

வணக்கம். இங்கு இறையின் கருணையினால் நான் என் குடும்பத்தாருடன் நலமுடன் இருக்கிறேன். அதேபோல் நீயும் உன் குடும்பத்தாரும் நலமுடன் இருக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

கடந்த வாரம் எங்கள் பள்ளி தேசிய அறிவியல் கூடத்திற்குக் கல்விச் சுற்றுலா ஒன்று மேற்கொண்டது. அதில் நானும் கலந்து கொண்டேன். 40 மாணவர்களும் 6 ஆசிரியர்களும் இச்சுற்றுலாவில் கலந்து கொண்டனர். கடந்த 7.8.2017 இல் காலை மணி 8:00க்குப் பேருந்தின் மூலம் தேசிய தொல்பொருள் காட்சியகத்திற்குச் சென்றோம்.

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## இணைமொழிகளை அறிக.

மாணவர்: வணக்கம் ஐயா. நான் தங்களிடம் சில கேள்விகள் கேட்க விரும்புகின்றேன்.
ஆசிரியர்: வணக்கம், தாராளமாகக் கேள்.
மாணவர்: ஐயா, நல்ல நண்பர்களை நாம் எவ்வாறு அடையாளம் காண்பது?
ஆசிரியர்: நமக்கு நிறைய நண்பர்கள் இருப்பார்கள். அவர்களுள் யார் நல்லவர் யார் கெட்டவர் என்பதை எளிதில் தெரிந்து கொள்ளலாம். ஒளிவுமறைவு இல்லாமல் தூய அன்போடு **கள்ளங்கபடு** இல்லாமல் நம்மோடு பழகுகின்றவர்களே நல்ல நண்பர்கள்.
மாணவர்: நன்றி ஐயா, நல்ல நண்பர்களினால் நமக்கு என்ன பயன் என்று கூற முடியுமா?
ஆசிரியர்: தாராளமாகக் கூறுகிறேன். நாம் பல நடவடிக்கைகளையும் திட்டங்களையும் மேற்கொள்கிறோம் என்று வைத்துக் கொள்வோம். நம்மால் தனியாகச் செயல்பட முடியாத நிலை ஏற்படும். அத்தருணத்தில் நமக்கு நல்ல நண்பர்களின் ஆதரவு தேவைப்படுகிறது. நல்ல நண்பர்களின் சேர்க்கை நமது நடவடிக்கைகளையும் திட்டங்களையும் **தங்குதடை**யில்லாமல் மேற்கொள்வதற்கு உதவுகிறது.
மாணவர்: நன்றி ஐயா, இறுதியாக ஒரு கேள்வி. நல்ல நண்பர்கள் எவ்வாறு நம் உடல்நலத்தைப் பேணுவதற்கு உதவ முடியும்?
ஆசிரியர்: நல்ல நண்பர்கள் தீய வழிகளில் செல்ல மாட்டார்கள். தீய பழக்க வழக்கங்களுக்கு அடிமையாக மாட்டார்கள். அதனால், அவர்கள் நமக்கு நல்வழி காட்டுவார்கள். பொழுதை நல்ல வழியில் கழிப்பதற்கு நலமான பல நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவார்கள். நலமான பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்வதால் நாம் **நோய்நொடி**யின்றி ஆரோக்கியமாக வாழலாம்.
மாணவர்: நல்ல விளக்கம் அளித்தீர்கள். நன்றி ஐயா. நான் சென்று வருகிறேன்.
ஆசிரியர்: நன்றி, நலமாகச் சென்று வா!



### இணைமொழியும் பொருளும்

**கள்ளங்கபடு** - வஞ்சக எண்ணம்
**தங்குதடை** - தடைகள் / இடையூறு /குறுக்கீடு
**நோய்நொடி** - பிணி /வியாதி / நலக்கேடு

4.4.1
4.6.1

- ஒன்றாம் படிவத்திற்கான இணைமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.
- ஒன்றாம் படிவத்திற்கான மரபுத்தொடர்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

## இடுபணி 1

**சூழலுக்குப் பொருத்தமான இணைமொழிகளை அடையாளம் கண்டு எழுதுக.**

**அ** நாம் உடல் நலத்தைப் பேண வேண்டும். சத்துள்ள உணவை உண்பதோடு தவறாது உடற்பயிற்சியும் செய்ய வேண்டும். ஆண்டிற்கு ஒரு முறையாவது மருத்துவரைச் சந்தித்து உடல்நலத்தைச் சோதிக்க வேண்டும். அவ்வாறு செய்தால் நாம் நலமாக வாழ முடியும்.

**ஆ** ஒரு நடவடிக்கையை மேற்கொள்வதற்கு முன் நாம் நன்கு திட்டமிட வேண்டும். அத்திட்டத்தை மேற்கொள்வதற்குப் பட்டறிவாளர்களின் கருத்துகளைக் கேட்க வேண்டும். அதன் தொடர்பான தகவல்களைத் திரட்ட வேண்டும். பிறகு நிதானமாக அத்திட்டத்தை மேற்கொண்டால் எந்தச் சிக்கலும் இல்லாமல் வெற்றி பெறலாம்.

**இ** நாம் நல்ல குணமுடையவர்களாக இருக்க வேண்டும். தீய சிந்தனைகளை முற்றாக நீக்கிவிட வேண்டும். நல்ல நூல்களைக் கற்பதோடு இறைச்சிந்தனையையும் வளர்த்துக்கொள்ள வேண்டும். பிறரை வஞ்சிக்க வேண்டும், பழி வாங்க வேண்டும் என்ற தீய எண்ணங்கள் இல்லாமல் பழகும்போது பிறர் நம்மை மதிப்பர்; போற்றுவர்.

## வளப்படுத்துதல்

**கொடுக்கப்பட்ட இணைமொழிகளைப் பொருள் விளங்க வாக்கியங்களில் அமைத்துக் காட்டுக.**

| கள்ளங்கபடு | தங்குதடை | நோய்நொடி |

## குறைநீக்கல்

**பொருத்தமான இணைமொழிகளைக் கொண்டு காலி இடங்களை நிரப்புக.**

1. எழுபது வயதைக் கடந்தும் தொடர்ந்து உடற்பயிற்சியும் உணவுக் கட்டுப்பாடும் மேற்கொள்வதால் அம்முதியவர் __________ யின்றி ஆரோக்கியமாக வாழ்கிறார்.
2. மலர்விழியின் திருமணம் எந்தவொரு __________ யும் இல்லாமல் சிறப்பாக நடந்து முடிந்தது.
3. குழந்தைகள் பால்மனம் கொண்டவர்கள் என்பதால் __________ இல்லாமல் மற்றக் குழந்தைகளுடன் அன்பாக விளையாடுவார்கள்.
4. __________ இன்றி அந்தச் சிறுவர்கள் ஒற்றுமையாகப் பழகினர்.
5. எந்தவொரு __________ யும் இன்றி மாலவன் வெளிநாட்டிற்குச் சென்று உயர்கல்வியைத் தொடர்ந்தான்.

### அறிந்துகொள்க

**மூலிகையும் பயன்களும்**

- துளசி - சளி, இருமல்
- தூதுவளை - இளைப்பு, கபம்
- குப்பைமேனி - சொறி, சிரங்கு
- கற்றாழை - சருமப் பாதுகாப்பு
- முருங்கைக் கீரை - உடல் வலுவாக்கம்
- கரிவேப்பிலை - நச்சுத்தன்மையை நீக்கும்
- கரிசலாங்கண்ணி - இரத்தச் சோகை, கண்பார்வை
- மணத்தக்காளி - வாய்ப்புண், குடல் புண்

- கலைக் களஞ்சியம்

## மரபுத்தொடர்களை அறிக.

தாமான் பெர்டானாவில் திரு. முத்தரசு மளிகைக்கடை ஒன்றைத் திறந்தார். நியாயமான விலையில் வியாபாரம் செய்ததால் அவருக்கு வாடிக்கையாளர்கள் பெருகினர். வியாபாரம் நன்கு நடந்ததால் அவருக்கு அதிக இலாபம் கிடைத்தது. தமது இலாபத்தில் ஒரு பகுதியை ஏழை மாணவர்களின் கல்வி வளர்ச்சி நடவடிக்கைகளுக்குச் செலவிட்டார். சமுதாய நடவடிக்கைகளுக்குத் **தோள் கொடுக்கும்** அவரது உயர்ந்த பண்பால் அவர் அனைவராலும் மதிக்கப்பட்டார். அவரது வளர்ச்சியைக் கண்டு பொறாமை கொண்ட மணியன் முத்தரசுவின் கடைக்குப் பக்கத்திலேயே தானும் ஒரு மளிகைக் கடையைத் திறந்தான். அவருக்கு, **ஏட்டிக்குப் போட்டியாகப்** பொருள்களின் விலையைக் குறைத்து மிக மலிவாக விற்றான். அதனால், அவனுக்குப் பெருத்த நட்டம் ஏற்பட்டது. சில மாதங்களுக்குப் பிறகு தன் கடையை மூடிவிட்டான்.

**மரபுத்தொடரும் பொருளும்**

| | |
|---|---|
| **தோள் கொடுத்தல்** | - உதவி செய்தல் / துணையாக இருத்தல் |
| **ஏட்டிக்குப் போட்டி** | - எதிருக்கெதிராகச் செயல்படுதல் / விதண்டாவாதம் |

## இடுபணி 2

**பொருத்தமான மரபுத்தொடர்களைக் கொண்டு காலி இடங்களை நிறைவு செய்க.**

திலகவதி குடும்பத்தில் மூத்த பிள்ளை. அவள் மிகவும் பொறுப்பானவள். பெற்றோருக்கு மிகவும் உதவியாக இருந்தாள். வார இறுதி நாள்களில் சமையலறையில் அம்மாவுக்குச் சமையல் வேலைகளில் ________ . அதனால் பெற்றோர் அவளை வெகுவாகப் பாராட்டுவார்கள். அவள் தங்கை மாதவியோ கொஞ்சமும் பொறுப்பில்லாமல் நடந்து கொள்வாள். அவளுக்குத் தன் அக்காவின் மீது பொறாமையாக இருக்கும். அதனால் எப்பொழுதும் ________ யாகச் செய்வாள். பெற்றோருக்கு அவளது செயல் மிகுந்த வருத்தத்தை அளித்தது. அவர்கள் மாதவிக்கு அன்பாகப் பல அறிவுரைகளைக் கூறி அவளை நல்வழிப்படுத்தினார்கள்.

## வளப்படுத்துதல்

**கீழ்க்காணும் மரபுத்தொடர்களுக்கு ஏற்ற சூழல்களை எழுதுக.**

ஏட்டிக்குப் போட்டி

தோள் கொடுத்தல்

## குறைநீக்கல்

**பொருத்தமான மரபுத்தொடர்களைக் கொண்டு வாக்கியங்களை நிறைவு செய்க.**

1. தமிழ்மாறன் படிவம் ஒன்று மல்லிகையின் தலைவனாவான். வகுப்பறையை அழகுபடுத்தும் பணிகளைத் தன் வகுப்பு மாணவர்களுக்குப் பகிர்ந்து கொடுத்தான். அத்தோடு நின்றுவிடாமல் அவர்கள் பணிகளை மேற்கொள்ளும்போது தயங்காமல் அவர்களுக்குத் ________.
2. குணவதி ஒழுக்கத்தில் சிறந்து விளங்கினாள். விட்டுக்கொடுக்கும் தாராள மனம் கொண்டவள். மற்ற மாணவர்களுடன் கலகலப்பாகப் பழகினாள். அவர்களை மனம் திறந்து பாராட்டுவாள். அவள் யாரிடமும் ________ யாக நடந்து கொள்ள மாட்டாள்.

## வாசித்து மகிழ்க.

### சிரிப்பு

சிரித்து மகிழ்வது மானிடர்களுக்கு மட்டுமே வாய்த்த வரப்பிரசாதம். வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும் என்பது நாம் அனைவரும் அறிந்த பொன்மொழி. மருத்துவர்களும் இக்கூற்றினை உறுதிப்படுத்துகின்றனர். நகைச்சுவையும் சிரிப்பும் மனநோய் போக்கும் மாமருந்தெனக் கூறுகின்றனர். சிரிக்கத் தெரியாதவர்களுக்குப் பகல்பொழுதும் இருட்டே என்கின்றார் திருவள்ளுவர்.

சிரிப்பதற்கு மிகச் சிறந்த தூண்டல் கருவி நகைச்சுவையாகும். நகைச்சுவை என்பது பல்வேறு சூழலில் ஏற்படலாம். நல்ல நகைச்சுவை ஒருவரைச் சிரிக்க வைப்பதுடன் சிந்திக்கத் தூண்டுவதாகவும் இருப்பது சிறப்பு. மேலும், பிறர் மனம் காயப்படாமல் இருப்பதும் வேண்டும். நகைச்சுவையாகப் பேசுவதும் அவற்றைக் கேட்டுச் சுவைப்பதும் மட்டுமன்றி சிந்தித்துப் போற்றுவதும் சிறந்ததொரு கலையாகவே கருதப்படுகின்றது.

அரண்மனைப் புலவர்கள் நகைச்சுவைக் கலையைப் பெரிதும் அறிந்திருந்தனர். அவர்கள் இருபொருள்படப் பேசிக் கேட்போரைப் பல வகையில் மகிழ்விப்பதைக் கடமையாகக் கொண்டிருந்தனர். புலவர் ஒருவர், கொடை வள்ளல் என்று பெயர் பெற்ற செல்வந்தரைக் காணச் சென்றார். புலவரின் ஏட்டுத் திறன், பேச்சுத் திறமைகள் கண்டு செல்வந்தர் பெரிதும் மகிழ்ந்தார். புலவருக்குப் பரிசாகத் தாம் கொடுக்க விரும்பிய பரிசுப் பணத்தைத் தங்கத்தட்டு ஒன்றில் வைத்து வழங்கினார்.

தங்கத்தட்டினைப் பார்த்த புலவர் உள்ளம் பூரித்தார். தங்கத்தட்டு அவர் மனதை வெகுவாக ஈர்த்தது. எனவே, தங்கத்தட்டையும் சேர்த்துப் பெற ஆசைப்பட்டார். செல்வந்தரைப் பார்த்து, “பணத்தட்டு யாருக்கு ஐயா?” என்றார். அக்கேள்வியில் பணத்தட்டு என்பது பணம் வைத்துள்ள தட்டு என்றும் பணத்தட்டுப்பாடு என்றும் இருபொருள்பட நின்றது.



புலவர் கேட்ட கேள்விக்குப் பதில் கூற இயலாமல் சற்றுநேரம் திகைத்தார் செல்வந்தர். பணம் உமக்கு, பணத்தட்டு எனக்கு என்று கூறினால், பணத்தட்டுப்பாடு செல்வந்தருக்கு என்றல்லவா பொருள்படும். எனவே, பணத்தட்டுப்பாடு புலவருக்கே என்று பொருள்படும்படி “பணத்தட்டுப் புலவருக்குத்தான்” என்று கூறினார். பரிசுப் பணத்துடன் தங்கத்தட்டையும் புலவர் பெற்றுச் சென்றுவிட்டார்.

இதுபோன்ற நகைச்சுவைக் கதைகளைப் பல பேச்சாளர்கள் கூறி மக்கள் மனத்திலுள்ள கவலைகளைப் போக்குவதை இன்றும் காணலாம். எனவே, சிறந்த நகைச்சுவைக் கதைகள், துணுக்குகள், உரைகள் ஆகியவற்றைக்கேட்டு மகிழ வேண்டும். நாமும் கேட்டு, பிறரையும் மகிழ்விப்பது வாழ்வில் நாம் செய்யும் மாபெரும் தொண்டாகும். இவ்வாறு செய்வது நம் உடல்நலத்தை மட்டுமின்றி உள்ளத்தையும் அமைதிப்படுத்தி மன இறுக்கத்தை அகற்றி நல்வாழ்வுக்கு வழிவகுக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.



# தொகுதி 6

# காலத்தைப் போற்றுவோம்

## பாடம் 1 நேரத்தோடு செயல்படுவோம்

**குழுவில் கலந்துரையாடுக.**



இலகு இரயில் சேவை
காலை 6:00 முதல்
இரவு 10:00 வரை




பேருந்து நிலையம்
காலை 6:00 முதல்
நள்ளிரவு 12:00 வரை



வங்கி
காலை 9:00 முதல்
மாலை 4:30 வரை






மருத்துவமனை
அவசரப் பிரிவு
24 மணி நேரம்



வகுப்பறை
காலை 7:30 முதல்
பிற்பகல் 2:00 வரை



விமான நிலையம்
பயண அட்டவணையைப்
பின்பற்றுதல்

### இடுபணி 1

**படித்தவற்றை விவரித்துக் கூறுக.**

### இடுபணி 2

**சேவைகளில் கால அட்டவணையைப் பின்பற்றுவதன் அவசியத்தை விவரித்துக் கூறுக.**


1.4.1

• படித்தவற்றை விவரித்துக் கூறுவர்.

## குழுவில் கலந்துரையாடுக.



தாமதமாக எழுதல்




பள்ளிப் பேருந்தைத் தவறவிடுதல்




தாமதமாகப் பள்ளியை அடைதல்




ஆசிரியை கண்டித்தல்




முதல்வர் அறிவுரை கூறுதல்



உறுதியளித்தல்

### இடுபணி 3

**கால தாமதத்தால் ஏற்படும் தீமைகளையும் காலந்தவறாமையால் கிடைக்கும் நன்மைகளையும் பொருத்தமான சிந்தனைக் குறிவரைவு ஒன்றில் படைத்திடுக.**

### இடுபணி 4

1. கால தாமதத்தைத் தவிர்ப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை விவரித்துக் கூறுக.

2. காலத்தை விரயமாக்கும் மாணவர்களுக்கு நீ அதன் அருமையை எவ்வாறு விளக்கிக் கூறுவாய்?

**அறிந்துகொள்க**

- காலத்தை நீ போற்றினால் காலம் உன்னைப் போற்றும்.
- மாற்ற முடிந்ததோடு போராடுவது அறிவு மாற்ற முடியாததோடு போராடுவது அழிவு.

வீ. சந்திரன் - முற்றுப்புள்ளி முடிவல்ல.

## பாடம் 2 காலம் பொன்னானது

### குழுவில் கலந்துரையாடுக.



### அ காலத்தின் அருமை

நம்முடைய விலை மதிப்பற்ற ஆதாரங்களுள் நேரமும் ஒன்றாகும். இழந்துவிட்டால் திரும்பப் பெற முடியாதவற்றுள் நேரமும் ஒன்றுதான். வாழ்நாளில் மூன்றில் ஒரு பங்கு நேரம் உறக்கத்தில் கழிகிறது. பத்தில் ஒரு பங்கு குளிப்பது, அழகுபடுத்திக் கொள்வது ஆகியவற்றில் செலவாகிறது. ஆறில் ஒரு பங்கு நேரத்தை உறவினர்கள் நண்பர்களுடன் பேசுவதில் கழிக்கிறோம். இவ்வாறு பல விதத்திலும் எழுபது சதவிகித நேரம் செலவழிந்துவிடுகிறது. பணியாற்றுவதற்கு எஞ்சியிருப்பது முப்பது சதவிகிதம்தான்.

இந்த நேரத்தைப் புத்திசாலித்தனமாகத் திட்டமிட்டுச் செலவழித்தால் அதிகப் பலன் பெற முடியும். நாம் அதிகமாகப் பேசுகிறோம். நாமறியாமலேயே வெட்டிப் பேச்சிலும் வம்பளப்பதிலும் அதிக நேரத்தைச் செலவழித்துவிடுகிறோம். நம்மைக் கட்டுப்படுத்திக் கொண்டு இவ்வாறு வீணாகும் நேரத்தை ஏன் குறைத்துக் கொள்ளக் கூடாது?

வேலைக்கென உள்ள நேரம் போக எஞ்சியுள்ளதில்தான் மற்ற எல்லாவற்றையும் செய்ய வேண்டும். தூக்கம் அடிப்படையான தேவைகளுள் ஒன்றாகும். தேய்ந்துபோன அணுக்கள் உறங்கும்போதுதான் புதுப்பிக்கப்படுகின்றன. தூக்கம் களைப்பைப் போக்கிப் புத்துணர்வை ஊட்டுகிறது. ஒருநாள் கடின உழைப்புக்கு இயற்கை தரும் சன்மானம் உறக்கம்.

- வெற்றியின் இரகசியம் - எஸ். சங்கரன் (சில மாற்றங்களுடன்)

### இடுபணி 1

**வினாக்களுக்கு விடை கூறுக.**

1. முதல் பத்தியில் கூறப்படும் முக்கியக் கருத்து என்ன?
2. மனிதனுக்குத் தூக்கம் அவசியமா? ஏன்?
3. இரண்டாவது பத்தியில் நமது பேச்சுக்கும் நேரத்திற்கும் உள்ள தொடர்பினை விளக்குக.

**அறிந்துகொள்க.**

**மேலோட்ட வாசிப்பு முறையைக் கையாளும் வழிவகைகள்**

- தலைப்பைக் கவனமாக வாசிக்கவும்.
- பத்தியின் இடையிலுள்ள வார்த்தைகளை வாசிக்கவும்.
- இறுதிப் பத்தியைக் கவனமாக வாசிக்கவும். இப்பத்தியில் கருத்துகளைச் சுருக்கமாகத் தொகுத்துக் கூறியிருப்பர்.

- கலைத்திட்ட மேம்பாட்டுப் பிரிவு
மலேசியக் கல்வி அமைச்சு

2.4.1 • மேலோட்ட வாசிப்பு உத்தியைப் பயன்படுத்தி வாசிப்பர்.

## ஆ வாழ்க்கைக்கல்வி

எல்லாம் நன்கறிந்த அறிஞர் ஒருவர், ஒரு படகில் ஏறி அமர்ந்தார். அவருக்கு நாம் நிறையப் படித்து இருக்கிறோம் என்ற ஆணவ எண்ணம் இருந்தது. படகோட்டியைப் பார்த்து, "அக்கரைக்குப் போக வேண்டும். என்னை அக்கரையில் இறக்கிவிடு" என்றார்.

படகு ஆற்றில் செல்லத் தொடங்கியது. அறிஞர் படகோட்டியைப் பார்த்து, "நீ இராமாயணம் படித்து இருக்கிறாயா?" என்று கேட்டார். "இல்லை" என்று பதிலளித்தான் படகோட்டி. "உன் வாழ்நாளில் கால்பங்கை வீணாக்கிவிட்டாய். அது சரி, மகாபாரதமாவது படித்து இருக்கிறாயா?" என்று கேட்டார்.

அதற்கும் "இல்லை" என்றே பதிலளித்தான் படகோட்டி. "உனக்காக வருந்துகிறேன். உன் வாழ்நாளில் பாதியை வீணாக்கிவிட்டாய். ஆங்கிலமாவது படித்து இருக்கிறாயா?" என்று கேட்டார் அறிஞர். படகோட்டி "இல்லை" என்று கூறினான்.

படகோட்டியைப் பரிதாபமாகப் பார்த்த அறிஞர், "என்ன வாழ்க்கை வாழ்கிறாய்? உன் வாழ்நாளில் முக்கால் பங்கை வீணாக்கி விட்டாயே?" என்றார். படகோட்டி பதில் ஏதும் பேசவில்லை. படகு ஆற்றில் சென்று கொண்டிருந்தது. கொஞ்ச நேரத்தில் படகோட்டி அறிஞரைப் பார்த்து, "ஐயா உங்களுக்கு நீச்சல் தெரியுமா?" என்று கேட்டான்.

"எனக்கு நீச்சல் தெரியாது. ஆமாம், எதற்காகக் கேட்கிறாய்?" என்று பதற்றத்துடன் கேட்டார் அறிஞர். " படகில் ஓட்டை விழுந்துவிட்டது". இன்னும் சிறிது நேரத்தில் தண்ணீரில் மூழ்கிவிடும். நீச்சல் தெரிந்திருந்தால் என்னைப் போல் நீங்களும் ஆற்றில் நீந்தி தப்பித்துக் கொள்ளலாம். ஆனால், இப்பொழுது நீங்கள் உங்கள் வாழ்க்கையை முழுவதுமாக இழக்கப் போகிறீர்களே" என்று கூறியவாறே ஆற்றில் குதித்து அக்கரையை நோக்கி நீந்தத் தொடங்கினான்.

"வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தும் தெரியும்" என்று இறுமாந்திருந்த அறிஞர், நீச்சல் தெரியாததால் தப்பிக்க முடியாமல் அந்தப் படகிலேயே இருந்தார். அந்தப் படகு சிறிது சிறிதாக ஆற்றில் மூழ்கத் தொடங்கியது. மூலம்: சிறுவர் கதைக் களஞ்சியம்

### இடுபணி 2

**சிறுகதை உணர்த்தும் முக்கியக் கருத்தைக் கூறுக.**

### இடுபணி 3

**கவிதையின் வழி கவிஞர் உணர்த்த வரும் கருத்தை விளக்குக.**

நல்ல பொழுதை எல்லாம் தூங்கிக் கெடுத்தவர்கள்
நாட்டைக் கெடுத்ததுடன் தானும் கெட்டார்- சிலர்
அல்லும் பகலும் தெருக் கல்லாய் இருந்துவிட்டு
அதிர்ஷ்டம் இல்லை என்று அலட்டிக்கொண்டார்

போர்ப் படைதனில் தூங்கியவன் வெற்றியிழந்தான்
பள்ளியில் தூங்கியவன் கல்வி இழந்தான்
கடைதனில் தூங்கியவன் முதல் இழந்தான்- கொண்ட
கடமையில் தூங்கியவன் புகழ் இழந்தான்.

**( பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்)**

### அறிந்துகொள்க


- விதைப்புக் காலத்தில் சோம்பிக் கிடக்கும் விவசாயி, அறுவடைக் காலத்தில் தேம்பி அழுவான்.
- நேற்று என்பது உடைந்த பானை. இன்று என்பது உன் கையிலுள்ள வீணை. நாளை என்பது மதில் மேல் பூனை.

சிந்திக்கும் வேளையில் சிதறிய முத்துகள்-
வீ. சந்திரன்

# பாடம் 3 தகவல் தரும் வானொலி

**குழுவில் கலந்துரையாடி வரிசைப்படுத்திடுக.**

- மாலை மணி 5:00க்குத் தகவல் உலகம் எனும் நிகழ்ச்சி அனைவருக்கும் உலக நடப்புகளை அறிவிக்கின்றது.
- காலை மணி 6:00க்குப் பக்திப்பாடல்கள் ஒலிபரப்பப்படுகின்றன. இறைச் சிந்தனையுடன் ஒவ்வொரு நாளையும் தொடங்க இந்நிகழ்ச்சி துணைபுரிகிறது.
- உலக நடப்புகளின் தொகுப்பாக இரவு மணி 9:00க்கு செய்திகள் வாசிக்கப்படுகின்றன.
- ஆரோக்கியம் தொடர்பான யோகப்பயிற்சி காலை மணி 8:00க்கு ஒலிபரப்பப்படுகிறது.
- தேசிய கீதத்தோடு நள்ளிரவில் நிகழ்ச்சி நிறைவடைகிறது.
- பெண்களுக்கான சமையல் குறிப்புகள் நிகழ்ச்சி முற்பகலில் இடம்பெறுகிறது.
- இரவில் உறங்குவதற்கு முன்பதாகத் தேனிசை நிகழ்ச்சி இடம்பெறுகிறது.
- பிற்பகலில் சிறுவர்களுக்கான நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படுகின்றன.
- மாணவர்களுக்கான பாட விளக்கங்களும் தேர்வு அணுகுமுறைகளும் மாலை மணி 4:00க்கு இடம்பெறுகின்றன.



## இடுபணி 1

**வாக்கியங்களை நிரல்படுத்திப் பத்தி வடிவில் எழுதுக.**

## இடுபணி 2

**மேற்காணும் நிகழ்ச்சிகளுள் உன்னைக் கவர்ந்த நிகழ்ச்சிகளை நிரல்படுத்தி எழுதுக.**

3.2.1

- வாக்கியங்களை நிரல்படுத்திப் பத்தியில் எழுதுவர்.

## வளப்படுத்துதல்

**உங்களின் ஒரு நாள் பணிகளை நிரல்படுத்திப் பத்திகளில் எழுதுக.**

## குறைநீக்கல்

**வாக்கியங்களைக் கருப்பொருளுக்கு ஏற்ப நிரல்படுத்தி இரண்டு பத்திகளில் எழுதுக.**

- பத்து நிமிடம் பொறுமையாக நின்று கொண்டிருந்தவரிடம் கடைசியில் “என்ன விசயம்” என்றார்.
- அடுத்து அவர் தம் அறைக்குள் நுழைந்து அமர்ந்தார்.
- “புதிதாகப் பெறப்பட்டுள்ள தங்கள் தொலைபேசிக்கு இன்னும் இணைப்பு வழங்கப்படவில்லை... அதனை வழங்க வந்திருக்கும் தொலைபேசி ஊழியன் நான்” என்றார் வந்தவர்.
- வந்தவரைக் கண்டுகொள்ளவே இல்லை.
- நினைத்த அடுத்த கணம் கதவைத் தட்டிக் கொண்டு ஒருவர் உள்ளே நுழைந்தார்.
- இனிமேல், தான் தன்னைப் பெரிய மனிதர் என்று பிறரிடம் காட்டிக் கொள்ள வேண்டும் என்று நினைத்தார்.
- தாம் மிகவும் வேலைப் பளுவில் இருப்பதாகக் காட்ட நினைத்தார்; தொலைபேசியில் ஏதோ பேசுவது போல் பாவனை செய்தார்.
- அலுவலகத்தில் புதிதாகப் பதவி ஏற்றுக் கொண்டார் ஒருவர்.



# பாடம் 4 இலக்கணம்

## வலிமிகா இடங்களை அறிக.

**ஏது கேட்டாலும்** நாம் நன்கு விளங்கிக் கொள்ளும் வண்ணம் கேட்க வேண்டும். அதனால் **ஏது கண்டாய், யாது பயன்** என்றெல்லாம் சிலர் வினவலாம். நமது அறிவு வளர்ச்சிக்கு **யாவை தந்தாலும்** அவற்றைப் பொறுமையாக நாம் பெற்றுக்கொள்ள வேண்டும். எவை சிறந்தவை என்பதைத் தெளிவு பெற்ற பிறகுதான் நாம் அறிய முடியும். அதனால்தான் திருவள்ளுவரும், 'செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம்' என்று கூறியுள்ளார்.

**கருமையாக்கப்பட்ட சொற்களைக் கவனியுங்கள்**




**எடுத்துக்காட்டு**

ஏது + கேட்டாலும்
யாது + பயன்
யாவை + தந்தாலும்

**அவை வலிமிகாமல் இருப்பதை அறிக.**

**எடுத்துக்காட்டு**

| | |
|---|---|
| ஏது + கேட்டாலும் = | ஏது கேட்டாலும் |
| யாது + பயன் = | யாது பயன் |
| யாவை + தந்தாலும் = | யாவை தந்தாலும் |

## இடுபணி 1

**ஏது, யாது, யாவை என்னும் வினாச் சொற்களுக்குப் பின் வலிமிகாது என்ற விதிக்கு ஏற்ப பனுவலில் காணப்படும் பிழைகளை அடையாளம் கண்டு திருத்தி எழுதுக.**

"அங்கு ஏதுப் பார்த்தாய்?" என்று அம்மா வினவினார். அதற்கு மருதன், " நிகழ்ச்சிக்குப் போனது யாதுப் புண்ணியம்?" என்று நொந்து கொண்டான். அம்மா, அவன் அவ்வாறு கூற நேர்ந்த காரணத்தைக் கேட்டார். அதற்கு, அவன் நிகழ்ச்சி மிக மோசமாக இருந்ததாகவும் அவற்றில் யாவைச் சிறந்தவை என்று தன்னால் கூற இயலாது என்றும் விளக்கினான். நீ அங்குப் பார்த்தவற்றில் யாதுப் பயனில்லை என்று கூறுகிறாய்? "அம்மா, கலாச்சார நடனம் என்ற பெயரில் கூத்தும் கும்மாளமும் நடந்தது. என்ன சொல்வது? ஏதுச் சொல்வது? நடனத்தில் யாதுப் புரிந்தது என்று கேட்டால் நான் ஏதுப் பற்றிச் சொல்வது? நிகழ்ச்சியின் அறிவிப்பாளன் ஏதுப் பேசுகின்றான் என்றே விளங்கவில்லை. தமிழ்மொழியைக் களங்கப் படுத்திவிட்டான்."

5.5.2

- ஏது, யாது, யாவை என்ற சொற்களுக்குப் பின் வலிமிகாது என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

## இடுபணி 2

**வாக்கியங்களில் உள்ள பிழைகளை அடையாளம் கண்டு எழுதுக.**

1. நாம் ஏதுத் தின்றாலும் உறங்குவதற்கு முன் பல் துலக்க வேண்டும்.
2. நகுலன் மற்றவர்களிடம் யாதுக் கூறினாலும் மிகவும் கவனமாகக் கூறுவான்.
3. அந்தக் காவல் அதிகாரி, “யாவைத் திருடு போயின” என்று வினவினார்.
4. மாணவர்கள் ஏதுப் படித்தாலும் சிறு குறிப்புகள் எழுத வேண்டும்.
5. வகுப்பறையில் ஆசிரியர் கற்பிக்கும் பொழுது யாதுக் கேட்டாலும் தெளிவாகக் கேட்க வேண்டும்.
6. “இவற்றுள் யாவைத் தம்பியினது புத்தகங்கள்?” என்று அம்மா வினவினார்.
7. அண்ணன் ஏதுச் செய்தாலும் மிகவும் பொறுப்பாகச் செய்வார்.
8. எந்த நடவடிக்கையில் ஈடுபட்டாலும் யாதுப் பயன் என்பதை முதலில் நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.
9. பிறருக்கு யாவைத் தந்தாலும் தூய மனத்தோடு தர வேண்டும்.

## இடுபணி 3

**சேர்த்தெழுதுக**

1. யாது + பொருள் = ________
2. ஏது + கனி = ________
3. யாவை + படித்தீர் = ________
4. ஏது + கொடுத்தாய் = ________
5. யாவை + சிறந்தவை = ________
6. யாது + பெரிது = ________
7. ஏது + பிரிவு = ________
8. யாவை + தொண்டு = ________
9. யாது + கொடிது = ________
10. யாவை + புதியவை = ________
11. ஏது + தெளிவு = ________
12. யாது + சிரமம் = ________

## இடுபணி 4

**பின்வரும் சொற்றொடர்களை வாக்கியத்தில் அமைத்துக் காட்டுக.**

1. ஏது கொடுத்தாலும்
2. யாவை கூறினாலும்
3. யாது குறைவு
4. ஏது கவலை
5. யாவை கற்றாலும்
6. யாது பலன்
7. யாவை செய்தாலும்
8. ஏது மாற்றம்
9. யாது சிந்தனை
10. ஏது துன்பம்

## இடுபணி 5

**யாது, ஏது, யாவை என்னும் வினாச் சொற்களைப் பயன்படுத்தி நண்பர்களிடம் உரையாடுக.**

## வாசித்து மகிழ்க.

### எனது குறிப்பேடு

**ஜனவரி 2**

இன்று நான் அப்பா வாங்கித் தந்த புத்தம் புதிய மிதிவண்டியை மிகவும் ஆர்வத்துடன் செலுத்தினேன். என் நண்பர்கள் பலரிடம் காட்டி மகிழ்ந்தேன். சாலையில் ஓரமாகச் செல்லாமல் என் மனம் போன போக்கில் மகிழ்வுடன் செலுத்தினேன். சில இடங்களில் என் இரு கைகளையும் பக்கவாட்டில் வைத்துக் கொண்டு மதிவண்டியை மிதித்தேன். சற்றும் எதிர்பார்க்கவில்லை. அதிக வேகமாகச் சென்றதால் என் மிதிவண்டியைக் கட்டுப்படுத்த இயலவில்லை. சாலை ஓரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மூடுந்தின் பின்னால் மோதிக் கீழே விழுந்தேன். காலில் அங்கும் இங்கும் சிராய்ப்புக் காயங்கள் ஏற்பட்டன. புதிய மிதிவண்டி சேதமடைந்து என்னைப் பார்த்துக் கேலி செய்தது போல இருந்தது. அப்பொழுதுதான் என் பாதுகாப்பைப் பேணிக் காக்காமல் அலட்சியமாக இருந்தேன் என்று உணர்ந்தேன்.

**பிப்ரவரி 6**

மாலை வகுப்பு முடிந்தது. நண்பனின் அண்ணன் அவரது மகிழுந்தில் வந்தார். அதில் பயணித்தேன். நண்பனின் அண்ணன் புதிதாக வாகன உரிமம் பெற்றிருந்தார். சமிக்ஞை விளக்குகளை மதிக்காமல் மிகுந்த மகிழ்ச்சியில் வாகனத்தைச் செலுத்தினார். எனக்குப் பயமாக இருந்தது. அவரது வேகத்தைப் பார்த்த பல வாகனமோட்டிகள் கோபம் கொண்டனர். சற்றுத் தூரத்தில் காவல் அதிகாரி நண்பனின் அண்ணனை நெருங்கினார். வாகன உரிமத்தை வாங்கிப் பார்த்தார். அபராதம் விதித்துச் சீட்டை எழுதித் தந்தார். அப்பொழுதுதான் வாகன ஓட்டுநர் பாதுகாப்புப் பட்டையை அணியவில்லை என்று தெரிந்தது. நாங்கள் வருத்தத்துடன் வீடு சேர்ந்தோம். வாகனத்தில் அமர்ந்தவுடன் பாதுகாப்புப் பட்டையை அணிவது அவசியம் என நான் அவருக்குக் கூறினேன்.

**மார்ச் 7**

மாலை வேளையில் வழக்கம் போல வீட்டிற்கு அருகில் உள்ள திடலுக்கு விளையாடச் சென்றேன். எதை மறந்தாலும் விளையாட்டை மறப்பதில்லை. நண்பர்களுடன் ஆர்வத்துடன் விளையாடினேன். சிரிப்பும் கூச்சலும் மேகங்கள் இருண்டு போனதையும் மறைத்தன. காற்றோடு கனத்த மழையும் பெய்யத் தொடங்கிற்று. நண்பர்கள் விளையாட்டை நிறுத்த மறுத்தனர். சொட்டச் சொட்ட நனைந்தபடி ஆடினர். பளிச்சென இடியுடன் சேர்ந்த மின்னல் வெட்டியது. நண்பன் வருணன் மயங்கி விழுந்தான். நல்லவேளையாக அவ்வழியாக வந்த அப்பாவின் நண்பர் உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு சென்றார். நண்பனுக்கு அவசரச் சிகிச்சை அளிக்கப்பட்டது. சில மணி நேரத்திற்குப் பிறகு நண்பன் கண் விழித்துப் பார்த்தான். நாங்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டோம். மழை நேரத்தில் திறந்தவெளியில் விளையாடுவது தவறு என நாங்கள் உணர்ந்தோம்.

# தொகுதி 7
# தகவல்களும் பாதுகாப்பும்

## பாடம் 1 பெருகிவரும் விபத்துகள்

**குழுவில் கலந்துரையாடுக.**



2010ஆம் ஆண்டு முதல் 2015ஆம் ஆண்டுவரை மாநில வாரியாக நிகழ்ந்த சாலை விபத்துகள்

| மாநிலம் / ஆண்டு | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|---|---|---|
| பெர்லிஸ் | 1 548 | 1 791 | 1 881 | 1 895 | 1 888 | 1 861 |
| கெடா | 19 196 | 19 699 | 19 935 | 20 228 | 20 159 | 22 016 |
| பினாங்கு | 34 306 | 37 158 | 37 851 | 39 361 | 38 747 | 39 856 |
| பேரா | 32 072 | 33 506 | 34 714 | 35 408 | 35 131 | 36 736 |
| சிலாங்கூர் | 115 565 | 128 876 | 129 106 | 135 024 | 137 809 | 140 957 |
| கூட்டரசுப் பிரதேசம் | 53 493 | 58 795 | 61 872 | 64 527 | 63 535 | 64 664 |
| நெகிரி செம்பிலான் | 19 407 | 21 157 | 22 146 | 23 066 | 23 748 | 22 939 |
| மலாக்கா | 14 110 | 14 720 | 15 195 | 16 083 | 16 375 | 17 069 |
| ஜோகூர் | 55 381 | 59 501 | 62 316 | 64 600 | 64 473 | 67 112 |
| பகாங் | 17 315 | 19 001 | 20 554 | 20 130 | 19 071 | 19 635 |
| கிளாந்தான் | 9 707 | 9 603 | 9 968 | 9 748 | 9 383 | 9 960 |
| திரெங்கானு | 10 106 | 10 684 | 10 861 | 10 996 | 10 326 | 10 383 |
| சபா | 16 192 | 16 585 | 17 446 | 17 438 | 17 693 | 17 290 |
| சரவா | 17 253 | 17 964 | 18 578 | 18 700 | 17 858 | 19 130 |
| **மொத்தம்** | 415 651 | 449 040 | 462 423 | 477 204 | 476 196 | 489 608 |

ஆதாரம்: அரச மலேசியக் காவல்படை
மக்கள் ஓசை: 24.06.2016

### இடுபணி 1

**மலேசியாவில் நிகழ்ந்த சாலை விபத்துகள் பற்றி குழுவில் கலந்துரையாடுக.**

1.5.1 • குறிவரைவிலுள்ள தகவல்களையொட்டிக் கருத்துரைப்பர்; முடிவு கூறுவர்.

## இடுபணி 2

**வினாக்களுக்கு விடை கூறுக.**

1. இக்குறிவரைவு எதனைக் குறிக்கின்றது?
2. இத்தகவல்களின் ஆதாரம் யாது அறியமுடிகிறது?
3. மிக அதிகமான சாலை விபத்துகள் நிகழ்ந்த மாநிலம் எது?
4. குறைவான சாலை விபத்துகள் நிகழ்ந்த மாநிலம் யாது? ஏன் என்று ஆராய்ந்தறிக.
5. சிலாங்கூர் மாநிலத்தில் அதிகமான விபத்துகள் நிகழ்வதற்குக் காரணம் என்ன?


**அறிந்துகொள்க**

- எதிர்பாராத வகையில் சேதத்தையோ துன்பத்தையோ ஏற்படுத்தும் செயலைத்தான் விபத்து என்கிறோம்.
- சாலைப் பாதுகாப்பு என்பது சாலையைப் பயன்படுத்தும் நபர் பலியாவதையோ காயப்படுவதையோ தடுப்பதாகும்.

-(க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி)

## இடுபணி 3

**2011ஆம் ஆண்டு முதல் 2015ஆம் ஆண்டு வரை நிகழ்ந்த தீச்சம்பவங்களில் மரணமடைந்தவர்கள், காயமடைந்தவர்கள் பற்றிய வட்ட வரைபடத்தைக் கருத்துரைத்திடுக; முடிவு கூறுக.**




- KPKT கணக்கீடு 2015

KPKT (Perangkaan kematian dan kecederaan dalam kes kebakaran dan menyelamat.




## இடுபணி 4

**குறிவரைவில் காணப்படும் தீச்சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர்கள் குறித்துக் குழுவில் கலந்துரையாடுக.**

## இடுபணி 5

**வட்ட வரைபடத்திலுள்ள தகவல்களையொட்டிக் கலந்துரையாடி முடிவு கூறுக.**




## இடுபணி 6

**கருத்துரைத்து முடிவு கூறுக.**

1. சமையலறை விபத்துகள் ஏற்படுவதற்கான காரணங்களைப் பற்றிக் கருத்துரைத்திடுக.
2. சமையலறை விபத்துகளைத் தவிர்ப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகளைக் குழுவில் கலந்துரையாடிப் படைத்திடுக.
3. மேற்காணும் வட்டக் குறிவரைவிலுள்ள சமையலறை விபத்துகளுள் ஏதேனும் ஒன்று உன் வீட்டில் ஏற்பட்டால் நீ என்ன செய்வாய்?

# பாடம் 2 சாலைப்பாதுகாப்பு

## வாசித்து அறிக.

நமது அரசாங்கம் ஒவ்வோர் ஆண்டும் சாலை விபத்துகளின் எண்ணிக்கையைக் குறைக்க மில்லியன் கணக்கில் பணத்தைச் செலவு செய்து வருகின்றது. இருப்பினும், நம் நாட்டில் சாலை விபத்துகளின் எண்ணிக்கை குறைந்தபாடில்லை. 2010ஆம் ஆண்டு 414,421 சாலை விபத்துகளும், 2012ஆம் ஆண்டு 462,423 சாலை விபத்துகளும், 2013ஆம் ஆண்டு 472,014 சாலை விபத்துகளும் நிகழ்ந்துள்ளன. 2014ஆம் ஆண்டு 476,196 சாலை விபத்துகளும், 2015ஆம் ஆண்டில் 489,606 சாலை விபத்துகளும் நிகழ்ந்துள்ளன. 2014ஆம் ஆண்டைக் காட்டிலும் 2015ஆம் ஆண்டில் 2.8 சதவிகித சாலை விபத்துகள் உயர்ந்துள்ளன. இந்நிலை தொடராமல் இருக்க தேசிய சாலைப்பாதுகாப்புச் சட்டங்கள் வலுப்படுத்தப்பட வேண்டும்.

நம் நாட்டில் சாலைப்பாதுகாப்புக்காகச் சாலைப்பாதுகாப்புத் துறை, சாலைப் பாதுகாப்புக்கழகம் மற்றும் மலேசிய சாலைப்பாதுகாப்புக் கழகம் (MIROS) ஆகியவை இருக்கின்றன. சட்டங்களைக் கொண்டு வருவது சட்டமன்ற நடவடிக்கைக் குழுவாகும். வாகனப் பாதுகாப்பை உறுதி செய்வது சாலைப் போக்குவரத்துத் துறையாகும். அரசாங்கம் பல முயற்சிகளை மேற்கொண்டாலும், நாட்டில் சாலை விபத்துகள் ஆங்காங்கே நடந்துகொண்டுதான் இருக்கின்றன.

அப்படியென்றால் சாலை விபத்துகளைக் குறைப்பதற்கு நாம் செய்ய வேண்டியது என்ன? சாலைப்பாதுகாப்பிற்கான அடிப்படை **பயணங்களுக்கான** நேரத்தைக் குறைப்பதுதான். மக்கள் வாழும் இடத்திலேயே அவர்களுக்கு வீடு, பள்ளி, அலுவலகங்கள், பொருள்கள் வாங்கும் கடைகள் அமைந்திருப்பது வாகனங்கள் ஓட்டுவதற்கான நேரத்தையும் தேவையையும் குறைக்கும். அடுத்ததாக, நகர்ப்புறம், கிராமப்புறம் இரண்டிலுமே பொதுப் போக்குவரத்துச் சேவையை **மேம்படுத்த** வேண்டும். சாலை, வாகனம் இரண்டுமே பாதுகாப்பான வகையில் இருப்பதை உறுதிசெய்வது அடுத்தகட்ட நடவடிக்கையாகும். விபத்து ஏற்பட்டவர்களுக்கு **விரைந்து** உடனடி முதலுதவிகளைச் செய்வது அதைவிட முக்கியமானதாகும். இதற்கெல்லாம் முக்கியத்துவம் வழங்கவில்லையென்றால் மலேசியாவில் சாலை விபத்துகள் தொடர்ந்து அதிகரிப்பதைத் தடுக்க முடியாது.



- பினாங்கு பயனீட்டாளர் சங்கம்

2.4.1

• மேலோட்ட வாசிப்பு உத்தியைப் பயன்படுத்தி வாசிப்பர்.

## இடுபணி 1

**வண்ணமிடப்பட்ட சொற்களுக்குப் பொருள் கூறுக.**

## இடுபணி 2

**வினாக்களுக்கு விடையளித்திடுக.**

1. நாட்டில் சாலை விபத்து அதிகரிப்பதற்கான காரணம் யாது?
2. சாலை விபத்துகளைக் குறைப்பதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்?
3. மாணவர்களுக்குச் சாலைப் பாதுகாப்புப்பற்றிய விழிப்புணர்வை எவ்வாறு ஏற்படுத்துவாய்?

**பனுவலை மேலோட்டமாக வாசித்திடுக.**




நான் மெலூர் தேசிய இடைநிலைப் பள்ளியில் பயில்கிறேன். நான் அப்பள்ளியின் சாலைப் பாதுகாப்புக் கழகத்தின் தலைவர். இக்கழகம் இப்பள்ளியில் பயிலும் மாணவர்களுக்குச் சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வண்ணம் ஆண்டுதோறும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

கடந்த வாரம் எங்கள் பள்ளியில் சாலைப் பாதுகாப்பு வாரத்தை நடத்தினோம். அதன் தொடர்பாக ஒரு வாரம் முழுவதும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டோம். இவ்வாரத்தில் பள்ளியைச் சுற்றிப் பதாகைகளும் சுவரொட்டிகளும் வைத்தோம். கழகங்களின் அறிவிப்புப் பலகைகளிலும் வண்ண வண்ணச் சுவரொட்டிகளையும் செய்திகளையும் ஒட்டினோம்.

சாலைப் பாதுகாப்பு வாரத்தையொட்டி புதிர்ப்போட்டி ஒன்றை நடத்தினோம். அதில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகளை வழங்கினோம். மலேசியப் போக்குவரத்துத் துறையிலிருந்து ஓர் அதிகாரி சிறப்புரையாற்றினார். அவர் தயாரித்து எடுத்து வந்திருந்த விபத்துகளைப் பற்றிய காணொளியைக் காட்டினார். காணொளியில் கோரமான விபத்துகளைக் கண்டு மாணவர்கள் அப்படியே உறைந்து போயினர்.

இவ்வாரத்தில் நாங்கள் சிறப்புக்கண்காட்சி ஒன்றை ஏற்பாடு செய்தோம். இதற்கு மலேசியப் போக்குவரத்துத்துறை எங்களுக்குக் கைகொடுத்தது. 'மலேசியாவில் சாலை விபத்துகள்' என்ற கருப்பொருளில் நடைபெற்ற அக்கண்காட்சி பள்ளி மாணவர்களைச் சிறப்பாகக் கவர்ந்தது. பள்ளி முதல்வர் எங்கள் கழகத்தை வெகுவாகப் பாராட்டினார்.

## இடுபணி 3

**ஒவ்வொரு பத்தியிலும் உள்ள முக்கியக் கருத்துகளை எடுத்தெழுதுக.**

| பத்தி | முக்கியக் கருத்து |
|---|---|
| பத்தி 1 | |
| பத்தி 2 | |
| பத்தி 3 | |
| பத்தி 4 | |

**அறிந்துகொள்க**

- விமானங்கள் பறக்கும் உயரத்தை அறிய உதவும் கருவி 'ஆல்டிமீட்டர்'.
- வானில் பறக்கும் விமானங்களைக் கண்டறிய உதவுவது 'ராடார்'.

- கலைக் களஞ்சியம்

## இடுபணி 4

**சாலைவிபத்துகளின் காரணங்களையும் அதன் விளைவுகளையும் பற்றி பல் நிலை நிரலொழுங்கு வரைபடத்தில் எழுதுக; கூறுக.**

| காரணம் | | விளைவு |
|---|---|---|
| அலட்சியப்போக்கு | | உயிர்ச்சேதம் |
| | | |
| | | |
| | | |



# பாடம் 3 போக்குவரத்துக் குற்றங்கள்

**குழுவில் கலந்துரையாடுக.**

ஜனவரி 1 முதல் ஜனவரி 31 வரை ஒரு பட்டணத்தில்
நிகழ்ந்த போக்குவரத்துக் குற்றங்கள்

| போக்குவரத்துக் குற்றங்கள் | எண்ணிக்கை | விழுக்காடு % |
|---|---|---|
| கண்ட இடங்களில் வாகனங்களை நிறுத்துதல் | 300 | 30 |
| தலைக்கவசம் அணியாமை | 150 | 15 |
| வேகக் கட்டுப்பாட்டை மீறுதல் | 120 | 12 |
| ஓட்டுநர் உரிமம் இல்லாமை | 100 | 10 |
| இரட்டைக்கோட்டில் முந்துதல் | 100 | 10 |
| வாகனப்பழுதுக் கோளாறு | 100 | 10 |
| சமிக்ஞை விளக்கை மீறுதல் | 80 | 8 |
| பாதுகாப்புப் பட்டை அணியாமை | 50 | 5 |





**அறிந்துகொள்க**

சாலைப் போக்குவரத்துக் குற்றங்களும் அபராதமும்

- வேகக்கட்டுப்பாடு மீறல் - RM300.00
- ஓட்டுநர் உரிமம் இல்லாமை - RM300.00
- சமிக்ஞை விளக்கை மீறுதல் - RM300.00
- வாகன விளக்கு எரியாமை - RM250.00
- ஓட்டுநர் உரிமம் காலாவதி - RM150.00

- சாலைப் போக்குவரத்துத் துறை (ஜூலை 2013)

**இடுபணி 1**

**போக்குவரத்துக் குற்றங்களுக்கான காரணங்களை விளக்குக.**

**இடுபணி 2**

**அட்டவணையில் உள்ள விவரங்களைத் தொகுத்து எழுதுக.**

3.3.1

• அட்டவணையிலுள்ள விவரங்களைத் தொகுத்து எழுதுவர்.

## இடுபணி 3

**அட்டவணையிலுள்ள விவரங்களைத் தொகுத்து எழுதுக.**

2011ஆம் முதல் 2015ஆம் ஆண்டு வரை மேற்கொள்ளப்பட்ட மீட்பு சம்பவங்கள், மனிதநேயச் சேவைகள் ஆகியன.

| சம்பவங்கள் நிகழ்ந்த இடங்கள் / ஆண்டு | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|---|---|
| சாலைகள் | 5424 | 5927 | 6029 | 5649 | 5669 |
| கட்டடங்கள் | 2293 | 2581 | 2345 | 2073 | 2398 |
| பேரிடர் | 2082 | 2590 | 3008 | 11258 | 3725 |
| பிற அவசர உதவிகள் | 19315 | 19721 | 19600 | 21595 | 26085 |

- Kementerian kesejahteraan bandar, perumahan dan kerajaan tempatan
(நகர்ப்புற நல்வாழ்வு, வீடமைப்பு மற்றும் ஊராட்சி அமைச்சு)

## இடுபணி 4

**அட்டவணையிலுள்ள விவரங்களைத் தொகுத்து எழுதுக.**

ஒரு தேசிய இடைநிலைப்பள்ளியில் மாணவர்களின் பெற்றோர் ஈடுபட்டுள்ள துறைகள்

| படிவம் | அரசுத் துறை | தனியார்த் துறை | சொந்தத் தொழில் | வாணிபம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| படிவம் 1 | 50 | 100 | 20 | 10 | 180 |
| படிவம் 2 | 40 | 60 | 30 | 20 | 150 |
| படிவம் 3 | 70 | 40 | 40 | 30 | 180 |
| படிவம் 4 | 40 | 20 | 60 | 30 | 150 |
| படிவம் 5 | 60 | 60 | 20 | 40 | 180 |

## வளப்படுத்துதல்

**உன் வகுப்பறையில் மாணவர்கள் பள்ளிக்கு வரப் பயன்படுத்தும் வாகன வகையைக் குறிக்கும் அட்டவணை ஒன்றைத் தயாரித்து வகுப்பில் படைத்திடுக; அவ்விவரங்களைத் தொகுத்து எழுதுக.**

| வாகனம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| மிதிவண்டி | 5 | 0 | 5 |
| மகிழுந்து | | | |
| பேருந்து | | | |
| பொதுப் போக்குவரத்து | | | |
| பிற வாகன முறை | | | |

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## வாசித்துப் பழமொழிகளை அறிக.

“என்ன மணி! உன் தேர்வு அறிக்கை இவ்வளவு மோசமாக இருக்கிறதே! கணிதம், அறிவியல், ஆங்கிலம், மலாய் ஆகிய பாடங்களில் எல்லாம் சிவப்புப் புள்ளிகளாகவே இருக்கிறதே!”

“மணி, இடைநிலைப் பள்ளிக்குச் சென்ற பிறகு நீ ஒழுங்காகவே படிப்பதில்லை. எப்பொழுது பார்த்தாலும் நண்பர்களோடு அரட்டையடிப்பதும் ஊரைச் சுற்றுவதுமாய் இருக்கிறாய். கல்வியில் பின்தங்கியதற்கு நீ பல சாக்குபோக்குகளைக் கூறுகிறாய். **ஆடமாட்டாதவள் கூடம் கோணல் என்றாளாம்** என்பது போலல்லவா இருக்கிறது நீ சொல்வது?”

“மன்னியுங்கள் அப்பா! தவறு என்னுடையதுதான். நான்தான் பொழுதை வீணாகக் கழித்தேன். பாடத்தில் அக்கறையில்லாமல் இருந்து விட்டேன். நான் தேர்வுக்காக என்னை முழுமையாகத் தயார்படுத்திக் கொள்ளவில்லை.”



“மணி, நடந்து முடிந்ததைப் பற்றிப் பேசுவதாலும், அதனை நினைத்து வருந்துவதாலும் எந்தப்பயனும் விளையாது. உன் மனத்திற்குள் உறுதிகொள். இப்பொழுதிலிருந்தே இறுதித் தேர்வுக்கு உன்னைத் தயார்படுத்தத் தொடங்கு. கிடைக்கும் பொழுதையெல்லாம் எதையாவது வாசிப்பதற்குப் பயன்படுத்திக்கொள். உனது அகன்ற வாசிப்பு உனது அறிவு வளர்ச்சிக்குத் துணை செய்யும் என்பதை மறந்து விடாதே. **கண்டதைக் கற்கப் பண்டிதனாவான்** என்று ஆரம்பப் பள்ளியில் படித்ததை மறந்து விட்டாயா?”

“ஆமாம் அப்பா, நீங்கள் சொல்வது முற்றிலும் உண்மை. என்னுடைய வளர்ச்சிக்காகவும் முன்னேற்றத்திற்காகவும் யாரையும் எதிர்பார்க்கக் கூடாது என்பதைக் தெளிவாகத் தெரிந்து கொண்டேன். **தன் கையே தனக்கு உதவி** என்பதையும் நான் உணர்கிறேன். இன்றிலிருந்து ஒழுங்காகப் படித்து ஆண்டு இறுதித் தேர்வில் சிறந்த மதிப்பெண்களைப் பெறுவேன் என்று உறுதியளிக்கின்றேன்.”

4.7.1

- ஒன்றாம் படிவத்திற்கான பழமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

## பழமொழிகளும் பொருளும்

**ஆடமாட்டாதவள் கூடம் கோணல் என்றாளாம்**

பொருள்: தன் குறையையும் இயலாமையையும் சொல்லத் துணிவு இல்லாமல், அதற்காக மற்றவரையும் மற்றவற்றையும் குறை சொல்லல்.

**கண்டதைக் கற்கப் பண்டிதனாவான்**

பொருள்: பல நூல்களைப் படிப்பதனால் அறிஞனாகத் திகழலாம்

**தன் கையே தனக்கு உதவி**

பொருள்: ஒவ்வொருவருக்கும் தன்னம்பிக்கையும் சுயமுயற்சியும் வேண்டும் பிறர் உதவியை எதிர்பார்த்து வாழக்கூடாது.

### இடுபணி 1

**கீழ்க்காணும் சூழல்களுக்கு ஏற்ற பழமொழிகளைத் தெரிவு செய்க.**

பாலன் சுறுசுறுப்பான மாணவன். எப்பொழுதும் தன்னுடைய வேலைகளைச் சிறப்பாகச் செய்து முடிப்பதில் முனைப்புக் காட்டுவான். பள்ளி வேலைகளையும் வீட்டு வேலைகளையும் செய்து முடிப்பதற்கு யாருடைய உதவியையும் நாட மாட்டான்.

கயல்விழியின் வீட்டில் நிறைய கதைப் புத்தகங்களும், அறிவு நூல்களும், மொழி நூல்களும் இருந்தன. அவள் தனக்குக் கிடைக்கும் ஓய்வு நேரங்களில் அவற்றை எடுத்து விரும்பி வாசிப்பாள். பல நூல்களை அவள் தொடர்ந்து வாசித்து வந்ததால் அவள் பல துறைகளில் அறிவு பெற்று விளங்கினாள்.

குணாளன் எந்த வேலையையும் செய்ய மாட்டான். அவன் வேலைகளில் நிறைய குறைகள் இருக்கும். அவசர அவசரமாக வேலைகளைச் செய்து முடிப்பான். நிறைவாக வேலைகளைச் செய்து முடிக்க மாட்டான். மேலதிகாரிகள் காரணம் கேட்டால் பல சாக்குப் போக்குகளைக் கூறுவதும், பிறர் மீது பழி போடுவதுமாக இருந்தான்.

### இடுபணி 2

**பழமொழிக்கு ஏற்ற கருத்துடன் இணைத்திடுக**

| | |
|---|---|
| தன் கையே தனக்கு உதவி ● | ● தன் இயலாமையை மறைத்துப் பிறரைக் குறை கூறுதல். |
| கண்டதைக் கற்கப் பண்டிதனாவான் ● | ● பிறர் உதவியை நாடாமல் சுயமாகச் செயல்படுதல். |
| ஆடமாட்டாதவள் கூடம் கோணல் என்றாளாம் ● | ● பல நூல்களைப் படித்து அறிஞராதல். |


### வளப்படுத்துதல்

**இணையராகக் கலந்துரையாடி கொடுக்கப்பட்ட பழமொழிகளுக்கு ஏற்ற சூழல்களை உருவாக்கி எழுதுக.**

- ஆடமாட்டாதவள் கூடம் கோணல் என்றாளாம்
- கண்டதைக் கற்கப் பண்டிதனாவான்
- தன் கையே தனக்கு உதவி

## இடுபணி 3

**பின்வரும் படங்களுக்கு ஏற்ற பழமொழியை எழுதுக.**




## இடுபணி 4

**காலி இடங்களில் பொருத்தமான பழமொழிகளைக் கொண்டு நிறைவு செய்க.**

1. கடுமையான உழைப்பாளியான மருதன் ______ என்பதற்கேற்ப யாருடைய உதவியும் இல்லாமல் தன் நிலத்தைத் தானே உழுது பயிரிட்டான்.

2. கமலக்கண்ணன் எந்த ஒரு வேலையும் முழுமையாகச் செய்து முடிக்காமல் ______ பல காரணங்களைக் கூறி நழுவிவிடுவான்.

3. ______ என்பதற்கேற்ப காவியன் பல துறைகளைச் சார்ந்த நூல்களைக் கற்று அறிஞனாகத் திகழ்கின்றான்.

4. ______ என்று வாழ்பவர்கள் எந்தச் சூழலிலும் பிறர் உதவியை நாடமாட்டார்கள்.

5. பூரணி பொறுப்பானவள் என்பதால், தனது பணிகளை நிறைவாகச் செய்வதோடு ______ என்பதைப் போல பிற காரணங்களைக் கூறமாட்டாள்.

6. வாசிப்புப் பழக்கம் அறிவு வளர்ச்சிக்கு வித்திடுவதோடு ______ என்பதற்கேற்ப நம்மை வாழ்வில் சிறந்து விளங்கச் செய்கின்றது.

7. ஞாயிற்றுக்கிழமையன்று ______ என்பதற்கேற்ப பிள்ளைகளின் ஆதரவின்றித் திருமதி கமலம் சமையலறையில் எல்லா வேலைகளையும் தானே செய்து முடித்தாள்.

8. முத்து அலுவலகத்தில் எந்த ஒரு வேலையையும் உருப்படியாகச் செய்து முடிக்காமல் ______ என்பதற்கேற்ப பிறர் மீது பழியைப் போட்டுத் தப்பித்துக் கொள்வான்.

9. ______ என்பதே அறிவு வளர்ச்சியில் சிறந்து விளங்குவதற்கு முதன்மையான வழி என்று அறிஞர்கள் கூறியுள்ளனர்.

## குறைநீக்கல்

**அ. சூழல்களோடு பொருத்தமான பழமொழிகளை இணைத்திடுக.**

| சூழல் | பழமொழி |
|---|---|
| பள்ளி மாணவர்களாகிய நாம் எப்பொழுதும் நமது வேலைகளை முறையாகச் செய்ய வேண்டும். வேலைகளில் குறைகள் இருந்து ஆசிரியர்கள் அவற்றைச் சுட்டிக் காட்டினால் ஏற்றுக்கொள்ள வேண்டும். பிற சூழலைக் காரணம் காட்டக் கூடாது. | தன் கையே தனக்கு உதவி |
| ஓய்வு நேரத்தில் பள்ளி நூலகத்திற்குச் செல்வது நல்லது. அங்கு அமைதியான சூழலில் அமர்ந்து வாசிப்பது நன்மை பயக்கும். அங்குப் பல துறைகளைச் சார்ந்த நூல்கள் இருக்கும். அவற்றை வாசிக்கும் பொழுது நமது அறிவு வளரும். நாம் பல துறைகளைப் பற்றியும் அறிந்து கொள்ள முடியும். | ஆடமாட்டாதவள் கூடம் கோணல் என்றாளாம். |
| மாணவர்கள் சுயகாலில் நிற்பதற்குக் கற்றுக்கொள்ள வேண்டும். அவர்களுடைய வேலைகளைச் சுயமாகச் செய்ய வேண்டும். பிறரின் உதவியை நாடக்கூடாது. நமது முன்னேற்றமும் நமது வளர்ச்சியும் நம் கையில்தான் இருக்கிறது என்பதைத் தெளிவாக உணர்ந்துகொள்ள வேண்டும். | கண்டதைக் கற்கப் பண்டிதனாவான் |

**ஆ. கீழ்க்காணும் சூழல்களுக்குப் பொருத்தமான பழமொழிகளைத் தெரிவு செய்க.**

1. திருவாசகம் சிறந்த அறிஞராகத் திகழ்ந்தார். அவர் பல துறை சார்ந்த நூல்களைக் கசடறக் கற்று வந்ததால் சிறந்து விளங்கினார்.
2. மாதவி எப்பொழுதும் பிறரைக் குறை கூறுவாள். அவளுடைய பணிகளைச் சிறப்பாகச் செய்து முடிக்காமல் பிறர் மீது பழியைத்தூக்கிப் போடுவாள்.
3. எடிசன் சிறந்த விஞ்ஞானியாகத் திகழ்ந்தார். யாருடைய உதவியும் ஆதரவும் இல்லாமல் தமது அறிவியல்கூடத்தில் கடுமையாக உழைத்துப் பல அறிவியல் கருவிகளைக் கண்டுபிடித்து உலகுக்கு வழங்கினார்.

**இ. காலி இடங்களில் பொருத்தமான பழமொழிகளைக் கொண்டு நிறைவு செய்க.**

மணிவாசகம் கல்வியில் சிறந்து விளங்கினார். பல அறிஞர்களின் நூல்களைக் கற்றதால் ____________ என்பதற்கேற்ப மேதையாய் விளங்கினார். தம்முடைய வளர்ச்சிக்கும் உயர்வுக்கும் அவர் யாருடைய உதவியையும் எதிர்பார்க்கவில்லை. ____________ என்பதற்கேற்ப சுயமாக முயன்று வாழ்வில் முன்னேறினார். தம்முடைய இலக்கை அடைவதில் சிக்கல் ஏற்பட்டால் அவர் காரணம் கூறுவது கிடையாது. ____________ என்பதைப் போல பலர் தங்களுடைய தோல்விகளுக்குப் பிறர்தான் காரணம் என்று கூறுவதை அவர் கடுமையாகச் சாடினார்.

## தொகுதி 8

# தமிழர் போற்றும் கலைகள்

## பாடம் 1 இன்னிசை விழா

குழுவில் கலந்துரையாடுக.




1.4.2

• பார்த்த நிகழ்ச்சியை விவரித்துக் கூறுவர்.




இடுபணி 1

**வினாக்களுக்கு விடை கூறுக.**

1. இசை நிகழ்ச்சியில் இடம்பெற்ற நிகழ்வுகளை விவரித்திடுக.
2. இது போன்ற காட்சிகளை எங்கே பார்க்கலாம்?
3. இது போன்ற நிகழ்ச்சியினால் ஏற்படும் நன்மைகளைக் கூறுக.

இடுபணி 2

**நீ பார்த்த இசை நிகழ்ச்சி ஒன்றை விவரித்துக் கூறுக.**

# பாடம் 2 நயமிகு நாடகக் கலை

**வாசித்து அறிக.**

நாடகம் என்ற சொல்லை நாடு + அகம் என்று பகுக்கலாம். இதற்கு நாட்டை அகத்துள் கொண்டது என்று பொருளாகும். ஒரு நாட்டின் கடந்த காலத்தையும் வருங்காலத்தையும் தன் அகத்தே காட்டுவதால் நாடகம் என்றழைக்கப்பட்டது. நாடகம் என்பது நாட்டின் நிகழ்ச்சிகளையும் போக்கையும் விளக்குவதாகும். கதையை, நிகழ்ச்சியை, உணர்வை நடித்துக் காட்டுவதும் கூத்தாக ஆடிக் காட்டுவதும் நாடகம் என்பார்கள். நாடகத்திற்குக் கூத்துக் கலை என்னும் பெயரும் உண்டு.



இலக்கிய நாடகம்

தமிழர் நாடகக் கலையின் தோற்றத்தினை **விவரிக்கும்** நூல்களில் **பழைமை** வாய்ந்ததாகக் கருதப்படுவது அகத்தியம். இது தலைச்சங்க காலத்து நூலாகும். நாடகம் என்பது பாட்டும் உரையும் நடிப்பும் இலக்கணமுமாகக் கொண்டு விளங்குகின்றது. தொல்காப்பியம், சிலப்பதிகாரம் போன்ற நூல்களில் தமிழ் நாடகக் கலை பற்றிய **சான்றுகள்** பல உள்ளன.



சமூக நாடகம்

தமிழின் **தொன்மையான** கலை வடிவமாக நாடகம் போற்றப்படுகின்றது. நாடகம் என்பது 'போலச் செய்தல்' என்னும் பண்பு அடிப்படையாகக் கொண்டது. பிறர் செய்வதைப் போல தாமும் செய்து பார்க்க வேண்டும் என்ற மனித உணர்ச்சிதான் நாடகம் தோன்றக் காரணமாகும். மரப்பாவைக் கூத்து, பொம்மலாட்டம், தோற்பாவைக் கூத்து, நிழற்பாவைக் கூத்து என்ற படிப்படியான வளர்ச்சியில்தான் நாடகம் **தோன்றியது**.



சமய நாடகம்

ஒரு நாடகம் வெற்றியடைவதற்குப் பல காரணங்கள் இருந்தாலும் நல்ல கதை, சிறந்த நடிப்பு, உயர்ந்த கருத்துகள், குறைந்த பாடல், சிறிய வசனம், விறுவிறுப்பான போக்கு ஆகியவை அமைதலே நாடகத்தின் இலக்கணமாகும்.

வரலாற்று நாடகங்கள், இலக்கிய நாடகங்கள், சமய நாடகங்கள் ஆகியவை கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து வந்தாலும், சமுதாயத் தேவைக்கு ஏற்றவாறு சமூக நாடகங்கள் வளர்வது நமக்கு **ஆறுதலாக** அமைகிறது. இன்று மலேசியத் தொலைக்காட்சியில் ஒளியேறும் ஓரங்க நாடகங்கள் அவற்றுக்குச் சான்றாக விளங்குகின்றன.



நாட்டிய நாடகம்

2.3.3 • கலை தொடர்பான உரைநடைப் பகுதியை வாசித்துக் கருத்துணர்க் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.

## இடுபணி 1

**வண்ணமிடப்பட்ட சொல்லுக்கு அகராதியின் துணை கொண்டு பொருள் கூறுக.**


## இடுபணி 2

**வினாக்களுக்கு விடை கூறுக.**

1. நாடகம் என்ற சொல்லின் பொருள் யாது?
2. நாடகத்திற்கு வேறு பெயர் என்ன?
3. நாடகக் கலையின் தோற்றத்தை விவரிக்கும் பழைமையான நூல் எது?
4. நாடகம் எதை அடிப்படையாகக் கொண்டது?
5. ஒரு நாடகத்தின் வெற்றிக்கான காரணங்கள் யாவை?
6. கட்டுரையாசிரியருக்கு மன ஆறுதலாக அமைவது எது?
7. நாடகக் கலையை வளர்க்க மாணவர்கள் எவ்வாறு பங்களிக்கலாம் என்பதனை விளக்குக.

**அறிந்துகொள்க**

**நாடகக் கலையின் தந்தை**




1873-1964
**பம்மல் சம்பந்தனார்**

## இடுபணி 3

**சூழலுக்கு ஏற்ற நாடகம் ஒன்றை வகுப்பறையில் படைத்திடுக.**

சமையற்கலை
உணவு: முட்டைப் பொறியல்




தேவையான பொருள்கள்



முட்டை



உப்பு



வெங்காயம்



மிளகாய்




சமையல் எண்ணெய்

# பாடம் 3 இசைக்கல்வி

## தக்க தொனியுடன் வாசித்திடுக.

இடைநிலைப்பள்ளியில் படிவம் ஒன்றில் பயிலும் மாணவன் குமரன், உள்நாட்டு இசைக்கலைஞர் ஒருவரைச்சந்தித்து உரையாடும் வாய்ப்புக் கிடைத்தது.

குமரன்: வணக்கம் ஐயா. நலமாக இருக்கிறீர்களா?


இசைக்கலைஞர்: வணக்கம் குமரன், நலமாக இருக்கிறேன், நன்றி.

குமரன்: ஐயா, தாங்கள் மலேசியாவில் **புகழ்பெற்ற** ஓர் இசைக்கலைஞர் என்று அனைவருக்கும் தெரியும். உங்களுடைய இசைப்பயணத்தைப் பற்றி மேலும் அறிய **விழைகிறேன்**.

இசைக்கலைஞர்: நல்லது. உனது ஆவலை எண்ணி மகிழ்கிறேன்.

குமரன்: ஐயா, தங்களுக்கு இந்த இசைத்துறையில் எவ்வாறு **ஈடுபாடு** ஏற்பட்டது?

இசைக்கலைஞர்: ஒவ்வொரு காரியத்திற்கும் ஒரு காரணம் இருக்கும். இசைத்துறையில் என்னுடைய ஈடுபாட்டுக்கு முக்கியக் காரணம் என்னுடைய தாய்தான். அவர் ஓர் இசைக்குடும்பத்தில் இருந்து வந்தவர். என் அம்மா மலேசியாவில் புகழ்பெற்ற பாடகி என்பது குறிப்பிடத்தக்கது. நான் என் தந்தையை இளம் வயதிலேயே இழந்துவிட்டேன். எனக்கு ஒன்பது வயது இருக்கும் போது என் அம்மா என்னை இசைக்கல்வி பயில அனுப்பி வைத்தார். சங்கீதம் **பயின்றதோடு** நின்றுவிடாமல் இசைக்கருவிகளையும் மீட்டத் தொடங்கினேன்.




3.4.3

- 140 சொற்களில் உரையாடல் எழுதுவர்.




இசைக்கலைஞர்: தவில், மிருதங்கம், மத்தளம், கடம், கஞ்சிரா, மேக்கலம், தம்பட்டம், திமிலை, ஐம்முக முழவம் போன்ற இசைக் கருவிகளை மீட்டக் கற்றுக் கொண்டேன். இன்று ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் இக்கருவிகளை இசைத்துக் கொண்டிருக்கிறேன்.

குமரன்: வாழ்த்துகள் ஐயா, இன்றைய இளைஞர்களுக்கு நீங்கள் என்ன கூற விரும்புகின்றீர்கள்?

இசைக்கலைஞர்: தமிழிசைக் கருவிகள் பற்றியும் அவற்றின் சிறப்புகள் பற்றியும் எதிர்கால இளைய சமுதாயம் அறிந்துகொள்ள வேண்டும். நமது இசைக்கருவிகளை இசைக்க முன் வர வேண்டும். இசைக் கலைஞர்கள் **அதிகரிக்க** வேண்டும். மன அமைதியையும் மகிழ்ச்சியையும் தரவல்ல இசைக் கருவிகளை மீட்ட வேண்டும்; இசை நிகழ்ச்சிகளுக்கு **ஆதரவு** நல்க வேண்டும்; இசையைப் போற்றி வளர்க்க வேண்டும்.

குமரன்: மிக அருமையாகச் சொன்னீர்கள் ஐயா, எங்களைப் போன்ற இளைஞர்களுக்கு நல்லதொரு தகவலைப் பரிமாறியதற்கு மிக்க நன்றி ஐயா.

இடுபணி 1

**வண்ணமிடப்பட்ட சொல்லுக்கு அகராதியின் துணைகொண்டு பொருள் கூறுக.**

## இடுபணி 2

**வினாக்களுக்கு விடை கூறுக.**

1. இசைக்கலைஞர் இசைத்துறையில் ஆர்வம் காட்ட முக்கியக் காரணம் என்ன?
2. இசைக்கலைஞரின் மேடை அனுபவங்களை விவரித்துக் கூறுக.
3. இன்றைய இளைஞர்களுக்கு இசைக் கலைஞர் கூறிய ஆலோசனைகள் என்ன?
4. இசைக்கல்வி பயில்வதால் என்னென்ன நன்மைகளை அடைய முடியும் என நீ கருதுகிறாய்?

## இடுபணி 3

**மலேசியாவில் நாடகக் கலையை வளர்க்கும் வழிமுறைகள் பற்றி இருவர் உரையாடுவதை 140 சொற்களில் எழுதுக.**

### அறிந்துகொள்க


**உரையாடல் அமைப்பு**

- உரையாடல் வடிவில் இருத்தல்
- சூழல், அறிமுகம், முகமன் இருத்தல்
- இருவர் அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் பேசுவதாக அமைந்திருத்தல்
- உரையாடலுக்கான குறியீடுகளும் உணர்ச்சிகளும் வெளிப்பட்டிருத்தல்
- உரையாடலுக்குரிய துறைசார் மொழியில் எழுதியிருத்தல்.
- விடைபெறுதல் / முடிவு இருத்தல்

### வளப்படுத்துதல்

**அ) பள்ளியில் தமிழ்மொழிக் கழகம் பாடும் திறன் போட்டியொன்றை நடத்தவுள்ளது. அதில் நீயும் உன் நண்பனும் கலந்துகொள்ள இருக்கின்றீர்கள். அதனைப்பற்றி உன் நண்பனோடு உரையாடுகின்றாய். அவ்வுரையாடலை எழுதுக.**

**ஆ) சிந்தனைக் குறிவரைவிலுள்ள தகவல்களைப் பயன்படுத்தி மலேசியாவிலுள்ள ஓர் இசைக்கலைஞரின் இசைப்பயணத்தைப் பற்றி 140 சொற்களில் உரையாடல் ஒன்றனை எழுதுக.**





## குறைநீக்கல்

**குறிப்புகளைப் பயன்படுத்தி உரையாடலை நிறைவு செய்க.**

சூழல் - பள்ளியில் தமிழ்மொழிக் கழகம் நாடகப் போட்டியொன்றை ஏற்பாடு செய்துள்ளது. யாழினி தனது தோழி கவிதாவை உடன் அழைத்துச் செல்ல, அவளுடைய இல்லத்திற்குச் செல்கிறாள்.

யாழினி: வணக்கம் கவிதா, நலமாக இருக்கிறாயா?

கவிதா: வணக்கம் நலமாக உள்ளேன் யாழினி.

யாழினி: இன்று புறப்பாட நடவடிக்கை உள்ளது. நமது தமிழ்மொழிக் கழகம் நாடகப் போட்டியை ஏற்பாடு செய்துள்ளது. நீ வருகிறாயா?

கவிதா: என்னை மன்னித்துவிடு யாழினி. என்னால் இன்று வர இயலாது. எனக்கு உடல்நிலை சரியில்லை.

யாழினி: ____________________

கவிதா: கடந்த இரண்டு நாள்களாகக் கடுமையான சளிக் காய்ச்சலால் அவதியுறுகிறேன். உடம்பெல்லாம் அடித்துப் போட்டாற்போல் சோர்வாக உள்ளது.

யாழினி: மருத்துவரைச் சென்று கண்டாயா கவிதா?

கவிதா: ____________________

யாழினி: கவலைப்படாதே கவிதா! உன் நோய் விரைவிலேயே குணமடைந்துவிடும். மருத்துவர் கொடுத்த மருந்து மாத்திரைகளை நேரம் தவறாமல் சாப்பிடு.

கவிதா: ____________________

யாழினி: சரி கவிதா, மணியாகிறது. நான் மண்டபத்திற்குச் செல்கிறேன். நாளை மீண்டும் பள்ளியில் சந்திப்போம்.

கவிதா: ____________________

நன்றி யாழினி. நாளை சந்திப்போம்.

சரி. ஆகட்டும் யாழினி. உன் அறிவுரைக்கு ஏற்றவாறு நேரம் தவறாமல் மாத்திரைகளை எடுத்துக் கொள்கிறேன்.

ஆமாம். நேற்று என் தந்தை மருத்துவரிடம் அழைத்துச் சென்றார். அவர் என்னைப் பரிசோதித்தார். காய்ச்சலுக்குச் சில மாத்திரைகளைக் கொடுத்தார்.

அப்படியா? ஏன், உடம்பிற்கு என்ன?

# பாடம் 4 இலக்கணம்

## குன்றியவினை, குன்றாவினை அறிக.

### குன்றியவினை

வாக்கியத்தில் செயப்படுபொருளை ஏற்காத வினைமுற்றைக் குன்றியவினை என்பர்.

- குன்றியவினையை ஏற்றுவரும் வாக்கியங்களில் 'எதை' 'எவற்றை' 'யாரை' என்ற கேள்விகளுக்கு விடை வாரா.



**எடுத்துக்காட்டு**

| எழுவாய் | பயனிலை (குன்றிய வினை) |
|---|---|
| நாய் | குரைத்தது. |
| தங்கை | அழுதாள். |
| மழை | பெய்தது. |
| வானம் | கருத்தது. |

### குன்றாவினை

வாக்கியத்தில் செயப்படுபொருளை ஏற்றுவரும் வினைமுற்றைக் குன்றாவினை என்பர்.

- 'எதை' 'எவற்றை' 'யாரை' என்ற கேள்விகளுக்கு விடை கொடுக்கும் வினைமுற்று குன்றாவினையாகும்.



**எடுத்துக்காட்டு**

| எழுவாய் | செயப்படுபொருள் | பயனிலை (குன்றாவினை) |
|---|---|---|
| அம்மா | வீட்டைக் | கழுவினார். |
| தங்கை | புத்தகத்தை | வாசித்தாள். |
| முகிலன் | பந்தை | உதைத்தான். |
| அவன் | மேசையைத் | துடைத்தான். |

(குறிப்பு: செயப்படுபொருள் தெளிவாக வெளிப்படுகிறது)

சில வாக்கியங்களில் செயப்படுபொருள் மறைந்து, இல்லாதது போன்ற மயக்க நிலையைக் கொடுக்கும்.



**எடுத்துக்காட்டு**

| எழுவாய் | பயனிலை (குன்றாவினை) | செயப்படுபொருள் |
|---|---|---|
| மதிவாணன் | வாசித்தான். | எதை - நூலை |
| கம்பர் | அழைத்தார். | யாரை - மகளை |
| ஆசிரியர் | போதித்தார். | எதை - பாடத்தை |
| வாணி | மீட்டினாள். | எதை - வீணையை |

(குறிப்பு: செயப்படுபொருள் மறைந்துள்ளது)

5.2.2

- குன்றியவினை, குன்றாவினை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

## இடுபணி 1

**குன்றியவினை, குன்றாவினை வாக்கியங்களை அடையாளம் கண்டு வகைப்படுத்தி எழுதுக.**

1. மாறன் கதைப் புத்தகத்தை வாசித்தான்.
2. மாணவன் திடலில் வேகமாக ஓடினான்.
3. அந்த மல்யுத்த வீரன் பீமனைப் போன்று வலிமையுடையவன்.
4. ஆசிரியை தம்பியை வாழ்த்திப் பேசினார்.
5. மரத்திலிருந்து இலை உதிர்ந்தது.
6. மேசையிலிருந்து கீழே விழுந்ததால் தட்டு உடைந்தது.
7. அப்பா என்னைத் திட்டினார்.
8. கவிச்சக்கரவர்த்தி கம்பர் ஏர் எழுபது எனும் நூலை இயற்றினார்.
9. அண்ணன் செடிகளை வெட்டினார்.
10. அந்தப் பூஞ்சோலையில் பல்வகைப் பூக்கள் பூத்திருந்தன.

**அறிந்துகொள்க**

சிற்பங்கள் செய்யப் பயன்படும் பொருள்கள்
- மெழுகு
- அரக்கு
- மரம்
- தந்தம்
- கல்
- பஞ்சலோகம்

\- கலைக்களஞ்சியம்

## இடுபணி 2

**பத்தியிலுள்ள குன்றியவினை, குன்றாவினை வாக்கியங்களை அடையாளம் கண்டு எழுதுக.**

மாமரம் காய்த்திருந்தது. தமிழரசு பழங்களைப் பறித்தான். அதில் ஒன்றைச் சுத்தமாகக் கழுவினான். தமிழரசு அப்பழத்தைச் சுவைத்தான். பழம் இனித்தது. அவன் தம்பியும் வந்தான். தமிழரசுவிடம் பழம் கேட்டான். தமிழரசு அவனுக்குப் பழத்தைக் கொடுத்தான். அவன் அப்படியே கடித்தான். தமிழரசு தம்பியைத் திட்டினான். பழத்தைக் கழுவச் சொன்னான். பிறகு இருவரும் மர நிழலில் அமர்ந்தனர். மாம்பழத்தை நன்கு சுவைத்தனர். மாலை நேரமானது. அடிவானம் இருட்டத் தொடங்கியது. இருவரும் பழங்களைப் பையில் போட்டனர். வீட்டை நோக்கி நடந்தனர்.

## வளப்படுத்துதல்

**பின்வரும் குறிப்புகளின் துணையுடன் குன்றியவினை, குன்றாவினை வாக்கியங்களை எழுதுக.**

1. அப்பா - நாளிதழை
2. சந்திரமதி - விளையாடினாள்
3. புறா - பறந்தது
4. புலி - மானை
5. திவியா - கோவில்
6. பாடகர் - பாடினார்
7. சாலையில் - வாகனங்கள்
8. முதலாளி - கண்டித்தார்



## குறைநீக்கல்

**அ. குன்றியவினை வாக்கியத்திற்கு ( ✓ ) என்றும் குன்றாவினை வாக்கியத்திற்கு ( X ) என்றும் குறியிடுக.**



1. முதியவர் வேகமாகச் சிரித்தார். (      )
2. குயவன் குடத்தை வனைந்தான். (      )
3. இளைஞன் பாம்பை அடித்தான். (      )
4. தம்பி அழுதான். (      )
5. வள்ளுவர் குறளை எழுதினார். (      )
6. ஆற்றில் நீர் ஓடியது. (      )
7. தாமரை துணியைத் துவைத்தாள். (      )
8. மாயவன் வகுப்பறையில் போதித்தார். (      )
9. மரம் உயரமாக வளர்ந்தது. (      )
10. மாணவர்கள் பள்ளியைச் சுத்தம் செய்தனர். (      )

**ஆ. வாக்கியங்களை வகைப்படுத்தி அட்டவணையில் நிறைவு செய்க.**





1. மீனவன் மீன்களைப் பிடித்தான்.
2. மாணவர்கள் திடலில் விளையாடினார்கள்.
3. பரமேஸ்வரன் மலாக்காவை ஆண்டான்.
4. நள்ளிரவில் நாய் உரக்கக் குரைத்தது.
5. பூவரசன் பாடநூல்களை வாசித்தான்.
6. ராஜராஜ சோழன் கடாரத்தை வென்றான்.
7. காருண்யன் அகவல் படித்தான்.
8. சமயக்குரவர்கள் திருமுறைகளை ஓதினர்.
9. அசோக சக்கரவர்த்தி கடுமையாகப் போர் புரிந்தார்.
10. பலத்த காற்றில் பல மரங்கள் சாய்ந்தன.

| குன்றியவினை | குன்றாவினை |
|---|---|
| 1) | |
| 2) | |
| 3) | |
| 4) | |
| 5) | |

## வாசித்து மகிழ்க.

### விடுதலை வீரன்



வீரபாண்டிய கட்டபொம்மன்: தம்பி இங்கு வா. இரண்டு நாள்களாக உன்னைக் காணவில்லையே! எங்குச் சென்றாய்?

ஊமைத்துரை: அண்ணா... குதிரைப்படை முகாமில் பயிற்சிப் பணியில் இருந்தேன். அதனால்தான் தங்களை வந்து காண இயலவில்லை அண்ணா.

வீரபாண்டிய கட்டபொம்மன்: (சிரித்துக் கொண்டே) தெரியும், தெரியும். வீரப்போருக்கு வேட்கை கொண்டவன் என் தம்பி என்பது எனக்கு நன்றாகத் தெரியும். ஆமாம்... செய்தியைக் கேள்விப்பட்டாயா தம்பி?

ஊமைத்துரை: என்ன செய்தி அண்ணா? ஏதேனும் புதிய செய்தியா?

வீரபாண்டிய கட்டபொம்மன்: பெரிதாக ஒன்றும் இல்லை. பரங்கியர்கள் வழக்கம்போல பணம் கேட்டு... (ஏளனமாகச் சிரித்தல்) அதுதான் வரிப்பணம் கேட்டு வந்தனர்.

ஊமைத்துரை: யார் அவ்வளவு தைரியமாக வந்தது அண்ணா?

வீரபாண்டிய கட்டபொம்மன்: ஆங்கிலத் தூதன் ஆலன் துரை வந்தான். ஆற்காட்டு நவாப் என்றான், அதிகாரம் என்றான், வரிப்பணம் கேட்டான், அதற்கு வட்டியும் கேட்டான்.... (கம்பீரமாகச் சிரித்தல்) என்ன துணிச்சல் பார்த்தாயா?


ஊமைத்துரை: ஆலன் துரை இங்கு வந்தானா? (ஆவேசத்துடன்) அமைச்சரே என்ன நடந்தது என்று விரிவாகக் கூறுங்களேன்...

அமைச்சர்: ஆமாம் தம்பி. ஆலன் துரை வந்தான். ஆற்காட்டு நவாப்புக்குப் பணம் கொடுத்திருந்தார்களாம். பதிலுக்கு, நவாப் தம் ஆட்சிக்கு உட்பட்ட பாளையக்காரர்களிடம் வரி வசூலிக்கும் உரிமையை ஆங்கிலேயருக்கு அளித்துள்ளாராம்... அந்த உரிமையில்தான் நம்மிடம் பணம் கேட்டு ஆள் அனுப்பினர் ஆங்கிலேயர்கள்.

ஊமைத்துரை: தாங்கள் என்ன கூறி அனுப்பினீர்கள் அண்ணா?



ஆற்காட்டு நவாப்பையே ஏற்றுக் கொள்ளாதவன் இந்தக் கட்டபொம்மன். நவாப்பை விலைக்கு வாங்கிய ஆங்கிலேயனுக்கா அடிபணிவான்? அரிமா விளையாடும் மண் இந்தப் பாஞ்சாலம்பதி. இங்கே ஆங்கில நரி விளையாட முடியாது. வரியாவது... வட்டியாவது... வந்த வழியே திரும்பிச் செல்லச் சொல்... என்றுகூறி அனுப்பினேன். நான் செய்தது சரிதானே தம்பி...?



மிகச் சரியாகச் சொல்லி அனுப்பிவிட்டீர்கள் அண்ணா. பொருளை விற்க வந்தவனுக்குப் புவியை ஆளும் ஆசை வந்துவிட்டது பார்த்தீர்களா? வேங்கையின் குகைக்கே வரி கேட்டு வந்தானா? நம் மண்ணின் வீரம் அறியாதவன் போலும்...

# தொகுதி 9

## கவரும் விளம்பரங்கள்

### பாடம் 1 கவர்ச்சியான விளம்பரம்

குழுவில் கலந்துரையாடுக.




1.2.1 • விவரங்கள் அறிய கேள்விகள் கேட்பர்.



## இடுபணி 1

**கொடுக்கப்பட்ட வினாச் சொற்களைப் பயன்படுத்தி விவரங்கள் அறிய கேள்விகள் கேட்டிடுக.**

**வினாச் சொற்கள்**

- ஏன்
- எதற்கு
- எப்படி
- எங்கு
- எப்பொழுது
- என்ன
- யார்


| | |
|---|---|
| விளம்பரம் செய்யப்படுவது | இலாபம் அடைவது |
| விளம்பரத்தின் பயன் | விளம்பரத்தில் நடிப்பது |
| விளம்பரத்தைத் தயாரிப்பது | தகவல்கள் வழங்குவது |
| விளம்பரத்தைக் காண்பது | பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி |
| விளம்பர ஒலி / ஒளிபரப்பு | பாதிக்கப்படுவது |


## இடுபணி 2


**பொருத்தமான வினாச் சொற்களைப் பயன்படுத்தி விவரங்களை அறிய கேள்விகளைக் கேட்டிடுக.**




**எடுத்துக்காட்டு :**






### இடுபணி 3

**திறன்பேசி பற்றிய கூடுதல் விவரங்கள் அறிய கேள்விகள் கேட்டிடுக.**

# பாடம் 2 புத்தகக் கண்காட்சி

**தக்க தொனியுடன் வாசித்திடுக.**




**அறிந்துகொள்க**

**விளம்பர வகைகள்**

- அச்சு விளம்பரம்
- மின்னியல் விளம்பரம்
- தொலைக்காட்சி விளம்பரம்
- வானொலி விளம்பரம்
- இணைய விளம்பரம்
- பதாகை விளம்பரம்

**இடுபணி 1**

**வினாக்களுக்கு விடையளித்திடுக.**

1. விளம்பரம் எதைப் பற்றியது?
2. யார் இதில் கலந்து கொள்ளலாம்?
3. இந்நிகழ்ச்சி எங்கு நடைபெறவுள்ளது?
4. இந்நிகழ்ச்சி எப்பொழுது நடைபெறவுள்ளது?
5. மாணவர்கள் புத்தகக் கண்காட்சிக்கு ஏன் செல்ல வேண்டும்?

2.1.2
- விளம்பரத்தைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர்.

## பாடம் 3 விளம்பரங்களும் விளைவுகளும்

**குழுவில் கலந்துரையாடுக.**

**விளம்பரத்தின் நோக்கம்**

- பொருள்கள் கிடைக்குமிடத்தை அறிவதற்கு
- எளிய முறையில் பொருள்களை விற்பனை செய்வதற்கு
- வியாபாரத்துறையை முன்னேற்றுவதற்கு
- மக்களை எளிய முறையில் கவர்ந்திழுப்பதற்கு
- வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு

### இடுபணி 1

**குறிவரைவில் காட்டிய கருத்துகளை விவரித்து எழுதுக.**

### இடுபணி 2

**‘விளம்பரம்’ எனும் தலைப்பில் 140 சொற்களில் ஒரு கருத்து விளக்கக் கட்டுரை எழுதுக. கீழ்க்காணும் குறிப்புகளைத் துணையாகக் கொள்ளவும்.**

**தொடக்கம்**
- விளம்பரம் என்றால் என்ன?
- யார் விளம்பரங்களைக் கொடுப்பவர்?

**கருத்து**
- விளம்பரம் செய்வதன் நோக்கம்
- விளம்பரத்தினால் உற்பத்தியாளர், வணிகர் அடையும் நன்மை
- பயனீட்டாளர்களுக்குக் கிடைக்கும் பயன்
- விளம்பரத்தினால் பயனீட்டாளர்களுக்கு ஏற்படும் பாதிப்புகள்

**முடிவு**
- அறிவார்ந்த முறையில் அணுகுதல்
- பரிந்துரை / வேண்டுகோள்

**நன்மைகள்**

1) தகவல்களை எளிதில் பெறுதல்
2) உற்பத்திப் பெருக்கம்
3) வேலை வாய்ப்பு

**தீமைகள்**

1) எளிதில் வசப்படுதல்
2) பொருளின் தரம் உறுதிப்படுத்த இயலாது
3) பண விரயம்

3.4.5

- 140 சொற்களில் கருத்து விளக்கக் கட்டுரை எழுதுவர்.

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## இரட்டைக்கிளவிகளின் பொருள் அறிக.

கோலாலங்காட் மாவட்டத்தில் திருக்குறள் மனனப் போட்டி ஏற்பாடு செய்யப்பட்டது. ஜென்ஜாரோம் தேசிய இடைநிலைப்பள்ளியைப் பிரதிநிதித்து அப்போட்டியில் பங்கேற்க பல திறமைகள் இருந்தும் **இலைமறை காய் போல** இருக்கின்ற மாணவர்களை ஆசிரியர்கள் அடையாளம் கண்டனர். அவர்களுக்கு ஒரு மாத காலத்திற்கு முன்பாகவே பயிற்சிகள் வழங்கத் தொடங்கினர். தெரிவு செய்யப்பட்ட இரட்டையர்கள் திருக்குறள்களைக் **கடகட**வென ஒப்புவிப்பதற்கு அத்திருக்குறள்களை மனத்தில் **பசுமரத்தாணி போல** ஆழமாகப் பதித்துக் கொண்டனர். அவர்களுக்கு **மணியும் ஒலியும் போல** வாழ்ந்து கொண்டிருக்கின்ற அவர்களது பெற்றோர்கள் ஆசி வழங்கினர். போட்டியன்று மிகச் சிறப்பாகத் திருக்குறள்களை ஒப்புவித்து முதல்நிலை, இரண்டாம்நிலை பரிசைத்தட்டிச் சென்றனர். அவர்களுக்குப் பயிற்சி அளித்த ஆசிரியர்கள் அவர்களை வெகுவாகப் பாராட்டினர். மேலும், அவர்களுக்கு மாநிலத்தைப் பிரதிநிதித்துப் போட்டியிட வாய்ப்பு வழங்கப்பட்டது. அந்த இரட்டைச் சகோதரர்கள் கடுமையாகப் பயிற்சியை மேற்கொண்டனர். ஒரு நாள் பள்ளியிலிருந்து வீடு திரும்புவதற்குப் பேருந்து நிலையத்தில் காத்துக் கொண்டிருந்தனர். அப்பொழுது கனத்த மழை பொழிந்தது; இடி இடித்தது; மின்னல் மின்னியது; கட்டடங்கள் **கிடுகிடு**வென ஆட்டங்கண்டன; மரங்கள் பலத்த காற்றினால் முறிந்து விழுந்தன. அந்த இரு சகோதரர்களும் மழையில் நனைந்து விட்டனர். ஆடைகள் ஈரமாகி **நசநச**வென இருந்தன. குளிரில் **வெடவெட**வென நடுங்கிக் கொண்டிருந்தனர். அப்போது அவ்வழியே மகிழுந்தில் வந்த அவர்களுடைய ஆசிரியர் ஒருவர் அவர்களை இல்லத்திற்கு அழைத்துச் சென்றார். நிலவரத்தை அவர்களுடைய பெற்றோருக்கு விளக்கினார். மாணவர்கள் ஆசிரியருக்கு நன்றி கூறினர். மாநில அளவிலான திருக்குறள் மனனப் போட்டியில் அந்த இரட்டையர்கள் வெற்றி பெற்றனர் என்ற செய்தி அனைவரையும் பெருமிதம் அடையச் செய்தது.

### இரட்டைக்கிளவியும் பொருளும்

| | |
|---|---|
| **கடகட** | - விரைவாகச் செய்தல் |
| **கிடுகிடு** | - அதிர்வு / நடுக்கம், விரைவு (விலை) |
| **வெடவெட** | - குளிர் அல்லது பயத்தினால் நடுங்குதல் |
| **நசநச** | - ஈரத்தன்மை கொண்டிருத்தல் |

### உவமைத்தொடர்களும் பொருளும்

| | |
|---|---|
| **மணியும் ஒலியும் போல** | - இணைந்தே இருப்பது / விட்டுப் பிரியாமை |
| **இலைமறை காய் போல** | - ஆற்றல் வெளிப்படாமல் மறைந்திருத்தல் |
| **பசுமரத்தாணி போல** | - மனத்தில் ஆழமாகப் பதிதல் |

4.1.1
4.5.1

- ஒன்றாம் படிவத்திற்கான இரட்டைக்கிளவிகளைச் சூழலுக்கேற்பச் சரியாகப் பயன்படுத்துவர்.
- ஒன்றாம் படிவத்திற்கான உவமைத்தொடர்களையும் அவற்றின் பொருளையும் சரியாகப் பயன்படுத்துவர்.

## இடுபணி 1

**கொடுக்கப்பட்ட சொற்களைக் கொண்டு இரட்டைக்கிளவிகளுக்குச் சரியான சூழலை உருவாக்கி எழுதுக.**

**கடகட**
ஆசிரியர் - போதித்த செய்யுள் - மனனம் - சரளமாகக் கூறுதல்.

**கிடுகிடு**
பண்டிகைக் காலம் - அத்தியாவசியப் பொருள்கள் - மிக விரைவாக - விலை உயர்வு.

**வெடவெட**
இரவு நேரம் - இருட்டுப்பாதை - தனியாகச் செல்லுதல் - பயம் - உடல் நடுங்கியது.

**நசநச**
சமையலறை - அம்மா - பாத்திரங்கள் கழுவி - தரையெங்கும் நீர் ஒழுகுதல் - ஈரமானது.

## இடுபணி 2

**பொருத்தமான இரட்டைக்கிளவிகளை எழுதுக.**

1. என் தம்பி பன்னிரண்டாம் வாய்பாட்டை மனனம் செய்து ________ வென ஒப்புவித்தான்.
2. நாட்டில் பொருளாதார மந்தநிலையால் சந்தையில் பொருள்களின் விலைகள் ________ வென உயர்வு கண்டன.
3. மழையில் நனைந்து கொண்டே வீட்டிற்குள் நுழைந்த அப்பாவின் உடல் குளிரால் ________ வென நடுங்கியது.
4. குடிசையினுள்ளே மழைநீர் சொட்டுவதால் ________ வென இருந்தது.
5. வகுப்பறையில் ஆசிரியர் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் நிர்மலா ________ வென பதில் கூறி ஆசிரியரின் பாராட்டைப் பெற்றாள்.
6. உலகச் சந்தையில் கச்சா எண்ணெயின் தேவை அதிகரித்தபோது அதன் விலை ________ வென உயர்வு கண்டது.
7. பயங்கரமான பேய்ப் படத்தைப் பார்த்துக் கொண்டிருந்த திலகா, எங்கோ ஒரு மூலையில் நாய் குரைக்கும் சத்தத்தைக் கேட்டவுடன் பயத்தால் அவள் உடல் ________ வென ஆடத் தொடங்கியது.
8. கடுமையான வெயில் காலத்தில் நமக்கு அதிகமாக வியர்ப்பதால், உடல் நனைந்து ________ வென்றிருக்கும்.



இடுபணி 3

**உவமைத்தொடர்களின் பொருளை அறிக.**

சூழல் 1

மலரும் மணிமேகலையும் சகோதரிகள். சிறு வயதிலிருந்தே அவர்களின் பெற்றோர் உடன்பிறப்புகள் எப்பொழுதும் எந்தப் பிணக்கும் இல்லாமல் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்று அறிவுரைகளைக் கூறி வளர்த்தனர். அவ்விருவரும் அதற்கேற்ப அன்புடனும் ஒற்றுமையுடனும் வாழ்ந்து வந்தனர். பெரியவர்களானதும் அவர்கள் இருவருக்கும் பெற்றோர் திருமணம் செய்து வைத்தனர். திருமணமாகி இருவரும் வெவ்வேறு இடங்களுக்குச் செல்ல வேண்டியதாயிற்று. இதுவரை **மணியும் ஒலியும் போல** சேர்ந்திருந்த இருவரும் பிரிய வேண்டிய நிலை ஏற்பட்டதால் கண்கலங்கி நின்றனர்.

சூழல் 2

ஒரு முறை வகுப்பறையில் ஆசிரியர் மகாகவி பாரதியின் ‘நல்லதோர் வீணை செய்தே’ என்ற கவிதையைக் கற்றுக் கொடுத்தபோது சிலம்பரசனைப் பாடலாகப் பாடச் சொன்னார். தன்னுடைய இனிமையான குரலில் அழகாக அவன் பாடியபோது வகுப்பே அமைதியானது. இதுவரை **இலைமறை காய் போல** இருந்த அவனது திறமை அனைவருக்கும் தெரிய வந்தது. அவனது திறமையைப் பாராட்டிய ஆசிரியர் அத்துறையில் அவன் சிறந்து விளங்குவதற்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்கினார். சில ஆண்டுகளுக்குப் பிறகு தொலைக்காட்சி நிறுவனம் ஒன்று தேசிய அளவில் நடத்திய பாடும் திறன் போட்டியில் வெற்றி பெற்றான். இன்று நாட்டில் முன்னணிப் பாடகர்களுள் ஒருவராய்த் திகழ்கின்றான்.

சூழல் 3

கடந்த வாரம் கவிப்பேரரசு வைரமுத்து மலேசியாவிற்கு வந்திருந்தார். அவரின் கவிதைநூல் வெளியீட்டு விழா பினாங்கில் நடைபெற்றது. குமுதன் தன் பெற்றோரோடு அவ்விழாவில் கலந்துகொண்டான். மேடையில் அவர் கையாலேயே அந்நூலை ஐம்பது ரிங்கிட் கொடுத்துப் பெற்றான். அவரோடு ஒளிப்படம் எடுத்துக் கொண்டான். வாங்கிய நூலில் அவரது கையொப்பத்தைக் கேட்டுப் பெற்றான். மறக்கவியலாத அந்நிகழ்ச்சி அவன் மனத்தில் **பசுமரத்தாணி போல்** பதிந்துவிட்டது.

இடுபணி 4

**சூழலுக்கு ஏற்ற உவமைத்தொடரை எழுதுக.**

சூழல் 1

பாலசிங்கம் மிகவும் திறமையானவன். அவனுக்கு ஆடல், பாடல், நடிப்பு என்று பல திறமைகள் இருந்தும் எந்தவொரு வாய்ப்பும் அமையவில்லை. அவன் பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருக்கும்போது அங்குச் செயல்பட்டுக் கொண்டிருந்த தமிழ்ப் பேரவை கலை இரவு என்ற நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தது. அந்நிகழ்ச்சிக்குக் கலைஞர் தேர்வு நடைபெற்ற போது பாலசிங்கம் தன் முழுத் திறமைகளையும் காட்டினான். அப்பொழுதுதான் பல்கலைக்கழக மாணவர்களுக்கு அவனது திறமை தெரிந்தது.

சூழல் 2

அமுதன் குறும்புக்காரன். அடிக்கடி ஏதாவது ஒன்றைச் செய்து வம்பில் மாட்டிக் கொள்வான். அதனால் அவன் பெற்றோர் மிகவும் கவலைப்பட்டனர். அவனை நல்வழிப்படுத்துவதற்கு அறிவுரைகளைக் கூறினர். அதனால், அவன் கொஞ்சம் கொஞ்சமாகத் தன்னைத் திருத்திக் கொண்டான். இறுதியில் எந்த வம்புக்கும் செல்லாதவனாய்ச் சிறந்து விளங்கினான். வளர்ந்த பிறகும் அவன் பெற்றோர் கூறிய அறிவுரைகள் மனத்தை விட்டு நீங்காததால் ஒழுக்கமானவனாய் வாழ்கிறான்.

சூழல் 3

சண்முகனும் மாறனும் நெருங்கிய நண்பர்கள். ஆரம்பப் பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை ஒன்றாய்ப் படித்தவர்கள். இன்று இருவரும் ஆசிரியர்களாகப் பணியாற்றுகின்றனர். சிரம்பான் வட்டாரத்தில் வெவ்வேறு பள்ளிகளில் பணியாற்றினாலும் வார இறுதியில் இருவரும் தவறாமல் சந்தித்துக்கொண்டு பல்வேறு அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வார்கள். அவர்களது ஆழமான நட்பு யாராலும் பிரிக்க முடியாதது. இன்றுவரை அவர்கள் ஒன்றாகவே பல்வேறு சமூக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வளப்படுத்துதல்

1. உவமைத்தொடர்களைப் பொருள் விளங்க வாக்கியங்களில் அமைத்திடுக.

2. இரட்டைக்கிளவிகளைப் பொருள் விளங்க வாக்கியங்களில் அமைத்திடுக.

## குறைநீக்கல்

**அ) சரியான உவமைத்தொடரை எழுதிடுக.**

1. பெரியவர்கள் மணமக்கள் என்றும் பிரியாமல் பல்லாண்டு சீரும் சிறப்புமாய் வாழ வாழ்த்தினர்.

2. இளம் வயதில் நாம் கற்றுக் கொள்கின்ற நல்ல பழக்க வழக்கங்கள் நம் மனதில் ஆழப் பதிந்துவிடுவதால் இறுதிவரை நம்மை நல்வழிப்படுத்துகின்றன.

3. முத்து ஓவியம் வரைவதில் கெட்டிக்காரன். ஆனால், அத்திறமையை அவன் யாரிடமும் காட்டிக் கொள்வதில்லை. அதனால் அவன் சிறந்த ஓவியன் என்பது யாருக்கும் தெரியாமல் போனது.

4. இறைச் சிந்தனையை நம் மனத்தில் ஆழமாகப் பதித்துக் கொண்டால் நம்முடைய எண்ணம், சொல், செயல் அனைத்தும் நல்லனவாகவே இருக்கும்.

5. பெற்றோர்கள் தங்களின் பிள்ளைகளுக்கு எப்பொழுதும் ஒற்றுமைப் பண்பை வலியுறுத்தி அவர்கள் வாழ வழிவகுக்க வேண்டும்.

**ஆ) உவமைத்தொடரைப் பொருத்தமான பொருளோடு இணைத்திடுக.**

| | | |
|---|---|---|
| மணியும் ஒலியும் போல | இலைமறை காய் போல | பசுமரத்தாணி போல |
| மனத்தில் ஆழமாகப் பதிதல் | இணைந்தே இருப்பது / விட்டுப் பிரியாமை | ஆற்றல் வெளிப்படாமல் மறைந்திருத்தல். |

**இ) பொருத்தமான உவமைத்தொடரை எழுதுக.**

கம்பர் சிறந்த தமிழ்ப் புலவர். அவருக்குத் திருவெண்ணெய் நல்லூரில் வாழ்ந்த சடையப்பரின் நட்பு கிடைத்தது. அந்நட்பு ________ போற்றுதற்குரியதாக விளங்கியது. சடையப்பர் ________ இருந்த கம்பரை இலக்கிய உலகத்திற்கு அறிமுகப்படுத்தினார். கம்பர் எழுதிய 'ஏர் எழுபது' என்ற நூலைத் தன் வீட்டிலேயே அரங்கேற்றம் செய்வதற்கு ஏற்பாடுகளைச் செய்தார். அதன் பிறகு கம்பரின் வளர்ச்சிக்குச் சடையப்பரும் அவர் மனைவியும் பெரும் பங்காற்றினர். அவர்கள் செய்த உதவிகள் யாவும் கம்பரின் மனத்தில் ________ நிலைத்து நின்றது. அதனால்தான் கம்பர் தான் எழுதிய இராமாயணத்தில் சடையப்ப வள்ளலைப் புகழ்ந்து பாடியுள்ளார்.

| பசுமரத்தாணி போல | இலைமறை காய் போல | மணியும் ஒலியும் போல |
|---|---|---|

**ஈ) பின்வரும் தொடர்ப் படங்களுக்கு ஏற்ற உவமைத்தொடரை எழுதுக.**

i.




________

ii.



________

iii.




________

# தொகுதி 10

# சுற்றுச்சூழலைக் காப்போம்

## பாடம் 1 வளமான வாழ்வு

குழுவில் கலந்துரையாடுக.




1.4.1 • படித்தவற்றை விவரித்துக் கூறுவர்.




இடுபணி 1

**கொடுக்கப்பட்ட விவரங்களைத் துணையாகக் கொண்டு விவரித்துக் கூறுக.**

## இடுபணி 2

**காற்றுத் தூய்மைக்கேடு தொடர்பான குறிப்புகளை வாசித்துக் கருத்துகளை விவரித்துக் கூறுக.**



தொழிற்சாலையிலிருந்து வெளியாகும் புகை




வாகனங்களிலிருந்து வெளியாகும் புகை



திறந்தவெளியில் எரித்தல்



காடுகளை எரித்தல்

## இடுபணி 3

**சுற்றுப்புறத் தூய்மைக்கேட்டைப் பற்றி படித்தவற்றைக் குழுவில் கலந்துரையாடி விவரித்துக் கூறுக.**

## வளப்படுத்துதல்

**கீழ்க்காணும் ஏதேனும் ஒரு தலைப்பையொட்டி விவரித்துக் கூறுக.**

- பொதுப்போக்குவரத்தின் அவசியம்
- வசிப்பிடத்தில் பசுமைத் திட்டம்
- பள்ளியில் ஒரு பூங்கா
- நம் பூமியைக் காப்போம்

## பாடம் 2 ஆறுகளை நேசிப்போம்



**வாசித்து அறிக.**

நம் நாட்டில் ஐந்து ஆறுகள் மிகவும் **மாசடைந்துள்ளதாக** மலேசியச் சுற்றுச்சூழல் கழகம் கண்டறிந்துள்ளது. அவை பினாங்கு ஆறு, ஜூரு ஆறு (பினாங்கு), கிள்ளான் ஆறு, பெஞ்சாலா ஆறு (கோலாலம்பூர்) மற்றும் செகெட் ஆறு (ஜோகூர்பாரு) ஆகியவையாகும். இவை யாவும் மனிதரின் செயல்களால் **விளைகின்றன** என்பதை யாரும் மறுக்க இயலாது. பொறுப்பற்ற தொழிற்சாலைகளினால் ஆறு மாசடைவதை நாம் காணலாம். நம் நாட்டில் பல தொழிற்சாலைகள் ஆற்றோரங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இத்தொழிற்சாலைகள் **கழிவுப் பொருள்களை** நேரடியாக ஆற்றில் கொட்டுகின்றன. குறிப்பாக **மூலப் பொருள்** சுத்திகரிப்புத் தொழிற்சாலைகள், இரசாயனத் தொழிற்சாலைகள் போன்றவை கழிவுப் பொருள்களை அப்புறப்படுத்த ஆற்றைப் பயன்படுத்திக் கொள்கின்றன.

நம் நாட்டில் **பரவலாக** நடைபெறும் வெட்டுமரத் தொழிலினாலும் ஆறுகள் மாசடைகின்றன. வெட்டுமரத் தொழிலினால் ஏற்படும் மண்சரிவு மழைக் காலங்களில் மிகவும் மோசமடைகின்றது. ஆற்றில் போய்ச் சேரும் மண்ணால் ஆற்றின் ஆழம் குறைகிறது. அதனால் திடீர் வெள்ளம் ஏற்படுகின்றது. மேலும், கட்டுமானத் தொழிலாலும் ஆறுகள் மாசடைந்துள்ளதை **மறுக்க** இயலாது. வீடமைப்புத் திட்டங்களால் ஆறுகள் மாசடைவதை நாம் பரவலாகக் காணலாம். இத்திட்டங்களினால் மண்சரிவு ஏற்பட்டு ஆறுகள் மாசடைகின்றன. எடுத்துக்காட்டிற்குப் பிரேசர் மலையில் கோல்ப் திடல் திட்டத்தினால் அதன் அருகே உள்ள 'ஜூரியாவ்' நீர்வீழ்ச்சி மிகவும் மோசமாக மாசடைந்ததை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.



ஆற்றோரங்களில் வாழும் மக்கள் தங்கள் அன்றாடக் கழிவுப் பொருள்களை அப்புறப்படுத்துவதற்கு ஆறுகளையே பயன்படுத்துகின்றனர். இதனால் ஆற்றின் நீரோட்டம் **தடைப்பட்டு** ஆறுகள் மாசடைகின்றன. குறிப்பாகக் கிள்ளான், பெஞ்சாலா, பகாங் போன்ற ஆற்றோரங்களில் குடியிருப்பவர்கள் இத்தகைய **செயலில்** ஈடுபடுகின்றனர். இதனால், தினமும் ஏராளமான குப்பைகளை ஆறுகள் **சுமக்க** நேரிடுகின்றன. ஆகவே, சுற்றுப்புறத்தைக் காப்பதில் நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து **பங்காற்ற** வேண்டும். மேலும், நமது அரசாங்கமும் **இச்சிக்கலைக்** களைவதில் தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. 'நமது ஆற்றை நேசிப்போம்' என்ற அரசாங்கத்தின் திட்டத்தைச் செயல்படுத்தினால் ஆறுகளின் தூய்மையைப் பேணிக் காக்க இயலும்.

2.3.2

- சுற்றுச் சூழல் தொடர்பான உரைநடைப் பகுதியை வாசித்துக் கருத்துணர்க் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.

## இடுபணி 1

**அகராதியின் துணைகொண்டு வண்ணமிடப்பட்ட சொற்களுக்குப் பொருள் கூறுக.**

## இடுபணி 2

**வினாக்களுக்கு விடை கூறுக.**

1. நம் நாட்டில் மிகவும் மோசமாக மாசடைந்துள்ள ஐந்து ஆறுகளைக் கூறுக.
2. ஆறுகள் மாசடைவதற்கு மூலகாரணம் என்ன?
3. ஆறுகள் மாசடையச் செய்யும் மக்களின் அலட்சியப் போக்கினை விளக்குக.
4. வெட்டுமரத் தொழிலால் ஆறுகள் மாசடையாமல் இருக்க என்ன செய்யலாம்?

## இடுபணி 3

**ஆறுகள் மாசடைவதற்கான காரணங்களையும் அதனால் ஏற்படும் விளைவுகளையும் பொருத்தமான சிந்தனைக் குறிவரைவில் படைத்துக் காட்டுக.**

## இடுபணி 4

**ஆறுகளின் தூய்மையைப் பேணுவதற்கான வழிமுறைகளைப் படங்களுக்கு ஏற்ப எழுதுக.**



______________________

______________________



______________________

______________________

ஆறுகளின் தூய்மையைப் பேணும் வழிமுறைகள்



______________________

______________________




______________________

______________________

# பாடம் 3 அழகை இரசித்தேன்

## வாசித்து எழுதுக.

ஆஹா! எத்துணை அழகு! வானில் இருந்து பார்க்கும்பொழுது பூமி இவ்வளவு அழகாகத் தெரிகின்றதே. என்னுடன் சேர்ந்து பல பறவைகளும் பறக்கின்றனவே.

என்னால் இவ்வளவு உயரமாகப் பறக்க முடியுமென்று நினைத்துப் பார்க்கவேயில்லை. உலகின் அழகையும் இயற்கையின் அழகையும் இரசிக்க எவ்வளவு இன்பமாக இருக்கிறது. இரண்டு அழகான சிறகுகள் எனக்கு மட்டுமே படைக்கப்பட்டவை போலும். எனது கால்களில் இரண்டு சக்கரங்கள் உள்ளனவே! ஆமாம்! அவற்றைக் கொண்டு நான் தரையில் இறங்கும்போது ஒரு விமானம் போல்தான் காட்சியளிப்பேன்.

இவ்வளவு உயரத்திலிருந்தும் மனிதர்களை என்னால் நன்றாகப் பார்க்க முடிகிறது. இதற்குக் காரணம், எல்லாப் பொருளையும் பெரிதாகக் காட்டும் விசித்திரக் கண்கள் என்னுடையவை. அங்கே பலர் மரங்களையும் செடிகளையும் நடுகின்றனர். அவர்களுக்கு நிச்சயம் நான் நன்றி கூறுவேன். மரங்களும் செடிகளும் இயற்கைக்கு மிகமிக அவசியம் தானே. அடடே! அங்கே சில சிறுவர்கள் ஆற்றில் மகிழ்ச்சியாகக் குளிக்கின்றனரே! அப்படியென்றால் அந்த ஆற்று நீர் தூய்மையானதுதான். ஆற்றை நேசிக்கும் அற்புத மனிதர்களுக்கும் நான் நிச்சயம் நன்றி கூற வேண்டும்.

தூரத்தில் ஓர் ஓரத்தில் இரண்டு பெண்கள் குப்பைகளை நேர்த்தியாகக் கட்டிக் குப்பைத் தொட்டியில் போடுகிறார்களே! அவர்களுக்கும் நான் இப்போதே சென்று நன்றி கூற வேண்டும். இன்னும் சற்று நேரத்தில் நான் தரை இறங்கப் போகிறேன். பலரும் என்னை வியப்பாகப் பார்ப்பார்கள். ஏனெனில், நான் ஓர் அதிசய வெண்புறா ஆவேன்.



3.4.6

• 140 சொற்களில் கற்பனைக் கட்டுரை எழுதுவர்.

## இடுபணி 1

**கொடுக்கப்பட்ட கருத்துகளைக் கொண்டு 140 சொற்களில் ஒரு கற்பனைக் கட்டுரை எழுதுக.**

**சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் அபூர்வக் கருவிகள்**

முன்னுரை:
- சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது மனிதர்களின் கடமையாகும்
- அபூர்வக் கருவிகளினால் சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படும்

கருத்து:

1 செயற்கை மரங்கள்
- சூரிய சக்தியால் செயல்படுதல்
- கரிவளியை உயிர்வளியாய் மாற்றுதல்
- நாட்டில் எல்லா இடங்களிலும் வைத்தல்

கருத்து:

2 உணவு மாத்திரைகள்
- உணவுப் பற்றாக்குறை ஏற்படும் போது சாப்பிடுதல்
- பூச்சிக் கொல்லி, இரசாயன உரம் பயன்படுத்தத் தேவையில்லை
- விவசாயம் குறைந்து வருகிறது

கருத்து:

3 **நீற்றுலை**
- எரிதொட்டியில் மிகுந்த சூட்டில் குப்பைகளை எரித்தல்.
- பொது இடங்களிலும் வைக்கலாம்.
- பாதுகாப்பாகக் கையாளலாம்
- புகையின்மை

முடிவுரை:

எனவே, இவை போன்ற அபூர்வக் கருவிகள் நிச்சயமாகச் சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் என்பது திண்ணம்

## இடுபணி 2

**நீ ஓர் அறிவியலாளரானால் அத்துறையில் புரியவிருக்கும் சாதனைகளை விளக்கி 140 சொற்களில் ஒரு கற்பனைக் கட்டுரை எழுதுக.**

## இடுபணி 3

**கொடுக்கப்பட்ட படங்களையும் குறிப்புகளையும் கொண்டு 140 சொற்களில் கற்பனைக் கட்டுரை எழுதுக.**




1. எனக்குப் பறக்கும் மிதிவண்டி கிடைத்தால்.

பறக்கும் மிதிவண்டி - உலகம் சுற்றுதல்- நினைத்த இடங்களுக்கு விரைவாகச் செல்லலாம் - பிறருக்கு நன்மை செய்தல்- மனம் மகிழ்ச்சி அடைதல்

2. நான் ஒரு செல்வந்தரானால்.

செல்வந்தர் - வசதியான வாழ்க்கை - சொத்து வாங்குதல் - ஏழைகளுக்கு உதவுதல் - கல்வி வளர்ச்சி - தொழில்நுட்பக் கல்லூரி - வேலை வாய்ப்பு



## பாடம் 4 இலக்கணம்

### வலிமிகும் இடங்களை அறிக.

கோலாலம்பூர் சுற்றுலாவிற்குச் சென்றிருந்த சுசிலாவும் சாந்தியும் இரட்டைக் கோபுரத்திற்கு அருகில் நின்று உரையாடுகின்றனர்.

சுசிலா: சாந்தி, **இத்துணைப் பெரிய** கட்டடத்தைப் பார்ப்பதற்கு எவ்வளவு வியப்பாக இருக்கிறது. இதைக் கட்டுவதென்பது சாதாரண வேலையா? **அத்துணைச் சிரமமான** பணியைச் சிறப்பாகச் செய்து முடித்த தொழிலாளர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

சாந்தி: அப்பணி **எத்துணைச் சிரமமானது** என்று யாருக்குத் தெரியும்? எல்லாரும் சிற்பத்தைக் கண்டு வியக்கிறார்கள். சிற்பியை யாரும் நினைப்பதில்லையே! அது போலத்தான் இதுவும்.



சுசிலா: ஆமாம் சாந்தி. நீ சொல்வதும் உண்மைதான். **அரைப் பகுதி** வேலை முடியும் தருவாயில் இக்கட்டடத்தில் ஒன்று சற்றுச் சரிவாகக் காணப்பட்டதாம். ஆனால், நமது வல்லுனர்களின் முயற்சியால் அது சரி செய்யப்பட்டு மீதமிருந்த **பாதிப் பகுதியும்** எச்சிக்கலும் இல்லாமல் முழுமையடைந்ததாம்.

சாந்தி: அப்படியென்றால் நமக்கு **இனிப் பயமில்லை** என்று கூறு. உலக அளவில் **தனித் தன்மையோடு** நிற்கும் கட்டடங்களுள் இதுவும் ஒன்று என்றுதான் கூற வேண்டும். ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கான சுற்றுப் பயணிகளை இது கவர்ந்திழுக்கிறது என்பது உண்மையே!

சுசிலா: நம் நாட்டிலுள்ள **மற்றக் கட்டடங்களைக்** காட்டிலும் இக்கட்டடம் பல சிறப்புத் தன்மைகளைக் கொண்டதாக விளங்குகின்றது. இதனால் மலேசியர்களாகிய நாம் பெருமைப்பட வேண்டும்.

**உரையாடலில் வண்ணமிடப்பட்ட சொற்றொடர்களைக் கவனித்திடுக.**

- இத்துணைப் பெரிய
- அத்துணைச் சிரமமான
- மற்றக் கட்டடங்களை
- அரைப் பகுதி
- பாதிப் பகுதி
- இனிப் பயமில்லை
- தனித் தன்மையோடு

5.4.1

- அத்துணை, இத்துணை, எத்துணை, அரை, பாதி, இனி, தனி, மற்ற என்பனவற்றுக்குப் பின் வலிமிகும் என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

## அறிந்துகொள்க

1. அத்துணை, இத்துணை, எத்துணை என்னும் சொற்களின் பின் வலிமிகும்.

**எடுத்துக்காட்டு**

இத்துணை + சிறிய= இத்துணைச் சிறிய
அத்துணை+ பெரிய= அத்துணைப் பெரிய
எத்துணை + கொடுமை= எத்துணைக் கொடுமை

2. இனி, தனி, மற்ற என்னும் சொற்களுக்குப் பின் வலிமிகும்.


**எடுத்துக்காட்டு**

இனி + கொடு= இனிக் கொடு
தனி + சொல்= தனிச் சொல்
மற்ற + தலைவர்= மற்றத் தலைவர்

3. அரை, பாதி என்னும் எண்ணுப் பெயர்களின் பின் வலிமிகும்.

**எடுத்துக்காட்டு**

பாதி + பணம்= பாதிப் பணம்
அரை + காசு= அரைக் காசு




## இடுபணி 1

**சொற்களை இணைத்து எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| 1. இத்துணை + துன்பம்= | | 5. தனி + குடும்பம்= | |
| 2. அத்துணை + சிறிய= | | 6. மற்ற + பெண்கள்= | |
| 3. எத்துணை + சீற்றம்= | | 7. பாதி + பழம்= | |
| 4. இனி + கவலையின்றி= | | 8. அரை + கம்பத்தில்= | |

## இடுபணி 2

**காலி இடங்களில் அடைப்புக் குறிக்குள் இருக்கும் சொற்களை இணைத்து எழுதுக.**

1. ______ (இத்துணை + சிரமமான) பணியை இதுவரை யாருமே நிறைவாகச் செய்ததில்லை.
2. ______ (அத்துணை + சுவையான) உணவு வகைகளை அந்த உணவகத்தில் தயாரித்து வழங்கினார்கள்.
3. ______ (எத்துணை + தயக்கமும்) இல்லாமல் அவன் அந்த இருட்டுப் பாதையில் தனியாக நடந்து வந்தான்.
4. ______ (இனி + தயக்கமில்லாமல்) அனைவரும் வீட்டிற்குள் வரலாம்.
5. மாணவர்கள் பாதுகாப்பாகப் பள்ளிக்கு வருவதற்கு ______ (தனி + பாதை) ஒன்று அமைக்கப்பட்டது.



## வளப்படுத்துதல்

அத்துணை, இத்துணை, எத்துணை, அரை, பாதி, இனி, தனி, மற்ற என்பனவற்றிற்குப் பின் வலிமிகும் எனும் விதிக்கேற்ப சொற்றொடர்களை உருவாக்கி வாக்கியங்களில் அமைத்திடுக.

## குறைநீக்கல்

சொற்றொடர்களை உருவாக்குக.

அ

| | | |
|---|---|---|
| செழிப்பான | அத்துணை, இத்துணை, எத்துணை | தரமான |
| குறைவான | | சிறப்பான |
| பெரிய | | கனிவான |
| தெளிவான | | சுவையான |
| சிறிய | | புதுமையான |

ஆ

| | | |
|---|---|---|
| பகுதி | அரை, பாதி | பங்கு |
| தட்டு | | பணம் |
| பெட்டி | | பழம் |
| சொத்து | | கிழங்கு |

இ

| | | |
|---|---|---|
| தன்மையோடு | இனி, தனி, மற்ற | பிள்ளைகள் |
| தடையில்லை | | துன்பமில்லை |
| புகழுடன் | | சுகத்தை |
| கவலையில்லை | | செல்வாக்கு |
| பெருமை | | கொண்டாட்டம் |

## வாசித்து மகிழ்க.

### அழுத மரங்களும் திகைத்த மன்னரும்!

அரசர் ஒருவர் தம்முடைய அரண்மனையைச் சுற்றியிருக்கும் விதவிதமான மரங்களை எல்லாம் பார்த்து நலம் விசாரித்தார். எந்த மரமும் மகிழ்ச்சியாக இருப்பதாகத் தெரியவில்லை. எல்லா மரங்களுக்கும் ஒவ்வொரு குறை காணப்பட்டது.

அரசர் முதலில் ஆலமரத்திடம் சென்றார். ஆலமரம், "மன்னா, நான் பெரிய மரமாகவும் அடர்த்தியாகவும் இருக்கிறேன். ஆனாலும் என்ன பயன்? என்னுடைய பழம் மிகவும் சிறியதாக இருக்கிறதே! என் கண்ணுக்கே தெரியவில்லை. என் அளவுக்கு என் பழங்கள் இல்லை என்று எனக்கு மிகவும் வெட்கமாக இருக்கிறது. இங்கு நிற்பதைவிட புயல் காற்றில் சாய்ந்துவிடலாம் என்றுகூட தோன்றுகிறது மன்னா!" என்றது.



அரசர் சற்றுக் குழப்பம் அடைந்தார். அடுத்தபடியாக ஓர் அத்தி மரத்திடம் சென்று நின்றார். அம்மரமும் தன் புலம்பலைக் கொட்ட ஆரம்பித்தது. "மன்னா! நான்கூட பெரிய மரம்தான். என் இலைகளும் அழகுதான். என் பழங்களும் அழகோ அழகு. ஆனால், எல்லாம் இருந்தும் என்ன பயன்? எல்லாம் சொத்தையாக உள்ளனவே! அத்திப் பழத்தைப் பிளந்து பார்த்தால் அத்தனையும் சொத்தை என என் காதுபட மனிதர்கள் பேசுவதைக் கேட்க வேதனையாக இருக்கிறது மன்னா! இதற்குப் பதில் என்னை வெட்டிச் சாய்த்துவிடுங்கள் மன்னா!" என்று மன்றாடியது.

அரசர் மேலும் கலங்கிப் போனார். அடுத்து வேப்ப மரத்திடம் சென்று விசாரித்தார். வேப்பமரம் வெடுக்கெனப் புலம்ப ஆரம்பித்தது.

"என்ன சொல்வேன் மன்னா! எவ்வளவோ மருத்துவ குணங்கள் என்னிடம் இருந்தாலும் என் பழத்தை யாரும் உண்பதில்லை. அருவருப்பாகப் பார்ப்பதுபோல் முகத்தைச் சுளித்துக் கொண்டல்லவா என்னைப் பார்க்கிறார்கள். வேதனை தாளவில்லை மன்னா!" என்றது.

அருகில் இருந்த பனை மரம் அதன் புலம்பலைக் கொட்டித் தீர்த்தது.

"மன்னா! இவ்வளவு உயரமாக வளர்ந்த என்னை மக்கள் பார்ப்பதோடு சரி. என்னிடம் நிழலுக்கு ஒதுங்காமல் போவது என் மனத்திற்கு வேதனையே மன்னா!" என்றது.

அனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்த முருங்கை மரம் "என் இலை, காய் எல்லாவற்றையும் மனிதர்கள் சாப்பிட்டு பலம் பெறுகின்றனர். ஆனால், என் உடம்பில் பலமே இல்லையே மன்னா! பலமான காற்றடித்தால் முறிந்து போய்விடுவேனோ என்று தினம் தினம் பயந்து சாகிறேன் மன்னா!" என்றது.

மன்னருக்கு அதிர்ச்சி மேல் அதிர்ச்சி. "ஏன் இப்படியெல்லாம் புலம்புகின்றன? மரங்கள் நம் பூமியின் வரங்கள் ஆயிற்றே! பூமியில் மழை பெய்வதற்கு மரங்கள்தானே காரணம். மனிதர்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வது மரங்கள்தானே!" எனத் தமக்குள் புலம்பினார்.

மன்னரின் புலம்பலைக் கேட்ட மகிழ மரம் கடகடவெனச் சிரித்தது. மகிழ மரம் மட்டும் மகிழ்ச்சியாகவும் மன நிறைவாகவும் இருப்பது மன்னருக்குச் சற்று ஆறுதலாக இருந்தது. "உன் மனநிறைவுக்கு என்ன காரணம்?" என்ற மன்னரின் கேள்விக்கு, "இந்த இடத்தில் வேறு மரத்தை நடாமல் என்னைத் தேர்ந்தெடுத்தமைக்கு நான் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன் மன்னா! இருப்பதைக் கொண்டு சிறப்புடன் வாழக் கற்றுக் கொண்டவன் நான்" என்றது. எதிலும் மன நிறைவுதான் என் மகிழ்ச்சியின் அடிப்படை" என்று அழகாகக் கூறிச் சிரித்தது.

# தொகுதி 11

# தொண்டு மனப்பான்மை

## பாடம் 1 சேவையைப் போற்றுவோம்

குழுவில் கலந்துரையாடுக.

மதிப்பிற்குரிய அவைத்தலைவர் அவர்களே, பள்ளியின் முதல்வர் உயர்திரு நோர்டின் அவர்களே, தமிழ்மொழிக் கழக ஆலோசகர் திருமிகு பூபாலன் அவர்களே அன்புமிகு ஆசிரியர்களே உங்கள் அனைவருக்கும் வணக்கம். முதலில் படிவம் ஐந்து மாணவர்களுக்காக இந்தப் பிரியாவிடை நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தமைக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களின் நிகராளியாக உரையாற்ற வாய்ப்பளித்தமைக்கு நன்றி.

நாங்கள் இவ்வாண்டு எஸ்.பி.எம். தேர்வைச் சிறப்பாக எழுதி நமது பள்ளிக்கும் சமுதாயத்திற்கும் பெருமை சேர்ப்போம் என்று உறுதியாக நம்புகிறோம். கல்வியிலும் புறப்பாட நடவடிக்கைகளிலும் சிறப்பாகக் கலந்து பயனடைந்தோம். உங்களையெல்லாம் விட்டுப் பிரியப் போகிறோம், இப்பள்ளி வாழ்க்கை நிறைவடையப் போகிறது என்பதை நினைக்கும்போது கவலையாக இருக்கிறது.

நண்பர்களே, நமது சமுதாயத்திற்கு உயர்வைக் கொடுக்கக்கூடியது கல்வி மட்டுமே. ஆகவே, பள்ளியில் கட்டொழுங்குச் சிக்கல்களை உருவாக்காது கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கி நம் பள்ளிக்கு நற்பெயரை ஈட்டித் தரப் போராட வேண்டும். மாணவர்களாகிய நாம் நமது கடமையை மறந்துவிடக் கூடாது. மேலும், எங்களுக்குக் கல்வியைப் போதித்த ஆசிரியர்களுக்கு நாங்கள் என்றும் நன்றிக் கடன் பட்டுள்ளோம் என்று கூறி என் உரையை நிறைவு செய்கிறேன்.
நன்றி.




1.3.2 • பிரியாவிடை உரையாற்றுவர்.

## இடுபணி 1

**ஒரு பிரியாவிடை உரையில் இருக்க வேண்டிய கூறுகள் பற்றிக் குழுவில் கலந்துரையாடுக.**

## இடுபணி 2

**கொடுக்கப்பட்ட குறிப்புகளைத் துணையாகக் கொண்டு பிரியாவிடை உரையாற்றுக.**




1. நண்பர் வெளிநாட்டில் உயர் கல்வியைத் தொடருதல்
   - வாழ்த்துகளும் பாராட்டுகளும்
   - பிரிய மனமில்லை
   - நற்குணங்களும் பண்புகளும் நிறைந்தவர்
   - கல்வியில் சிறந்து விளங்க வாழ்த்துதல்
   - நலமாக நாடு திரும்ப வேண்டுதல்



2. தோழி வேறு பள்ளிக்கு மாற்றலாகிச் செல்லுதல்
   - நல்ல தோழியைப் பிரிதல்
   - உயர்வு தாழ்வு பாராமல் பழகியவள்
   - தமிழ் மொழிக் கழகத்தில் அரும்பணியாற்றியவள்
   - அனைவருக்கும் உதவும் மனப்பான்மை உடையவள்
   - புதிய பள்ளியில் சிறப்புடன் செயல்பட வேண்டுதல்

## இடுபணி 3

**கொடுக்கப்பட்ட தலைப்புகளில் பிரியாவிடை உரையாற்றுக.**

1. உன் நண்பன் குடும்பத்தோடு மாற்றலாகி வேறு ஊருக்குச் செல்கிறான்.
2. பள்ளிக் காற்பந்துக் குழு பயிற்றுநர் பணி ஓய்வு பெறுகிறார்.

## பாடம் 2 தமிழவேள் கோ.சாரங்கபாணி

### பனுவலை வாசித்துக் கருத்துணர்க.



தமிழர்களின் உயர்வுக்கும் ஒற்றுமைக்கும் உழைத்தவர்களுள் தலையாயவர் கோ. சாரங்கபாணி ஆவார். கல்வி, கலை, பல இன **நல்லிணக்கம்**, தமிழுணர்வு ஆகியவற்றை வளர்த்தவராகவும் சீரிய பத்திரிகையாளராகவும் வாழ்ந்து 1974இல் மறைந்தார். தமது 21ஆம் வயதில் சிங்கப்பூரில் குடியேறினார். வணிக நிறுவனம் ஒன்றில் எழுத்தாளராய் வாழ்க்கையைத் தொடங்கினார். தமிழர்களை ஒரே சமூகமாக ஒற்றுமைப்படுத்துவதற்கு அயராது உழைத்தார். தமிழர்கள் வறுமையிலும் ஏழ்மையிலும் உழன்று கொண்டிருந்ததால் அவர்கள் நிலையை உயர்த்துவதற்குப் பாடுபட்டார்.

தமிழர் வாழ்வைச் சீர்ப்படுத்துவதற்குத் தமிழர் சீர்திருத்தச் சங்கத்தைத் **தோற்றுவித்தார்**. தமிழர்களின் **ஒவ்வாத** பழக்கங்களையும் மூட நம்பிக்கைகளையும் கைவிடுவதற்கு இச்சங்கம் வெகுவாய்ப் பாடுபட்டது. நாடகங்கள், சொற்பொழிவுகள் மற்றும் இலக்கியப் போட்டிகளின் வழியாக மக்களின் பழக்கங்களையும் போக்குகளையும் திருத்த முயன்றார். பொது மக்களிடையே தமிழ் இலக்கியப் பற்றும் படைப்பிலக்கிய ஆர்வமும் மேலோங்க அவர் பல **உத்திகளைக்** கையாண்டார். அவருக்கு **உறுதுணையாக** இருந்தது அவர் நடத்திய தமிழ்முரசு நாளிதழ் ஆகும். 1953இல் அவர் தொடங்கிய 'தமிழ் முரசு மாணவர் மணிமன்ற மலர்' பத்திரிகை உலகில் **முன்னோடியாக** அமைந்தது.

மலாயா-சிங்கப்பூருக்கான முதல் பல்கலைக்கழகம் ஒன்றை ஆங்கில அரசு அமைக்க முடிவு செய்த போதே தமிழ்த்துறை வேண்டும் என்று விண்ணப்பம் செய்தவர் கோ.சாரங்கபாணி. அந்த வெற்றிக்குப் பிறகு, 'தமிழ் எங்கள் உயிர்' எனும் நிதியைத் தொடங்கினார். மலாயாப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைக்கு நிதி வழங்கியதோடு ஆயிரத்திற்கு மேற்பட்ட தமிழ்நூல்களையும் பெற்றுத் தந்தார். தை முதல் நாள் கொண்டாடப்படும் தமிழர் திருநாள் சமய வேறுபாடு **கருதாமல்** தாய்மொழியின் அடிப்படையில் ஒன்று சேர்ந்து கொண்டாடும் ஒற்றுமைத் திருநாள் என **முழங்கினார்**. தமிழர் திருநாளின் வழி இசை, நடனம், ஓவியம், இலக்கியம், விளையாட்டு, கல்வி ஆகிய துறைகளில் தமிழர்களின் கவனத்தைத் திருப்பினார். 1955இல் தவத்திரு குன்றக்குடி அடிகளாரால் கோ. சாரங்கபாணி அவர்களுக்குத் 'தமிழவேள்' எனும் சிறப்புப் பட்டம் வழங்கப்பட்டது.

2.2.2
- வாசிப்புப் பகுதியிலுள்ள கருவாக்கியங்களை அடையாளம் காண்பர்.

## இடுபணி 1

**வாசிப்புப் பகுதியிலுள்ள கருவாக்கியங்களை அடையாளங்கண்டு கூறுக.**

## இடுபணி 2

**வாசிப்புப் பகுதியில் வண்ணமிடப்பட்ட சொற்களுக்கு அகராதியின் துணைகொண்டு பொருள் எழுதுக.**

## இடுபணி 3

**வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக.**

1 கோ. சாரங்கபாணியின் சிறப்புகளைக் கூறுக.
2 தமிழ் முரசு மாணவர் மணிமன்ற மலரின் பங்கை விளக்குக.
3 மலாயாப் பல்கலைக்கழகத்திற்குக் கோ. சாரங்கபாணி ஆற்றிய பணிகளை விளக்குக.
4 கோ. சாரங்கபாணிக்கும் தமிழர் திருநாளுக்கும் இடையிலான தொடர்பை விளக்குக.
5 எதிர்காலத்தில் நீ கோ. சாரங்கபாணியைப் போல இந்நாட்டுத் தமிழர்களுக்கும் தமிழ்மொழி வளர்ச்சிக்கும் என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்வாய் என்று குழுவில் கலந்துரையாடிக் கூறுக.


## இடுபணி 4

**பின்வரும் வாசிப்புப் பகுதியிலுள்ள கருவாக்கியங்களை அடையாளங்கண்டு கூறுக.**

காமராசர் தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர்களுள் ஒருவராவார். 1954ஆம் ஆண்டு அப்போதைய சென்னை மாநில முதலமைச்சர் ஆனார். அன்பும், பண்பும், பணிவும் மிக்கவராக இருந்து மக்களின் தேவைகளை நிறைவேற்றினார்.

இவர் ஒன்பது ஆண்டுகள் தமிழக முதல்வராகப் பதவி வகித்தார். தமிழகத்தில் பள்ளிக் குழந்தைகளுக்கு இலவச சத்துணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார். காமராசர் எளிமைக்கும் நேர்மைக்கும் பெயர் பெற்றவர்.

இவர் படிக்காத மேதை, பெருந்தலைவர் என்றெல்லாம் புகழப்படுகிறார். இவர் ‘கருப்பு காந்தி’ என்று அன்போடு அழைக்கப்பட்டார். இவருடைய மறைவுக்குப் பிறகு, 1976இல் இவருக்குப் ‘பாரத ரத்னா’ எனும் உயரிய விருது வழங்கப்பட்டது. சென்னை வானூர்தி நிலையத்தின் உள்நாட்டு முனையத்திற்கு இவர் பெயர் சூட்டப்பட்டுள்ளது.



# பாடம் 3 நன்றி மறவேல்

## குழுவில் கலந்துரையாடுக.

1. வேறு பள்ளிக்கு மாற்றலாகிச் செல்லுதல்
   - பள்ளியில் இறுதிநாள்
   - வேறு பள்ளிக்கு மாற்றம்
   - ஆசிரியர் பதவி உயர்வு
   - வாழ்த்துகளைக் கூறுதல்
   - மேலும் பணி சிறக்க வேண்டுதல்

2. இப்பள்ளியில் அவர் ஆற்றிய பணிகள்
   - படிவம் ஒன்று முதல் ஐந்து வரை தமிழ்மொழிப் பாடம் கற்பித்தல்
   - கட்டொழுங்கு ஆசிரியர்
   - தமிழ்மொழிக் கழக ஆலோசகர்



3. அவரது சாதனைகள்
   - மூன்றாம் படிவ மதிப்பீடு (பிதி3), எஸ்.பி.எம். தேர்வில் தமிழ்மொழி சிறப்பு அடைவு நிலைபெற உதவியவர்
   - தமிழ்மொழிக் கழகத்தின் பல நிகழ்ச்சிகளை நடத்தியவர்
   - மாநில அளவில் முதல் நிலையை அடையச் செய்தவர்

4. இறைவனை வேண்டுதல்
   - நோய்நொடியின்றி பல்லாண்டு வாழ
   - மேலும் பதவி உயர்வு பெற
   - பேரும் புகழும் பெற
   - புதிய இடத்தில் சாதனைகள் பல படைக்க

## இடுபணி 1

குறிப்புகளைத் துணையாகக் கொண்டு 140 சொற்களில் பிரியாவிடை உரை எழுதுக.

3.4.4

- 140 சொற்களில் பிரியாவிடை உரை எழுதுவர்.

## இடுபணி 2

**உன் வகுப்பாசிரியை திருமதி நிர்மலா தேவி பணி ஓய்வு பெறுகிறார். உன் வகுப்பில் அவருக்கு ஒரு பிரியாவிடை விருந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வகுப்புத் தலைவன் என்ற முறையில் நீர் பிரியாவிடை உரையாற்ற வேண்டும். குறிப்புகளைத் துணையாகக் கொண்டு அவ்வுரையை எழுதுக.**

### பிரியாவிடை உரை

- இருபது ஆண்டு காலம் பள்ளியில் பணியாற்றியுள்ளார்.
- ஆங்கிலமும் தமிழ்மொழியும் சிறப்பாகப் போதித்தார்.

- ஆங்கில, தமிழ்மொழிப் போட்டிகளுக்காகக் கடுமையாக உழைத்தவர்.
- இரவு பகல் பார்க்காமல் மாணவர்களுக்குப் பயிற்சி வழங்கினார்.

- வட்டார நிலையிலும் மாநில நிலையிலும் பள்ளி சிறந்து விளங்கியது.
- பல போட்டிகளில் வென்று பரிசுகளையும் பாராட்டையும் பெற்றது.

- மிகவும் அன்பானவர்.
- எந்த நேரத்திலும் மாணவர்களுக்கு உதவத் தயங்க மாட்டார்.
- ஏழை மாணவர்களுக்கு நிறைய உதவிகளைச் செய்துள்ளார்.

- மிகவும் கண்டிப்பானவர்.
- நேரத்தோடு வகுப்பிற்கு வருபவர்.
- மாணவர்களுக்குத் தெளிவாக விளக்குவதில் வல்லவர்.

- பிரிவு வருத்தத்தை அளிக்கிறது. நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளோம்.
- நோய் நொடியின்றி நீண்ட காலம் மகிழ்ச்சியோடு வாழ இறைவனை வேண்டுகிறோம்.

## வளப்படுத்துதல்

**கொடுக்கப்பட்ட சூழலுக்கு ஏற்ப பிரியாவிடை உரை எழுதுக.**

உன் வகுப்பு நண்பன் தன் குடும்பத்தோடு வெளிநாட்டிற்குச் செல்லவிருக்கின்றான். அவன் தந்தைக்கு அங்குள்ள நிறுவனம் ஒன்றில் உயர்ந்த பதவி கிடைத்துள்ளது. உன் வகுப்பு மாணவர்கள் பிரியாவிடை விருந்து ஒன்றை ஏற்பாடு செய்துள்ளனர். அந்நிகழ்ச்சியில் நீ பிரியாவிடை உரையாற்றப் பணிக்கப்பட்டுள்ளாய். அவ்வுரையை எழுதுக.

## குறைநீக்கல்

**கொடுக்கப்பட்ட பிரியாவிடை நிகழ்ச்சிப் படங்களைக் கொண்டு வாக்கியங்களை எழுதுக.**

1




2



3



4




5



6



# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## செய்யுளையும் பொருளையும் அறிக.

கரிகாலன்: நேற்று வகுப்பறையில் தமிழாசிரியர் செய்யுள் ஒன்றை அழகாக விளக்கினார்.

இன்னமுதன்: அப்படியா, எதைப் பற்றிய செய்யுள் அது?



அதுவா, கற்றோருக்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு எனும் கருப்பொருளில் அமைந்த செய்யுள் அது.

எங்கே, சொல் பார்ப்போம்.



கரிகாலன்: உலகில் கற்றவனே சிறந்தவன் என்று செய்யுள் கூறுவதாக அமைந்தது. ஒரு நாட்டின் அரசனுக்கு அவனுடைய நாட்டைத் தவிர மற்ற இடங்களில் பெருஞ்சிறப்பு இல்லை. ஆனால், கற்ற அறிஞர்களுக்கோ நாடு என்ற பேதமின்றி சென்ற இடமெல்லாம் பெருஞ்சிறப்பு உண்டு. ஆதலால், மன்னனையும் குற்றமறக் கற்ற அறிஞனையும் சீர்தூக்கிப் பார்த்தால் மன்னனைக் காட்டிலும் கற்ற பெரியோரே மிக்க சிறப்புடையவர் ஆவார்.

இன்னமுதன்: என்ன அருமையான விளக்கம். எங்கே, அந்தச் செய்யுளை ஒரு முறை கூறு பார்ப்போம்.

கரிகாலன்: இதோ அந்தச் செய்யுள்,

**‘மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்**
**மன்னனின் கற்றோன் சிறப்புடையன் - மன்னற்குத்**
**தன் தேசமல்லாற் சிறப்பில்லை கற்றோர்க்குச்**
**சென்ற இடமெல்லாம் சிறப்பு’.**

### மூதுரையும் பொருளும்

**மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்**
**மன்னனின் கற்றோர் சிறப்புடையன் - மன்னற்குத்**
**தன் தேசமல்லாற் சிறப்பில்லை கற்றோர்க்குச்**
**சென்ற இடமெல்லாம் சிறப்பு**

பொருள்: ஒரு நாட்டின் மன்னனைவிடக் கற்றறிந்தவனே சிறந்தவனாகக் கருதப்படுகின்றான். ஏனெனில் அம்மன்னனுக்கு அவன் நாட்டில் மட்டுமே சிறப்புக் கிட்டும். ஆனால், கற்றறிந்தவர்கள் செல்லுகின்ற இடத்திலெல்லாம் சிறப்புப் பெறுவர்.

4.3.1

- ஒன்றாம் படிவத்திற்கான பல்வகைச் செய்யுளையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

இடுபணி 1

**அ. செய்யுளடிகளுக்குப் பொருத்தமான விளக்கத்தைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்

மன்னனின் கற்றோர் சிறப்புடையன் -

மன்னற்குத் தன் தேசமல்லாற் சிறப்பில்லை

கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு

- அரசனைவிட கற்றறிந்தவனே சிறந்தவனாகக் கருதப்படுகின்றான்.
- கற்றறிந்தவர்கள் செல்லுகின்ற இடத்திலெல்லாம் சிறப்புப் பெறுவர்.
- அரசனுக்கு அவன் நாட்டில் மட்டுமே சிறப்புக் கிட்டும்.
- அரசனையும் பிழையறக் கற்றவர்களையும் ஒப்பிட்டால்

**ஆ. செய்யுளுக்குப் பொருத்தமான சூழலை அடையாளம் கண்டு எழுதுக.**

1) மாணிக்கவாசகர் பாண்டிய மன்னனின் அவையில் தலைமை அமைச்சராய்ப் பணியாற்றினார். அவரது ஆழ்ந்த கல்வியறிவும் தெளிவான சமய ஞானமும் அவரை மதிநுட்பம் நிறைந்தவராய் மிளிரச் செய்தது. மன்னனும் அவரது ஆலோசனைகளைக் கேட்டு நல்லாட்சி நடத்தி வந்தான். மாணிக்கவாசகரின் புகழ் அண்டை நாடுகளிலெல்லாம் பரவியது. அவர் செல்லுகின்ற ஊர்களிலெல்லாம் மக்கள் அவரை வரவேற்று நன்கு உபசரித்தார்கள்.

2) காமுனிங் தேசிய இடைநிலைப்பள்ளியைச் சேர்ந்த விமலன் மதிநுட்பம் நிறைந்தவனாய் விளங்கினான். நற்பண்புகள் நிறைந்த அவனை ஆசிரியர்கள் அனைவரும் போற்றினர். விமலன் தனது நண்பர்களுடன் அன்பாகவும் பணிவாகவும் பழகுவான். பள்ளியில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் விமலனைப் பிடிக்கும். தனது அறிவாற்றலாலும் நற்பண்புகளாலும் விமலன் அனைவரையும் கவர்ந்தான்.

3) கோகுலன் அரைப் படிப்போடு கல்விக்கு முற்றுப்புள்ளி வைத்தான். எங்கு வேலை தேடிச் சென்றாலும் அவனுக்கு வேலை கிடைக்கவில்லை. அதனால் தகாத நண்பர்களோடு சேர்ந்து திருட்டுத் தொழிலில் ஈடுபட்டான். காவல் துறையினர் அவனை வலைவீசித் தேட ஆரம்பித்தனர். அக்கம் பக்கத்திலுள்ள ஊர்களிலும் அவனைப் பற்றிப் பேச ஆரம்பித்தார்கள். வேறு நாட்டிற்கு ஓட முயன்றபோது காவல் துறையினர் அவனை வளைத்துப் பிடித்தனர்.

**இ. கற்றவர்கள் எங்குச் சென்றாலும் புகழப்படுவர்; போற்றப்படுவர் என்று கூறுவதற்கான காரணங்களைக் கூறுக.**

## வளப்படுத்துதல்

**டாக்டர் மு. வரதராசனார் சிறந்த தமிழ்ச் சான்றோர் என்பதற்கான ஆதாரங்களை அடையாளங்கண்டு எழுதுக.**



தமிழ் அறிஞர்கள் வழியில் தம் அயராத உழைப்பால் தானும் உயர்ந்து தமிழ்மொழி வளர்ச்சிக்கும் தொண்டாற்றிய பெருந்தகையாளர் டாக்டர் மு. வரதராசனார் ஆவார். இவர் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்ப் பயிற்றுநராகப் பணிபுரிந்தார். அங்கு தமிழ் கற்கும் மாணவர்களின் மனத்தினில் நீங்கா இடம்பிடித்தார். அதே கல்லூரியில் இருபது ஆண்டுகளுக்கு மேலாக விரிவுரையாளராகவும் தமிழ்த்துறைத் தலைவராகவும் பணியாற்றி தமிழுக்கும் அரிய தொண்டாற்றினார். கல்லூரி மாணவர்களைக் கவரும் வண்ணம் பாடங்களை நடத்தி எளிய நடையில் புரிய வைக்கும் ஆற்றல் டாக்டர் மு. வரதராசனாருக்கே உரியதாகும். இவர் தமது பணிக்காலத்தில் பல மூத்த தமிழ் அறிஞர்கள் மனத்தில் நீங்கா இடம் பிடித்தார். மேலும், தமிழாய்வு மாணவர்களுக்குச் சிறந்ததொரு வழிகாட்டியாகவும் விளங்கினார். விடாமுயற்சி என்பது இவரின் உதிரத்தில் ஊறிய கொள்கையாகும். இதனால் பல உயரிய பட்டங்கள் பெற்று மதுரைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் எனும் பொறுப்பேற்றார். இவரின் எல்லா உயர்வுக்கும் உறுதுணையாக நின்றவை அயராத உழைப்பும் எல்லையற்ற ஆர்வமுமேயாகும். தமது மாணவர்கள் முன்னேற்றம் மட்டுமின்றித் தாம் பணிபுரியும் பல்கலைக்கழகமும் பல நிலைகளில் பெருமை பெற அயராது பாடுபட்டார்.

எழுத்துத் துறையில் டாக்டர் மு. வரதராசனார் அளப்பரிய சாதனைகள் பல புரிந்திருக்கிறார். புதினம், சிறுகதை, நாடகம், மொழி, இலக்கியம், குழந்தை இலக்கியம், கடிதம், கட்டுரை எனப்பல துறைகளிலும் நூல்களை எழுதிச் சிறப்புச் சேர்த்துள்ளார். கள்ளோ காவியமோ, அகல் விளக்கு, கரித்துண்டு, மண் குடிசை, பெற்ற மனம், நெஞ்சில் ஒரு முள் ஆகிய புதினங்கள் இவருக்குப் பல மடங்கு சிறப்புச் சேர்த்த படைப்புகளாகும். டாக்டர் மு. வரதராசனாரின் அகல் விளக்கு எனும் புதினம் இந்திய அரசின் மிக உயர்ந்த இலக்கிய விருதான சாகித்ய அகாடமி பரிசைப் பெற்றதாகும். நூல் பதிப்பக வரலாற்றில் இது வியக்கத்தக்க சாதனை ஏற்படுத்தியது. இவரின் திருக்குறள் தெளிவுரை உலகப் பிரசித்திப் பெற்ற நூலாகும். இவரது படைப்புகள் படிப்போர் மனத்தைக் கவரும். அன்றாட வாழ்வோடு ஒன்றித்துவிடும் இவரின் நூல்களில் கதைமாந்தர்களின் பெயர்களைப் பலர் தத்தம் குழந்தைகளுக்குச் சூட்டி மகிழ்ந்தனர்.

## குறைநீக்கல்

**அ. செய்யுளில் விடுபட்ட அடிகளை எழுதுக.**

மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்

______________________________

மன்னற்குத் தன் தேசமல்லாற் சிறப்பில்லை கற்றோர்க்குச்

______________________________

தொகுதி 12

# நன்மை செய்யும் நட்பு

## பாடம் 1 நண்பர்கள் பலவிதம்

**குழுவில் கலந்துரையாடுக.**

காலை மணி 7:00
- மலையடிவாரம் அடைதல்
- பேருந்திலிருந்து பொருள்களை இறக்குதல்
- உணவு - உடை
- உடற்பயிற்சி

காலை மணி 8:00
- மலையேறுதல், மேடு பள்ளம்
- ஆலோசகர் வழிகாட்டல்

காலை மணி 10:00
- மலையின் முதல் பகுதியை அடைதல்
- சிற்றுண்டி - ஓய்வு

காலை மணி 10:30
- பயணம் தொடர்தல்
- ஆற்றைக் கடத்தல்

மதியம் 12:30 மணி
- சிராய்ப்புக் காயம் ஏற்பட்ட நண்பனுக்கு உதவுதல்
- உடன் அழைத்துச் செல்லல்

மதியம் மணி 1:30
- மலை உச்சியை அடைதல்
- நிழற்படம் எடுத்தல்

மாலை மணி 4:00
- மீண்டும் மலையடிவாரம் அடைதல்
- இல்லம் திரும்புதல்



இடுபணி 1

**செவிமடுத்த விவரங்களைக் கலந்துரையாடி நிரல்படக் கூறுக.**

1.1.1 • செவிமடுத்தவற்றிலுள்ள கருத்துகளை நிரல்படக் கூறுவர்.



இடுபணி 2

**கதையைச் செவிமடுத்து நிரல்படக் கூறுக.**

- ஈ சொன்னதைக் கேட்டதும் சிங்கத்திற்குக் கோபம் ஏற்பட்டது. "நீயா நானா?" என்று சவால் விட்டது சிங்கம்.
- ஈயுடன் நல்ல நட்பை ஏற்படுத்திக் கொண்டதோடு மற்ற மிருகங்களிடமும் அன்பாய்ப் பழகியது சிங்கம்.
- காட்டில் சிங்கம் ஒன்று வாழ்ந்து வந்தது. அது தனது பலத்தாலும் தோற்றத்தாலும் கர்ஜனையாலும் காட்டில் வசித்த அனைத்து மிருகங்களையும் பயமுறுத்தி வந்தது.
- அதை விரட்ட தன் நகங்களாலும் பற்களாலும் முயன்ற போது சிங்கம் தன் முதுகைத் தானே காயப்படுத்திக் கொண்டது. பல தடவை சிங்கத்தை நன்கு இம்சை செய்துவிட்டு ஈ பறந்தது.
- ஆனால், ஓர் ஈ மட்டும் "நீ பலசாலியாய் இருக்கலாம்; உன்னைப் பார்த்து மற்ற மிருகங்கள் பயப்படலாம்; நான் பயப்பட மாட்டேன்," என்றது.
- ஈ பறந்து வந்து சிங்கத்தின் முதுகில் அமர்ந்தது; மொய்த்தது.
- ஈயைப் பிடிக்க முடியாததை எண்ணி சிங்கம் வெட்கப்பட்டது. உடலளவில் வீரமாய் இருந்தாலும் உருவத்தைக் கண்டு யாரையும் எடை போடக் கூடாது என்று உணர்ந்தது.





## இடுபணி 3

**கொடுக்கப்பட்ட விவரங்களை நிரல்படக் கூறுக.**

- சந்திப்புக் கூட்டத்தை ஒரு குறிப்பிட்ட நாளில் நடத்தினர்.
- பள்ளியின் தேவைகளையும் எதிர்கொள்ள இருக்கின்ற திட்டங்களையும் பள்ளி முதல்வர் தமது உரையில் தெரிவித்தார். மேலும், செயலவையினருக்குப் பாராட்டையும் வாழ்த்தையும் தெரிவித்துக் கொண்டார்.
- முன்னாள் மாணவர் சங்கத்திற்கான செயற்குழு உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.
- அம்பாங் தேசிய இடைநிலைப்பள்ளியில், முன்னாள் மாணவர் சங்கம் ஒன்று தோற்றுவிக்கத் திட்டமிடப்பட்டது.
- புதிதாகத் தேர்வு செய்யப்பட்ட முன்னாள் மாணவர் சங்கத்தின் தலைவர் வரவேற்புரை ஆற்றினார். அவரைத் தொடர்ந்து பள்ளி முதல்வர் சிறப்புரையாற்றினார்.
- அதன்பொருட்டு, அப்பள்ளியில் பயின்ற முன்னாள் மாணவர்களைப் பள்ளி நிர்வாகம் தொடர்பு கொண்டு பேசியது.



## இடுபணி 4

**பள்ளியில் நடைபெற்ற கூட்டுப்பணி ஒன்றனைப் பற்றிய விவரங்களை நிரல்பட விவரித்துக் கூறுக.**

**கூட்டுப்பணி**

- குழுவாகப் பிரித்தல்
- ஆண்களும் பெண்களும் கலந்திருத்தல்

- பள்ளி வளாகத்தில் ஒன்று கூடுதல்
- காலைச் சிற்றுண்டி உண்ணுதல்

- நண்பகலில் வேலையை நிறைவு செய்தல்
- கூட்டுப்பணி வெற்றி பெறுதல்
- நன்றி நவிலுதல்

- ஓய்வெடுத்தல்
- குளிர்பானம் அருந்துதல்

- இடங்களைப் பிரித்துக் கொடுத்தல்
- பணியைத் தொடங்குதல்

# பாடம் 2 நட்புக்கு இலக்கணம்

## வாசித்து அறிக.

ஒருவரைப் போகவிட்டுப் பின் அவரைப் பற்றிக் குறைவாகவும் இழிவாகவும் பேசுவது ஓர் இழிவான பழக்கமாகும். தன் தவறுகளையும் தோல்விகளையும் மறைக்கவும் மறக்கவும் முயல்கின்ற ஒருவன் புறங்கூறுதல் என்னும் பழக்கத்திற்கு அடிமையாகிறான். வாழ்க்கையில் உறுதியும் நம்பிக்கையும் தெளிவும் உடையவர்கள் புறங்கூற மாட்டார்கள். நல்ல குணம் உடையவர்களுக்கு வாழ்க்கையில் எத்தனை தோல்விகள் வந்தாலும் ஊக்கம் குன்றாது மென்மேலும் உழைத்து முன்னேற முற்படுவார்கள்,

புறங்கூறுதல் என்னும் கொடிய பழக்கம் உடையவர்கள், உண்மையாக உழைத்து முன்னேற வேண்டும் என்ற எண்ணம் இல்லாமல் புறங்கூறுதலில் நிறைவு கொண்டு தம் வாழ்க்கையின் முன்னேற்றத்தைத் தடைப்படுத்திக் கொள்கிறார்கள். ஒருவர் இல்லாத இடத்தில் அவரைப் பற்றி இல்லாததையும் பொல்லாததையும் பேசுவதால் அவருக்கு எவ்விதப் பெருமையும் நன்மையும் ஏற்படப் போவதில்லை. நாம் எவரைப் பற்றிப் புறம் பேசினாலும் அதனால் நமக்குத் துன்பமும் தொல்லையும் உண்டாகுமே அன்றி, நன்மை எதுவும் ஏற்படாது.

ஒருவனைப் போகவிட்டுப் புறம் பேசுவது கோழைத்தனம். நேர்மை நெஞ்சம் உடையவன் அப்படிப் பேசமாட்டான். ஒருவன் இல்லாதபொழுது அவனைப் பற்றிப் பழித்துப்பேசி, அவன் வந்ததும் பொய்யாக முகமலர்ந்து அவனிடம் உறவாடுவதைவிடக் கொடுமை வேறில்லை. ஒருவரிடம் நேரிடையாக எவ்வளவு கடுமையாகவும் பேசிவிடலாம். ஆனால், அவன் இல்லாதபோது அவனைப் பற்றிக் குறை பேசுவது மனிதத் தன்மையாகாது.



ஒருவர் பிறர் குற்றங்களை ஆராய்வது போல் தம் குற்றங்களையும் ஆராய்ந்தால் உலகத்திலுள்ள உயிர்களாகிய நமக்கு எவ்விதத் தீங்கும் வராது. நல்ல நட்பில் புறங்கூறுவது இழுக்கான செயல் என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர வேண்டும்.

## இடுபணி 1

**வாசிப்புப் பகுதியை வாசித்துக் கருவாக்கியங்களை அடையாளம் காண்க.**

2.2.2

• வாசிப்புப் பகுதியிலுள்ள கருவாக்கியங்களை அடையாளம் காண்பர்.

## இடுபணி 2

**வாசித்துக் கருவாக்கியங்களை அடையாளம் காண்க.**

1. உடல் நலத்திற்கு உறக்கம் முக்கியமானது. பொழுதொடு படுத்துறங்கு; பொழுதொடு விழித்தெழு. அதில் நன்மை பல உண்டு. நம் முன்னோர் வாழ்க்கையிலும் வைகறைத் துயிலெழும் வழக்கம் இருந்தது.


2. ஆதரவின்றித் தனித்து வாழும் முதியோர்களுக்காக அரசாங்கத்தால் உருவாக்கப்பட்டதே 'செரி கெனாங்கான்' முதியோர் காப்பகம். இஃது ஆதரவற்ற முதியோர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் முக்கிய நோக்கத்தைக் கொண்டுள்ளது. இக்காப்பகத்தில் உற்றார் உறவினர் இன்றித் தவிக்கும் அனைவரையும் கண்ணும் கருத்துமாகப் பாதுகாக்கின்றனர்.

3. மனிதரிடையே தொடர்பினை அதிகரிப்பதில் திறன்பேசி பெரும்பங்காற்றுகின்றது எனலாம். திறன்பேசி குறிப்பேடாகவும் இணையத் தொடர்புக் கருவியாகவும் பயன்படுகின்றது. இன்று, அவை தொலைக்காட்சிகளைப் போன்று பயன்படுத்தத்தக்க வகையில் உருவாகி வருகின்றன. திறன்பேசியை எங்கும் எப்பொழுதும் பயன்படுத்தலாம் என்பதால் சில சமயங்களில் அஃது இடையூறாகவும் அமைந்துவிடுகின்றது.

4. மாணவர்கள் கற்ற பாடங்களை நன்கு விளங்கிக்கொள்ள பயிற்சி நூல்கள் தேவை. இத்தகைய நூல்களிலுள்ள பயிற்சிகளைச் செய்தால் மாணவர்கள் படித்த பகுதியில் தெளிவு ஏற்படும்; கற்றது நிலையாக நிற்கும்.

## இடுபணி 3

**தலைப்புக்கு ஏற்ற கருச்சொற்களைக் கொண்டு கருவாக்கியங்களைக் கூறுக.**



# பாடம் 3 அன்பின் எல்லை

## வாசித்து எழுதுக.



தாயின் அன்புக்கு ஈடுயிணை இல்லை. தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை என்பர். பல ஆண்டுகளாகத் தாயைப் பிரிந்திருந்து மீண்டும் அவரைச் சந்திக்கப் போகிறோம் என்று நினைக்கும் போது மனத்தில் மின்மினி ஒளிர்வது போல இருக்கின்றது. ஏறக்குறைய ஏழு ஆண்டுகள் ஆகிவிட்டன. ஒவ்வொரு முறையும் அம்மாவுடன் கடிதம் மூலமும் கைப்பேசி மூலமும் பேசிவந்தவனுக்கு, இன்னும் சில மணி நேரங்களில் அம்மாவை நேரில் காணப் போகிறேன் என்ற துடிப்பு மேலோங்கியது.

மேற்கல்வியை வெளிநாட்டில் பயில வேண்டிய கட்டாயத்தில் கண்களில் கண்ணீர் மல்க, தமக்கே உரிய பாவனையில் சிறியதொரு புன்னகையுடன் தன்னை வழியனுப்பிய அம்மாவை நினைத்துப் பார்க்கிறான்.

ஆனாலும், அம்மாவின் ஆசைகள் வீண் போகவில்லை. இன்று ரஞ்சிதன் ஒரு பட்டதாரி. கணினித் துறையில் பல நுணுக்கங்களைக் கற்றுப் பெரியதொரு நிறுவனத்தில் பணிபுரியும் ஒரு திறமையான மேலதிகாரி. இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு அம்மா எப்படியிருப்பார்? அங்கொன்றும் இங்கொன்றுமாக இருந்த நரைமுடி இப்போது முழுமையாக வெள்ளையாகி இருக்குமோ? என்று பல கேள்விகளை அசைபோட்டுக் கொண்டு விமானத்தில் பயணித்துக் கொண்டிருந்தான் ரஞ்சிதன்.

“இன்னும் சில மணி நேரத்தில் மகன் ரஞ்சிதன் விமான நிலையத்தில் இறங்கிவிடுவான். எப்படி அவனைச் சென்று வரவேற்பது? கைவசம் கார் கூட இல்லையே! அவன் சுவைத்து உண்ணும் மண் சட்டியில் சமைத்த கருவாட்டுக் கறியும் இன்று தயார்படுத்த முடியவில்லையே! பலவிதக் கற்பனைகள், ஆவல்கள் என்றல்லவா ஓடி வருவான். என்ன செய்வது?” என்று புலம்பிக் கொண்டிருந்தாள் தாய் தெய்வானை.

“விமானம் தரை இறங்கியதும் அவனது கண்கள் அம்மா என்று என்னைத் தேடுமே! என்ன செய்வேன்? மகன் மனம் ஏங்கிடுமே! ஏமாந்து போகுமே” என்று பலவாறு எண்ணச் சுருள்களில் சுழன்று கொண்டிருந்தாள் தெய்வானை. பாவம் குடியிருந்த வீட்டை விற்று மகனைப் படிக்க வைத்தவளாயிற்றே! பிள்ளையின் நலமே தாயின் கனவு.

3.4.7

• 140 சொற்களில் கதை எழுதுவர்.

## இடுபணி 1

**கதையில் காணும் கதை மாந்தர்கள் தங்களின் அன்பை வெளிப்படுத்தும் விதத்தை விளக்கிடுக.**

## இடுபணி 2

**கீழே கொடுக்கப்பட்ட தலைப்புகளுள் ஏதேனும் ஒன்றனைத் தெரிவு செய்து 140 சொற்களில் ஒரு கதை எழுதுக.**

அம்மா | அப்பா

## இடுபணி 3

**கொடுக்கப்பட்ட குறிப்புகளைக் கொண்டு 140 சொற்களில் கதை எழுதுக.**

ஒவ்வொரு நாளும் - முகுந்தனுக்கு அறிவுரை கூறுதல் - பள்ளிக்கு மட்டம் போடுதல் - பேரங்காடியில் சுற்றித் திரிதல் - கணினி மையத்தில் சீருடையுடன் விளையாடுதல் - காவல் அதிகாரிகள் திடீர் சோதனை - சிக்கிக் கொள்ளுதல் - காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லுதல் - பெற்றோருக்குத் தகவல் கொடுத்தல் - மனம் கலங்குதல் - வெட்கித் தலைகுனிதல் - உணர்தல் - உறுதியளித்தல்.

## வளப்படுத்துதல்

**இரண்டு நண்பர்களின் நட்பை விளக்கும் வண்ணம் ஒரு கதையை 140 சொற்களில் எழுதுக.**

## குறைநீக்கல்

**காலி இடத்தில் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| விடா முயற்சியும் | பெற்றனர் | மகிழ்ச்சி | நண்பர்கள் |
| பேருந்தில் | கற்பிக்கும் | பல்கலைக்கழகம் | வெற்றிக்கு |

அகிலனும் விமலனும் இணைபிரியா ________. ஒவ்வொரு நாளும் அவர்கள் பள்ளிக்குப் ________ செல்வார்கள். பள்ளியில் ஆசிரியர்கள் ________ போது மிகுந்த கவனம் செலுத்துவார்கள். அரையாண்டுத் தேர்வு முடிவு அறிவிக்கப்பட்டது. இருவரும் சிறப்புத் தேர்ச்சி ________. அவர்களுடைய பெற்றோர் மிகுந்த ________ அடைந்தனர். மேலும், தொடர்ந்து படித்த அவர்கள் ________ சென்றனர். விருப்பப்பட்ட துறையில் பயின்று பட்டம் பெற்றனர். ________ ஒற்றுமையும் ________ வழிவகுக்கும் என்பதை நிரூபித்தனர்.

# பாடம் 4 இலக்கணம்

## உடம்படுமெய் பற்றி அறிக.

தோன்றல் விகாரம்
↓
உடம்படுமெய்
↓
யகர உடம்படுமெய் | வகர உடம்படுமெய்

### உடம்படுமெய்

நிலைமொழி ஈற்றில் உயிரெழுத்து இருந்து வருமொழி முதலில் ஏதாவது ஓர் உயிரெழுத்து இருந்தால் அவை இயல்பாகப் புணர இயலாது. அவ்விரு உயிர்களையும் உடம்படுத்துவதற்குத் (இணைப்பதற்கு) தோன்றும் மெய் எழுத்தே உடம்படுமெய்யாகும்.

**யகர உடம்படு மெய் | ய்**

நிலைமொழி ஈற்றில் இ, ஈ, ஐ முதலிய உயிர் எழுத்துகள் வந்து வருமொழி முதலில் உயிர் எழுத்து வந்தால் 'ய' கர மெய் தோன்றும்.

**எடுத்துக்காட்டு:**

காலை + உணவு = காலையுணவு
கூலி + ஆள் = கூலியாள்

**வகர உடம்படுமெய் | வ்**

நிலைமொழி ஈற்றில் இ, ஈ, ஐ அல்லாத மற்ற உயிரொலிகள் இருந்து வருமொழி முதலில் உயிர் எழுத்து வந்தால் 'வ'கர மெய் தோன்றும்.

**எடுத்துக்காட்டு:**

மா + இலை = மாவிலை
பூ + அரும்பு = பூவரும்பு

நிலைமொழி ஈற்றில் ஏகாரம் இருந்தால் வகர மெய் அல்லது யகர மெய் தோன்றும்.

**எடுத்துக்காட்டு:**

பய<u>னே</u> + இல்லை = பயனே<u>யி</u>ல்லை
(ன் + ஏ) + இ
யி

**எடுத்துக்காட்டு:**

தே + ஆரம் = தே<u>வா</u>ரம்
(த் + ஏ) + ஆ
வா


5.3.1

• தோன்றல் விகாரப் புணர்ச்சியில் வகர, யகர உடம்படுமெய் பற்றி அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

## இடுபணி 1

**வாக்கியங்களில் இடம்பெற்றுள்ள உடம்படுமெய்களை அடையாளம் காண்க. அவற்றை வகைப்படுத்துக.**

1. சிவனாலயத்தில் மணியோசை கேட்டு, ஊர் மக்கள் அனைவரும் வழிபாட்டிற்குச் சென்றனர்.
2. தோட்டத்தில் உள்ள இலைதழைகளைப் பலவாடுகள் சேர்ந்து மேய்ந்து தீர்த்தன.
3. கிளியழகில் மயங்கிய சுற்றுப்பயணி அதனை நிழற்படம் எடுத்தார்.
4. விரைந்து வந்த தீயணைப்பு வீரர்கள் தீயைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர்.



## இடுபணி 2

**கொடுக்கப்பட்டுள்ள உடம்படுமெய்களைச் சேர்த்து எழுதுக.**

1. நிலா + அழகு =
2. சே + அழகு =
3. வாழை + இலை=
4. கோ + இல் =
5. வேலை + ஆள் =
6. பூ + இதழ் =
7. வர + இல்லை =
8. தீ + அணைப்பு =
9. சே + அடி =
10. கழி + ஆட்டம்=

## இடுபணி 3

**கொடுக்கப்பட்டுள்ள சொற்களை வகைப்படுத்துக.**

1. தேயிலை
2. மாலையுணவு
3. பாவினம்
4. பிணியேது
5. பரிவோடு
6. பயமேயில்லை
7. பூவாரம்
8. மணியோசை
9. கலையாரம்
10. தனியாள்
11. மெதுவோட்டம்
12. பணியாரம்


| யகரம் | வகரம் |
|---|---|
| | |

## வாசித்து மகிழ்க.

### அதியமானும் அதிசயக் கனியும்!

அதியமான் காட்டிற்கு வேட்டையாடச் சென்றான். வேட்டை முடிந்து திரும்பும்போது ஓய்வெடுப்பதற்காக ஒரு மலையின் அடிவாரத்தில் ஒதுங்கினான்.

அம்மலையின் பிளவில் ஒரு கருநெல்லி மரம் இருப்பதை வியப்புடன் பார்த்தான். அதைவிட வியப்புத் தரும் அம்சமாக அம்மரத்தில் ஒரே ஒரு நெல்லிக்கனி மட்டும் இருப்பதைக் கண்டான். தூண்டப்பட்ட மனத்துடன் சிரமப்பட்டு மலையேறி அம்மரத்தை அடைந்து அந்த நெல்லிக்கனியைப் பறித்துக் கீழே இறங்கினான். ஒரே ஒரு கனி. நிச்சயம் அ∴து அபூர்வக் கனியாக இருக்கும் என்று அதியமானின் உள்ளுணர்வு கூறியது. அ∴து உண்மைதான் என்பதைச் சற்று நேரத்தில் அங்கு வந்து சேர்ந்த காட்டுவாசிகள் மூலம் அறிந்தான்.



இம்மரத்தில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை அதுவும் ஒரே ஒரு கனி மட்டுமே காய்க்கும். அக்கனி எல்லோரது கண்களுக்கும் தென்படாது. சித்தர்கள், முனிவர்கள் போன்றவர்களுக்குத்தான் தெரியக்கூடும் என்றெல்லாம் காட்டுவாசிகள் கூறக் கேட்டான்.

அதியமானை அக்கனியைப் புசிக்கச் சொன்னார்கள். ஆனால், அவன் தயங்கினான். தன்னுடைய நிலையைச் சற்று எண்ணிப் பார்த்தான். குறுநில மன்னனாக இருக்கும் தான் இன்னும் நிறைய ஆண்டுகள் உயிர் வாழ்வதால் பல நாடுகளை வெற்றி காண முடியும். அவ்வளவுதான். அதேசமயம் தன் வாழ்க்கையையே தேசத்திற்காக அர்ப்பணித்த எவரேனும் இக்கனியை உண்டால் மக்களுக்குப் பெரும் நன்மையாக இருக்கும் என்று நினைத்தான்.

அக்கணம் அவன் நினைவுக்கு வந்தது ஔவைப் பிராட்டிதான். அவர் தமது நாட்டிற்கு வந்து சேர்ந்த நாள் முதல் இன்றுவரை நடந்த நிகழ்ச்சிகளை எண்ணிப் பார்த்தான். ஔவை வாழ்ந்தால் தமிழ் வாழும் என்றெண்ணி அக்கனியை ஔவைக்கே கொடுத்து மகிழ்ந்தான்.



# தொகுதி 13
# மலேசியக் கொண்டாட்டங்கள்



## பாடம் 1 நோன்புப் பெருநாள்

வாசித்து அறிவிப்புச் செய்க.

### நோன்புப் பெருநாளும் திறந்த இல்ல உபசரிப்பும்



இஸ்லாம் மதத்தினர் நோன்புப் பெருநாளை மிக விமரிசையாகக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றனர். இப்பொழுது அப்பெருநாளை முன்னிட்டு காஜாங் நகரப் பொது மண்டபத்தில் நோன்புப் பெருநாள் திறந்த இல்ல உபசரிப்பு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பல்லினத்தவர்களான மலாய்க்காரர்கள், சீனர்கள் இந்தியர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டிருக்கின்றனர். மலேசியர்களின் பாரம்பரிய அறுசுவை உணவுகள் பரிமாறப்பட்டுக் கொண்டிருக்கின்றன. பிரதான மேடையில் பொது மக்களுக்கு அன்பளிப்புகளை ஏற்பாட்டுக் குழுத் தலைவர் வழங்கிக் கொண்டிருக்கின்றார். மலேசியர்கள் ஒருவருக்கொருவர் மகிழ்ச்சியாகப் பேசிக் கொண்டிருக்கின்றனர்; அன்பைப் பகிர்ந்து கொள்கின்றனர்.




இடுபணி 1

**பள்ளி அளவிலான நோன்புப் பெருநாள் விருந்துபசரிப்புப் பற்றி உன் நண்பர்களுக்கு அறிவிப்புச் செய்க.**

1.3.1 • நிகழ்ச்சியை அறிவிப்புச் செய்வர்.



இடுபணி 2

**தமிழர் திருநாள் நிகழ்ச்சி தொடர்பான குறிப்புகளைக் கொண்டு அறிவிப்புச் செய்க.**

# தமிழர் திருநாள்



**நாள்:** 15.1.2017 (ஞாயிற்றுக்கிழமை)
**நேரம்:** காலை மணி 8:00க்கு
**இடம்:** பெஸ்தாரி தேசிய இடைநிலைப்பள்ளி மண்டபம்



| | |
|---|---|
| **ஏற்பாடு:** | தமிழ்மொழிக் கழகம் |
| **நோக்கம்:** | தமிழர் பண்பாட்டை அறிய; வாழ்க்கையில் கடைப்பிடிக்க |
| **சிறப்பு வருகை:** | மாவட்டப் பண்பாட்டுக் கலை கலாச்சாரப் பிரிவுத் தலைவர் |
| **நிகழ்ச்சிகள்:** | பாரம்பரிய நடனம், பட்டி மன்றம், தோரணம் பின்னுதல், பூத்தொடுத்தல், கோலம் போடுதல், திருமுறை ஓதுதல், தமிழவேள் கோ. சாரங்கபாணி பற்றிய காணொளிக் காட்சி. |







## இடுபணி 3

**பின்வரும் தலைப்புகளில் முறையான அறிவிப்புகளைச் செய்க.**

**நிகழ்ச்சிகள்**

- தேசிய தினம்
- கோவில் திருவிழா
- தமிழ்மொழி விழா
- மலேசியர்களின் பாரம்பரிய விளையாட்டு







## இடுபணி 4

**உன் பள்ளியில் நடைபெறவுள்ள பண்பாட்டு நிகழ்ச்சியொன்றில் அறிவிப்பாளராக நீ தெரிவு செய்யப்பட்டுள்ளாய். அந்நிகழ்ச்சியை நீ அறிவிப்புச் செய்க.**

அறிவிப்பு

- அவையினருக்கு வணக்கம்
- சிறப்பு உரை
- தலைவர் உரை
- செயலாளர் உரை
- இறைவாழ்த்து
- நன்றியுரை
- சிறப்பு பிரமுகர் வருகை

## இடுபணி 5

**ஆசிரியர் தின நிகழ்ச்சியில் அறிவிப்பாளராகப் பொறுப்பேற்றுள்ள நீ, அந்நிகழ்ச்சியை அறிவிப்புச் செய்க.**

# பாடம் 2 தீபத்திருநாள்

**அறிவிப்பைக் கருத்தூன்றி வாசித்திடுக.**

தாமான் கெமிலாங் இந்து இளைஞர் மன்ற ஏற்பாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற தீபத்திருநாள் கலைநிகழ்ச்சிக்கு வருகை புரிந்திருக்கின்ற சுற்று வட்டாரப் பொதுமக்கள் அனைவருக்கும் வணக்கம். இத்தீபத் திருநாள் கலைநிகழ்ச்சி மலேசிய மக்களின் ஒற்றுமையையும் புரிந்துணர்வையும் வெளிப்படுத்துகின்ற ஒரு நிகழ்ச்சியாகும். இந்நிகழ்ச்சியில் இப்பொழுது ஒவ்வொருவரின் கைகளிலும் ஒளியேற்றப்பட்ட அகல்விளக்கு வழங்கப்படும். நீங்கள் அவற்றைக் கையில் ஏந்திக்கொண்டு மண்டபத்தைச் சுற்றி வலம் வர வேண்டும். அவ்வேளையில் ஒலிபரப்பப்படும் தீபத்திருநாள் பாடலை அனைவரும் சேர்ந்து பாடி மகிழ்வோம். அதனைத் தொடர்ந்து, அனைவரும் மண்டபத்திற்குள் சென்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பிற நிகழ்ச்சிகளைக் கண்டு களிக்கலாம் வாருங்கள்.







**இடுபணி 1**

**மேற்காணும் அறிவிப்பினைத் தக்க தொனியுடன் வாசித்திடுக.**

2.1.1

- அறிவிப்பைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர்.

## இடுபணி 2

**கொடுக்கப்பட்ட குறிப்புகளைத் துணையாகக் கொண்டு அறிவிப்பு ஒன்றைத் தயார் செய்து சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக் குறிகளுக்கேற்ப வாசித்திடுக.**

பண்பாட்டு ஆடை அலங்காரம்

- விதிமுறைகள்
- நாள், நேரம், இடம்
- கருப்பொருள்
- கால வரையறை
- பின்னணி இசை
- பங்கேற்பாளர்

## இடுபணி 3

**சீனப்புத்தாண்டு பற்றிய தகவலை வாசித்து முக்கியக் கருத்துகளை அறிந்து கொள்க.**



அன்பார்ந்த நண்பர்களே! இப்பொழுது உங்களிடம் சீனப்புத்தாண்டு பற்றிய தகவலைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். கேட்க நீங்கள் தயாரா? சீனப்புத்தாண்டின் போது கடல் நாக நடனம் அல்லது சிங்க நடனம் ஆடுவது வழக்கமாகும். சீனப் புத்தாண்டைச் சீனர்கள் பட்டாசு கொளுத்தி வரவேற்பார்கள். புத்தாண்டு அன்று தங்கள் வீட்டைப் பெருக்கிக் குப்பைகளை வெளியே தள்ள மாட்டார்களாம்! அப்படிக் குப்பைகளைப் பெருக்கித் தள்ளினால் வீட்டிற்கு வரும் செல்வத்தை இழந்து விடுவார்கள் என்பது சீனர்களின் நம்பிக்கை. மேலும் ஒரு செய்தியைச் சொல்கிறேன் கேளுங்கள்! புத்தாண்டிற்கு முதல் நாள் மாலையில் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் தங்களின் பெற்றோர் வசிக்கும் இல்லத்தில் கூடி சீனப் புத்தாண்டைச் சிறப்பாகக் கொண்டாடுவார்களாம்! பொறுமையாகக் கேட்டதற்கு நன்றி.



## பாடம் 3 நிகழ்ச்சியறிக்கை



**குழுவில் கலந்துரையாடுக.**

**டத்தோ பெண்டாஹாரா தேசிய இடைநிலைப் பள்ளியின்**
**தேசிய தினக் கொண்டாட்ட அறிக்கை** 2017

ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட் 31ஆம் தேதி நாட்டின் சுதந்திர நாளைக் கொண்டாடுவது வழக்கமாகும். தேசிய தினத்தை முன்னிட்டுக் கடந்த 15 ஆகஸ்ட் 2017இல் பள்ளி அளவிலான சுதந்திரநாள் கொண்டாட்டம் தொடங்கியது.

இறைவாழ்த்துடன் இந்நிகழ்ச்சி தொடங்கியது. அதனைத் தொடர்ந்து, தேசியப் பண் பள்ளித் தலைமை மாணாக்கர் உரை, செல்வன் பா. நகுலனின் தேசியமொழிக் கவிதை படைப்புடன் நிகழ்ச்சி தொடர்ந்தது. அதன் பிறகு பள்ளி முதல்வர் புவான் மைமூன் பிந்தி முகம்மது அவர்களைத் துவான் ஹாஜி அன்வர் பின் எம்போங் உடன் அழைத்து வர மலாய்ப் பாரம்பரிய 'கொம்பாங்' இசை முழங்க நிகழ்ச்சி அதிகாரப்பூர்வமாகத் தொடங்கியது.

இவ்வட்டார மூத்த குடிமக்களின் பிரதிநிதியாக திரு. திலகன் அவர்கள் சுதந்திரநாள் உரையை மாணவர்களிடையே ஆற்றினார். உரையில் நமது முன்னோர்களின் அர்ப்பணிப்பு, போராட்டம், உயிர், பொருள் இழப்புகளின் மூலம் சுதந்திரம் பெற்றதாகக் கூறினார். ஆகவே, போராடிப் பெற்ற சுதந்திரத்தைத் தக்க வைத்துக்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

'சுதந்திரப் போராட்டம்' எனும் தலைப்பிலான குறும்படம் திரையிடப்பட்டது. இதன் மூலம் மாணவர்கள் நமது முன்னோர்களின் சுதந்திர அர்ப்பணிப்புப் போராட்டங்களை அறியும் வாய்ப்புக் கிட்டியது. சுதந்திர உணர்வும் நாட்டுப் பற்றும் மாணவர்களின் முகங்களில் பளிச்சிட்டதைக் காண முடிந்தது.

இறுதியாக, இவ்வாறான நிகழ்ச்சிகள் ஒவ்வோர் ஆண்டும் தொடர்ந்து நடத்தப்பட வேண்டும். மாணவ மனங்களில் என்றும் சுதந்திர உணர்வினை நிலைப்படுத்த வேண்டும். அனைத்து இடங்களிலும் தேசியக் கொடியைப் பறக்க விடுவோம்.
'வேற்றுமை களைவோம்; ஒற்றுமை வளர்ப்போம்.'

அறிக்கை தயாரித்தவர், 20 ஆகஸ்டு 2017

**மதி. ஆதிரை**

*(மதி. ஆதிரை)*
ஏற்பாட்டுக் குழுச் செயலாளர்,

3.4.1
- 140 சொற்களில் நிகழ்ச்சியறிக்கை எழுதுவர்.

## இடுபணி 1

**அறிக்கையில் ஒவ்வொரு பத்தியிலும் கூறப்பட்ட கருத்துகளைச் சுருக்கமாக எழுதுக.**

| பத்தி | கருத்துகள் |
|---|---|
| பத்தி 1 | |
| பத்தி 2 | |
| பத்தி 3 | |
| பத்தி 4 | |
| பத்தி 5 | |

## இடுபணி 2

**சுற்றுலா பற்றிய அறிக்கை எழுதுக.**

அண்மையில் உன் பள்ளியின் வரலாற்றுக் கழகம் மலாக்கா மாநிலத்திற்குச் சுற்றுலா ஒன்றை ஏற்பாடு செய்தது. தமிழ்மொழிக் கழகச் செயலாளர் என்னும் முறையில் உன் பள்ளியின் வரலாற்றுக் கழக ஆசிரியருக்கு அச்சுற்றுலா குறித்து ஓர் அறிக்கை எழுதுக.

கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைப் பயன்படுத்துக.

- சுற்றுலாவின் நோக்கம் - நம் நாட்டு வரலாற்று இடங்களைச் சுற்றிப்பார்த்தல்
- சுற்றுலாவில் கலந்து கொண்ட மாணவர்கள், ஆசிரியர்கள் எண்ணிக்கை
- சுற்றிப் பார்த்த இடங்கள் - மலாக்கா பொருள் காட்சியகம், ஆ பாமோசா கோட்டை, டச்சுக்காரர்களின் சிகப்புக் கட்டிடம்.
- முடிவு - சிறப்பான பயன்மிக்கச் சுற்றுலாவாக அமைந்தது.

## இடுபணி 3

**பள்ளியில் நடைபெற்று முடிந்த 'பொங்கல் விழா' நிகழ்ச்சியறிக்கையை 140 சொற்களில் எழுதுக.**

### அறிந்துகொள்க

**அறிக்கையின் கூறுகள்**
- தலைப்பு
- கருத்துப் பகுதி
- பத்தி அமைப்பு
- அறிக்கை தயாரித்தவர்
- கையொப்பம்
- பெயர்
- பதவி, மன்றத்தின் பெயர்
- தேதி

## வளப்படுத்துதல்

**நிகழ்ச்சியறிக்கை ஒன்றை இணைய அகப்பக்கத்திலிருந்து பதிவிறக்கம் செய்து எழுதுக. கொடுக்கப்பட்ட தலைப்புகளுள் ஏதேனும் ஒன்றைப் பற்றியதாக அமைய வேண்டும்.**

- **ஒரே மலேசியா நடவடிக்கைகள்**
- **மாவட்டப் பண்பாட்டு விழாக்கள்**
- **திறந்த இல்ல உபசரிப்புகள்**

**இணையத் தளம்**
http://www.kkmm.gov.my/index.php?option=com_content&view=article&id=322&Itemid=127&lang=ms

## குறைநீக்கல்

**நிகழ்ச்சியறிக்கையை வாசித்து, காலி இடத்தில் ஏற்ற சொல், சொற்றொடரைத் தெரிவு செய்து எழுதுக.**

தைரியமாக | நிறைவடைந்தது | அவசியத்தை | தொடக்கி வைத்தார் | நடைபெற்றது

**பீடோங் இளைஞர் மன்ற தன்முனைப்புக் கருத்தரங்கின் நிகழ்ச்சியறிக்கை**

கடந்த ஞாயிற்றுக்கிழமை 19ஆம் தேதி பிப்ரவரி மாதம் 2017 அன்று மாலை மணி ஆறுக்கு பீடோங்கில் அமைந்துள்ள இளைஞர் மன்றத்தில் தன்முனைப்புக் கருத்தரங்கு ஒன்று __________ .

இக்கருத்தரங்கை இளைஞர் மன்றத்தின் தலைவர் திரு. ச. அருள் அவர்கள் குத்துவிளக்கேற்றித் __________ . பிறகு, அனைவரும் எழுந்து நின்று இறைவாழ்த்துப் பாடினர்.

மாலை மணி 6:40க்குத் திரு.மு.கணேசன் அவர்களின் உரை இடம்பெற்றது. திரு.மு.கணேசன் அவர்கள் மாணவர்களுக்குக் கல்வியின் __________ வலியுறுத்தினார். தேர்வெழுதும் போது மாணவர்களுக்குச் சிந்தனையைக் கட்டுப்படுத்தும் யுத்திகளையும் கற்றுக் கொடுத்தார். தேர்வெழுதும் போது __________ இருக்க வேண்டியதன் அவசியத்தை அவர் தமதுரையில் வலியுறுத்தினார்.

இரவு மணி எட்டுக்கு இந்நிகழ்ச்சிக்கு முக்கியப் பிரமுகராக வந்திருந்த திரு. வே. துரை அவர்களின் உரைக்குப் பின்பு இந்நிகழ்ச்சி தேநீர் விருந்துடன் __________ .

அறிக்கையைத் தயாரித்தவர்,

திவியா

...................................

27 பிப்ரவரி 2017

ச. திவியா
செயலாளர்,
இளைஞர் மன்றம்,
பீடோங்.

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## திருக்குறளையும் பொருளையும் அறிக.

சிவகாமி படிவம் ஒன்றில் பயிலும் மாணவி. அவளுடன் மலர்விழி, தாமரை, வளர்மதி ஆகியோர் நண்பர்களாகப் பழகி வந்தனர். அரையாண்டுத் தேர்வு நெருங்கிவிட்டதால் அவர்கள் நால்வரும் போட்டி போட்டுக்கொண்டு படித்தனர். சிவகாமி தான் மட்டுமே எப்பொழுதும் முதல் நிலையில் இருக்க வேண்டும் என்று எண்ணம் கொண்டாள். தன்னை யாரும் விஞ்சிவிட முடியாது என்று ஆணவம் கொண்டிருந்தாள். தேர்வுக்குப் பின் முடிவுகள் அறிவிக்கப்பட்டன. சிவகாமியை விட மலர்விழியும் மற்ற நண்பர்களும் சிறந்த மதிப்பெண்களைப் பெற்றிருந்தனர். அதனால் சிவகாமிக்குத் தன் நண்பர்கள் மீது பொறாமை ஏற்பட்டது. அவர்களுடன் நெருங்கிப் பழகுவதைத் தவிர்த்தாள். ஒரு முறை தாமரை சிவகாமியிடம் பாடம் தொடர்பான சந்தேகத்தைக் கேட்டாள். சிவகாமி கோபத்துடன் அவ்விடத்தை விட்டுச் சென்று விட்டாள். மேலும், தாமரையைக் கடுமையான வார்த்தைகளால் திட்டிவிட்டாள். மனம் நொந்து போன தாமரை மறுநாள் மலர்விழியிடமும் வளர்மதியிடமும் கூறி மனம் வருந்தினாள்.




சில மாதங்கள் கழித்து ஆண்டு இறுதித்தேர்வு நெருங்கியது. சுயநலத்தின் காரணமாகச் சிவகாமி ஆசிரியர் அறையினுள் சென்று, ஆசிரியர் தயாரித்து வைத்திருந்த தேர்வுத்தாளை யாருக்கும் தெரியாமல் எடுத்து வந்தாள். அதை அறிந்த ஆசிரியர் சிவகாமியைக் கண்டித்தார். “சிவகாமி, நீ செய்வது பெரிய துரோகம். இனி, இது போன்று நடந்து கொள்ளாதே,” என்றார். சிவகாமி விரக்தியால் மிகுந்த கோபம் கொண்டாள். உடனே ஆசிரியர்

**அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்**
**இழுக்கா இயன்றது அறம். (35)**

என்று கூறி அறிவுரை கூறினார். சிவகாமி தனது தவற்றை உணர்ந்து வருந்தினாள்; ஆசிரியரிடமும் தோழிகளிடமும் மன்னிப்புக் கேட்டாள்.

| திருக்குறளும் பொருளும் |
|---|
| **அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்<br>இழுக்கா இயன்றது அறம். (35)** |
| பொறாமை, பேராசை, கோபம், கடுஞ்சொல் ஆகிய நான்கும் இல்லாமல் செய்கின்ற செயல்களே நற்காரியம் எனக் கருதப்படும். |

## இடுபணி 1

**திருக்குறளை மனனம் செய்து ஒப்புவித்துப் பொருள் எழுதுக.**

4.2.1

• ஒன்றாம் படிவத்திற்கான திருக்குறளையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

## தொகுதி 14

# பாதுகாப்பு வேண்டும்

## பாடம் 1 வாழ்ந்து காட்டுவோம்

குழுவில் கலந்துரையாடுக.

இளவயதில் பிள்ளைகளுக்குச் சீரான உணவுப் பழக்கத்தையும் உடல்நலம் பேணும் உடற்பயிற்சிகளையும் கற்றுத்தர வேண்டும். மேலும், இறை நம்பிக்கை, நன்னெறிப் போதனைகள் வழங்க வேண்டும்.

இறுதிக்காலத்தில் அன்பான குழந்தைகளுடனும் பேரப்பிள்ளைகளுடனும் மகிழ்ச்சியாகவும் நிம்மதியாகவும் வாழ வேண்டும். இறைஞானம் பெற்றுப் பிறவிப்பயனை எய்த வேண்டும்.



இல்லற வாழ்க்கையில் நுழையும் பொழுது மகிழ்ச்சியும் செல்வமும் தேவை. அடிப்படைத் தேவைகளைப்பெற அயராமல் உழைக்க வேண்டும்.

கல்வி எதிர்கால வாழ்க்கைக்கு அடித்தளமாக விளங்குகிறது. தொடக்கக்கல்வி, இடைநிலைக்கல்வி, உயர்நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆகியவற்றைப் படிப்படியாகப் பெறச் செய்ய வேண்டும்.

இடுபணி 1


**மேற்காணும் கருத்துகளை நிரல்படுத்திக் குழுவில் உரையாடுக.**

1.1.1

• செவிமடுத்தவற்றிலுள்ள கருத்துகளை நிரல்படக் கூறுவர்.

## இடுபணி 2

**தேர்வு வழிகாட்டிப் பட்டறையில் கலந்துகொண்டு பெற்ற அனுபவங்களைப் படங்களின் துணையுடன் நிரல்படக் கூறுக.**

















## இடுபணி 3

**ஆரோக்கியமான வாழ்க்கை வாழ்வதற்கு ஒருவர் காலை முதல் இரவு வரை கடைப்பிடிக்க வேண்டிய பொதுவான செயல்திட்டங்களை நிரல்படுத்துக.**

| | |
|---|---|
| காலை | எ.கா.: வைகறையில் துயில் எழ வேண்டும். ______________ |
| நண்பகல் | ______________ |
| மாலை | ______________ |
| இரவு | ______________ |

## பாடம் 2 பாரம்பரிய நடனங்கள்



### வாசித்து அறிக.

**பரதநாட்டியம்**

தமிழர்களின் மிகத் **தொன்மையான** கலைகளுள் ஒன்று பரதக்கலையாகும். இஃது ஈராயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய வரலாற்றுச் சிறப்பைக் கொண்டது. இதனை ஆடல் நாட்டியம், சின்ன மேளம், சதிர் எனப் பல பெயர்களில் அழைக்கின்றனர். பரதநாட்டியம் என்ற சொல்வழக்கு பிற்காலத்தில் வந்தது. பழந்தமிழர் இக்கலையைக் கூத்து என்று அழைத்தனர். ஆடல், நாட்டியம், நாடகம் என்று குறிப்பிட்டார்கள். கூத்துக்கலையை **வாழ்வாதாரமாகக்** கொண்ட ஆண்பாலரைக் ‘கூத்தர்’ என்றும் பெண்பாலரைக் ‘கூத்தியர்’ என்றும் சிலரை விறலியர் என்றும் அழைத்தனர். இவர்கள் ஆடிப்பாடி அபிநயங்கள் செய்து மன்னரையும் மக்களையும் மகிழ்வித்தனர். பரிசாகப் பொன்னும் பொருளும் பெற்று வாழ்ந்தனர்.

பரதநாட்டியத்தில் **அபிநயம்** மிக முக்கியமானது. பாடலில் வரும் உணர்ச்சிகளை முகத்திலும் அங்க அசைவுகளிலும் உணர்த்துவது அல்லது காண்பிப்பது அபிநயம் ஆகும். கைகளால் காட்டப்படும் அபிநயத்தை ‘முத்திரை’ என்பார்கள். ஒவ்வொரு முத்திரைக்கும் தனித்தனிப் பெயர் உண்டு. பிற ஆட்டக்கலைகளுக்கும் பரதநாட்டியக்கலைக்கும் உள்ள வேறுபாடு முக்கியமாக அபிநயத்திலேதான் இருக்கிறது.

ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாரத்தில் மாதவி ஆடிய கூத்தும், கோயில் **கல்வெட்டுகளிலும்** சிற்பங்களிலும் காணப்படும் கூத்தும் ஒன்றே. பண்டைய காலத்தில் இக்கலையில் மிக்க தேர்ச்சி பெற்றவருக்குத் ‘தலைக்கோலி’ என்ற பட்டமும் வழங்கப்பட்டு வந்தது. தமிழ் மன்னர்கள் பலர் இக்கலையைப் போற்றி வளர்த்தனர்.

இன்று உலக நாடுகளில் வாழும் தமிழர்கள் பரதநாட்டியத்தை **ஆர்வத்தோடு** கற்று வருகின்றனர். மேலை நாட்டவரும் இக்கலையைப் பயில்கின்றனர். இக்கலை உலக மக்களிடையே நல்ல வரவேற்பு பெற்று, நாளுக்கு நாள் **பிரபலமடைந்து** வருகிறது.

- கலைக்களஞ்சியம்.

### இடுபணி 1

**அகராதியின் துணையுடன் வண்ணமிடப்பட்ட அருஞ்சொற்களுக்குப் பொருள் காண்க.**

2.3.3

- கலை தொடர்பான உரைநடைப் பகுதியை வாசித்துக் கருத்துணர்க் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.

## இடுபணி 2

**வினாக்களுக்கு விடை காண்க.**

1. பரதக்கலையின் வரலாற்றுச் சிறப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ள சான்று யாது?
2. பரதநாட்டியத்தை வேறு சில பெயர்களில் அழைக்கின்றனர். அவற்றைக் குறிப்பிடுக.
3. அபிநயம் என்றால் என்ன? எழுதுக.
4. பரதநாட்டியம் பற்றிச் சிலப்பதிகாரக் காலத்தில் கூறப்பட்ட செய்தி யாது?
5. எதிர்காலத்தில் பரதக்கலையின் நிலை என்ன?

**அறிந்துகொள்க**

பரதம் என்ற வார்த்தை

ப- பாவம்
ர- ராகம்
த - தாளம்
ம் - சுருதி

பாரத தேசத்தில் முதன் முதலாகத் தோன்றியதால் பரதம் என்று அழைக்கப்படுகின்றது.

## இடுபணி 3

**கீழ்க்காணும் தமிழர்களின் கலைகளைப் பற்றி இணைய அகப்பக்கங்களில் கண்டு, வாசித்துக் குறிப்புகளைத் திரட்டேடாகத் தயார் செய்க.**

தமிழர் கலைகள்


இசைக் கலை


சிற்பக் கலை


நாடகக் கலை


மருத்துவக் கலை

**இணையத் தளம்**

http://www.tamilvu.org/library/lA417/html/lA417con.htm

## இடுபணி 4

**பின்வரும் பனுவலில் உள்ள இரண்டு வகை ஆட்டங்களிலும் காணும் ஒற்றுமை வேற்றுமைகளைப் பொருத்தமான சிந்தனைவரைவில் எழுதுக.**

### பொம்மலாட்டம்



பொம்மலாட்டம் தமிழர்களின் மிகப் பழைமையான கலைகளில் ஒன்றாகும். இக்கலை கூத்து வகையைச் சார்ந்தது. இது மரத்தால் செய்யப்பட்ட பொம்மைகளில் நூலைக்கட்டி திரைக்குப் பின்னால் இருந்து இயக்கியபடி சொல்லும் ஒரு சுவையான கலை நிகழ்ச்சி. இக்கலையை மரப்பாவைக்கூத்து, பாவைக்கூத்து என்றும் அழைப்பர். உலகில் பல்வேறு இடங்களில் இக்கலை மரபுவழிக் கலையாகத் திகழ்கிறது.

பொம்மலாட்டத்தில் இதிகாசம், புராணக் கதைகள், சரித்திரக் கதைகள் போன்றவை அதிகமாக நிகழ்த்தப்படும். பொம்மலாட்டத்தில் மொத்தம் ஒன்பது கலைஞர்கள் பங்கேற்பார்கள். இவர்களில் நான்கு கலைஞர்கள் பொம்மைகளை இயக்குவார்கள். இன்னும் நால்வர் இசைக்கலைஞர்களாக இருப்பார்கள். இசைக்கருவிகளும் இக்கலை நிகழ்த்தப் பயன்படுத்தப்படும். இக்கலைக்குப் பயன்படும் பொம்மைகளைக் கல்யாண முருங்கை அல்லது முருங்கை மரத்திலிருந்து செய்கிறார்கள்.

### கரகாட்டம்



கரகாட்டம் தமிழர்களின் பாரம்பரிய ஆட்டங்களுள் ஒன்றாகும். பானை வடிவத்தில் கமண்டலத்தைப் போன்று இருப்பதைக் கரகம் என்கிறோம். இதனைத் தலையில் வைத்து ஆடுவார்கள். கரகாட்டத்தைக் குடக்கூத்து என்று சங்க காலத்தில் குறிப்பிட்டனர். கரகத்தைத் தலையில் வைத்துக் கொண்டு நையாண்டி மேள இசைக்கு ஏற்ப கரகம் கீழே விழாதவாறு சமநிலை பேணி ஆடும் ஆட்டம் கரகாட்டமாகும். கரகம் என்ற சொல்லுக்குக் கமண்டலம், பூக்குடம், கும்பம், செம்பு, நீர்க்குடம் என்று பல பெயர்கள் உள்ளன.

பல விதங்களில் கரகம் அலங்கரிக்கப்பட்டு இசை முழக்கத்திற்கு ஏற்றவாறு ஆடப்படுகின்றது. மண்ணால் செய்யப்படும் கரகத்திற்குத் தோண்டிக் கரகம் என்றும், பித்தளையால் செய்யப்படும் கரகத்தைச் செம்புக்கரகம் என்றும் அழைக்கின்றனர். தெய்வ வழிபாட்டிற்கு ஆடும் கரகத்தைச் சக்திகரகம் எனவும், தொழில்முறை கரகத்தை ஆட்டக்கரகம் என்றும் அழைப்பர். இக்கரகாட்டத்திற்கு நையாண்டி மேளம், உடுக்கை, சத்துக்குழல், செண்டை போன்ற கருவிகள் இசைக்கப்படுகின்றன.

## இடுபணி 5

**வினாக்களுக்கு விடை எழுதுக**

அ. பொம்மலாட்டக்கலை எவ்வாறு படைக்கப்படுகின்றது?
ஆ. கரகாட்டத்தின் சிறப்புகளை விளக்கி எழுதுக.


# பாடம் 3 துளிர்ந்தது நட்பு

**கீழ்க்காணும் கதையைக் கருத்தூன்றி வாசிக்கவும்.**

காற்று பலமாக வீசியது. ரப்பர் இலைகள் **உதிர்ந்து** காற்றில் மிதந்து மெல்ல மெல்ல மண்ணில் **அடைக்கலமாயின.** திடலில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள் ஓடி வந்தனர். காசு கொட்டுது!... காசு... காசு... கொட்டுது! கூவியபடி ஓடி ஓடி இலைகளைப் பிடித்தனர். பெரிய ரப்பர் இலைகள் அவர்களுக்குப் பணமானது. சுட்டெரிக்கும் வெயில் அவர்களின் **களிப்பிற்குத்** தடையாக இல்லை.

ஆசை இருந்தும் அவர்களின் ஆட்டங்களில் கலந்து கொள்ளாமல் ஒதுங்கி நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான் கதிரவன். அவர்களைப் போல் ஆடவும் ஓடவும் கூச்சலிடவும் அவன் மனத்தில் கொள்ளை ஆசைதான். ஆனால், யாரும் அவனைச் சேர்த்துக் கொள்ள மாட்டார்களே! "அவனா! முரட்டுப் பையன்!" என்பான் முரளி. "அய்ய, அழுக்குப் பிடிச்சவன்!" என்பான் ஆனந்தன். குழுத் தலைவன் குணாவோ, "டேய்! அவன் நம்ம எதிரிடா! தெரியுமா...?" என்பான். மொத்தத்தில் இவர்களின் விளையாட்டில் கதிரவன் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டான்.

மீண்டும் காற்று வீசியது. இலைகளைப் பிடிக்க மாணவர்கள் ஓடினார்கள். அவ்வேளை ஒரு மோட்டார் சைக்கிள் **புழுதியை** வாரி இறைத்துவிட்டுக் கடந்து சென்றது. "காசு கொட்டுது..! பிடி, பிடி!" என்று **கூவியபடி** ஓடிய குணா சட்டென்று நின்றான். கண்களில் தூசு விழுந்துவிட்டது. குணா கண்களைக் கசக்கிக்கொண்டு நின்றான். அதைப்பார்த்த கதிரவன் சிரித்தான். கதிரவனின் சிரிப்பு குணாவுக்குக் கடுங் கோபத்தை மூட்டியது. கண் **உறுத்தலைவிட** கதிரவனின் மேல் உண்டான கோபத்தீ **மேலோங்கி** நின்றது. கீழே கிடந்த கல்லை எடுத்துக் கொண்டு கதிரவனை நோக்கி ஓடினான் குணா. வேகமாய் ஓடிவந்த குணா, **குறுகலான** மரப்பாலத்தில் கால் தடுக்கிக் கால்வாய்க்குள் விழுந்துவிட்டான்.



கதிரவன் ஓடிச் சென்று கால்வாயில் குதித்த குணாவைத் தூக்க முடியாமல் தூக்கிக்கொண்டு கரையேற்றினான். கதிரவன் குணாவின் மேல் ஒட்டியிருந்த சேற்றைத் தட்டித் துடைத்துவிட்டான். குணா நன்றிப் பெருக்குடன் கதிரவனின் முகத்தை நோக்கினான். இதுநாள் வரை அந்த இள உள்ளங்களில் மூண்ட பகை அப்போது அணைந்து போயிருந்தது. நட்பு அங்கே துளிர்விட்டது.

3.4.7

- 140 சொற்களில் கதை எழுதுவர்.

## இடுபணி 1

**கதையில் வண்ணமிடப்பட்ட சொற்களுக்கு அகராதியின் துணையுடன் பொருள் எழுதுக.**

1. இக்கதையின் வழி நீ அறியும் படிப்பினை யாது?
2. இக்கதை உணர்த்தும் படிப்பினை எவ்வாறு வாழ்க்கைக்கு உதவுமென நீ நினைக்கிறாய்?

## இடுபணி 2

**கொடுக்கப்பட்டுள்ள தொடக்கத்தைக் கொண்டு 140 சொற்களில் ஒரு கதை எழுதுக.**

எத்தனை முறை எண்ணினாலும் என் முன் அதே ஏழு கம்பிகள்தான் தெரிந்தன. “கடவுளே! எனக்கு மட்டும் ஏன் இந்த நிலை? மனத்துக்குள் கண்ணீர் வடித்தான் வேலன். அன்று என்னுடன் மணியன், பூவரசன், தேவன் எல்லாரும் இருந்தார்களே! இன்று நான் மட்டும் இங்கே... கண்கள் குளமாகி நீரை வார்த்தன. அன்று மட்டும் அப்பாவின் சொல்லைக் கேட்டிருந்தால்...

## வளப்படுத்துதல்

**தவறு செய்கின்ற நண்பர்களை எவ்வாறு திருத்தலாம் என்ற சிந்தனையை மையமாக வைத்து ஒரு கதை எழுதுக.**

## குறைநீக்கல்

**கொடுக்கப்பட்ட கதையின் தொடக்கப் பகுதியை நிரல்படுத்தி எழுதுக.**

மீண்டும் சத்தம் பலமாகக் கேட்டது. எனக்குப் பயம் மேலோங்கியது. என்ன செய்வது என்று திகைத்துக் கொண்டிருந்தேன்.


நான் பயத்துடன் அமர்ந்திருந்தேன். அப்பாவுக்குத் தொலைபேசி வாயிலாகத் தொடர்பு கொண்டேன். ஆனால், என் கெட்ட நேரம் தொலைபேசி இயங்கவில்லை.

அன்று சனிக்கிழமை இரவுப் பொழுது. என் பெற்றோர் திருமண விருந்துக்குச் சென்று விட்டனர். நான் மட்டும் வீட்டில் தனியாக இருந்தேன். அப்போது யாரோ கதவைத் தடதடவென வேகமாகத் தட்டும் சத்தம் கேட்டது.

மனத்தில் தைரியத்தை வளர்த்துக் கொண்டேன். இறைவனை நன்கு பிரார்த்தனை செய்தேன். மனத்தை அமைதிப்படுத்தினேன். கதவை நோக்கிச் சென்றேன்.

# பாடம் 4 இலக்கணம்

## காரணப்பெயர், இடுகுறிப்பெயர் அறிக




சகுந்தலை: இடுகுறிப்பெயரைப் பற்றிக் கூற முடியுமா அக்கா?

அக்கா: நம் முன்னோர்கள் எந்தப் பொருளும் கருதாமல் ஒரு பொருளுக்குக் குறியீடாக இட்ட பெயரே இடுகுறிப் பெயராகும்.

சகுந்தலை: நன்றி அக்கா.

### அறிந்துகொள்க

<u>காரணப்பெயர்</u>

ஒரு பொருளுக்குக் காரணத்தோடு இடப்பட்ட பெயர்

எ.கா: பறவை
நாற்காலி
வானூர்தி
காற்றாடி

<u>இடுகுறிப்பெயர்</u>

ஒரு பொருளுக்கு ஏதொரு காரணமுமின்றித் தொன்று தொட்டு வழங்கி வரும் பெயர்

எ.கா: மண்
கல்
நீர்
புல்

5.2.1

• காரணப்பெயர், இடுகுறிப்பெயர் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

## இடுபணி 1

**வாக்கியங்களில் காணும் காரணப்பெயர், இடுகுறிப்பெயர் ஆகியவற்றை அடையாளங்கண்டு கூறுக; எழுதுக.**

1. முகிலன் பள்ளிக்குப் புதிய காலணியை அணிந்து சென்றான்.
2. குளத்தில் நீர் வற்றியதால் மீன்கள் இறந்து கிடந்தன.
3. மாடு திடலில் புல் மேயும் பொழுது பறவையொன்று அதன்மீது வந்தமர்ந்தது.
4. தொழில்நுட்பக் கோளாறினால் வானூர்தி காட்டில் விழுந்து சிதறியது.
5. பொன்னாங்கண்ணி கீரையைக் கடைந்து அம்மா கறி சமைத்தார்.
6. அடைமழை பெய்ததால் வெள்ளம் ஏற்பட்டது.

## இடுபணி 2

**சொற்களை அவற்றின் வகைக்கு ஏற்ப பட்டியலில் எழுதுக.**

கணித்தான் இறைவன் மலர் நாற்காலி மொழி கல்
தொழில் முடக்கத்தான் மரம் படையல் வயிறு வளையல்
மண் நீர் மணல் காற்றாடி அணிகலன்
பல் வட்டை

| காரணப்பெயர் | இடுகுறிப்பெயர் |
|---|---|
| ____________ | ____________ |
| ____________ | ____________ |
| ____________ | ____________ |
| ____________ | ____________ |
| ____________ | ____________ |

## இடுபணி 3

**வாக்கியம் அமைத்திடுக.**

| | | | |
|---|---|---|---|
| 1. ஆழி | 3. வரைபடம் | 5. பேருந்து | 7. மண் |
| 2. விதைத்தான் | 4. பறந்தன | 6. கல்வி | 8. நீர் |

## வாசித்து மகிழ்க.

### காவடியாட்டம்



காவடியாட்டம் என்பது முருக வழிபாட்டுடன் தொடர்புடைய ஓர் ஆட்டமாகும். இந்த ஆட்டத்தில் ஆடுபவர் காவடியைத் தோளில் வைத்துக் கொண்டு ஆடுவது வழக்கம். கோவில்களில் காவடி எடுப்பது இளவயதினர் முதல் பெரியவர் வரை எனப் பலரும் பங்கேற்கும் ஒன்றாகும். நேர்த்திக்கடன் செலுத்துவதற்காகவும் காவடி எடுக்கும் முறை வழக்கமாகிவிட்டது.

காவடியாட்டத்தைத் தைப்பூசத் தினத்தன்று காணலாம். காவடி என்பது காவாகச் சுமக்கப்படும் திருவடி. கா என்பது இருபுறமும் தொங்கும் சுமை எனப் பொருள்படும். காவடியாட்டம் எனப்படுவது காவடி ஆட்டம் என்னும் இரு சொற்களின் சேர்க்கையால் உருவானதாகும். மேலும் காவடி எனும் சொல் காவுதடி என்பது மருவி உருவானதாகக் கருதப்படுகின்றது. சுமை காவுபவர்கள் இலகுவாகச் சுமக்க ஒரு நீண்ட தடியின் இரு முனைகளிலும் தொங்கவிட்டு அத்தடியின் நடுப்பகுதியைத் தோளில் சுமந்து செல்வர். காவுவதற்கான தடி எனும் பொருள்பட இத்தடியைக் காவுதடி என அழைப்பர். நீளமான தடியின் இரு முனைகளில் பால், தேன் அல்லது இளநீர் நிரப்பிய குடங்களைத் தொங்கவிட்டுக் காவடியைத் தூக்கிச் செல்கின்றனர். சிலர் வெள்ளியால் செய்யப்பட்ட சிறு வேல்களை ஒரு கன்னத்திலிருந்து மறு கன்னத்தினூடாகக் குத்தியும் காவடி எடுப்பர். இம்முறை ‘அலகு குத்துதல்’ என்று அழைக்கப்படுகின்றது.

காவடி ஆட்டத்திற்கான பின்னணி இசைக் கருவிகளாக நாதசுரமும் தவிலும் விளங்குகின்றன. நாதசுரத்தில் காவடிச் சிந்து இசையை வாசிக்கக் காவடியாட்டம் ஆடுவது மரபானது. தற்காலத்தில் ஆடுவதற்கு ஏற்றதாக அமையக்கூடிய சினிமாப் பாடல்களையும் இசைத்துக் காவடியாட்டம் ஆடுகின்றனர்.

காவடிகளில் பால் காவடி, பன்னீர்க் காவடி, மச்சக் காவடி, சர்ப்பக் காவடி, பறவைக் காவடி, தூக்குக் காவடி எனப் பலவகை காவடிகளைக் கூறலாம். கைகளைப் பயன்படுத்தாமல் காவடியை ஒரு தோளிலிருந்து இன்னொரு தோளுக்கும், தோளிலிருந்து பின்கழுத்துப் பிடரிக்கும், பிடரியிலிருந்து தலை உச்சிக்கும் ஏறி ஆட வைத்துக் காட்டிப் பின்னர் இறங்கி ஆடச் செய்து காவடிக் கலைஞர்கள் தங்களின் திறமைகளை வெளிப்படுத்துவர். இவ்வகையில் காவடி ஒரு வகை விளையாட்டுமாகும்.

ஒவ்வோர் ஆண்டும் தைப்பூசத் திருவிழாவின்போது நாம் காணும் இந்தக் காவடியாட்டம் வெளிநாட்டவரையும் ஈர்த்துள்ளது. அதிகமான வெளிநாட்டுச் சுற்றுப் பயணிகள் இக்காலங்களில் நம் நாட்டிற்கு வருகை புரிவதன் முக்கிய நோக்கங்களில் காவடியாட்டத்தைக் காண்பதும் ஒன்று. சிலர் காவடிகளைத் தூக்கி அனுபவங்களையும் பெற்றுச் செல்வது இவ்வாட்டத்திற்குக் கிடைக்கும் மதிப்பாகவே கருதப்படுகின்றது.

# தொகுதி 15

# மனிதநேயம்

## பாடம் 1 சிறார் வதை

குழுவில் கலந்துரையாடுக.




| | | | |
|---|---|---|---|
| தாய் | தந்தை | வளர்ப்புத் தாய் | பிறர் |
| வளர்ப்புத் தந்தை | பணிப்பெண்கள் | உறவினர்கள் | |


1.5.1

• குறிவரைவிலுள்ள தகவல்களையொட்டிக் கருத்துரைப்பர்; முடிவு கூறுவர்.

## இடுபணி 1

**கொடுக்கப்பட்டுள்ள வட்டக்குறிவரைவிலுள்ள தகவல்களையொட்டிக் கருத்துரைத்திடுக; முடிவு கூறுக.**

2015ஆம் ஆண்டு சிறார்வதைச் சம்பவங்களுக்கான காரணங்கள்




- சமூக நல இலாகா 2016

## இடுபணி 2

**வட்டக்குறிவரைவை ஒட்டிய வினாக்களுக்கு விடை கூறுக.**

1. மேற்காணும் வட்டக்குறிவடிவம் எதனைப் பற்றியது?
2. சிறார்வதைச் சம்பவங்களுக்குக் காரணங்களாகக் கொடுக்கப்பட்ட கூறுகள் யாவை?
3. அதிகமான சிறார்வதைச் சம்பவங்களுக்குக் காரணமாக இருப்பது யாது?
4. ஏன் சிறார்வதைக்குக் குடும்பச் சண்டை முக்கியக் காரணமாக விளங்குகிறது?
5. பணிப்பெண்களை வீட்டில் வேலைக்கு அமர்த்துவது பற்றி உமது கருத்து என்ன?

# பாடம் 2 பரிவுமிக்க சமுதாயம்

## வாசித்து அறிக.

மலேசியா ஒரு மக்களாட்சி நாடு. பல்லின மக்களிடையே காணப்படும் ஒற்றுமை, சகிப்புத்தன்மை, நல்லிணக்கம் போன்றவற்றால் நாடு அமைதியுடனும் சுபிட்சத்தோடும் பீடுநடை போடுகின்றது. இதுபோன்ற நற்குணங்கள் மக்களிடையே இருப்பது அவசியம். இல்லையேல் அடுத்த தலைமுறையினர் சிக்கல்களை எதிர்கொள்வர்.

'ஊருடன் கூடி வாழ்' என்பது அனைத்துச் சமயங்களிலும் வலியுறுத்தப்படும் கருத்தாகும். ஒரு மனிதனால் தனித்து வாழ இயலாது. சமுதாயத்தோடு இணைந்து வாழும்போதுதான் வாழ்க்கை முழுமை பெற்றதாக அமையும். பல்லின மக்கள் கொண்ட நம் நாட்டில் மதித்தல், உதவுதல், விட்டுக் கொடுத்தல் போன்ற நற்பண்புகள் அவசியமாகிறது. இதன் மூலமே பரிவுமிக்க சமுதாயத்தை உருவாக்கிட முடியும். இன நல்லிணக்கத்திற்கும் சமுதாய மேம்பாட்டிற்கும் தனிமனிதன், அரசு, அரசு சாரா இயக்கங்களின் பங்களிப்பு மிக முக்கியமாகும்.

இருப்போர் இல்லாருக்குக் கொடுப்பது உயரிய நெறியாகும். ஒவ்வொரு மனிதனும் மொழி, இன, சமய வேற்றுமை பாராமல் உதவிடல் வேண்டும். இதுபோன்ற உதவும் மனப்பான்மை பிறரின் துன்பங்களையும் இன்னல்களையும் குறைக்க உதவும். உதவி பெறுகின்ற பாதிக்கப்பட்டோர் இன்னலற்ற வாழ்வை வாழ முடியும். இதுபோன்ற நற்காரியங்களால் பரிவுமிக்க சமுதாயத்தை உருவாக்க இயலும்.

இயற்கைப் பேரிடர்களில் சிக்கித் தவிப்போர், விபத்துகளினால் துன்பப்படுவோர், நோயினால் அல்லல்படுவோர், வறுமையில் உழல்வோர் ஆகியோருக்கு நாம் எவ்வாறு உதவ முடியும்? பணம், பொருள், உணவு, உடை போன்றவற்றைக் கொடுத்து உதவலாம். மேலும், மன உளைச்சல், மன அழுத்தம் போன்றவற்றால் பாதிப்புற்றோருக்கு, வழிகாட்டல், நல்லுரை வழங்குதல் போன்ற வகைகளில் உதவலாம். மருத்துவ ஆலோசனை போன்ற நிபுணத்துவ உதவிகளையும் தன்னார்வ முறையில் வழங்கலாம்.

மேலும், அரசு மற்றும் அரசு சாரா இயக்கங்கள், தொண்டூழிய நிறுவனங்கள், தன்னார்வ இயக்கங்களின் மூலம் சமூக மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இதன்வழி நாட்டு மக்களிடையே நல்லிணக்கம், ஒற்றுமை, அமைதி போன்ற நற்பண்புகள் மேலோங்கும். இந்நாட்டில் வாழும் பல்லின மக்களும் நாட்டுவளத்தைப் பங்கிட்டு மிதமான போக்குடன் செயல்பட்டால் நாடு மேம்பாடு காணும்.

2.4.1

• மேலோட்ட வாசிப்பு உத்தியைப் பயன்படுத்தி வாசிப்பர்.

இடுபணி 1

**வினாக்களுக்கு விடை கூறுக.**

1. மேற்காணும் பனுவல் எதைப் பற்றியது?
2. பனுவலில் இடம்பெற்றுள்ள நன்னெறிப் பண்புகளைப் பட்டியலிடுக.

**அறிந்துகொள்க**

- அறியாமை என்னும் இருட்டை விரட்ட அறிவு என்னும் ஒளி தேவைப்படுகிறது.

தனிமனித அமைதியே குடும்ப அமைதிக்கு அடித்தளம் அமைக்கிறது.

- வீ. சந்திரன் - நல்வழிப்பாதை

இடுபணி 2

**பனுவலை மேலோட்டமாக வாசித்திடுக.**

மனிதநேயத்திற்குப் புறம்பான ஒரு செயல் சிறார்வதை. அன்பும் பாசமும் செலுத்தி வளர்க்க வேண்டிய சிறார்கள் வதைக்கப்படுவது கொடுமையான, கண்டிக்கப்பட வேண்டிய ஒரு செயலாகும். 'எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே', என்ற பாடல் வரிக்கு ஏற்ப சிறார்கள் தூய மனம் படைத்தவர்களாக விளங்குகின்றனர்.

இன்று சமுதாயத்தில் ஒரு சிலர் தங்களின் அறியாமையினால் சிறார்களை வதைக்கின்றனர்; புறக்கணிக்கின்றனர்; வன்முறைக்கு உட்படுத்துகின்றனர். சிறார்களை அடித்துக் காயப்படுத்தி மனம் புண்படச் செய்கின்றனர். மேலும், பாலியல் வன்முறைக்கு ஆட்படுத்துகின்றனர். உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் வதைக்கப்பட்ட சிறார்களுள் பலர் மரணமும் அடைந்தனர். தெய்வத்திற்கு நிகராக வணங்கப்பட வேண்டிய சிறார்கள் வதைக்கப்படுவது கண்டிக்கத்தக்கதாகும்.

குடும்ப வறுமை, பொருளாதாரச் சிக்கல், போதைப் பொருள் உட்கொள்ளல், மது அருந்துதல், உணர்ச்சியைக் கட்டுப்படுத்த இயலாமை, வாழ்க்கை விரக்தி போன்றவை சிறார் வதைக்குக் காரணமாகக் கூறப்பட்டு வருகின்றன. இச்சிக்கல்களுக்குப் பலியாகின்றவர்கள் சிறார்கள். இந்தச் சிறார்வதையை ஒரு முடிவுக்குக் கொண்டு வரவேண்டும்.

அரசாங்கம் ஊடகங்களின் வழி மக்களுக்குச் சிறார்வதை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். சிறார்வதை எங்கு நடந்தாலும் சமுதாயத்தினர் உடனடியாக சம்பந்தப்பட்ட இலாகாவுக்குத் தெரிவிக்க வேண்டும். சிறார்களைப் பாதுகாப்போம்; சிறார்வதைக்கு முற்றுப்புள்ளி வைப்போம்.

இடுபணி 3

**வினாக்களுக்குப் பதில் எழுதுக.**

1. சிறார்கள் எவ்வாறான வதைக்கு ஆளாகின்றனர்?
2. சிறார்வதைக்குக் காரணங்களாகக் கூறப்படுவன யாவை?
3. சிறார்வதையைக் களைய நீ எவ்வாறு பங்காற்றுவாய் என்பதைக் குழுவில் கலந்துரையாடுக.

இடுபணி 4

**கொடுக்கப்பட்ட நாளிதழ்ச் செய்தியை வாசித்திடுக.**

# உணவுப்பழக்கம் சிறார்களின் சிந்தையிலும் நடவடிக்கையிலும் மாற்றம் செய்கிறது

கோலாலம்பூர், ஜூன் 9-
அதிகப்படியான உப்பு, இனிப்பு, கொழுப்பு, கரியமிலவாயு கொண்ட பொருள்களை உண்ணும் சிறார்கள் மிகவும் சுறுசுறுப்பாக இருக்கின்றனர். சில வேளைகளில் அதற்கு நேர்மாறாக மந்தமாகி விடுகின்றனர் என்றும் உணவுத் துறை நிபுணர் ஒருவர் கூறுகிறார்.

பதனிடப்பட்ட உணவுப் பொருள்களில் அடிப்படையிலேயே அளவுக்கதிகமான உப்பு, சீனி, கொழுப்பு, மாவுச்சத்து இருப்பதால் சிறார்களின் நடவடிக்கைகள் இந்த உணவுப் பழக்கத்தால் மிகுந்துவிடுகின்றன. இதைச் சிலாங்கூர், புஞ்சாக் அலாம் மாரா தொழில்நுட்பக் கல்லூரியின் ஆரோக்கிய அறிவியல் துறைத் தலைவர் டாக்டர் நோரஸ்மிர் முகமட் நோர் தெரிவித்தார்.

பிள்ளைகள் தொடர்ந்து இவ்வகை உணவுகளை உட்கொள்வார்களெனில் அவர்களின் சிந்தையும் பழக்கவழக்கங்களும் மாற்றமடையும் என்ற அதிர்ச்சிகரமான தகவலை அவர் வெளியிட்டார்.

உட்கொள்ளும் ஒவ்வோர் உணவும் உடலுக்கு ஆக்கப்பூர்வமான மாற்றங்களையும் பாதிப்புகளையும் கொண்டு வருகின்றன. மேலும், அவர்களின் ஆரோக்கியத்திலும் இதனால் மாற்றங்கள் நேர்கின்றன. பிள்ளைகளின் நடத்தை, அவர்களின் சிந்தனை ஆற்றலிலும் இது மாற்றத்தை ஏற்படுத்துகிறது என்று ஆய்வுகள் நிரூபிக்கின்றன என்றார் அவர். பெர்னாமாவுக்கு வழங்கிய சிறப்புப் பேட்டியில் அவர் இந்த விவரங்களைக் கூறினார்.

ஊட்டச்சத்துகள் நிறைந்த உணவுகளை உண்பதன் மூலம் இளம் பிள்ளைகளின் உடல் வளர்ச்சிக்குத் தேவையான அனைத்துச் சத்துகளும் கிடைக்கும். இளம் பிராயம் முதலே பிள்ளைகளுக்கு ஆரோக்கியமான உணவுப்பழக்க முறைகள் வலியுறுத்தப்பட வேண்டும். அதே வேளையில் குடும்பத்தோடு அமர்ந்து உணவு உண்ணும் பழக்கத்தை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளிலும் கவனம் செலுத்த வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

- மக்கள் ஓசை (9/6/2016)
(சில மாற்றங்களுடன்)

இடுபணி 5

**மேற்காணும் செய்தியில் வலியுறுத்தப்படும் தகவல்களைப் பட்டியலிட்டு வாசித்திடுக.**

# பாடம் 3 நற்பண்புகள்

**குழுவில் கலந்துரையாடி எழுதுக.**

இன்றைய வாழ்க்கைமுறை பொருளாதாரத்தையே முதன்மையாகக் கொண்டு செயல்படுகிறது. பொருளாதாரமே இல்வாழ்வின் ஆதாரம் என்பர் சிலர். 'பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை; அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை' என்றார் ஐயன் திருவள்ளுவர். பொருள் செல்வத்தைக் கொண்டுதான் அன்றாட வாழ்க்கைச் செலவினங்களைச் சமாளிக்க வேண்டியுள்ளது. அடிப்படைச் செலவினங்களாக உணவு, உடை, மருத்துவம், உறைவிடம், கல்வி போன்றவை முக்கியமானவை. இவற்றைச் சமாளிப்பதற்கு இரவும் பகலும் கடுமையாக உழைக்க வேண்டியுள்ளது. இதனால், மனிதர்களிடையே உள்ள நற்பண்புகள் அருகிக் கொண்டே போகிறது. ஏமாற்றுதல், பிறருக்குத் துன்பம் கொடுத்தல் போன்ற தீயப் பண்புகள் வலிமை பெறுகின்றன. இதன் விளைவாக வாழ்க்கையில் பல்வேறு துன்பங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. ஆகவே, பிறருக்கு நன்மை செய்து இன்பவாழ்க்கை வாழ்வோம்.

| | |
|---|---|
| முதன்மைக் கருத்து | இன்றைய வாழ்க்கைமுறை பொருளாதாரத்தையே முதன்மையாகக் கொண்டு செயல்படுகிறது. |
| துணைக் கருத்து | அன்றாட வாழ்க்கைச் செலவினங்களைச் சமாளிக்க கடுமையாக உழைக்க வேண்டிய நிலை உள்ளது. |
| விளக்கம் | பல்வேறு துன்பங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. |
| சான்றுகள் | மனிதப் பண்புகள் குறைகின்றன. ஏமாற்றுதல், பிறருக்குத் துன்பம் கொடுத்தல். |
| முடிபு | பிறருக்கு நன்மை செய்து இன்பமான வாழ்க்கை வாழ வேண்டும். |

**இடுபணி 1**

**பனுவலில் காணப்படும் முதன்மைக் கருத்து, துணைக் கருத்து, விளக்கம், சான்றுகள், முடிபு ஆகியவற்றை அடையாளம் கண்டு எழுதுக.**

கட்டொழுங்கின்றி ஒருவரால் முழுமையான வாழ்க்கையை வாழ முடியாது. இதனைத்தான் வள்ளுவப் பேராசானும்,

'ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்'

எனக் கூறுகின்றார். ஒருவருக்கு உயர்வு தரக்கூடியது ஒழுக்கம். ஆகவே, அவ்வொழுக்கத்தை ஒருவர் உயிரைவிட மேலானதாய்ப் போற்றிக் காக்க வேண்டும். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது என்பார்கள். ஆகவே, பெற்றோர்கள் பிள்ளைகளுக்குச் சிறுவயதிலேயே கட்டொழுங்கின் அவசியத்தை வலியுறுத்த வேண்டும். மேலும், அவர்கள் பிள்ளைகளுக்கு முன்மாதிரியாக விளங்க வேண்டும். எண்ணுகின்ற எண்ணம், பேசுகின்ற வார்த்தை, செய்கின்ற செயல் அனைத்திலும் பெற்றோர்கள் கவனம் செலுத்த வேண்டும். பெற்றோர்கள் தம் பிள்ளைகளுக்குச் சமய அறிவையும் நன்னெறிப்பண்புகளையும் கற்றுக்கொடுக்க வேண்டும். இதன் மூலம் நன்னெறிமிக்க பிள்ளைகளை உருவாக்க முடியும்.

3.2.2
• முதன்மைக் கருத்து, துணைக்கருத்து, விளக்கம், சான்றுகள், முடிபு ஆகியவற்றை உள்ளடக்கிய பத்தியை எழுதுவர்.

### இடுபணி 2

**பனுவலில் காணப்படும் முதன்மைக் கருத்து, துணைக் கருத்து, விளக்கம், சான்றுகள், முடிபு ஆகியவற்றை அடையாளம் கண்டு பட்டியலிடுக.**

மகிழ்ச்சியான குடும்பத்திற்கு அடிப்படையே உடல் நலம்தான். சுவரை வைத்துத்தான் சித்திரம் வரைய முடியும். முறையான உடற்பயிற்சியைத் தினந்தோறும் மேற்கொள்ள வேண்டும். நமக்குக் கிடைக்கும் நேரத்தில் குறைந்தது 30 நிமிடம் உடற்பயிற்சி செய்ய வேண்டும். நோய் நொடியின்றி வாழ உடல் ஆரோக்கியம் பேணப்பட வேண்டும். யோகப் பயிற்சி செய்தல், மெதுவோட்டம் ஓடுதல், மிதிவண்டி செலுத்துதல் போன்ற பயிற்சிகள் நலம் பயக்கும். எனவே, மனஅமைதி, மகிழ்ச்சி, ஆரோக்கிய வாழ்விற்கு உடற்பயிற்சி முக்கியப்பங்கு வகிக்கின்றது.

| | |
|---|---|
| முதன்மைக் கருத்து | |
| துணைக் கருத்து | |
| விளக்கம் | |
| சான்றுகள் | |
| முடிபு | |

### இடுபணி 3

**பட்டியலிலுள்ள தகவல்களைக் கொண்டு 'அன்பு' எனும் தலைப்பில் ஒரு பத்தி எழுதுக.**

| | |
|---|---|
| முதன்மைக் கருத்து | அமைதியான வாழ்வுக்கு அன்பே முக்கியம். |
| துணைக் கருத்து | மகிழ்ச்சியாகவும் புரிந்துணர்வுடனும் வாழ அன்பு தேவை. |
| விளக்கம் | விட்டுக் கொடுத்து வாழ்வதும் சகிப்புத்தன்மையுடன் செயல்படுவதும் அன்பினால்தான். |
| முடிபு | அமைதியும் மகிழ்ச்சியும் புரிந்துணர்வும் பெற அன்பு அவசியம். |

### இடுபணி 4

**மனிதநேய மாமணி 'அன்னை தெரசா' அவர்களைப் பற்றி ஒரு பத்தியில் எழுதுக.**

**இணையத் தளம்**

https://ta.wikipedia.org/wiki/%E0%AE%85%E0%AE%A9%E0%AF%8D%E0%AE%A9%E0%AF%88_%E0%AE%A4%E0%AF%86%E0%AE%B0%E0%AF%87%E0%AE%9A%E0%AE%BE

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## இறையை உணர்வோம் .

**சூழல்**

திருநாவுக்கரசர் பாடிய விறகில் தீயினன் எனும் தேவாரம் ஐந்தாம் திருமுறையில் இடம்பெற்றுள்ளது. பல்லவ பேரரசன் அப்பரை நீற்றறையில் இடும்படி கட்டளையிட்டான். அவ்வேளையில் எல்லா உயிர்களிலும், பொருள்களிலும், இடங்களிலும் நீக்கமற நிறைந்திருக்கின்ற அந்தப் பரம்பொருளை வேண்டிப் பாடினார்.

மலர் வள்ளி: வணக்கம் மாமா! என்ன புத்தகம் படித்துக் கொண்டிருக்கிறீர்கள்?

மாமா: வணக்கம் மலர் வள்ளி. அப்பர் பெருமான் அருளிய தேவாரம் படித்துக் கொண்டிருக்கிறேன்.

மலர் வள்ளி: மாமா, இறைவன் எங்கு இருக்கிறார்? அவரை எப்படிக் காண்பது?

மாமா: இதற்கு அப்பர் சுவாமிகள் மிகவும் எளிமையாகப் பதில் தருகிறார். கவனமாகக் கேள்.

மலர் வள்ளி: எனக்குக் கொஞ்சம் விளக்கமாகக் கூறுங்களேன் மாமா.

மாமா: விறகில் தீ மறைந்திருக்கிறது. பாலில் நெய் மறைந்திருக்கிறது. மணியில் ஒலி மறைந்திருக்கிறது.. புரிகிறதா...?

மலர் வள்ளி: ஆமாம் மாமா.

மாமா: அது போல இறைவனும் மறைந்துள்ளார். ஆனால், இறைவன் சோதி வடிவமாய் உள்ளார். அதிலும் மாமணிச்சோதியாய் விளங்குகிறார்.

மலர் வள்ளி: அப்படியிருந்தும், இறைவன் நம் கண்களுக்குத் தெரியவில்லையே மாமா?

மாமா: ஆமாம். அறியாமை நிரம்பிய நம் கண்களுக்கு அந்தப் பேரொளியான மாமணிச் சோதி தெரியாது.

மலர் வள்ளி: அப்படியென்றால் எப்படித்தான் இறைவனைக் காண்பது மாமா?

மாமா: நல்ல கேள்வி. இறைவனைக் காண்பதற்கு நாம் என்ன செய்ய வேண்டுமென்றால், முதலில் நமக்கும் இறைவனுக்கும் உள்ள உறவு எனும் கோலை நட வேண்டும். பிறகு, பக்தி எனும் உணர்வுக் கயிற்றினால் முறுகக் கடைய வேண்டும் என்கிறார் அப்பர் சுவாமிகள். பாலைக் கடையும்போது எப்படி நெய் திரண்டு வருகிறதோ அதே போல் சோதி வடிவிலான இறைவனும் நமக்குத் தோன்றுவான். எனவே, பக்தி உணர்வும் பாச உணர்வும் கொண்டு முயன்று இறைவனை நாட வேண்டும். இதனைத்தான் அப்பர் சுவாமிகள் இவ்வாறு பாடுகிறார்.

**விறகில் தீயினன் பாலில் படுநெய்போல்**
**மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்**
**உறவு கோல்நட்டு உணர்வு கயிற்றினால்**
**முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே.**

மலர் வள்ளி: நன்றாக விளங்கியது. நன்றி மாமா.

4.3.1
- ஒன்றாம் படிவத்திற்கான பல்வகைச் செய்யுளையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

## செய்யுளின் பொருள்

**விறகில் தீயினன் பாலில் படுநெய்போல்**
**மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்**
**உறவு கோல்நட்டு உணர்வு கயிற்றினால்**
**முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே.**

பொருள்: விறகில் தீயும், பாலில் நெய்யும் மறைந்திருப்பதுபோல மிகப் பெரிய மாணிக்கத்தைப் போன்று பேரொளியாகிய இறைவன் எங்கும் எதிலும் மறைந்துள்ளான். அவன்பால் உறவு எனும் கோலை ஊன்றி, உணர்வெனும் கயிற்றினால் மன உறுதியோடு பக்தி செலுத்தினால், பாலைக் கடையும்போது நெய் வெளிப்படுவது போல இறையருள் வெளிப்படும்.


அப்பர் பெருமான்

### இடுபணி 1

**அப்பர் பெருமான் அருளிய தேவாரப் பாடலை ஓதுக.**

### இடுபணி 2

**மேற்காணும் பாடலையும் பொருளையும் எழுதுக.**

**இணையத் தளம்**
http://dhevaaram.blogspot.my/2010/05/blog-post.html

### இடுபணி 3

**கொடுக்கப்பட்டுள்ள பொருளுக்கேற்ற செய்யுளடியை எழுதுக.**

1. மாணிக்கத்தைப் போன்று பேரொளியாகிய இறைவன்
2. அவன்பால் உறவு கொண்டு
3. உணர்வெனும் கயிற்றினால்
4. இறையருள் வெளிப்படும்

### இடுபணி 4

**சொற்களின் பொருளை எழுதி வாசித்திடுக.**

1. விறகின் தீயினன் ______
2. பாலில் படுநெய்போல் ______
3. மறைய நின்றுளன் ______
4. மாமணிச் சோதியான் ______
5. உறவுகோல் நட்டு ______
6. உணர்வு கயிற்றினால் ______
7. முறுக வாங்கி ______
8. கடையமுன் நிற்குமே ______

### அறிந்துகொள்க

**பன்னிரு திருமுறைகள்**

தேவாரம்: திருமுறை 1 - 7
திருமுறை 1 - 3 - திருஞானசம்பந்தர் அருளியது
திருமுறை 4 - 6 - திருநாவுக்கரசர் அருளியது
திருமுறை 7 - சுந்தரமூர்த்தி நாயனார் அருளியது

திருமுறை - 8
திருவாசகம் - மாணிக்கவாசகர் அருளியது

திருமுறை - 9
திருவிசைப்பா & திருப்பல்லாண்டு - 9 பேர் அருளியது

திருமுறை - 10
திருமந்திரம் - திருமூலர் அருளியது

திருமுறை - 11
12 பேர் அருளியது

திருமுறை - 12
பெரிய புராணம் - சேக்கிழார் அருளியது

# தொகுதி 16

# அறிவியல் தொழில்நுட்பம்

## பாடம் 1 நவீன உலகம்

குழுவில் கலந்துரையாடுக.





1.2.1

• விவரங்கள் அறிய கேள்விகள் கேட்பர்.



இடுபணி 1

**விவரங்களை அறிய கேள்விகள் கேட்டிடுக.**




இடுபணி 2

**விவரங்கள் அறிய கேள்விகள் கேட்டிடுக.**

**எடுத்துக்காட்டு**

கேள்வி: கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளுக்குத் தொழில்நுட்பக் கருவிகள் எவ்வாறு பயன்படுகின்றன?

விவரம்: கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளில் மாணவர்களின் ஆர்வத்தை அதிகரிக்கவும் வகுப்பில் மகிழ்ச்சியாகக் கற்பதற்கும் தொழில்நுட்பக் கருவிகள் பயன்படுகின்றன.

1. கேள்வி:

விவரம்: இணையம், எழுத்துரு படங்கள், ஒளி, ஒலி சேர்க்கைகள், இணைய உரையாடல்கள், நிகழ்ப்படக் கருத்தரங்கு, வானொலி, தொலைக்காட்சி எனப் பன்முகப் பயன்பாடுகளைக் கொண்டதாக விளங்குகிறது.

2. கேள்வி:

விவரம்: கணினி வழியாக இணையத்தில் மொழியைக் கற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்பும் வசதியும் ஏற்பட்டு இருக்கிறது.

3. கேள்வி:

விவரம்: இந்திய மொழிகளிலேயே முதன்முதலில் அச்சில் ஏறிய மொழி தமிழ்மொழியாகும். இதற்குக் காரணம் தொழில்நுட்ப வல்லுநர்கள்தாம்.

## இடுபணி 3

**படங்களை அடிப்படையாகக் கொண்டு விவரங்களை அறிய கேள்விகள் கேட்டிடுக.**




**எடுத்துக்காட்டு**

1. என்னென்ன படங்கள் சித்திரிக்கப்பட்டுள்ளன?
2. மக்கள் எவ்வாறு இவற்றைப் பயன்படுத்திக் கொள்ளலாம்?
3. இவற்றால் மக்களுக்கு என்ன நன்மை?

## இடுபணி 4

**அறிவியல் தொழில்நுட்பம் தொடர்பான சொற்களை அடையாளம் காண்க.**

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கி | இ | ணை | ய | ம் | ம் | த | அ | க | ம் | சு | அ |
| தி | த | ம் | மி | வை | ய | தொ | லை | க் | கா | ட் | சி |
| ற | கி | ட | ன் | கு | னை | ம | பே | வி | ர | லி | பு |
| ன் | பு | ப | ன | தெ | மு | றி | சி | க | த் | பு | சு |
| பே | சு | ற் | ஞ் | பு | வி | யி | ட | ங் | கா | ட் | டி |
| சி | ட் | ழ | ச | ற | கு | று | ந் | த | க | வ | ல் |
| ப | தி | நி | ல் | ப | க | னி | ணி | க | க் | டி | ம |

இடமிருந்து வலம்:

1. ______
2. ______
3. ______
4. ______
5. ______

மேலிருந்து கீழ்:

1. ______
2. ______

கீழிருந்து மேல்:

1. ______

# பாடம் 2 தொலைத்தொடர்பு

**பனுவலை வாசித்திடுக.**

தொலைத்தொடர்புத் தொழில்நுட்பம் இன்று எல்லையற்ற வளர்ச்சியைக் கண்டு வருகிறது. நாம் ஒரு நாட்டிற்குச் செல்ல வேண்டுமெனில் அதற்கான கடப்பிதழையும் அனுமதியையும் பெற்றுத்தான் செல்ல வேண்டும். ஆனால், தொலைத்தொடர்பு மூலம் எவ்விதத் தடையுமின்றி சில நொடிப்பொழுதில் எங்கும் எந்த நாடுகளுக்கும் சென்று வரலாம். இன்று, இத்தொலைத் தொடர்பு வளர்ச்சியின் மூலம் உலகம் அதன் கட்டுப்பாட்டிற்குள் அடங்கியுள்ளது எனில் மிகையில்லை.

தகவல் தொழில்நுட்பத்தின் ஆக்கிரமிப்பினாலே தொடர்புத்துறை அதிவேக வளர்ச்சியைக் கண்டு வருகிறது. இதன் ஆற்றல், ஒரு நாட்டின் எல்லை, நேரக் கட்டுப்பாடு ஆகியவற்றைக் கடந்து யாரிடமும் எப்பொழுதும் தொடர்புகொள்ளும் அளவிற்குப் பரந்து விரிந்து வளர்ந்துள்ளது. மேலும், இணையத்தின் இணைப்பால் மின்னஞ்சல், தொலைபேசி போன்ற தொடர்புக்கருவிகள் மூலம் உலகின் எப்பகுதியுடனும் தொடர்புகொள்ள முடிகிறது.

இன்று உலகம் நம் விரல் நுனியில் என்றாகிவிட்டது. பல்வகைத் தகவல்களை அறிந்து கொள்ள கையில் உள்ள கணினியின் விசைப் பலகையை அழுத்தினாலே அல்லது எலியனை அசைத்தாலே போதும், உலகின் எந்த மூலை முடுக்குகளிலும் நடக்கும் நிகழ்ச்சிகளை ஒரு சில மணித்துளிகளில் கணினித் திரையில் காண முடியும். இதன்மூலம் நாம் கிணற்றுத்தவளை போல் இல்லாமல், அறிவார்ந்த சமுதாயமாகத் திகழ முடியும். மியாசாட் ஒன்று, மியாசாட் இரண்டு, மியாசாட் மூன்று துணைக் கோளங்கள் இதனை மெய்ப்பிக்கின்றன.

தொலைத்தொடர்பு வளர்ச்சியின் மூலம் கிடைத்த ஓர் அற்புதக் கருவிதான் திறன்பேசி. அறிவார்ந்த சமுதாயம் உருவானதற்குத் திறன்பேசியின் பங்கு அளப்பரியதாகும். தொடர்பு கொள்வதற்கு மட்டுமின்றி, நிழற்படம், குறுந்தகவல், இணையம், தடங்காட்டி (ஜிபிஎஸ்) என்று பன்முகத்திறன்களைக் கொண்டுள்ளது. இவற்றைப் பயன்படுத்துவோர் எண்ணிலடங்கா நன்மைகளைப் பெறுகின்றனர்.

சுருங்கக்கூறின், தொலைத்தொடர்புத் தொழில்நுட்பம் மனித குலத்திற்குக் கிடைத்த அற்புதக் கண்டுபிடிப்பாகும். அதனை நன் முறையில் பயன்படுத்தி நல்ல விளைபயன்களைப் பெறுவோம்.

## இடுபணி 1

**பனுவலையொட்டிய வினாக்களுக்கு விடை காண்க.**

1. மேற்காணும் பனுவலின் கருப்பொருளைக் குறிப்பிடுக.
2. பனுவலிலுள்ள ஒவ்வொரு பத்தியிலும் காணப்படும் கருச்சொற்களைப் பட்டியலிடுக.

2.2.1 • வாசிப்புப் பகுதியிலுள்ள கருப்பொருளையும் கருச்சொற்களையும் அடையாளம் காண்பர்.

## இடுபணி 2

**கீழே கொடுக்கப்பட்டுள்ள பனுவலை வாசித்துக் கருப்பொருளையும், கருச்சொற்களையும் அடையாளம் காண்க.**

### பொதுப்போக்குவரத்து

1. பொதுப்போக்குவரத்து மக்களுக்குப் பல வகைகளில் நன்மை தருகிறது. ஏனெனில், இது மக்களின் பயண நேரத்தைக் குறைத்து நேர விரயத்தைக் கட்டுப்படுத்துகிறது. எடுத்துக்காட்டாக, வெகுதொலைவில் செல்லக்கூடிய இடங்களுக்கு வானூர்தி மூலம் பயணிப்பது பயனுள்ள வழியாகும்.

### இணையம்

2. பள்ளிகளில் இணையப் பயன்பாடு என்பது மாணவர்களுக்குப் பல வகைகளில் நன்மை புரிகிறது. பாடங்கள் தொடர்பான கூடுதல் தகவல்களைப் பெறுவதற்கு மாணவர்கள் இணையத்தைப் பயன்படுத்தி உலா வரலாம். எடுத்துக்காட்டாக, வலைத் தளங்களில் காணப்படும் பாடக் குறிப்புகள், உயர்கல்விக்கூடங்கள் பற்றிய தகவல்கள் போன்றவையாகும். இதன் மூலம் மாணவர்கள் தங்கள் நேரத்தையும் பணத்தையும் சிக்கனப்படுத்தலாம்.

| கருப்பொருள் | கருச்சொற்கள் |
|---|---|
| பொதுப்போக்குவரத்து | 1.<br>2.<br>3. |
| இணையம் | 1.<br>2.<br>3. |

## இடுபணி 3

**கவிதையை வாசித்துக் கருப்பொருளையும் கருச்சொல்லையும் அடையாளம் காண்க.**

அ) ‘கண்ணியத் தொழிலாய் நாளும்
கற்றவர் போற்றுகின்ற
புண்ணியத் தொழிலாம் கல்வி
புகட்டிடும் தொழில் மேற் கொண்டோர்’
(பொன்முடி)

ஆ) சுத்தமுள்ள இடமெங்கும்
சுகமும் உண்டு நீ அதனை
நித்தமும் பேணுவையேல்
நீண்ட ஆயுள் பெறுவாயே
(கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை)

**அறிந்துகொள்க**

- மலேசியா - சிங்கப்பூர் இடையிலான அதிவேக ரயில் பயணத்திட்டம் கடந்த 19.2.2013இல் இருதரப்பினராலும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது.
- 2017இல் தொடங்கி 2026இல் இத்திட்டப்பணிகள் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## பாடம் 3 இயந்திர மனிதன்

**குழுவில் கலந்துரையாடுக.**



**தொடக்கம்**

- மாந்தரின் அரிய கண்டுபிடிப்பு
- கற்பனையில் மிதத்தல்

**கருத்து**

- தொழில்நுட்பத்துறையின் சாதனையில் உருவாக்கப்படுதல்
- மருத்துவத்துறையில் உதவுதல்
  தீரா நோய்களுக்கு மருந்து
  துரித சேவை வழங்குதல்
  புதிய மருத்துவக் கருவிகள் உருவாக உதவுதல்
- என்னைப் போன்று பலரை உருவாக்க முனைதல்
- எல்லாத் துறைகளிலும் இயந்திர மனிதர்களின் ஈடுபாடு இருப்பதை உறுதி செய்தல்
- வேலையை எளிமைப்படுத்துதல்
- அன்பாக, மரியாதையாக நடந்து நற்பெயரைப் பெறுதல்

**முடிவு**

- புதிய கண்டுபிடிப்பை உலகம் அறியச் செய்தல்
- நாட்டுக்குப் பெருமை சேர்த்தல்

### இடுபணி 1

**இயந்திர மனிதன் என்ற தலைப்பில் 140 சொற்களில் கற்பனைக் கட்டுரை எழுதுக.**

### இடுபணி 2

**கீழ்க்காணும் தலைப்பில் 140 சொற்களில் கற்பனைக் கட்டுரை எழுதுக.**
- நிலவில் குடியேறினால்...

3.4.6 — 140 சொற்களில் கற்பனைக் கட்டுரை எழுதுதல்.

## இடுபணி 3

**பனுவலை வாசித்துக் கருப்பொருளையும் கருச்சொற்களையும் அடையாளம் காண்க.**

இவ்வுலகத்தில் மானிடராய்ப் பிறந்த அனைவருக்கும் பல ஆசைகள் இருக்கும். அதேபோல், எனக்கும் ஓர் ஆசை உள்ளது. அந்த ஆசை என்னவென்றால்; எனக்கு ஒரு பறக்கும் விசையுந்து கிடைக்க வேண்டும் என்பதுதான். அந்த விசையுந்து மற்ற விசையுந்துகளைக் காட்டிலும் மாறுபட்டதாகவும் அற்புதமானதாகவும் இருக்க வேண்டும்.

அந்த விசையுந்திற்கு எந்திர மனிதர்களுக்கு இருக்கும் இயந்திர இறக்கைகள் போல அழகான இரு இறக்கைகள் இருக்க வேண்டும். அதுமட்டுமின்றி, அந்த இறக்கைகளுக்குச் சூழ்நிலைக்கு ஏற்றபடி நிறம் மற்றும் வடிவம் மாறும் சக்தியும் இருக்க வேண்டும். மேலும், அந்த இறக்கைகளின் மீது உட்கார்ந்து பயணிக்கவும் இயல வேண்டும். அதனைத் தவிர்த்து, என்னுடைய விசையுந்து சூரிய சக்தியையும் மின்கலனையும் மட்டுமே பயன்படுத்தக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.

விசையுந்து என்னுடைய கட்டுப்பாட்டை மீறிச் செயல்படா வண்ணம் பார்த்துக் கொள்வேன். அதுமட்டுமல்லாமல், அந்த விசையுந்திற்குக் காலத்தைக் கடந்து போகும் சக்தியையும் உருவாக்குவேன். அதனைப் பயன்படுத்தி நான் இறந்தகாலத்திற்கும் எதிர்காலத்திற்கும் எளிதாகப் பயணிப்பேன். மேலும், நான் என்னுடைய விசையுந்தில் உள்ள பறக்கும் சக்தியைப் பயன்படுத்தி இந்த உலகத்திலுள்ள அனைத்து நாடுகளுக்கும் என் குடும்பத்தாருடனும் நண்பர்களுடனும் சுற்றுப்பயணம் செல்வேன். அதுமட்டுமின்றி, நான் இந்த விசையுந்தைப் பிறருக்கு உதவவும் பயன்படுத்துவேன்.

அதைத் தவிர்த்து என்னுடைய விசையுந்திலிருந்து புகை வெளியாகாததால் காற்றுத் தூய்மைக்கேடும் ஏற்படாது; இயற்கைக்குச் சேதமும் விளையாது.

ஆஹா! கற்பனை எவ்வளவு அழகானது. நான் நினைத்ததெல்லாம் நடந்துவிட்டால், இவ்வுலகத்தில் என்னைவிட அதிர்ஷ்டக்காரன் இருக்கவே முடியாது. என்னுடைய இந்த ஆசை நிறைவேற வேண்டுமென்று தினமும் இறைவனை இறைஞ்சுகிறேன்.

## வளப்படுத்துதல்

**'நான் உருவாக்க விரும்பும் விசித்திர வீடு' எனும் தலைப்புக்கு ஏற்ற கருச்சொற்களை எழுதுக.**


## குறைநீக்கல்

**வாக்கியங்களிலுள்ள கருப்பொருளை அடையாளம் காண்க.**


1. நூல்நிலையம் பொது அறிவு வளரத் துணைபுரிகின்றது.
2. விவசாயி வயலில் நாற்று நடுகின்றார்.
3. ஆசிரியர் மாணவர்களுக்குப் பாடம் போதிக்கின்றார்.
4. பெற்றோர்கள் பிள்ளைகளுக்குச் சமயக் கல்வியைப் போதிக்க வேண்டும்.

பாடம் 4 **இலக்கணம்**

## குன்றியவினை குன்றாவினை அறிக.




மாணவர்களே! நான் கூறப்போகும் இரண்டு வாக்கியங்களுக்கும் உள்ள வேறுபாட்டைக் கூறுவீர்களா? முதலாவது வாக்கியம். 'குழந்தை அழுதது'. இரண்டாவது வாக்கியம் 'குமணன் பந்தை உதைத்தான்.'




எனக்குத் தெரியும் ஐயை! முதலாம் வாக்கியம் குன்றியவினை வாக்கியம். இரண்டாம் வாக்கியம் குன்றாவினை வாக்கியம். முதல் வாக்கியத்தில் எழுவாய் (கருத்தா) காரியத்தைத் தனக்குத்தானே செய்கிறது. மேலும், இவ்வாக்கியத்தில் செயப்படுபொருள் இல்லை. இரண்டாவது வாக்கியத்தில் எழுவாய், ஒரு காரியத்தைச் செயப்படுபொருள் (பந்து) மூலம் செய்கிறது (உதைத்தான்). ஆகவே, இது குன்றாவினை வாக்கியம் ஐயை!

மிகச்சிறந்த விளக்கம் தமிழ்மாறன், பாராட்டுகள்.

இவ்வாக்கியங்களைப் பற்றி மேலும் சற்று விளக்கம் தாருங்கள் ஐயை.




வாக்கியத்தில் செயப்படுபொருளை ஏற்காத வினைமுற்றைக் குன்றியவினை எனலாம். இவ்வினைகள் செயப்படுபொருளின் துணையில்லாமல் நிற்க வல்லவை. குன்றியவினை வாக்கியங்களில் 'எதை', 'எவற்றை', 'யாரை' போன்ற கேள்விகளுக்கு விடை வாரா என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். குதிரை கனைத்தது, பாவாணர் மகிழ்ந்தார் போன்ற வாக்கியங்கள் குன்றியவினைக்கு ஏற்ற எடுத்துகாட்டு வாக்கியங்களாகும்.



மிகவும் தெளிவாகப் புரிந்தது ஐயை. அதே போன்று குன்றாவினை வாக்கியத்தைப் பற்றி விளக்குங்கள் ஐயை.




இதோ விளக்குகிறேன்! வாக்கியத்தில் செயப்படுபொருளை ஏற்று வரும் வினைமுற்றைக் குன்றாவினை எனலாம். 'எதை', 'எவற்றை', 'யாரை' போன்ற கேள்விகளுக்குப் பதில் கொடுக்கும் வினைமுற்று, குன்றாவினை எனப்படுகிறது.



'அறவாணர் நூலகத்தைப் பாதுகாத்தார்', 'யாழினி வீணையை மீட்டினாள்' போன்ற வாக்கியங்களைக் குன்றாவினை வாக்கியங்கள் என்று சொல்லலாம்தானே ஐயை?

5.2.2

• குன்றியவினை, குன்றாவினை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.



தெளிவாக விளங்கிக் கொண்டாய் வான்மதி. இன்னொரு முக்கியமான செய்தியையும் நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும். 'கபிலன் அழைத்தான்', 'தேவி எழுதினாள்' போன்ற வாக்கியங்களில் செயப்படுபொருள் மறைந்துள்ளது. செயப்படுபொருள் மறைந்து, இல்லாதது போன்ற மயக்க நிலையைக் கொடுத்தாலும் யாரை (தம்பியை), எதை (நூலை) போன்ற செயப்படுபொருள்கள் மறைந்துள்ளதை அறிந்து; அவற்றைக் குன்றாவினை வாக்கியங்களாகக் கருத வேண்டும்.

## இடுபணி 1

**குன்றியவினை குன்றாவினை வாக்கியங்களை வகைப்படுத்துக.**

1. வானம்பாடிகள் உயரப் பறந்தன.
2. சங்கமித்திரா வீணை மீட்டினாள்.
3. மதியழகன் மனம் மகிழ்ந்தார்.
4. வள்ளலார் திருவருட்பா இயற்றினார்.
5. சீலன் வரைந்தார்.
6. மாமரத்திலிருந்து பழம் கீழே விழுந்தது.
7. கனமழையால் மாநகரில் வெள்ளம் ஏற்பட்டது.
8. திலகம் தமிழ்மொழிப் பாடம் கற்பித்தாள்.
9. கள்வன் சாலை விபத்தில் உயிரிழந்தான்.



## வளப்படுத்துதல்

**ஐந்து குன்றியவினை வாக்கியங்களையும் ஐந்து குன்றாவினை வாக்கியங்களையும் எழுதுக.**

## குறைநீக்கல்

**கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்களைக் குன்றியவினை ( ✔ ) என்றும் குன்றாவினை ( X ) என்றும் வகைப்படுத்தி எழுதுக.**

1. கினாபாலு மலைக் காடுகளில் பறவைகள் பறந்து திரிந்தன. ☐
2. மதிவாணனின் பேருரையைக் கேட்டு மக்கள் மகிழ்ச்சியில் திளைத்தனர். ☐
3. தாயைக் காணாத குழந்தை நீண்ட நேரம் அழுது கொண்டிருந்தது. ☐
4. பூரணி 'தமிழுக்கு அமுதென்று பேர்' என்ற பாடலைப் பாடி முதல் பரிசைப் பெற்றாள். ☐
5. 'எல் நினோ' வெப்பத்தினால் காடுகள் தீப்பற்றின. ☐
6. டாக்டர் மு.வ. 'அகல்விளக்கு' என்ற நாவலை எழுதினார். ☐

தொகுதி 17

# விளையாட்டுப் போட்டி

## பாடம் 1 திடல் தடப்போட்டிகள்

பார்த்த நிகழ்ச்சியை விவரித்துக் கூறுக.




1.4.2

• பார்த்த நிகழ்ச்சியை விவரித்துக் கூறுவர்.





P404







1734



## இடுபணி 1

**கொடுக்கப்பட்ட படங்களைத் துணையாகக் கொண்டு நிகழ்ச்சியை விவரித்துக் கூறுக.**

மேடான் தேசிய இடைநிலைப்பள்ளியின் சீருடை இயக்க அணிவகுப்பு






## இடுபணி 2

**கொடுக்கப்பட்ட குறிப்புகளைத் துணையாகக் கொண்டு நிகழ்ச்சியை விவரித்துக் கூறுக.**

விளையாட்டாளர் எண்ணிக்கை

இடம்
நாள்
நேரம்

நடுவர்கள்



அதிகாரப்பூர்வ தொடக்கம்

பரிசு

குழுக்களின் எண்ணிக்கை

## இடுபணி 3

**தற்காப்புக்கலை தொடர்பான படங்களைப் பார்த்து விவரித்துக் கூறுக.**

1. சீலாட்



2. சிலம்பம்



3. தேக்குவாண்டோ



## இடுபணி 4

**விளையாட்டின் விதிமுறைகளைக் குழுமுறையில் கலந்துரையாடி விவரித்துக் கூறுக.**

1. சதுரங்கம்



2. பல்லாங்குழி



## பாடம் 2 ஒரு மாணவர் ஒரு விளையாட்டு

### வாசித்து அறிக.

மலேசியக் கல்வி அமைச்சு கடந்த 2011 ஆம் ஆண்டு ‘ஒரு மாணவர் ஒரு விளையாட்டு’ என்ற திட்டத்தை அனைத்துப் பள்ளிகளுக்கும் **நடைமுறைப்படுத்தியது**. இத்திட்டத்தின் மூலம், குறைந்த அளவு ஒரு மாணவன் ஒரு விளையாட்டைக் **கட்டாயமாகத்** தேர்ந்தெடுக்க வேண்டும். இதன் மூலம் உடல் நலமும் மன நலமும் மிக்க மாணவர்களை உருவாக்க முடியும். மேலும், ‘உடல் நலமே சிந்தனை பலம்’ என்பதற்கேற்ப தனிமனிதனும் சமுதாயமும் நாடும் நன்மைகளை அடையும்.

இத்திட்டத்தின் மூலம் ஒவ்வொரு மாணவருக்கும் தனது உடல் வளர்ச்சியையும் மன வளர்ச்சியையும் மேம்படுத்திக்கொள்ள வாய்ப்பளிக்கப்படுகிறது. ‘உடலினை உறுதி செய்’ என்பது **ஆன்றோர்** வாக்கு. ஆகவே, விளையாட்டுகளின் மூலம் ஆரோக்கியமான உடலையும் அறிவார்ந்த சிந்தனையையும் பெற முடியும்.

மேலும், இத்திட்டத்தின் வழி, இன ஒற்றுமையையும் **வலுப்படுத்த** முடியும். விளையாட்டுகளில் பங்குபெறும் மாணவர்கள் மொழி, இனம், சமயம், பண்பாடு போன்ற பல்வேறு கூறுகளில் வேறுபடுகின்றனர். இருப்பினும், ‘ஒரு மாணவர் ஒரு விளையாட்டு’ என்ற திட்டத்தின் வழி வேற்றுமையில் ஒற்றுமை காணும் **பக்குவத்தை** அடைகின்றனர். பிறமொழி, இனம், சமயம், பண்பாடு ஆகியவற்றைப் புரிந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படுகின்றது.

மேலும் இத்திட்டம், ஒரு நாட்டின் விளையாட்டுத்துறை வளர்ச்சிக்கு முதுகெலும்பாகத் திகழும். பள்ளி நிலையில் ஒரு மாணவன் விளையாட்டில் பங்கெடுத்து வெற்றிபெறும் பொழுது பள்ளிக்குப் பெருமை சேர்கிறது. அதே மாணவன் அடுத்தடுத்த நிலையில் வெற்றி பெறும்பொழுது சமுதாயத்தின் மத்தியில் அவனது பெருமை உயர்த்தப்படுகிறது. தொடர்ந்து மாநிலத்தையோ நாட்டையோ பிரதிநிதிக்கும்போது திறன்மிகு விளையாட்டாளனைக் காண முடிகிறது. ஆகவே, ஒரு மாணவர் ஒரு விளையாட்டுத் திட்டத்தின் மூலம் நாட்டிற்குத் **திறன்மிகு** விளையாட்டாளர்களை உருவாக்க முடியும் என்பது உறுதி.



‘ஒரு மாணவர் ஒரு விளையாட்டு’ என்ற இத்திட்டத்தின்வழி மாணவர்கள் தங்களின் **ஆளுமையை** வளர்த்துக்கொள்ள முடியும். தன்னம்பிக்கை, கட்டொழுங்கு, **சுயமதிப்பு** போன்ற பண்புகளை வளப்படுத்திக்கொள்ள முடியும். எடுத்துக்காட்டாக, காற்பந்து விளையாட்டில் ஈடுபடும் மாணவன் பயிற்சியின் போது காலந்தவறாமை, கட்டொழுங்கு, **தன்முனைப்பு** போன்ற பண்புகளைக் கற்றுக் கொள்கிறான். இதன்மூலம் **பொறுப்புள்ள** விளையாட்டாளனாக உருவாகி நாட்டிற்குப் புகழைச் சேர்க்கிறான்.

எனவே, மலேசியக் கல்வி அமைச்சின் இத்திட்டத்தில் அனைத்து மாணவர்களும் கண்டிப்பாகப் பங்குபெற்று நலமிக்க சமுதாயமாகத் திகழவேண்டும்.

2.3.1

- விளையாட்டுத் தொடர்பான உரைநடைப் பகுதியை வாசித்துக் கருத்துணர்க் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.

## இடுபணி 1

**வண்ணமிடப்பட்ட சொல்லுக்கு அகராதியின் துணைகொண்டு பொருள் கூறுக.**

## இடுபணி 2

**வினாக்களுக்கு விடையளித்திடுக.**

1. ஒரு மாணவர் ஒரு விளையாட்டு என்ற திட்டம் எப்பொழுது யாரால் நடைமுறைப்படுத்தப்பட்டது?
2. ஒரு மாணவர் ஒரு விளையாட்டுத் திட்டத்தின் மூலம் மாணவர்கள் என்னென்ன வாய்ப்பினைப் பெறுவர்?
3. ஒரு மாணவன் ஒரு விளையாட்டுத் திட்டத்தின் மூலம் எவ்வாறு மாணவர்கள் உடல் வளர்ச்சி மன வளர்ச்சி பெற முடியும் என நீ கருதுகிறாய்?
4. உன் பள்ளியில் நடைபெறும் ஒரு மாணவர் ஒரு விளையாட்டு என்ற திட்டத்தில் பல்லின மாணவர்களிடையே ஒற்றுமை வளர்கிறது என்பதைச் சான்றுகளோடு விளக்குக.

## இடுபணி 3

**பனுவலை வாசித்து வினாக்களுக்குப் பதிலளித்திடுக.**

தற்காப்புக்கலையைக் கற்பதால் பல நன்மைகள் விளைகின்றன. நம்மைத் தாக்குபவர்களிடமிருந்து நாம் நம்மைத் தற்காத்துக் கொள்ள முடியும். தற்காப்புக்கலை நல்ல பயன்மிக்க பொழுதுபோக்காகவும் அமைகின்றது. மேலும், இத்தற்காப்புக்கலையைப் பயில்வதன்வழி இளைஞர்களிடையே நன்னெறிப் பண்புகள் விதைக்கப்படுகின்றன; கட்டொழுங்கு மேலோங்குகின்றது. இக்கலை சிறந்த உடற்பயிற்சியாக அமைவதோடு கற்பவரின் மனத்தை அமைதிப்படுத்துகிறது; மூளை சுறுசுறுப்பாக இயங்க துணைபுரிகின்றது. இளைஞர்கள் தீயச் செயல்களில் ஈடுபடாமல் இருக்க இத்தற்காப்புக்கலை உதவுகிறது. எனவே, இளைஞர்கள் ஆர்வத்துடன் இத்தற்காப்புக்கலைகளைக் கற்க முன்வர வேண்டும்.



1. ஏன் இளைஞர்கள் தற்காப்புக்கலையைக் கற்க முன்வர வேண்டும்?

2. தற்காப்புக்கலை பயில்வதற்கும், மனம் அமைதி பெறுவதற்கும் உள்ள தொடர்பினை விளக்குக.

**கலந்துரையாடி எழுதுக.**

## குறுக்கோட்டப் போட்டி 2017
## தாமான் யுனிவர்சிட்டி தேசிய இடைநிலைப்பள்ளி, சுங்கைப் பட்டாணி, கெடா.

கடந்த 13 ஆம் தேதி பிப்ரவரி 2017 ஆம் நாள் தாமான் யுனிவர்சிட்டி தேசிய இடைநிலைப்பள்ளி திடல்தட ஓட்டக் கழகத்தின் ஏற்பாட்டில் குறுக்கோட்டப்போட்டி ஒன்று சிறப்பாக நடந்தேறியது. இப்போட்டி, மாவட்டப் போட்டிக்கான விளையாட்டு வீரரைத் தேர்ந்தெடுக்கவும் கழக உறுப்பினர்கள் குறுக்கோட்டப் பயிற்சியை மேற்கொள்ளவும் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சியில் 25 கழக உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். போட்டியாளர்கள் ஒவ்வொருவரும் 2 ரிங்கிட்டைக் கட்டணமாகச் செலுத்திப் பங்கு பெற்றனர்.

காலை மணி 7:30 க்குப் பள்ளியின் முதல்வர் திருமதி வனிதா தருமன் அவர்கள் கொடியசைத்துக் குறுக்கோட்டப் போட்டியை அதிகாரப்பூர்வமாகத் தொடக்கிவைத்தார். போட்டியாளர்கள் பள்ளித்திடலிலிருந்து தொடங்கி 8 கிலோ மீட்டர் தூரம் கடந்து குறுக்கோட்டப்போட்டியை நிறைவுக்குக் கொண்டு வந்தனர்.

பள்ளியின் செம்பிறைச் சங்கத்தைச் சேர்ந்த சுமார் 15 உறுப்பினர்கள் முதலுதவி செய்வதற்கு உடன் இருந்தனர். இவர்களுள் அறுவர் விசையுந்தில் போட்டியாளர்களைப் பின் தொடர்ந்தனர். மூன்று போட்டியாளர்கள் தவறி விழுந்ததால் சிராய்ப்புக் காயங்கள் ஏற்பட்டு முதலுதவி அளிக்கப்பட்டது. பள்ளியின் செம்பிறைச் சங்கத்தினர் மிகச் சிறப்பாகத் தங்களது சேவையினை வழங்கினர். மேலும், கழகத்தின் செயற்குழுவினர் போட்டியாளர்களுக்குச் சாலை ஓரங்களில் கனிமநீர் விநியோகம் செய்தனர். போட்டியாளர்களில் சிலர் பாதி தூரத்தைக் கடந்த பிறகு ஓடுவதை விடுத்து நடக்க ஆரம்பித்தனர். பல போராட்டங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதைப் போட்டியாளர்கள் உணர்ந்துகொண்டனர்.

காலை மணி ஒன்பதளவில் குறுக்கோட்டப்போட்டி பள்ளித்திடலில் ஒரு முடிவுக்கு வந்தது. ஆண்கள் பிரிவின் வாகையாளராகச் செல்வன் இளவரசுவும் பெண்கள் பிரிவின் வாகையாளராகச் செல்வி சர்மிளாவும் வெற்றி பெற்றனர்.வெற்றியாளர்களுக்குக் கேடயங்களும் சான்றிதழ்களும் பள்ளியின் முதல்வர் வழங்கினார்.

அறிக்கையைத் தயாரித்தவர், 20 பிப்ரவரி 2017

*சேரன்*


(சேரன் த/பெ முருகன்)
ஏற்பாட்டுக் குழுச் செயலாளர்
தாமான் யுனிவர்சிட்டி தேசிய இடைநிலைப்பள்ளி



3.4.1 • 140 சொற்களில் நிகழ்ச்சியறிக்கை எழுதுவர்.

## இடுபணி 1

**பள்ளிகளுக்கிடையிலான வலைப்பந்துப் போட்டி தொடர்பான குறிப்புகளைக் கொண்டு 140 சொற்களில் நிகழ்ச்சி அறிக்கை ஒன்றனை எழுதுக.**




## இடுபணி 2

**பெர்மாத்தா தேசிய இடைநிலைப்பள்ளி கூடைப்பந்துப் போட்டி விளையாட்டை ஏற்பாடு செய்துள்ளது. குறிப்புகளைப் பயன்படுத்தி அந்நிகழ்ச்சியின் செயலாளர் என்ற முறையில் நிகழ்ச்சியறிக்கை ஒன்றை எழுதுக.**

- மாணவர்கள் தங்கள் குழுக்களின் பெயர்களைப் பதிவு செய்தல்
- போட்டிக்கான விதிமுறைகளை விளக்குதல்
- குழுக்களுக்கிடையிலான போட்டி தொடக்கம்
- வெற்றிபெற்ற குழுக்கள் மகிழ்ச்சி அடைதல்
- நற்சான்றிதழ், பரிசுகள் வழங்குதல்
- நன்றி நவிலுதல்



## வளப்படுத்துதல்

**கொடுக்கப்பட்ட குறிப்புகளின் துணையுடன் நிகழ்ச்சி அறிக்கை ஒன்றனைத் தயார் செய்க.**

### பூப்பந்து விளையாட்டு





| | |
|---|---|
| தொடக்கம் | - இடம், பள்ளி மண்டபம்<br>- தேதி, ஏற்பாடு<br>- நோக்கம் |
| கருத்து | 1) தொடக்கம்<br>- குழுக்கள்<br>- விதிமுறைகள்<br><br>2) இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்ற குழுக்கள்<br><br>- வெற்றியாளர் - முதல் நிலை<br>இரண்டாம் நிலை<br>மூன்றாம் நிலை<br>3) பரிசளிப்பு<br>- நற்சான்றிதழ், கேடயம் |
| முடிவு | - கையொப்பம், பெயர், பொறுப்பு, தேதி |



## குறைநீக்கல்

**தலைப்புக்கேற்ற குறிப்புகளை எழுதி வாக்கியம் அமைத்திடுக.**

ஹாக்கி விளையாட்டு




# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## வாசித்து அறிக.

மாணவி: வணக்கம் ஐயா! நல்ல நண்பர்களைத் தேர்ந்தெடுத்து நட்புகொள்ள வேண்டும் என்று என் பெற்றோர் அறிவுரை வழங்கியுள்ளனர். ஆனால், எவ்வாறு நல்ல நண்பர்களைத் தேர்ந்தெடுப்பது என்று தெரியவில்லை. நீங்கள்தான் நல்ல ஆலோசனை கூற வேண்டும் ஐயா!

ஆசிரியர்: ஒருவரைப்பற்றி அறிந்துகொள்வதற்கு முதலில் அவரிடம் உள்ள நற்குணங்களையும் தீய குணங்களையும் பட்டியலிட வேண்டும். பிறகு, அவற்றுள் எந்தக் குணம் மிகுந்திருக்கிறது என்று ஆராய்ந்து அறிந்தபிறகு அவரைப்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும்.




| திருக்குறளும் பொருளும் |
| --- |
| **குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்<br>மிகைநாடி மிக்க கொளல்.** (504)<br><br>ஒருவருடைய குணங்களை ஆராய்ந்து, பிறகு குற்றங்களையும் ஆராய்ந்து, அவற்றுள் மிகுதியானவை எவையென அறிந்து, மிகுந்திருப்பனவற்றால் அவரைப்பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும்.<br><br>**கருத்து**<br>ஒருவரின் குணநலன்களை ஆராய்ந்து எத்தகையோர் எனத் தீர்மானம் செய்யலாம். |

### இடுபணி 1

**குறளையும் விளக்கத்தையும் மனனம் செய்து ஆசிரியரிடம் ஒப்புவித்திடுக; எழுதுக.**

### இடுபணி 2

**குறளுக்கு ஏற்ற சூழலை உருவாக்கி பாகமேற்று நடித்திடுக.**

4.2.1

• ஒன்றாம் படிவத்திற்கான திருக்குறளையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.


# தொகுதி 18

# அறிவோம்! போற்றுவோம்!

## பாடம் 1 இலக்கிய இன்பம்



**கவிதையை வாசித்து விவரித்திடுக.**






முதலாம் எட்டில் வளராப் பிள்ளை
இரண்டாம் எட்டில் கல்லாக் கல்வி
மூன்றாம் எட்டில் செய்யாத் திருமணம்
நான்காம் எட்டில் பெறாக் குழந்தை
ஐந்தாம் எட்டில் சேர்க்காச் செல்வம்
ஆறாம் எட்டில் சுற்றா உலகம்
ஏழாம் எட்டில் காணா யாத்திரை
எட்டாம் எட்டில் இறவா இறப்பு

(விவேக சிந்தாமணி)




**இடுபணி 1**

**மனிதர்கள் தங்களது ஒவ்வொரு எட்டாவது வயதிலும் எதனை அடைய வேண்டும் என்பதனை விவரித்துக் கூறுக.**

1.4.1

- படித்தவற்றை விவரித்துக் கூறுவர்.

இடுபணி 2

**கவிதையை வாசித்து விவரித்துக் கூறுக.**

## நாட்டை நேசிப்போம்!

நாட்டை நேசிப்போம் தம்பி
நாட்டை யாசிப்போம் - உலக
நாட்டு நடப்பெல்லாம் பார்த்தறிந்த பின்னர்
நாட்டை நேசிப்போம் தம்பி
நாட்டை சுவாசிப்போம்

காடும் கடலும் கார்முகிலும் - நமது
கண்ணுக்கு விருந்தல்லவா - இங்கு
மேடும் பள்ளமும் மலைகளிலும் - தேடி
ஓடும் தண்ணீரே மருந்தல்லவா (நாட்டை...)

ஆண்டு முழுவதும் பாசமழை - எங்கும்
அன்பைப் பொழிகின்ற நேசமழை
வேண்டும் அளவுக்குத் தூயமழை - தொழில்
வைத்தால் சுரந்திடுமே காசுமழை (நாட்டை...)

வாட்டும் வறுமையெதும் காணோம் - மக்கள்
வாக்கில் உண்மைகளே தோணும்
மீட்ட வேண்டியதுன் பொறுப்பு - வென்று
மேனி சிலிர்த்திடுவாய் நெருப்பாய் (நாட்டை...)

காற்றில் மிதக்கிறது வாய்ப்பு - எட்டிப்
பற்றினால் கிட்டிவிடும் கைக்கு
ஆற்றல் பெருக்கிவிட்டால் போதும் - கேள்வி
யாரும் எழுப்பிவர மாட்டார் (நாட்டை...)

நாளை எதிர்காலம் மணக்கும் - கல்வி
நாட்டம் இருந்துவிட்டால் உனக்கும்
வேளை வருமென்று காத்தால் - நழுவி
வீழ்வோம் வேதனையில் நொந்து (நாட்டை...)

- மைதீ சுல்தான்





**அறிந்துகொள்க**

கவிஞர் மைதீ. சுல்தான் 1941இல் பினாங்கில் பிறந்தவர். 29 ஆண்டுகளாக வானொலி ஒலிபரப்பிலும், தொலைக்காட்சி செய்தி வாசிப்பிலும் பணியாற்றினார். இலக்கிய நிகழ்ச்சி, விளையாட்டு வருணனை, கதை, கவிதை, கட்டுரை எழுதுதலில் தமது ஆற்றலை வெளிபடுத்தினார். “சொல்லின் செல்வர்”, “தங்கமகன்”, “ஊடகத்தில் தமிழ்ப்பணி” போன்ற விருதுகளைப் பெற்றுள்ளார்.

## இடுபணி 3

**துணுக்குகளை வாசித்து, அவை உணர்த்தும் கருத்துகளை விவரித்துக் கூறுக.**

1. “எப்போது நேரம் கிடைத்தாலும், அந்த நேரத்தில் ஒரு பங்கு நல்ல புத்தகங்கள் படிக்கச் செலவிடு. நல்ல புத்தகங்கள் இரண்டு மூன்றாவது வைத்துக்கொண்டு திரும்பத் திரும்பப்படிப்பது நல்லது. வாழ்க்கையில் மனிதர்களின் தொடர்பு கசக்கும் நாள் வரும். ஆனால், உயர்ந்த புத்தகங்களின் கருத்துகள் என்றுமே கசப்பதில்லை. இன்பத்திற்குத் துணையாக இருக்க யாராலும் முடியும்; ஈ, எறும்பாலும் முடியும். தேவையானது கிடைக்கும்போது ஈயும் எறும்பும் நம்மைக் கேளாமலேயே மொய்க்கின்றன. அதுபோல் இன்பம் உள்ளபோது யார் வேண்டுமானாலும் வந்து மொய்த்துக் கொள்வார்கள். ஆகையால், இன்பத்திற்குத் துணையாக வல்லாரை நம்பாதே. துன்பத்திற்குத் துணையாக இருக்க வல்லாரைத் தேடு. உறவானாலும் நட்பானாலும் இப்படித்தான் தேட வேண்டும்.

   டாக்டர் மு. வரதராசன்

2. மலாயாத் தமிழர் ஒன்றுபட்டு, ஐக்கியமாய் வாழ்ந்து தங்கள் தாழ்ந்த நிலையை மாற்றிக் கொள்ள வேண்டும். தங்களிடம் பரவிக் கிடக்கும் தற்குறித்தனத்தைப் போக்கிக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் அதிகரித்து வருகிறது. தமிழர்களுக்கு நல்ல எதிர்காலம் உண்டு என்பதற்கு இதுவொரு நல்ல அறிகுறி. ஆனாலும், பேச்சளவோடும் எழுத்தளவோடும் நின்றுவிடாது ஒவ்வொருவரும் இயன்ற அளவு தொண்டாற்றித் தமிழர் நலங்காத்து, தமிழை வளர்க்க வேண்டும். மலாயாத் தமிழர்கள் தங்களின் தாழ்ந்த நிலையை உயர்த்திக்கொள்ள தங்களிடம் ஐக்கியம் வளர வேண்டும். அந்த ஐக்கியத்தை வளர்க்கவே தமிழர் திருநாள் கொண்டாடப்படுகிறது. இவ்விழா, தமிழ் மக்களிடையே புத்துணர்ச்சியை உண்டாக்கி இருக்கின்றதென்பதில் ஐயமில்லை.

   தமிழவேள் கோ. சாரங்கபாணி

## இடுபணி 4

**கீழ்க்காணும் துணுக்குகளில் அறிஞர்கள் கூறவரும் கருத்துகளை விவரித்திடுக.**

1. நான் தினந்தோறும் கண்ணால் பார்க்கும் சூரியனைவிட, கோடி மடங்கு அதிகம் பிரகாசம் உடையது சத்தியத்தின் ஜோதி.

   - மகாத்மா காந்தி

2. அதிகம் பேசாதவனை உலகம் அதிகம் விரும்புகிறது. அளந்து பேசுபவனை அதிகம் மதிக்கிறது. அதிகம் செயல்படுபவனையே வணங்குகிறது.

   - கன்பூசியஸ்

3. நல்லெண்ணங்களை மட்டுமே மனத்தில் போடு. தீய எண்ணங்கள் எழுமானால் அதன் விளைவுகளை எண்ணிப் பயப்படு.

   - டாக்டர் எம். எஸ். உதயமூர்த்தி

# பாடம் 2 கதை சொல்வோம் வாரீர்!

**விளம்பரத்தை வாசித்து அறிக.**

## தேசிய அளவிலான கதைகூறும் போட்டி 2017

முதல் சுற்று: 9 & 10 செப்டம்பர் 2017
நேரம்: காலை மணி 8:00 முதல் மாலை மணி 5:00 வரை
இறுதிச் சுற்று: 7 அக்டோபர் 2017

முதல் சுற்று: இடங்கள்

| வட மண்டலம் | மத்திய மண்டலம் | தென் மண்டலம் |
|---|---|---|
| சுங்கைப் பட்டாணி | கோலாலம்பூர் | மலாக்கா |
| ஈப்போ | சிரம்பான் | ஜோகூர்பாரு |

**போட்டி நுழைவுக்கான விதிமுறைகள்:**
13 முதல் 15 வயது வரை மலேசியவாழ் அனைத்து இடைநிலைப்பள்ளி மாணவர்களும் கலந்துகொள்ளலாம். கதைகள் அனைத்தும் தமிழிலேயே கூற வேண்டும். மலேசியச் சூழலில் அமைந்த கதைகள் மட்டுமே அனுமதிக்கப்படும்.

**கதைத் தேர்வு:**
போட்டியாளர்கள் இரு வெவ்வேறு கதைகளை மாநில நிலைக்கும் தேசிய நிலைக்கும் பயன்படுத்தலாம். ஒரே கதையை இரண்டு நிலைகளுக்கும் பயன்படுத்தலாம். கதைக் கரு **கண்டிப்பாக** நன்னெறிப் பண்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும். அரசியல், **இனவாதம்,** சமயக் கருத்துகளை **உட்புகுத்தலாகாது.**

**நேரம்**
கதை கூறுவதற்கான நேரம் 5 முதல் 7 நிமிடம் வரை.

**உடை**
கதைக்கு ஏற்ப அமைதல்

**படைப்பு**
பண்பற்ற பேச்சுகளையோ சைகைகளையோ பயன்படுத்தக்கூடாது.

**புள்ளிகள்**
மொழி, உச்சரிப்பு, பாவனை - 30
கருத்து, கதை மதிப்பீடு - 25
படைப்பாக்கம் - 20
நன்னெறிப் பண்பு, படிப்பினை - 25

*நீதிபதிகளின் முடிவே இறுதியானது. உறுதியானது.*

*ஆதரவு: • கல்வி அமைச்சு • தேசிய நூலகம் • சுல்தான் இட்ரிஸ் கல்விப் பல்கலைக்கழகம்*

2.1.2
• விளம்பரத்தைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர்.

## இடுபணி 1

**விளம்பரத்தைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கு ஏற்ப வாசித்திடுக.**

## இடுபணி 2

**வினாக்களுக்கு விடை கூறுக.**

1. இவ்விளம்பரத்தின் நோக்கம் யாது?
2. இவ்விளம்பரத்தில் காணப்படும் போட்டிக்கு என்னென்ன தகுதிகள் வேண்டும்?
3. இவ்விளம்பரத்தைப் பார்த்து இப்போட்டியில் பங்கேற்க நினைக்கும் மாணவர்கள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் யாவை?
4. இந்நிகழ்ச்சியின் ஆதரவாளர்களைக் குறிப்பிடுக.

## இடுபணி 3

**குழுமுறையில் ஒரு விளம்பரத்தைத் தயார் செய்து வகுப்பில் படைத்திடுக.**

## இடுபணி 4

**விளம்பரத்தை வகுப்பில் வாசித்துக்காட்டுக.**



# பாடம் 3 அறிவாயா!

## வாசித்து எழுதுக.

**சூழல்**

நீரின் இயல்புகளைப் பற்றி அறிந்துகொள்ள இனியன் விரும்புகிறான். அதன் பொருட்டு அருகிலுள்ள நீரியல்பு ஆய்வுக்கூடத்திற்குச் (Makmal Riak Air) சென்று ஓர் ஆய்வாளரிடம் தகவலைப் பெற உரையாடுகின்றான்.

இனியன்: வணக்கம் ஐயா, நான் இனியன், பாலோங் இடைநிலைப்பள்ளியில் படிவம் ஒன்றில் பயில்கிறேன்.

ஆய்வாளர்: வணக்கம் தம்பி. நான் எவ்வாறு உனக்கு உதவ முடியும்?

இனியன்: ஐயா, நீர் நமக்கு அத்தியாவசியமானது. நீரின்றி நாம் உயிர் வாழ முடியாது. அந்த நீரின் இயல்புகளைப் பற்றி மேலும் அறிந்து கொள்ளவே தங்களின் உதவியை நாடியுள்ளேன்.

ஆய்வாளர்: ஓ...அப்படியா! கண்டிப்பாகச் சொல்கிறேன். நீரானது காற்று மண்டலத்திலோ, பூமியிலோ பூமிக்கு அடியிலோ, திட, திரவ, ஆவி நிலையிலோ இருக்கும். இந்நீர் உருவாக்கும் நகர்வு மற்றும் அதன் கட்டுப்பாட்டினைப் பற்றிய அறிவியலையே நீரியல்பு என்கிறோம்.

இனியன்: ஐயா. நீரியல்பின் முக்கிய அங்கமாக விளங்கும் நீர்ச்சுழற்சி பற்றிச் சொல்கிறீர்களா?

ஆய்வாளர்: நீர்ச்சுழற்சியைப் பல்வேறு வகையில் பார்க்கலாம். அவை முறையே நீராவியாதல், நீரோட்டம், உலர்தல், வண்டல் எனப்படும்.

இனியன்: ஐயா, நீராவியாதல் எனும் செயற்பாங்கினைச் சற்றுத்தெளிவாக விளக்குங்கள்.



நீராவி காற்றில் கலந்து மேகமாகிறது. தட்ப வெப்ப நிலை சமமாக இல்லாத போதுதான் நீரின் நிலையில் மாற்றம் ஏற்படுகிறது. காற்று குளிர்ந்த நிலையில் இருக்கும்போது நீராவி காற்றாக இருக்கும். அணுக்களோடு இணைந்து மேகமாகிறது. காலை வேளையில் பூக்கள் மேல் பனித்துளி பதிந்திருப்பது இம்முறை செயல்பாட்டில்தான்.



நன்கு சொன்னீர்கள் ஐயா. மிகுந்த தெளிவைக் கொடுத்த தங்களுக்கு மிக்க நன்றி.

### இடுபணி 1


**உரையாடலைப் பாகம் ஏற்று நடித்திடுக.**

3.4.3

• 140 சொற்களில் உரையாடல் எழுதுவர்.

## இடுபணி 2

**நீயும் உனது நண்பனும் ஆண்டிறுதித் தேர்வை எதிர்நோக்கும் வழிமுறைகளைப் பற்றி உரையாடுகின்றீர்கள். அவ்வுரையாடலைக் கீழ்க்காணும் குறிப்புகளின் துணையுடன் 140 சொற்களில் எழுதுக.**




## இடுபணி 3

**‘மாணவர்களிடையே நிலவும் குற்றச் செயல்களைக் களையும் வழிமுறைகள்’ பற்றி நீயும் உனது நண்பனும் உரையாடுகின்றீர்கள். கொடுக்கப்பட்ட தொடக்கத்தைத் துணையாகக் கொண்டு 140 சொற்களில் உரையாடல் எழுதுக.**

சூழல் - செழியனும் சேகரும் பள்ளி நூலகத்தில் சந்திக்கின்றனர். கட்டுரைக்கான கருத்துகளைச் சேகரிக்க வந்த அவர்கள் கலந்துரையாடல் அறையில் உரையாடுகின்றனர்.

செழியன்: வணக்கம் சேகர். இப்பொழுதுதான் சாப்பிட்டுவிட்டு வருகிறேன். நீ சாப்பிட்டாயா?

சேகர்: ஆம். நானும் இப்போதுதான் சாப்பிட்டு முடித்தேன் செழியன். சரி, ஆசிரியர் கட்டுரைக்கான கருத்தைத் தேடி வரச் சொன்னார். தேடினாயா?

செழியன்: தேடினேன். இதுவரை நான் தேடிய கருத்துகள் இதுதான் சேகர். மாணவர்களிடையே குற்றச்செயல்களுக்குக் காரணம் தனிமனிதன் குடும்பம், பள்ளி, கூடாநட்பு, சமுதாயம், சுற்றுச்சூழல்...

இடுபணி 4


**கல்வியில் வெற்றி பெறுவதற்கான வழிவகைகள் தொடர்பான கேலிச்சித்திர உரையாடலைத் தொடர்ந்து எழுதுக.**

பள்ளி முடிந்து சிவா, பேருந்து நிலையத்தில் நின்று கொண்டிருக்கின்றான். அப்பொழுது அங்கு வந்த மாலாவிடம் உரையாடலைத் தொடங்குகின்றான்.




## வளப்படுத்துதல்

1. அண்மையில் நீ ஒரு தன்முனைப்பு உரை நிகழ்ச்சியில் கலந்துகொண்டாய். அதைப்பற்றி உன் நண்பனுடன் உரையாடுகின்றாய். அவ்வுரையாடலை நிரல்படுத்தி, கீழ்க்காணும் விவரங்களின் துணையுடன் 140 சொற்களில் எழுதுக.




2. துணை வகுப்புகளுக்குச் செல்வதால் ஏற்படக்கூடிய நன்மை தீமைகளை உன் நண்பரோடு உரையாடவுள்ளாய். அவ்வுரையாடலுக்கான குறிப்புகளைக் குறிவரைவில் எழுதுக.



## குறைநீக்கல்

**கொடுக்கப்பட்ட படங்களுக்கு ஏற்ற சிறுசிறு உரையாடல்களை எழுதுக.**

அ.




அமலா: ______________________________

விமலா: ______________________________

அமலா: ______________________________

விமலா: ______________________________

ஆ.



வளவன்: ______________________________

அமுதா: ______________________________

வளவன்: ______________________________

அமுதா: ______________________________

இ.



அப்பா: ______________________________

மகன்: ______________________________

அப்பா: ______________________________

மகன்: ______________________________

## பாடம் 4 இலக்கணம்

### வலிமிகும் இடம் அறிக.




5.4.1 • அத்துணை, இத்துணை, எத்துணை, அரை, பாதி, இனி, தனி, மற்ற என்பனவற்றுக்குப்பின் வலிமிகும் என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.



4
முதன்முறையாக இத்துணைச் சிறப்பான புத்தகக் கண்காட்சிக்கு அழைத்து வந்ததற்கு மிக்க நன்றி அம்மா!
5
சரி கருணா! இங்கேயே நில் மற்றப் பகுதிக்குத் தனியாகச் சென்றுவிடாதே!
DISCOUNT 80%
BEST BUY
Step by Step
Educator

## இடுபணி 1

**கொடுக்கப்பட்டுள்ள உரையாடலில் காணும் பிழைகளை அடையாளம் கண்டு திருத்தி எழுதுக.**

| | |
|---|---|
| சடையப்பர்: | இத்துணை சிறப்பாக இராமாயணத்தை எழுதி முடித்தமைக்கு வாழ்த்து. |
| கம்பர்: | தங்களின் ஆதரவினாலே அத்துணை பெரிய காரியத்தைச் செய்ய முடிந்தது. தங்களின் மீதுள்ள தனி பற்றும் ஒரு காரணம். |
| சடையப்பர்: | நிச்சயமாக மற்ற புலவர்களால் இதுபோன்ற காவியத்தைப் படைக்க முடியாது. |
| கம்பர்: | ஒட்டக்கூத்தர் பாதி பகுதியை இயற்றினார். பாதி பகுதியைக் கிழித்தெறிந்துவிட்டார். மற்ற பகுதிகளைக் காப்பாற்றிவிட்டேன். அக்காவியத்தை இனி படைக்க மாட்டேன் என்று கூறிவிட்டார். |

## இடுபணி 2

**சேர்த்து எழுதுக.**

1. எத்துணை + கோபம் = ______
2. அத்துணை + சிரமம் = ______
3. இத்துணை + துன்பம் = ______
4. அரை + பகுதி = ______
5. தனி + செயல் = ______
6. இனி + கேள் = ______
7. தனி + சிறப்பு = ______
8. மற்ற + பாடங்கள் = ______

## இடுபணி 3

**அடைப்புக்குறியிலுள்ள சொற்களை வாக்கியத்தில் சேர்த்தெழுதுக.**

1. அம்மா கொடுத்த ______ பழத்தை நான் தம்பிக்குக் கொடுத்தேன். (பாதி)
2. மல்யுத்த வீரன் ______ பெரிய கல்லைச் சுமக்க முடியும் என்று ஊர் மக்களிடம் சவால் விட்டான். (அத்துணை)
3. ஓய்வு பெற்ற தலைமையாசிரியர் திரு. கு. பூபாலன் ______ தொடர்ந்து சமயப்பணியில் ஈடுபடுவதாகக் கூறினார். (இனி)
4. அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி ______ பெருங்கருணை அருட்பெருஞ்சோதி என்றார் இராமலிங்க சுவாமிகள். (தனி)
5. கவியழகன் ______ தோழர்களைப் போல் கலகலவெனப் பேசும் ஆற்றல் கொண்டவர். (மற்ற)

# தொகுதி 19

# நற்பண்புகள்

## பாடம் 1 நன்றி நவில்வோம்

குழுவில் கலந்துரையாடுக.



1.3.2

• பிரியாவிடை உரையாற்றுவர்.

## இடுபணி 1

**பணி ஓய்வு பெறும் ஆசிரியருக்குப் பிரியாவிடை உரை ஆற்றுக.**




- தொடக்கம் - அவை வணக்கம்
- நோக்கம்
  - பிரியாவிடை
  - மறக்க முடியாத நாள்
  - 36 ஆண்டுகள் கல்விச் சேவை
- பங்களிப்பு
  - கல்வியில் சாதனை - மாணவர் தேர்ச்சி
  - புறப்பாட நடவடிக்கை - சாதனைகள்
  - பள்ளியின் எழில் தோற்றம்
- அர்ப்பணிப்பு
  - காலம் பாராது சேவை செய்தல்
  - உண்மை, உழைப்பு
  - மாணவர்களிடையே நல்லுறவு
  - நலம் பெற வேண்டுதல்
- நற்பண்புகள்
  - நேர்மை, தன்னம்பிக்கை
  - தியாகம்
  - துணிவு
- நன்றி நவிலுதல்

## இடுபணி 2

**கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு பள்ளி மாற்றலாகிச் செல்லும் ஆசிரியருக்கு பிரியாவிடை உரை ஆற்றுக.**

**பிரியாவிடை உரை**

**முடிவு**
- நன்றி
- நலம் வேண்டுதல்

**தொடக்கம்**
- வரவேற்பு

**அர்ப்பணிப்பு சாதனைகள்**
- நிறைவான சேவை
- காலம் பாரா உழைப்பு

**சாதனைகள்**
- கல்வித் தேர்ச்சி
- புறப்பாடச் சாதனை
- பள்ளித் தோற்றம்

**நோக்கம்**
- எதற்கு?
- யாருக்கு?
- ஏன்?

## இடுபணி 3

**உன் கிராமத்தலைவர் பணியின் காரணமாக வேறொரு கிராமத்திற்கு மாற்றலாகிச் செல்கிறார். படங்களின் துணையுடன் குழுவில் கலந்துரையாடி ஒரு பிரியாவிடை உரை நிகழ்த்துக.**




## இடுபணி 4

**வேறொரு பள்ளிக்கு மாற்றலாகிச் செல்லும் உனது பள்ளி நண்பருக்குப் பிரியாவிடை விருந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அந்நிகழ்வில் உன்னைப் பிரியாவிடை உரை நிகழ்த்தப் பணித்துள்ளனர். பின்வரும் குறிப்புகளைப் பயன்படுத்தி அவ்வுரையை எழுதுக.**

**நண்பருக்குப் பிரியாவிடை**

**வரவேற்புரை**
- அவை வணக்கம்

**நிகழ்ச்சியின் நோக்கம்**
- நண்பருக்குப் பிரியாவிடை

**எதிர்பார்ப்பு**
- உடல்நலம் பேணல்
- கல்வியில் சிறந்து விளங்குதல்

**நண்பரின் சிறப்புகள்**
- அன்பு
- பணிவு
- உதவி
- அறிவாற்றல்

# பாடம் 2 அன்புள்ள தோழி

**வாசித்து அறிக.**

எண் 26, ஜாலான் பாரிட்,
43800 சாலாக் திங்கி,
சிலாங்கூர்.

15 ஜூன் 2017

ஆருயிர்த் தோழி நிவிதாவுக்கு,

வணக்கம், இங்கு நானும் என் குடும்பத்தாரும் நலமாக இருக்கிறோம். அங்கு நீயும் உன் குடும்பத்தாரும் நலமாக இருக்கிறீர்களா?

கடந்த மாதம் 15.07.2017இல் என் பிறந்தநாளை என் குடும்பத்தினர் மிக விமரிசையாகக் கொண்டாடினர் தெரியுமா? உன்னைத் தவிர மற்ற நண்பர்கள் எல்லோரும் என் பிறந்த நாள் விழாவிற்கு வந்திருந்தனர். நீ வராத கவலை ஒன்றுதான்! நீ வராமல் இருந்தாலும் என் பிறந்தநாள் கொண்டாட்டம் பற்றி உன்னிடம் கூற ஆசைப்படுகிறேன்.

பிறந்தநாளைக் கொண்டாடுவதற்கு முன், என் அம்மா பலவகையான பலகாரங்களைச் செய்தார். என் அப்பா அழகான அணிச்சல் ஒன்றை வாங்கி வந்தார். என் அக்காள் கடைக்குச் சென்று மிட்டாய்களையும் இனிப்புப் பண்டங்களையும் வாங்கி வந்தார். என் தம்பியும் தங்கையும் வீட்டைச் சுத்தம் செய்து அலங்கரித்தனர்.

மாலையில் நண்பர்களும் உறவினர்களும் வீட்டிற்கு வந்தனர். அவர்கள் வரும்போதே பரிசுகளோடு உள்ளே வந்தனர். நான் பட்டுப் பாவாடை அணிந்து அணிச்சலை வெட்டினேன். அனைவரும் பிறந்தநாள் பாடலைப் பாடினர். நான் வெட்டிய அணிச்சலை என் பெற்றோர்களுக்கு ஊட்டினேன். பிறகு, என் அம்மா அனைவருக்கும் உணவு பரிமாறினார். அனைவரும் வயிறார உண்டனர். உணவு சுவையோ! சுவை! என்று பாராட்டினர்.

உறவினர்களும் நண்பர்களும் எனக்குப் பரிசுகளைக் கொடுத்தனர். அந்தப் பிறந்த நாள் விழா பசுமரத்தாணி போல் என் மனத்தில் பதிந்துவிட்டது. மனம் மகிழ்ச்சிக்கடலில் மூழ்கியது. பெற்றோர் மடிக்கணினியைப் பரிசாகக் கொடுத்து என்னை வியப்பில் ஆழ்த்தினர்.

என் பிறந்த நாள் விழா மிகவும் சிறப்பாக நடந்ததை எண்ணி, என் மனம் இன்னும் பட்டாம்பூச்சி போல் பறக்கின்றது. இத்துடன் என் மடலை முடித்துக் கொள்கிறேன்.
நன்றி.

இக்கண்,
உன் ஆருயிர்த் தோழி,
*கு. ஜெயந்தி*
(கு. ஜெயந்தி)

2.1.3

• கடிதத்தைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர்.

இடுபணி 1

**கடிதத்தை வாசித்து அறிக.**

32, ஜாலான் ஆங்கிரிக்,
தாமான் ஆங்கிரிக்,
52000 கோலாலம்பூர்

10 ஜூலை 2017

அன்புள்ள தோழன் வேலனுக்கு,

வணக்கம். நானும் என் குடும்பத்தாரும் இங்கு நலமாக உள்ளோம். அதேபோல் நீயும் உன் குடும்பத்தாரும் நலமாக இருக்க, ஆதி அந்தமில்லாத இறைவனை இறைஞ்சுகிறேன்.

மலேசியத் திருநாட்டில் உள்ள சுற்றுலாத்தலங்களின் சிறப்புகளை விளக்குவதற்காக எழுதுகிறேன். இந்நாடு உலக நாடுகளிடையே புகழ்பெற்ற நாடாகத் திகழ்கிறதென்றால்; அதற்குக் காரணம் நம் நாட்டிலுள்ள சிறப்புமிக்கச் சுற்றுலாத்தலங்கள்தான் என்றால் வியப்பொன்றுமில்லையே!

இந்நாட்டில் பல அழகான சுற்றுலாத்தலங்கள் உள்ளன. அவற்றில் முதன்மையானது, தென்கிழக்காசியாவிலேயே உயர்ந்ததாகக் கருதப்படும் 'பெட்ரோனாஸ்' இரட்டைக் கோபுரம்தான். அதனைத் தவிர்த்து, அனைவருக்கும் பிடித்தமான, சுழல் உணவகத்தைக் கொண்ட கோலாலம்பூர் கோபுரமும் ஒன்று.

அற்புதமான தோட்டங்களையும் குளிர்ச்சியான காற்றையும் கொண்ட கேமரன் மலையும் ஒரு சிறந்த சுற்றுலாத்தலமாகக் கருதப்படுகிறது. இதற்குக் காரணம், அங்கு அனைவரையும் கவரக்கூடிய இயற்கை எழிலும் நாவில் எச்சில் ஊற வைக்கும் சுவையான பழங்களும்தான்.


மேலும், இந்நாட்டில் வரலாற்று மாநிலம் என்று அழைக்கப்படும் மலாக்காவும் ஒரு பிரசித்திப்பெற்ற சுற்றுலாத் தலம்தான். தனக்கெனப் பல வரலாறுகளைப் பதித்த மாநிலம் என்று புகழ்ந்தாலும் அது மிகையாகாது. ஏனென்றால், அங்குதான் போர்த்துகீசியர்கள் கட்டிய 'ஆ பாமோசா' கோட்டை உள்ளது.

இவைதான் இந்நாட்டிலுள்ள சுற்றுலாத்தலங்கள் என்று எண்ணிவிடாதே! இதனைத் தவிர்த்து, இன்னும் பல சுற்றுலாத்தலங்கள் இந்நாட்டில் உள்ளன. இத்துடன் என் மடலை நான் முடித்துக்கொள்கிறேன். நன்றி.

இப்படிக்கு,
உன் தோழன்,
*கபிலன்*
(ம. கபிலன்)

# பாடம் 3 நலம் விசாரித்தல்

**கலந்துரையாடுக.**




## இடுபணி 1

**உனது வகுப்பு நண்பன் வேறு பள்ளிக்கு மாற்றலாகிச் சென்று பல மாதங்களாகின்றன. நலம் விசாரித்து ஒரு கடிதம் எழுதுக.**

**தொடக்கம்**
- நலம் விசாரித்தல்
- உன் நலத்தைத் தெரிவித்தல்

**கருத்து**
- கடிதத்தின் நோக்கம்
- புதிய நண்பர்கள்
- ஆசிரியர்கள் - பாடங்கள்
- புதிய பள்ளி நடவடிக்கைகள்

**முடிவு**
- உனது நல்லுரை
- எதிர்பார்ப்பு - பதில் கடிதம்



3.4.2

• 140 சொற்களில் நட்புக் கடிதம் எழுதுவர்.

இடுபணி 2

**வெளிநாட்டில் வசிக்கும் உனது நண்பனுக்கு நம் நாட்டின் சிறப்புகளைப் படங்களின் துணையுடன் விளக்கி ஒரு கடிதம் எழுதுக.**


















## வளப்படுத்துதல்

**முழுவிடுதிப் பள்ளியில் பயிலும் உன் நண்பன் தலைமை மாணவனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதை நீ அறிகிறாய். அவனுக்கு வாழ்த்துத் தெரிவித்துக் கடிதம் எழுதுக.**

## குறைநீக்கல்

**விடுபட்ட இடத்தை நிறைவு செய்து கடிதம் ஒன்றை எழுதுக.**

____________________
____________________
____________________

தேதி: _______________

அன்புள்ள தோழன்__________

இங்கு நானும்__________________________________________________
________________________________________________________________
________________________________________________________________

நீ அனுப்பிய____________________மகிழ்ச்சி. சென்ற விடுமுறையில் நானும் என் குடும்பத்தினரும் பினாங்கிற்குச் சென்றோம். அதனைப் பற்றி________________ எழுதுகிறேன்.

மே, 8ஆம் தேதி ஈப்போவிலிருந்து பினாங்குக்கு____________________ இரண்டு மணி நேர________________________________________.

பினாங்கில் உள்ள____________________பார்த்தோம். வரலாற்றுப் புகழ்மிக்க ____________________வரலாற்றுப் பாடம் என் நினைவுக்கு____________________. பிறகு, பகோடா கோயில் _________________________________________________
________________________________________________________________
________________________________________________________________

இக்கடிதத்தைப் படித்தவுடன் __________________________________________ மற்றவை உன் பதில் கண்டு

____________________
____________________
____________________

## பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

### பழமொழிகளையும் பொருளையும் அறிக.

**உரை 1**

“பெற்றோர்களே! சிறுவயது முதற்கொண்டே நாம் பிள்ளைகளுக்கு நல்ல பழக்கவழக்கங்களையும் நற்பண்புகளையும் ஊட்டி வளர்க்க வேண்டும். ஏனெனில், இளமைக் காலப் பழக்க வழக்கங்கள்தான் ஒரு மனிதனின் வாழ்க்கை இறுதி வரைக்கும் உடன் இருக்கும். இதைத்தான் நமது சான்றோர்கள் **தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்** என்று கூறியுள்ளார்கள். அஃதாவது ஒருவர் இளமையில் கைக்கொள்ளும் பழக்க வழக்கம் அவரின் வாழ்நாள் முழுவதும் தொடரும். ஆகவே, பெரியோர்களே! நாம் நல்ல பிள்ளைகளை உருவாக்க சிறுவயது முதலே நல்ல பழக்க வழக்கங்களைச் சொல்லிக் கொடுப்போம். பண்புள்ள பிள்ளைகளை உருவாக்குவோம்.”

**உரை 2**

“அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை. பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை” என்பது தெய்வப்புலவர் வள்ளுவரின் வாக்காகும். இன்றைய காலகட்டத்தில் பொருளாதாரமே நம் வாழ்வின் ஆதாரமாக இருக்கிறது. இதனைக் கருத்திற்கொண்டு நாம் சிறுகச் சிறுகச் சேமிக்க வேண்டும். **ஒரு காசு பேணின் இரு காசு தேறும்** என்பது பழமொழி. நாம் ஒவ்வொரு காசையும் கவனத்துடன் சேமித்து வந்தால், நாளடைவில் பெருந்தொகையாகிவிடும். ஆகவே, சபையோர்களே, இன்று முதல் செலவைக் குறைத்து, சிறு சிறு தொகையாக நாம் சேமிக்கத் தொடங்குவோம். இது பிற்காலத்தில் பெரிய தொகையாக உருவெடுக்கும். பிறகு, சிறு தொழில்களில் முதலீடு செய்து சொத்துடைமையாளர்களாக உருவாகுவோம்!”

**பழமொழிகளும் பொருளும்**

**தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்**
பொருள்: ஒருவர் இளமையில் கைக்கொள்ளும் பழக்க வழக்கங்கள் அவரின் வாழ்நாள் முழுவதும் தொடரும்.

**ஒரு காசு பேணின் இரு காசு தேறும்**
பொருள்: ஒவ்வொரு காசையும் கவனத்துடன் சேமித்து வந்தால் நாளடைவில் பெருந்தொகையாகிவிடும்.

### இடுபணி 1

**பழமொழிக்கு ஏற்ற சூழலை உருவாக்கி வகுப்பில் நடித்துக் காட்டுக.**

### இடுபணி 2

**பழமொழியை மனனம் செய்து பொருளைக் கூறுக; எழுதுக.**

4.7.1

- ஒன்றாம் படிவத்திற்கான பழமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.


## இடுபணி 3

**படங்களுக்குப் பொருத்தமான பழமொழிகளைத் தெரிவு செய்து எழுதுக.**

| தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும் | ஒரு காசு பேணின் இரு காசு தேறும் |
|---|---|

சூழல் 1





→ ____________________

சூழல் 2







→ ____________________

சூழல் 3





→ ____________________

தொகுதி 20

# தன்முனைப்பு

## பாடம் 1 வெற்றி நிச்சயம்

**நிகழ்ச்சி அறிவிப்பை வாசித்திடுக.**





அன்பார்ந்த பெற்றோர்களே, ஆசிரியர்களே, மாணவ மணிகளே உங்கள் அனைவருக்கும் எனது இனிய வணக்கம் உரித்தாகுக. இவ்வாண்டு எஸ்.பி.எம் தேர்வு முடிவுகள் வெளியாகியுள்ளன. நமது பள்ளி சிறந்த தேர்ச்சியினைப் பதிவு செய்துள்ளது. இப்பள்ளியின் வரலாற்றிலேயே இவ்வாண்டுதான் நாம் மிகச்சிறந்த முடிவுகளைப் பெற்றுள்ளோம். அவ்வகையில் நமது பள்ளியைச் சார்ந்த 27 மாணவர்கள் அனைத்துப் பாடங்களிலும் ‘ஏ’ பெற்றுள்ளனர். நமது பள்ளியைச் சார்ந்த இரண்டு மாணவர்கள் மாநில அளவில் சிறந்தவர்களாகத் தேர்வு பெற்றுள்ளனர். மாணவர்கள் ம. அகிலனும், ந. கஸ்தூரியும் 11 ‘ஏ’க்கள் பெற்றுச் சாதனை செய்துள்ளனர். இவ்விருவருக்கும் நமது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வோம்.

1.3.1

- நிகழ்ச்சியை அறிவிப்புச் செய்வர்.

## இடுபணி 1

**உன் பள்ளியில் நிகழும் சொற்போர் நிகழ்ச்சியைப் பற்றிக் குழுவில் கலந்துரையாடி அறிவிப்புச் செய்க.**





## இடுபணி 2

**கீழே கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளுக்கேற்ப அறிவிப்புச் செய்க.**

- தமிழ்மொழி வாரம்
- தன்முனைப்பு உரை
- பாடும் திறன் போட்டி
- துப்புரவுப் பணி இயக்கம்


## இடுபணி 3

**குறிப்பிட்ட ஒரு வானொலி அறிவிப்பைத் தயார் செய்து வகுப்பில் அறிவிப்புச் செய்க.**




## இடுபணி 4

**குறிப்புகளைத் துணையாகக் கொண்டு பள்ளியில் நடைபெறுகின்ற கவிதை அரங்கைப் பற்றி அறிவிப்புச் செய்க.**



# பாடம் 2 முயற்சி திருவினையாக்கும்



## வாசித்து அறிக

‘முயற்சி திருவினையாக்கும் முயற்றின்மை இன்மை புகுத்தி விடும்’ என்று திருக்குறளில் எழுதப்பட்டுள்ளது. அதாவது முயற்சியே இன்பம் தரும்; முயலாமை துன்பத்தைத் தரும். இக்காலத்தில் இயலாமல் தோற்றவர்களை விட முயலாமல் தோற்றவர்களே அதிகம். எனவே, முயற்சி செய்தால் எய்தும் பயன்கள் எண்ணிலடங்கா.

முயற்சி உள்ள ஒருவன்தான் வாழ்க்கையில் வெற்றியடைவான். கல்விமான்களாகவும் பெரும் செல்வந்தர்களாகவும் இன்னும் பல்வேறு நிலைகளில் பேரும் புகழும் பெற்று வாழ்ந்தவர்கள், வாழ்பவர்கள் அனைவரும் முயற்சியால் வெற்றியடைந்தவர்களே, உதாரணமாக, ஆப்ரஹாம் லிங்கன், ரைட் சகோதரர்கள், தோனி பெர்னான்டஸ், லிம் கோ தோங், பில் கேட்ஸ், ஆனந்தகிருஷ்ணன் போன்றோரைக் குறிப்பிடலாம்.

முயற்சி இல்லாதவன் மற்றவர்களால் தூற்றப்படுவான். மேலும், அவன் மற்றவர்களைச் சார்ந்தே வாழ நேரிடும். பிறரின் மதிப்பைப் பெற முடியாது. இவர்கள் அனைத்தையும் விதி மீது பழி போட்டுவிட்டு ஒன்றும் செய்யாமல் இருப்பர். விதியையும் மதியால் வெல்லலாம் என்பதை உணர வேண்டும். முயற்சி இல்லாதவன் தூற்றப்படுவதோடு, பயனற்றவனாகவும் கருதப்படுவான்.

ஒவ்வொரு மனிதனின் முயற்சியிலும் பல தடைகள் ஏற்படலாம். முயற்சியைக் கைவிடாது தடைகளைத் தகர்த்தெறிய முயல வேண்டும். நீ வெற்றிக்காகப் போராடும்போது வீண் முயற்சி என்பவர்கள், நீ வெற்றி பெற்ற பின் விடாமுயற்சி என்பார்கள்.

முயற்சியே வெற்றியெனும் பூட்டின் திறவுகோல் எனும் உண்மைதனை மனத்தில் ஆழப் பதியச் செய்வதால் வாழ்க்கையில் பின்வாங்கும் நிலை உருவாகாது. அவ்வப்போது மற்றவரின் அறிவுரை, தன்னம்பிக்கைக் கருத்தரங்கம் போன்றவற்றின் வாயிலாக முயற்சியை மேம்படுத்திக் கொள்ளவேண்டும். ஏனென்றால், முயற்சி என்னும் வலது காலை முன்னே வைத்தால் வெற்றி என்னும் இடது கால் தானே தொடரும்.

முயற்சி இல்லாதவன் கையாலாகாதவனாகக் கருதப்படுகிறான். முயற்சியே முன்னேற்றத்தின் முகவரி. தேனீ, எறும்பு, சிலந்தி, பறவைகள் என எத்தனையோ உயிரினங்கள் முயற்சி என்ற ஒன்றினால்தான் சிறப்பிடத்தைப் பெற்றுத் திகழ்கின்றன.

இறுதியாக, துடுப்பு என்னும் முயற்சியை உருவாக்கிக்கொண்டால் வெற்றி என்னும் வாழ்க்கைப்படகை சிறப்பாகச் செலுத்தலாம். முயல்வோம், முன்னேறுவோம்.

2.2.1

- வாசிப்புப் பகுதியிலுள்ள கருப்பொருளையும் கருச் சொற்களையும் அடையாளம் காண்பர்.

## இடுபணி 1

**வாசிப்புப் பகுதியில் காணும் கருப்பொருளையும் கருச்சொற்களையும் அடையாளம் கண்டு பட்டியலிடுக.**

## இடுபணி 2

**பின்வரும் சொற்குவியலில் மறைந்துள்ள வாழ்வின் முன்னேற்றத்திற்கான சொற்களை அடையாளம் காண்க.**

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ச் | ஒ | க் | ற் | ற | ச | ம் | ப | ற் | சி | ர் | க |
| ஞ | மு | ற | ப் | மை | ட | க | ச் | ஒ | ற் | று | மை |
| ஆ | க் | க | ம் | ர | பி | க் | சை | க | ய | ப் | று |
| கி | க | த | து | ர் | சி | ஊ | க் | ப | மு | மு | பொ |
| ந | ம் | பி | க் | கை | ப | து | ணி | வு | ட | டு | ரு |
| ன் | ம | ந | ப் | க் | ல் | வெ | ற் | றி | டு | பா | க் |
| மை | ச | ள் | மு | ழ் | ப் | ல் | ன் | அ | ட் | டு | ய |
| ந | கி | வு | ழ் | வா | ர | ன | பு | பா | டி | ட் | போ |
| ர | ற | ட | ய | க் | ப் | ண் | ள் | த் | ச | க | ரா |
| வி | ல் | க | ரி | க | ப | ரி | வு | ர் | த | ந | ட் |
| த | ர் | ம | ம் | ற் | ந | ற | ற் | ப் | ழ் | க | ட |
| உ | வ | ப | ந | ல் | ல | இ | ல | ட் | சி | ய | ம் |

இடமிருந்து வலம்:

1.
2.
3.
4.
5.
6.
7.

மேலிருந்து கீழ்:

1.
2.
3.

வலமிருந்து இடம்:

1.
2.

கீழிருந்து மேல்:

1.
2.
3.
4.
5.



## இடுபணி 3

**பனுவலை வாசித்துக் கருப்பொருளையும் கருச்சொற்களையும் அடையாளம் காண்க.**

1. மகாத்மா என்று உலகத்தாரால் போற்றப்படுகின்ற அண்ணல் காந்தியடிகள் சுயக்கட்டுப்பாடு மிகுந்தவர். சுயக்கட்டுப்பாடு என்பது ஒருவர் தமக்கென ஒரு கொள்கையை உருவாக்கி, அதற்குச் சில நெறிகளை விதித்து, அதன்படி தம்மை வழிநடத்திச் செல்வதேயாகும். அண்ணல் காந்தியடிகள் இலண்டன் நகருக்குத் தமது சட்டத்துறைப்படிப்புக்காகச் சென்றார். அங்கு மதுவையும் புலாலையும் உட்கொள்ளாமல் தமக்குத் தாமே ஒரு கொள்கையை, சுயக்கட்டுப்பாட்டை விதித்துக் கொண்டார். இச்சுயக்கட்டுப்பாட்டினால் பிற்கால வாழ்க்கை சிறப்பாக அமைந்தது.

2. பிள்ளைகளை ஒழுங்குமுறை இல்லாமல் விட்டுவிட்டால் அவர்கள் தங்கள் போக்கில் சென்று தடுமாறிச் சீர்கெட்டு விடுவார்கள். பிள்ளைகளின் வயது நிலைக்கேற்பக் கட்டுப்பாடுகளை விதித்தல் வேண்டும். மிகுந்த கண்டிப்பினால் இடர்கள் நேரும். மிகுந்த செல்லம் கொடுப்பது துன்பத்திற்கு வித்திடும்.

3. மரங்களில் பலவகை உண்டு. அவற்றுள் பயனுள்ள மரமாகக் கருதப்படுவது வாழைமரம். வாழைமரத்திற்குக் கிளைகள் கிடையா. அது பச்சை வண்ணத்தில் காட்சியளிக்கும். வாழைமரத்தின் பயன்பாட்டை நன்கு உணர்ந்த மனிதன் கண்ணும் கருத்துமாக வளர்க்கிறான். வாழைத்தண்டைக் கொண்டு கூட்டு செய்து சுவைத்து உண்பார்கள். வாழைப்பூவையும் நாம் சமையலுக்குப் பயன்படுத்தலாம். மருத்துவ குணம் அவற்றுள் அதிகமாக உள்ளது. இதைத் தவிர, வாழைமரத்தைத் திருமண வைபவங்களின்போது வாசலில் கட்டி வைப்பார்கள். மணமக்கள் வாழையடி வாழையாக வாழ வேண்டும் என்பதே இதன் பொருளாகும்.



## இடுபணி 4

**கதையை வாசித்துக் கருப்பொருளையும் கருச்சொல்லையும் அடையாளம் காண்க.**

தந்தை ஒருவர் தம் மூன்று மகன்களையும் அழைத்து, “நம் தோட்டத்துக்குச் சென்று கிணறு தோண்டுங்கள். யாருடைய கிணற்றில் அதிகம் நீர் சுரக்கின்றதோ அவர்களுக்கு நல்ல சன்மானம் தருகின்றேன்” என்று கூறினார். உடனே மகன்கள் ஒவ்வொருவரும் ஆளுக்கொரு திசையாகச் சென்று கிணற்றைத் தோண்டினர். சில மணி நேரம் கழித்து அம்மூவரும் தந்தையிடம் முறையிட்டனர். தந்தையே, “நாங்கள் கிணறு தோண்டினோம்; நீர் ஊற்றெடுக்கவில்லை” என்றனர். அதற்குத் தந்தை, “ஒவ்வொருவரும் எவ்வளவு ஆழம் தோண்டினீர்கள்?” என்று வினவினார். மூத்தவர் “பன்னிரண்டு அடி” என்றான். இரண்டாமவன் “பத்து அடி” என்றான். மூன்றாமவன் “எட்டு அடி” என்றான். இவர்களின் பதிலையும் முயற்சியையும் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

தோட்டத்தில் கிணறு உருவாக்க வேண்டும். அந்த மூவரும் ஒன்று சேர்ந்து கிணறு தோண்டியிருந்தால் 30 அடி ஆழம் தோண்டியிருக்கலாம். கிணற்றுநீரும் அதிகமாகச் சுரந்திருக்கும். மூவருக்கும் சன்மானம் கிடைத்திருக்கும். ஆனால் நடந்தது என்ன? யோசித்துப்பாருங்கள். உழைப்பில் வேகம் இருந்தது. ஆனால், விவேகம் இல்லை.

# பாடம் 3 ஒழுக்கம்

## பனுவலை வாசித்து அறிக.

ஒருவரிடம் காணப்படும் நன்னடத்தையைத்தான் நாம் ஒழுக்கம் என்கிறோம். ஒழுக்கம் ஒவ்வொரு மனிதனிடமும் இருக்க வேண்டிய ஒன்றாகும். ஒழுக்கமுள்ள ஒரு மனிதன் இவ்வுலகத்தாரால் போற்றிப் புகழப்படுவான். அதனால், பிள்ளைகளிடத்தில் ஒழுக்கத்தை வளர்ப்பது, ஒவ்வொரு பெற்றோரின் முதன்மையான கடமையாகும்.

இக்காலகட்டத்தில், தங்கள் குடும்பத்தின் சுமையைக் குறைப்பதற்கு, தாய் தந்தை இருவரும் வேலைக்குச் செல்ல வேண்டிய கட்டாயச் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், அவர்களால் தங்கள் குழந்தைகளுடன் நேரத்தைச் செலவிட இயலவில்லை. அதுமட்டுமின்றி, குழந்தைகளின் நடவடிக்கைகளையும் பெற்றோர்களால் கவனிக்க முடியாமல் போகிறது. இத்தகைய சூழ்நிலையினால்தான் குழந்தைகளிடத்தில் ஒழுக்கம் குறைந்து வருகிறது. பிள்ளைகளிடம் நன்னடத்தையை வளர்ப்பதில் பெற்றோர்கள் பெரும்பங்கு வகிக்கின்றனர்.

பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளோடு நேரத்தைச் செலவிட்டால் பிள்ளைகளிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும். இதனால், அவர்கள் ஒழுக்கமுள்ள பிள்ளைகளாக உருவாகுவர். பெற்றோர்கள் பிள்ளைகளின் சிறந்த வழிகாட்டி என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளிடத்தில் ஒழுக்கத்தை வளர்க்க வேண்டும். அவர்களைச் சமய வகுப்பிற்கு அனுப்பி நெறிப்படுத்த வேண்டும். பிள்ளைகளைத் தீய வழியில் செல்வதிலிருந்து தடுக்க முடியும். மேலும், இதுபோன்ற வகுப்புகளுக்குக் குழந்தைகளை அனுப்புவதால் அவர்கள் நல்ல சிந்தனைகளையும் நல்ல பண்புகளையும் வளர்த்துக்கொள்ள இயலும். அவர்கள் இந்தச் சமுதாயத்தில் சிறந்த குடிமகனாகவும் ஒழுக்கமுள்ள மனிதனாகவும் வாழ முடியும். ஒழுக்கமுள்ள ஒரு மனிதன் இவ்வுலகத்தில் பேரும் புகழும் பெற்று, சீரும் சிறப்புமாக வாழ்வான்.

ஒழுக்கம் நிறைந்த பிள்ளைகளால் மட்டுமே நாட்டைச் சிறந்த முறையில் வழிநடத்த முடியும். எனவே, குழந்தைப் பருவம் முதற்கொண்டே பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு நல்லொழுக்கத்தைக் கற்றுத் தர வேண்டும்.

**அறிந்துகொள்க**


மண்ணை நேசிக்காத மரமும் தண்ணீரை நேசிக்காத மீனும் உயிர் வாழ்வதில்லை. அதுபோல ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்காத வாழ்க்கை வெற்றி பெறுவதில்லை.

3.4.5

- 140 சொற்களில் கருத்து விளக்கக் கட்டுரை எழுதுவர்.


## இடுபணி 1

**கருத்துகளை வாசித்து 140 சொற்களில் கருத்து விளக்கக் கட்டுரை ஒன்றனை எழுதுக.**




## இடுபணி 2

**கொடுக்கப்பட்ட கருத்துகளை விவரித்து 140 சொற்களில் கருத்து விளக்கக் கட்டுரை எழுதுக.**



## வளப்படுத்துதல்

**சமூக வலைத்தளங்கள் எனும் தலைப்பில் 140 சொற்களில் விளக்கக் கட்டுரை எழுதுக.**

## குறைநீக்கல்

**கீழ்க்காணும் குறிப்புகளைப் பயன்படுத்தி ‘மாணவர் கடமை’ எனும் தலைப்பில் 140 சொற்களில் கட்டுரை எழுதுக.**







**தொடக்கம்** : - மாணவர் என்பவர் யார்?
- மாணவர்களின் சிறப்புத் தன்மைகள்
- மாணவர்களின் பங்கு, குடும்பம், பள்ளி, நாடு

**கருத்துகள்:**

1. கற்றலில் அக்கறை செலுத்துதல்
   - கவனத்துடன் கேட்டல்
   - வீட்டுப்பாடங்கள் செய்தல்

2. பள்ளி விதிமுறைகளைக் கடைப்பிடித்தல்
   - காலந்தவறாமை
   - ஒழுங்கு, அமைதி

3. பள்ளி உடைமைகளைப் பாதுகாத்தல்
   - சுத்தத்தைப் பேணுதல்
   - மேசை, நாற்காலி

4. ஆசிரியருக்கு மரியாதை செலுத்துதல்
   - கட்டளைக்குக் கீழ்ப்படிதல்
   - உதவி செய்தல்

5. புறப்பாட நடவடிக்கைகளில் பங்கு கொள்ளல்
   - விளையாட்டுகளில் பங்கு கொள்ளல்
   - பள்ளிக்குப் பெருமை சேர்த்தல்

6. பெற்றோருக்குச் செய்யும் கடமைகள்
   - மதித்து நடத்தல்
   - நற்பெயரை ஈட்டித்தருதல்

**முடிவு:**
- மாணவர்கள் உணர்ந்து செயல்பட வேண்டும்.
- நாட்டிற்கும் வீட்டிற்கும் அரணாக விளங்க வேண்டும்.

### அறிந்துகொள்க

**மாணாக்கர் இலக்கணம்**

முதல் நிலை மாணாக்கர்
- அன்னம், பசு, உவமையாகக் கொள்வர்

இடைநிலை மாணாக்கர்
- கிளி, மண், உவமையாகக் கொள்வர்

கடை நிலை மாணாக்கர்
- ஓட்டைக்குடம், ஆடு, எருமை, பன்னாடை, உவமையாகக் கொள்வர்.

- நன்னூல்


## பாடம் 4 இலக்கணம்

### உடம்படுமெய் அறிக.

குமணன்: கபிலா. அதோ பார்! அற்புதக் காட்சி! வானில் முழு நிலவு. அந்தக் குளிர்ந்த நிலவொளியைப் பார்ப்பதற்கு மனத்திற்கு இதமாக இருக்கிறது.

கபிலன்: ஆமாம் அந்தக் குளிர்ந்த ஒளியில் இப்பூவுலகைப் பார்ப்பதற்கு அழகாகத்தான் இருக்கிறது. மேலும், குளிர்ந்த காற்றில் கமழும் பூமணம் மனத்திற்கும் இதமாக இருக்கிறது.

கபிலன்: பண்டைய காலத்தில் பௌர்ணமியன்று மூவேந்தர்கள் விழாவெடுத்தனர். அத்தருணத்தில் மழை சோவென்று பெய்தாலும்கூட மக்கள் அங்கிருந்து நகராமல் மழையில் நனைந்தபடியே அவற்றைக் கண்டு களித்தனர்.




### இடுபணி 1

**உரையாடலில் இடம்பெற்றுள்ள உடம்படுமெய் சொற்களைப் பட்டியலிட்டு அவற்றை வகைப்படுத்துக.**

### இடுபணி 2

**வகைப்படுத்திய உடம்படுமெய் சொற்களைப் பிரித்து எழுதுக.**

**அறிந்துகொள்க**

சங்ககாலம்
பண்டைத் தென்னிந்திய வரலாற்றில் நிலவிய தமிழகம் தொடர்பான காலப்பகுதி

1) முதல் சங்கம்
2) இடைச் சங்கம்
3) கடைச் சங்கம்

5.3.1

- தோன்றல் விகாரப் புணர்ச்சியில் வகர, யகர உடம்படுமெய் பற்றி அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

## இடுபணி 3

**கீழே கொடுக்கப்பட்டுள்ள உடம்படுமெய் சொற்களை அடையாளம் கண்டு அட்டவணையில் நிறைவு செய்க.**

1. தீயணைப்பு
2. மெதுவோட்டம்
3. மூவாசை
4. விழியோரம்
5. பலவாண்டு
6. உருவாக்கம்
7. மறையேது
8. நிலாவொளி
9. பூவாடை
10. திருவோடு
11. மாவிலை
12. மணியோசை

| வகர உடம்படுமெய் | யகர உடம்படுமெய் |
|---|---|
| 1. ____________________<br>2. ____________________<br>3. ____________________ | 1. ____________________<br>2. ____________________<br>3. ____________________ |

## இடுபணி 4

**கொடுக்கப்பட்டுள்ள உடம்படுமெய் சொற்களை வாக்கியத்தில் அமைத்துக் காட்டுக.**

1. இடியோசை
2. கதவோரம்
3. பூவுடல்
4. மலையோரம்
5. களியாட்டம்
6. இறையுணர்வு

## இடுபணி 5

**சேர்த்து எழுதுக.**

1. வெள்ளை + அடித்தாள் =
2. வடை + உண்டான் =
3. மலை + ஏறினான் =
4. மா + இலை =
5. கரு + அறை =
6. தே + ஆரம் =
7. திரு + அடி =
8. வேலை + இல்லை =

## இடுபணி 6

**பிரித்து எழுதுக.**

1. தெருவோரம் =
2. மலையருவி =
3. விலையுயர்வு =
4. பூவரும்பு =
5. கலையமுதன் =
6. பொதுவறிவு =
7. கோவில் =
8 பருவுடல் =
9. தலையெழுத்து =
10. திருவடி =

இடுபணி 7

**வாக்கியங்களில் உடம்படுமெய் சொற்களை அடையாளங்கண்டு பிரித்து எழுதுக.**

1. முதன்முதலாகப் போர்ட்டிக்சன் கடற்கரையில் அலையோசையைக் கேட்ட சிறுவர்கள் பிரமித்துப் போயினர்.

2. தைப்பூசத்தன்று பக்தர்கள் பத்துமலை படியேறிக் காணிக்கை செலுத்தினர்.

3. எஸ்.பி.எம் தேர்வு முடிவுகள் அறிவிக்கும் நிகழ்ச்சியில் மாணவர்கள் தங்கள் நிலையென்ன என்பதை அறிய ஆவலாய்க் காத்திருந்தனர்.

4. கேமரன்மலை தேயிலைத் தோட்டம் இயற்கை எழில் கொஞ்சும் வனமாகும்.

5. தொழிற்சாலை மூடப்பட்டதால் வேலையில்லாத நூற்றுக்கணக்கான தொழிலாளர்களின் வாழ்க்கை கேள்விக்குறியாகிவிட்டது.

6. மாணவர்கள் தங்களின் அன்றாட வாழ்க்கையில் காலையுணவை அவசியம் உண்ண வேண்டும்.

7. தொழிற்சாலையின் மேலதிகாரி நோயுற்ற தனது கூலியாள் ஒருவரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்.

8. மாவிலைகளையும் தென்னையோலையையும் கொண்டு அம்மா வீட்டு வாசலை அலங்கரித்தார்.

9. பாட்டியின் மல்லிகைத் தோட்டத்தில் பறித்த பூவரும்புகளை மாலையாகத் தொடுத்தாள்.

10. கொள்ளையடித்துச் சென்ற கொள்ளையர்கள் கையும் களவுமாகப் பிடிபட்டனர்.





**அறிந்துகொள்க**

- அடுத்தவனுக்குக் கிடைத்துவிட்டதே என்று பொறாமைப் படாத ஒரே விசயம் மரணம் மட்டுமே.

- பூட்டுகள் தயாரிக்கப்படும்போதே சாவிகளும் தயாரிக்கப்பட்டு விடுகின்றன. அதேபோல், பிரச்னைகள் தோன்றும்போதே அவற்றுக்கான தீர்வுகளும் பிறந்துவிடுகின்றன.

# தொகுதி 21

# சுற்றுலாத் துறை

## பாடம் 1 மலேசியாவுக்கு வாரீர்!

**கலந்துரையாடுக.**

2011ஆம் ஆண்டு முதல் 2015ஆம் ஆண்டு வரை மலேசியாவுக்குச் சுற்றுலா மேற்கொண்டவர்களின் எண்ணிக்கை




மூலம்: மலேசியச் சுற்றுலாத் துறை





**இடுபணி 1**

**மேற்காணும் பட்டைக் குறிவடிவத்தில் காணப்படும் தகவல்களையொட்டிக் கருத்துரைத்திடுக; முடிவு கூறுக.**

1.5.1

- குறிவரைவிலுள்ள தகவல்களையொட்டிக் கருத்துரைப்பர்; முடிவு கூறுவர்.

## இடுபணி 2

**கொடுக்கப்பட்டுள்ள பட்டைக் குறிவரைவிலுள்ள தகவல்களை அறிந்து வினாக்களுக்கு விடையளித்திடுக.**

1. குறிவரைவின் மூலம் அறிந்துகொள்வது யாது?
2. எந்த ஆண்டில் சுற்றுப்பயணிகள் அதிகமாக வந்துள்ளனர்? ஏன்?
3. மலேசியாவிற்குச் சுற்றுப்பயணிகள் எவ்வாறான தனிச் சிறப்புகளை எதிர்பார்த்து வருகின்றனர்?

## இடுபணி 3

**குறிவரைவிலுள்ள குறிப்புகளைப் பற்றிக் கருத்துரைத்திடுக; முடிவு கூறுக.**

**சுற்றுலாத் தளங்கள்**

**லங்காவித் தீவு**
- மசூரி கல்லறை
- கழுகு வெற்று
- மகாதீர் கலைக்காட்சிக் கூடம்
- மின்னுந்து (கேபிள் கார்)



**மலாக்கா**
- ஆ பமோசா கோட்டை
- தொல்பொருள் காட்சியகம்
- விலங்கியல் பூங்கா
- முதலைப் பண்ணை
- வண்ணத்துப் பூச்சிப் பூங்கா






**ஜோகூர்**
- கோத்தா திங்கி நீர்வீழ்ச்சி
- லேடாங் மலை
- டேசாரு கடற்கரை
- லேகோலேண்ட் விளையாட்டு மையம்



**பினாங்கு**
- 13 கீ.மீ. நீளமான பாலம்
- பத்து பிரிங்கி கடற்கரை
- புத்தர் ஆலயம்
- தண்ணீர்மலைக் கோவில்

## இடுபணி 4

**மலேசியாவின் சுற்றுலாத்துறை மேன்மைக்கு எவ்வாறு பங்களிக்கலாம் என்று கருத்துரைத்திடுக; முடிவு கூறுக.**

ஊடகங்கள் | சமூக இயக்கங்கள் | அரசாங்கம்

## வாசித்து அறிக.




உலக வரைபடத்தில் மலேசியா ஒரு சிறிய நாடு. இருப்பினும் மலேசியா உலக மக்களைத் தன்வசம் **ஈர்த்துள்ளது** எனில் மிகையாகாது. நமது அரசு, ‘மலேசியாவுக்கு வருகை தாருங்கள்’ ஆண்டைப் **பிரகடனப்படுத்தியுள்ளது.** சுற்றுலாத்துறைக்குப் பெரும் **உந்து சக்தியாக** இ∴து அமைந்துள்ளது.

வெளிநாட்டுச் சுற்றுப்பயணிகள் மலேசியாவிற்கு வருகை புரிவதால் நமக்குப் பொருளாதார நன்மைகள் கிடைக்கின்றன. நம் நாட்டுக்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகள் மூலம் **அந்நியச் செலாவணியால்** அதிக வருமானம் கிடைக்கின்றது. வெளிநாட்டுச் சுற்றுப்பயணிகள் மலேசியாவின் இயற்கைக் காட்சிகளைப் பார்ப்பது மட்டுமின்றி கைவினைப் பொருள்கள் வாங்குவது, விடுதிகளில் தங்குவது, உணவகங்களில் உண்பது போன்ற நடவடிக்கைகளின் மூலம் இந்நாட்டில் அதிகளவில் பணத்தைச் செலவு செய்கின்றனர். இது நம் நாட்டுக்குப் பொருளாதார பலத்தைக் கொண்டு வருகின்றது.



மலேசியாவின் பல்லின மக்களின் பண்பாடு, சமய நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள் இச்சுற்றுலாத்துறை வளர்ச்சிக்கு முதுகெலும்பாகத் திகழ்கின்றன. இச்சுற்றுலாத் துறையின் மூலம் மலேசிய மக்களிடையே காணப்படும் **தனித்துவத்தை** உலக மக்களால் காண முடிகின்றது. இந்நாட்டு மக்களிடையே காணப்படும் பணிவன்பு, விருந்தோம்பல் போன்ற உயரிய நற்பண்புகள் வெளிநாட்டுச் சுற்றுப் பயணிகளை வெகுவாகக் கவர்கின்றன.

வெளிநாடுகளில் மலேசியாவைப் பற்றி விளம்பரப்படுத்துவதன் மூலம், அதிக சுற்றுப் பயணிகளைக் கவர முடியும். மலேசியா **தனித்துவ** அடையாளத்தைப் பெற்றிருப்பதால் உலக அரங்கில் ஒரு சிறந்த சுற்றுலா **மையமாகத்** திகழ்கிறது.

2.2.2

• வாசிப்புப் பகுதியிலுள்ள கரு வாக்கியங்களை அடையாளம் காண்பர்.

## இடுபணி 1

**வண்ணமிடப்பட்ட சொற்களுக்கு அகராதியின் துணைகொண்டு பொருள் கூறுக.**

## இடுபணி 2

**மேற்காணும் பனுவலை வாசித்து, கருவாக்கியங்களை அடையாளம் கண்டு கூறுக.**

## இடுபணி 3

**பனுவலை வாசித்துக் கருவாக்கியங்களை அடையாளம் கண்டு எழுதுக.**

உலக அரங்கில் மலேசிய நாடு சுற்றுலாத்துறையில் புகழ்பெற்று வருவது குறிப்பிடத்தக்கதாகும். ஒவ்வோர் ஆண்டும் மலேசியாவிற்கு வரும் சுற்றுப்பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது என்றால் மிகையாகாது. இயற்கை வளம் மிகுந்த மலேசியாவில் பச்சைப் பசேலென்ற காடுகளும் குளுமையான நீர் அருவிகளும் நீலக்கடல் பரப்பும் அழகுக்கு அழகு சேர்க்கின்றன. மேலும், கிழக்குக்கரை மாநிலங்களில் உருவாக்கப்படும் கைவினைப் பொருள்களான பாத்தே துணிகள், மட்பாண்டங்கள், பூச்சாடிகள் போன்றவை சுற்றுப் பயணிகள் அதிகமாக வருகை புரியத் தூண்டலாக அமைகின்றன. வரலாற்றுப் புகழ்பெற்ற மலாக்கா கோட்டை, பூஜாங் பள்ளதாக்கு போன்ற இடங்களும் ஆன்மிகத்தலங்களான கோலாலம்பூரிலுள்ள பத்துமலை, பினாங்கிலுள்ள புத்தர் கோவில், போன்றவையும் சுற்றுப்பயணிகளை ஈர்க்கக் காரணமாக அமைகின்றன. மலாய்க்காரர்கள், சீனர்கள், இந்தியர்கள் போன்ற பல்லின மக்கள் வாழும் மலேசிய நாட்டில் அவர்களின் கலை கலாச்சாரங்களையும், பண்பாட்டு விழாக்களையும் அறிந்துகொள்ள மலேசியத்திருநாடு வழிவகுக்கின்றது. மேலும், சுற்றுப் பயணிகளை ஈர்க்கும் வகையில் சிறந்த போக்குவரத்துச் சேவைகள், சாலை அமைப்புகள், தங்கும் விடுதிகள், கேளிக்கை மையங்கள் ஆகியவை அற்புதமாக அமைந்துள்ளன. மலேசியாவின் பொருளாதாரமும் நற்பெயரும் உயர்வதற்குச் சுற்றுலாத்துறை பெரிதும் பங்காற்றுகிறது.

## இடுபணி 4

**படத்திற்கேற்ற கருவாக்கியங்களை உருவாக்குக.**



# பாடம் 3 உழவுத்தொழில்

## வாசித்து எழுதுக.

கடவுள் என்னும் முதலாளி
கண்டெடுத்த தொழிலாளி
விவசாயி... விவசாயி...

முன்னேற்றப் பாதையிலே மனச வைத்து
முழுமூச்சாய் அதற்காக தினம் உழைத்து
மண்ணிலே முத்தெடுத்துப் பிறர் வாழ
வழங்கும் குணம் உடையோன் விவசாயி
விவசாயி... விவசாயி...

என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில்
ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்
ஒழுங்காய்ப் பாடுபடு வயல் காட்டில்
உயரும் உன் மதிப்பு அயல் நாட்டில்
விவசாயி... விவசாயி...

கருப்பென்றும் சிவப்பென்றும் வேற்றுமையாய்
கருதாமல் எல்லோரும் ஒற்றுமையாய்
பொறுப்புள்ள பெரியோர்கள் சொன்னபடி
உழைத்தால் பெருகாதோ சாகுபடி
விவசாயி... விவசாயி...

இருந்திடலாம் நாட்டில் பல வண்ணக்கொடி
எத்தனையோ கட்சிகளின் எண்ணப்படி
பறக்க வேண்டும் எங்கும் ஒரு சின்னக்கொடி - அது
பஞ்சம் இல்லை என்னும் அன்னக்கொடி
விவசாயி... விவசாயி...

(பாடலாசிரியர்: அ. மருதகாசி)





## இடுபணி 1

**மேற்காணும் கவிதையை வாசித்து லகர, ழகர, ளகரச் சொற்களைப் பட்டியலிடுக.**

| ல | ழ | ள |
|---|---|---|
| இல்லை | | |
| | | |

3.1.1
3.1.2

- லகர, ழகர, ளகர பொருள் வேறுபாடு விளங்க வாக்கியம் அமைப்பர்.
- ணகர, நகர, னகர பொருள் வேறுபாடு விளங்க வாக்கியம் அமைப்பர்.

## இடுபணி 2

**பனுவலில் காணப்படும் ணகர, நகர, னகரச் சொற்களை அடையாளம் கண்டு எழுதுக.**

பூங்குழலி அதிகாலையில் பூந்தோட்டத்திற்குச் சென்றாள். மணமிக்க மலர்களைப் பார்த்து மனம் மகிழ்ந்தாள். பூக்களில் பனி படர்ந்திருப்பதைக் கண்டாள். பணியாட்களிடம் சில பூக்களைப் பறித்துக் கொடுக்கச் சொன்னாள். பின்னர், பழத்தோட்டத்திற்குச் சென்றாள். காலையிலேயே பலம் பொருந்திய ஆடவர்கள் பழங்களைச் சரக்குந்தில் மூட்டை மூட்டையாக ஏற்றிக் கொண்டிருந்தனர். ஒரு முதியவர் மட்டும் பழக்கூடையைச் சுமந்துகொண்டு கால் வலியால் நொண்டி நொண்டி நடந்து வந்தார். அவ்வழியே வந்த மற்றொருவர் அவருக்கு உதவி செய்தார். காலை வேளையில் இவ்வளவு சுறுசுறுப்பாகப் பலர் வேலை செய்வது பூங்குழலிக்கு மேலும் உற்சாகத்தைக் கொடுத்தது.

## இடுபணி 3

**பனுவலை வாசித்து, லகர, ழகர, ளகர சொற்களை அடையாளம் கண்டு பொருள் எழுதுக; வகைப்படுத்துக.**

குமுதாவின் வீடு மலையடிவாரத்தில் அமைந்துள்ளது. ஒரு நாள் மாலை வேளையில் கனத்த மழை பெய்தது. தொடர் மழையால் வீட்டின் முன்புறம் வெள்ளம் ஏறியது. குமுதாவின் அப்பா வேலைக்குப்போக இயலவில்லை. அம்மா அப்பாவுக்குத் தேநீரில் வெல்லத்தைக் கலந்து கொடுத்தார். திடீரென்று வீட்டுப் பின்புறம் காலையில் கம்பத்தில் கட்டிய காளை மாட்டின் நினைவு வந்தது. உடனே, வீட்டின் பின்புறத்தை நோக்கி விரைந்தார்.

## இடுபணி 4

**ஏற்ற பதிலைத் தெரிவு செய்க.**



1. அம்மா தோட்டத்திலுள்ள பயிர்களிடையே முளைத்திருந்த ______ களைப் பிடுங்கினார். (களை, கலை)
2. குதிரைக்கு உணவாக ______ அவித்து வைப்பர். (கொல்லை / கொள்ளை)
3. கன ______ பெய்ததால் திடீர் வெள்ளம் ஏற்பட்டது. (மலை / மழை)
4. நமது நாட்டின் இயற்கை ______ த்தைக் காண அதிக சுற்றுப்பயணிகள் வருகின்றனர். (வலம் / வளம்)
5. மாணவன் புத்தகப்பையைத் ______ சுமந்து நடந்தான். (தோளில், தோலில்)
6. ______ தன் வளைந்த அலகால் பழத்தைக் கொத்தியது. (கிலி, கிளி)

7. நண்பகலில் சூரிய ______ கண்ணைக் கூசச் செய்தது. (ஒலி, ஒளி)


8. வீரன் போரில் தன் கூரிய ______ எதிரிகளைத் தாக்கினான். (வாலால், வாளால்)

9. சூரியன் ______ கிழக்கில் உதிக்கும். (காலையில், காளையில்)

10. மணப்பெண் ஒப்பனை செய்து ______ க் காட்சியளித்தாள். (அலகாக, அழகாக)

## இடுபணி 5

**சொற்களைக் கொண்டு பொருள் வேறுபட வாக்கியம் அமைத்திடுக.**




## வளப்படுத்துதல்

**கொடுக்கப்பட்டுள்ள சொற்களுக்குப் பொருள் எழுது. பின் வாக்கியம் அமைத்திடுக.**

1. தவலை - தவளை
2. உளை - உழை
3. விலா - விழா
4. பலி - பழி
5. வலை - வளை
6. மன் - மண்
7. கன்னி - கண்ணி
8. என்ன - எண்ண
9. குளி - குழி
10. பனி - பணி
11. வாழை - வாலை
12. தினை - திணை

## குறைநீக்கல்


**பனுவலை வாசித்து, லகர, ழகர, ளகரச் சொற்களை வகைப்படுத்துக.**

ஒரு நாள் காலை வேளையில் கனத்த மழை பெய்தது. அம்மா சமையலறையில் வேலை செய்து கொண்டிருந்தார். வீட்டின் பின்புறத்தில் உள்ள கொல்லையில் கட்டப்பட்டிருந்த காளை மாடு கத்திக் கொண்டிருந்தது. அப்பா அங்குச் சென்று பார்த்த போது, இரண்டு கொள்ளையர்கள் கம்பத்தில் கட்டப்பட்டிருந்த மாட்டின் கயிற்றை அறுத்துக் கொண்டிருந்தனர். மாடு கத்தியது. அப்பா அங்குச் சென்றதும் அந்தக் கள்வர்கள் வேறு வழி தெரியாமல் சுவர் ஏறி தப்பித்து விட்டனர்.


# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## உவமைத்தொடர்களை அறிக.

**சூழல் 1**




**சூழல் 2**




4.5.1

- ஒன்றாம் படிவத்திற்கான உவமைத்தொடர்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

## உவமைத்தொடர்களும் பொருளும்

**1. பழம் நழுவிப் பாலில் விழுந்தாற்போல**

- எதிர்பார்த்ததைவிட எளிதாக, இனிய முறையில் நடந்தேறுதல் / இன்பத்துக்கு மேல் இன்பம்.

**2. தாயைக் கண்ட சேயைப் போல**

- பிரிவுக்குப் பிறகு சந்திப்பதால் ஏற்படும் மகிழ்ச்சி

### இடுபணி 1


**விளக்கத்திற்கு ஏற்ற உவமைத் தொடருடன் இணைத்திடுக.**

| | |
|---|---|
| எதிர்பார்த்ததைவிட இனிய முறையில் ஒரு செயல் நடைபெறுதல் | தாயைக் கண்ட சேயைப் போல |
| பல நாள்கள் பிரிந்திருந்து மீண்டும் இணையும்போது ஏற்படும் மகிழ்ச்சி | பழம் நழுவிப் பாலில் விழுந்தாற் போல |

### இடுபணி 2

**உரையாடலுக்கு ஏற்ற உவமைத்தொடரைத் தெரிவு செய்து எழுதுக.**

**சூழல் 1**



## சூழல் 2




### இடுபணி 3

**காலி இடத்தில் ஏற்ற உவமைத்தொடரைத் தெரிவு செய்து எழுதுக.**

| பழம் நழுவிப் பாலில் விழுந்தாற்போல | தாயைக் கண்ட சேயைப் போல |
|---|---|

அ. கடந்த மூன்று வருடங்களாகக் குடும்பத்தைவிட்டுப் பிரிந்து சென்று, மீண்டும் இல்லம் திரும்பிய பூபதி, தன் பெற்றோரைப் பார்த்ததும் ________ அவர்களைக் கட்டித் தழுவிக் கொண்டான்.

ஆ. மலாயாப் பல்கலைக்கழகத்தில் படித்துச் சிறப்புத் தேர்ச்சி பெற்ற சந்திரமதிக்கு உடனே அதிக சம்பளத்தில் ஓர் அலுவலகத்தில் வேலை கிடைத்தது. அஃது அவளுக்கு ________ இருந்தது.

### இடுபணி 4

**உவமைத்தொடர்களைக் கொண்டு வாக்கியங்களை அமைத்து வாசித்திடுக.**

### இடுபணி 5

**உவமைத்தொடர்களுக்கு ஏற்ப சூழலை உருவாக்கி நடித்திடுக.**

## வாசித்து மகிழ்க.

### இன்று முதல் அப்பத்துக்கு சர்க்கரை இல்லை!

வயது முதிர்ந்த மூதாட்டி உணவுக் கடை ஒன்றனை நடத்தி வந்தாள். மூதாட்டியின் கடையில் அப்பம் மிகச் சுவையானதாக இருக்கும். அந்தக் கடைக்கு வரும் அனைவரும் அப்பத்தை விரும்பி உண்பார்கள். அப்பத்தோடு சேர்த்து உண்ண பாலும் சர்க்கரையும் கொடுப்பாள்.

ஒரு சமயம் சர்க்கரை விலை ஏற்றம் கண்டது. அப்பத்துக்குப் பெறுகிற விலைக்குச் சர்க்கரை கொடுப்பது அம்மூதாட்டிக்குச் சற்றுச் சிரமமாக இருந்தது. அதிக விலை கொடுத்துச் சர்க்கரை வாங்கினாலும், அப்பத்தின் விலையைக் கூட்ட மூதாட்டி விரும்பவில்லை. எனவே, அப்பத்திற்குச் சர்க்கரை இல்லை எனக் கூற நினைத்தாள்.

கடைக்கு வழக்கமாக வந்து உண்ணும் ஒருவரை அழைத்து அப்பத்துக்குச் சர்க்கரை இல்லை என அறிவிப்பு அட்டை ஒன்றனை எழுதிவரச் சொன்னார். அவரும் 'இன்று முதல் அப்பத்துக்குச் சர்க்கரை இல்லை' என ஓர் அறிவிப்பு அட்டை எழுதி வந்து கொடுத்தார். மூதாட்டியும் அதனைக் கடையில் தொங்கவிட்டாள்.

காலையில் சாப்பிட வந்த ஒருவர் ஓர் அப்பம் வாங்கிச் சாப்பிட்டார். சர்க்கரை இல்லாமலேயே சாப்பிட்டார். இரண்டாவது ஓர் அப்பம் கேட்டார். மூதாட்டியும் அப்பம் கொடுத்தார். "அம்மா! அப்பத்துக்குச் சர்க்கரை கொடுங்கள்" என்று கேட்டார்.

மூதாட்டி, "அறிவிப்புப் பலகையைப் பார்த்தீர்களா?" என்று கேட்டாள்.

அப்பம் வாங்கியவர், "பார்த்தேன்! படித்தேன்!" என்றார்.




"படித்துவிட்டுமா இப்படிக் கேட்கிறீர்?" என்றார் மூதாட்டி.

"ஆமாம். அறிவிப்பு அட்டையில் என்ன எழுதி இருக்கிறது கவனித்தீர்களா? இன்று முதல் அப்பத்துக்குச் சர்க்கரை இல்லை என்றுதானே எழுதியிருக்கிறது. இரண்டாவது அப்பத்துக்குத்தானே நான் இப்போது சர்க்கரை கேட்கிறேன்" என்றார்.

"ஐயா! அப்படியா பொருள் கொள்கிறீர்கள்? சரி! உங்களுக்கு இன்று சர்க்கரை கொடுத்துவிடுகிறேன். நாளை அதனை மாற்றி எழுதுகிறேன்" என்று கூறினாள்.

அறிவிப்பு அட்டை எழுதியவரை அழைத்தாள் மூதாட்டி.

"ஐயா, அட்டையில், 'அப்பத்துக்கு இன்றுமுதல் சர்க்கரை இல்லை' என்று எழுதிவிடுங்கள்" என்றாள். அன்று முதல் அப்பத்தைச் சர்க்கரையின்றி விற்கத் தொடங்கினாள்.

காலைச் சிற்றுண்டிச் சிக்கலும் தீர்ந்தது.

தமிழ்மொழியில் இதுபோன்ற இரட்டைப் பொருள் கொண்ட சொற்கள் நிறையவே இருக்கின்றன. உதாரணத்திற்குப் பெருங்காயம், படுகிழவி போன்ற சொற்கள் இரண்டு வேறு பொருளைத் தருவன. நகைச்சுவையாகக் கூறினாலும் அத்தகைய சொற்கள் யாவும் தமிழ்மொழிக்கு மேலும் இனிமை சேர்க்கின்றன என்பது உறுதியே.

## மீள்பார்வைப் பயிற்சி
## செய்யுள் மொழியணி

**அ. கொடுக்கப்பட்ட பழமொழிக்குச் சரியான விளக்கத்தைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. ஆடமாட்டாதவள் கூடம் கோணல் என்றாளாம்

_______________________________________________

_______________________________________________

2. கண்டதைக் கற்கப் பண்டிதனாவான்

_______________________________________________

_______________________________________________

3. தன் கையே தனக்கு உதவி

_______________________________________________

_______________________________________________

4. தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்

_______________________________________________

_______________________________________________

5. ஒரு காசு பேணின் இரு காசு தேறும்

_______________________________________________

_______________________________________________

| |
|---|
| சிறுகச் சிறுகச் சேர்த்து வைக்கும் பணமோ பொருளோ நாளடைவில் பெருமளவில் சேரும். |
| பல நூல்களைக் கற்றவர்கள் அறிஞர்களாகத் திகழலாம். |
| சிறுவயதில் கைக்கொள்ளும் பழக்க வழக்கம் இறக்கும் வரை உடன் இருக்கும். |
| தன் இயலாமையை வெளிக்காட்டிக் கொள்ளாதவர், பிறர் மீது குறைகள் கூறுவர். |
| பிறர் உதவியை எதிர்பாராமல், அனைத்தையும் தானே செய்து கொள்வது. |

**ஆ. கொடுக்கப்பட்ட செய்யுளுக்கு விளக்கமும் பொருளும் எழுதுக.**

மூதுரை:

1. மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனின் கற்றோன் சிறப்புடையன் - மன்னற்குத்
தன் தேசமல்லாற் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்ற இடமெல்லாம் சிறப்பு.

விளக்கம்: ______________________________

______________________________

**பொருள் எழுதுக.**

i. மாசறக்: ______________ iii. கற்றோன்: ______________

ii. சீர்தூக்கின்: ______________ iv. தேசமல்லாற்: ______________

2. **தேவாரம்**
விறகில் தீயினன் பாலில் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட்டு உணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே

விளக்கம்: ______________________________

______________________________

**பொருள் எழுதுக.**

i. தீயினன்: ______________ iii. மாமணிச் சோதியான்: ______________

ii. படுநெய்போல்: ______________ iv. முறுக வாங்கி: ______________

**இ. கீழ்க்காணும் வரிகளுக்கு ஏற்ற விளக்கத்தை எழுதுக.**

1. கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு

______________________________

2. மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்

______________________________

**ஈ. சரியான இணைமொழியைக் கொண்டு வாக்கியங்களை நிறைவு செய்க.**

1. வேல்விழி பொங்கல் திருநாளை முன்னிட்டு வீட்டின் ________ சுத்தம் செய்தாள்.
2. செல்வந்தரான இலக்கியன் ________ பாராமல் ஏழை எளியோருக்குப் பல உதவிகளைச் செய்தார்.
3. ________ அற்ற மழலையின் சிரிப்பில் மயங்காதவர் உண்டோ?
4. அடைமழை பொழிந்தாலும் தமிழர் திருநாள் கொண்டாட்டம் எவ்வித ________ இன்றி சிறப்பாக நடைபெற்றது.
5. அளவான உணவு, உடற்பயிற்சி, ஓய்வு ஆகியவை ஒரு மனிதன் ________ இன்றி வாழ வழிவகுக்கும்.

**உ. திருக்குறளுக்கு விளக்கம் எழுதுக.**

1. ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
   சான்றோன் எனக்கேட்ட தாய். (69)

   விளக்கம்: ______________________________

   ______________________________

**பொருள் எழுதுக.**

i. ஈன்ற பொழுதில்: ________________

ii. பெரிதுவக்கும்: ________________

iii. சான்றோன்: ________________

2. மேற்காணும் திருக்குறளுக்கு ஏற்ற சூழல் ஒன்றை எழுதுக.

______________________________

______________________________

______________________________

______________________________

3. அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம். (35)

விளக்கம்: ______________________________

______________________________

**பொருள் எழுதுக.**

i. அழுக்காறு ______________ iii. இன்னாச்சொல் ______________

ii. அவாவெகுளி ______________ iv. இழுக்கா ______________

4. குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல். (504)

விளக்கம்: ______________________________

______________________________

**பொருள் எழுதுக.**

i. குணம்நாடி ______________ iii. மிகைநாடி ______________

ii. குற்றமும் நாடி ______________ iv. மிக்க கொளல் ______________

**ஊ. விளக்கத்திற்கு ஏற்ற உவமைத்தொடரை எழுதுக.**

1. பிரிவுக்குப் பிறகு சந்திப்பதால் ஏற்படும் மகிழ்ச்சி

______________________________

2. எதிர்பார்த்ததைவிட எளிதாக, இனிய முறையில் நடந்தேறுதல்

______________________________

**எ. மரபுத்தொடர்களுக்கு ஏற்ற விளக்கத்தை எழுதுக.**

1. அரைப்படிப்பு ______________________________
2. வாழையடி வாழை ______________________________
3. தோள் கொடுத்தல் ______________________________
4. வெட்டிப் பேச்சு ______________________________
5. ஏட்டிக்குப் போட்டி ______________________________

**ஏ. சரியான மரபுத்தொடர்களைக் கொண்டு வாக்கியங்களை நிறைவு செய்க.**

1. தமிழர்கள் ______________________ யாகத் தமிழ்மொழியின் மேன்மையைப் போற்றி வருகின்றனர்.

2. ______________________ பேசாமல், இளையோர்கள் பொருளாதார முன்னேற்றத்தில் ஈடுபட வேண்டும் எனப் பிரதமர் கேட்டுக் கொண்டார்.

3. கல்வியை ______________________ யோடு நிறுத்திக் கொண்டவர்கள் வேலை தேடுவதில் சிக்கலை எதிர்நோக்குவர்.

4. வெள்ளத்தில் சிக்கிக்கொண்ட கிராமத்து மக்களுக்குத் ______________________ உதவினர் தமிழ்மன்ற இளைஞர்கள்.

5. தன் அக்காள் கொடுத்த வேலையைச் செய்யாமல் குமுதா______________________யாக, அக்காவுடன் விதண்டாவாதம் செய்தாள்.

**ஐ. சரியான உவமைத்தொடரைக் கொண்டு வாக்கியங்களை நிறைவு செய்க.**

1. மதியழகியும் கஸ்தூரியும் தொடக்கப்பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை இணைபிரியாமல் ______________________ பழகி வருகின்றனர்.

2. பேச்சுத்திறன் நிறைந்த அமுதன் தன் திறமைகளை ______________________ வெளிக்காட்டிக் கொள்ளாமல் இருந்தான்.

3. தொடக்கப்பள்ளியில் ஆசிரியர் கற்றுக்கொடுத்த மூதுரை ______________________ இன்றும் நினைவில் உள்ளது.

4. அழகிக்குக் கட்டுரைப் போட்டியில் முதல் பரிசு பெற்றதுடன் நூறு ரிங்கிட் பணம் கிடைத்தது ______________________ இருந்தது.

5. இடைநிலைப்பள்ளியில் நெருங்கிய தோழிகளான உமையாளும் முல்லையும் ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் சந்தித்தபொழுது ______________________ ஆரத் தழுவிக்கொண்டனர்.

# மீள்பார்வைப் பயிற்சி
# இலக்கணம்

**அ. வினாச் சொற்களைப் பயன்படுத்தி வாக்கியங்களை நிறைவு செய்க.**

1. "______________ வகுப்புக்குத் தாமதமாக வந்தீர்கள்?" என்று வரலாற்று ஆசிரியர் திரு. வளவன் மாணவர்களைக் கடிந்துகொண்டார்.
2. "இவ்வாண்டிற்கான அனைத்துலகப் புத்தகக் கண்காட்சி______________நடைபெறும்" என்று வாசகர்கள் நிருபர்களிடம் கேள்வி எழுப்பினர்.
3. உடற்பயிற்சி செய்வதால் நமக்கு ______________பயன் கிடைக்கும்?
4. நமது நாட்டின் சுதந்திரத் தந்தை ______________?
5. ______________ நம் முன்னோர்கள் நமக்கு அரிய நூல்களை விட்டுச் சென்றனர்?
6. இளையோர் ஒவ்வொருவரும்______________ வாழ்க்கையில் முன்னேற வேண்டும் எனச் சிந்திக்க வேண்டும்?
7. ஒருவன் கல்வியில் சிறந்து விளங்குவதற்குக் காரணங்கள் ______________?

**ஆ. குன்றியவினை வாக்கியம், குன்றாவினை வாக்கியம் என வகைப்படுத்துக.**

1. கனத்த மழையால் வெள்ளம் ஏற்பட்டது. ______________
2. பரிமேலழகர் திருக்குறளுக்கு உரைநூல் எழுதினார். ______________
3. குழந்தை பசியால் அழுதது. ______________
4. வள்ளலார் திருவருட்பா இயற்றினார். ______________
5. தனம் திருமுறை ஓதினாள். ______________
6. இந்திரா மலாயாப்பல்கலைக் கழகத்தில் இளங்கலைப் பட்டப்படிப்பு மேற்கொள்கிறாள். ______________
7. இனியவள் சிறுகதை எழுதி முதல் பரிசு பெற்றாள்.______________
8. வேலன் வேகமாக ஓடி முடித்தான். ______________
9. முருகன் பந்தை உதைத்து கோல் புகுத்தினான். ______________
10. ஆசிரியர் நாட்குறிப்பு எழுதினார். ______________

**இ. வாக்கியங்களில் சரியான ணகர, நகர, னகர, லகர, ழகர, ளகரச் சொற்களைத் தெரிவு செய்து எழுதுக.**

1. பாண்டிய மன்னன் தன் வீரர்களிடம் போருக்குத் தயாராகும்படி ______________ இட்டார். (ஆனை, ஆணை)

2. மழை வருவதை முன்னறிந்து ______________ சத்தமிடும். (தவலைகள், தவழைகள், தவளைகள்)

3. கம்பர் 'ஏர் எழுபது' எனும் நூலை இயற்றி ______________த் தொழிலைப் போற்றினார். (உழவு, உளவு, உலவு)

4. ______________ போகும் போக்கில் நாம் சென்றால் பல சிக்கல்களை எதிர்நோக்குவோம். (மனம், மணம்)

5. மல்யுத்த வீரர்கள் ஒலிம்பிக் போட்டியில் தங்களின் ______________ நாட்டிற்குத் தங்கப் பதக்கத்தைப் பெற்றுத் தந்தனர். (பலத்தால், பழத்தால்)

**ஈ. பத்தியில் காணும் பிழைகளைத் திருத்தி எழுதுக.**

நான் ஒரு மிதிவன்டி. நான் தொளிற்சாளையில் உருவாக்கப்பட்டேன். என் உடல் பல்வேறு பாகங்களால் இனைந்து உருவானது. மணிதன் என் முதுகில் அமர ஓர் இருக்கை சேர்க்கப்பட்டிருந்தது. அதேபோல, நான் ஊர்ந்து பயனிக்க என் உடலின் முண்ணும் பின்னும் இரு காள்கள் சக்கரங்களாக இருந்தன. என் உடலில் இருபுறமும் பொருத்தப்பட்டிருக்கும் மிதிக் கட்டையை மிதித்தால் என் கால்கள் சுளலும். இரவு நேரங்கலில் பயனிக்கும்போது ஒழிகொடுக்க என் கண்களால் பளிச்சென ஒலி பாய்ச்சுவேன். அதற்காக என் உடலில் மின்னாக்கியும் மின்குமிலும் இனைக்கப்பட்டிருக்கின்றன. ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்வதற்கு நான் துணைபுரிவேன். என்னை அனைவரும் விரும்பிப் பயன்படுத்துவர்.

உ. சேர்த்தெழுதுக

1. எத்துணை + பெரியது = ____________
2. எத்துணை + சிறப்பு = ____________
3. இத்துணை + புதிய = ____________
4. தனி + பாசம் = ____________
5. அரை + பக்கம் = ____________
6. தனி + பாதை = ____________
7. அத்துணை + பெருமை = ____________
8. மற்ற + குடங்கள் = ____________
9. எத்துணை + காலம் = ____________
10. அத்துணை + சிரமம் = ____________
11. இனி + கொடு = ____________
12. மற்ற + தலைவர் = ____________
13. பாதி + பணம் = ____________
14. இத்துணை + சிறிய = ____________
15. மற்ற + குழந்தை = ____________
16. அரை + காசு = ____________
17. இனி + கொடு = ____________
18. பாதி + பழம் = ____________
19. மற்ற + தொழில் = ____________
20. தனி + தமிழ் = ____________

ஊ. வகர, யகர உடம்படுமெய் சொற்களைக் கொண்டு வாக்கியம் அமைத்திடுக.

1. தெருவோரம் = ____________
2. மலையருவி = ____________
3. கழியாட்டம் = ____________
4. பனையோலை = ____________
5. மனையாள் = ____________
6. கோவில் = ____________
7. மெதுவோட்டம் = ____________
8. பணியாள் = ____________
9. பொதுவறிவு = ____________
10. தனியொருவன் = ____________
11. நடுவூரில் = ____________
12. படியாக்கம் = ____________

# அகர நிரல் குறிப்பு


**அ**
அகச்சுட்டு 18,
அன்பு 113,123
அறிவியல் 102,181

**ஆ**
ஆடுபுலி 14
ஆறுகள் 99,100

**இ**
இலக்கணம் 18, 38, 57
இணைமொழிகள் 29, 47, 48
இயற்கை 32, 33, 36
இரட்டைக் கிளவி 90
இலக்கியம் 27,176
இன்பத் தமிழ் 220

**உ**
உடல் 43, 44, 50
உவமைத் தொடர் 92,95

**எ**
எண்ணங்கள் 48,178

**ஒ**
ஒழுக்கம் 152, 204

**க**
கலைகள் 25,13,74
கதை 119 ,142,179
கடிதம் 42,196

**கா**
காடுகள் 34, 36, 37
காலம் 51, 53, 52

**சா**
சாலைப் பாதுகாப்பு 63, 64
சாரங்கபாணி 110
சாதனை 183,190

**சி**
சிலம்பம் 13

**சு**
சுற்றுச் சூழல் 36,96,102
சுற்றுலாத்துறை 210, 212

**செ**
செய்யுள் 155,115

**த**
தமிழ் 1, 3, 9, 180
தமிழர் 10,12,13
தகவல் 60, 77
தங்கும் விடுதி 196
தன்முனைப்பு 199, 201

**தி**
திருக்குறள் 7, 8,136

**தூ**
தூய்மை 42,98,100,102

**தொ**
தொண்டு 9,117,178
தொலைத் தொடர்பு 160

**தே**
தேசிய நாள் 133
தேவாரம் 155

**நா**
நாடகக் கலை 74,75

**ந**
நட்பு 118,119,121
நிகழ்ச்சியறிக்கை 133, 134 ,135,172
நன்னெறிகள் 137, 152
நற்பண்புகள் 7, 8

**நே**
நேரம் 51

**ப**
பண்பாட்டை 21
பண்பாடு 23
பழமொழி 69, 197
பரதக் கலை 139,140
பரிவு 138, 149

**பொ**
பொங்கலோ 21

**போ**
போக்குவரத்து 163,164,166

**மூ**
மூதுரை 115

**மொ**
மொழியும் 1, 3, 5

**வ**
வளம் 36

**வி**
விளையாட்டு 166,170,172,174
விளம்பரங்கள் 84, 88, 89

**ம**
மறைந்து 10
மரபுத்தொடர் 31, 49
மனிதநேயம் 150, 153

# துணை நூல் பட்டியல்


1. மு. வரதராசன். (2001). *நண்பர்க்கு*. பாரி நிலையம்.
2. கி.ஆ.பெ.விசுவநாதம். (1997). *ஐந்து செல்வங்கள்*. பாரி நிலையம்.
3. கி.ஆ.பெ.விசுவநாதம். (1999). *திருக்குறள் கட்டுரைகள்*. பாரி நிலையம்.
4. கி.ஆ.பெ.விசுவநாதம். (2001). *மாணவர்களுக்கு*. பாரி நிலையம்.
5. மு. வரதராசன் (2000). *மொழிப்பற்று*. பாரி நிலையம்.
6. கி.ஆ.பெ.விசுவநாதம். (1999). *எனது நண்பர்கள்*. பாரி நிலையம்.
7. மு. வரதராசன். (2002). *கல்வி*. பாரி நிலையம்.
8. சா. இன்னாசிமுத்து. (2004). *வாழ்வில் வெற்றியும் மகிழ்ச்சியும் பெற*. வானதி பதிப்பகம்.
9. ஜே.எஸ். ஆபிரகாம். (1999). *நேர நிர்வாகமும் சுய முன்னேற்றமும்*. நர்மதா பதிப்பகம்.
10. எஸ். சங்கரன். (1992). *வெற்றியின் இரகசியம்*. ஸ்ரீ இந்து பதிப்பகம்,
11. பி.சி.கணேசன். *மனமே வெற்றிக்குத் திறவுகோல்*. ஸ்ரீ இந்து பதிப்பகம்.
12. சுகி. சிவம். (2003). *வெற்றிமீது வெற்றி வந்து*. சுகி புக்ஸ்.
13. பி.சி. கணேசன். (1983). *முன்னேறு முன்னேறு*. வானதி பதிப்பகம்.
14. எம்.எஸ். உதயமூர்த்தி. (2002). *வாழ்க்கையை அமைக்கும் எண்ணங்கள்*. கங்கை புத்தக நிலையம்.
15. பி.எஸ்.ஆர். ராவ். (1989). *வெற்றி நோக்கு*. நர்மதா பதிப்பகம்.
16. மு. மணிவெள்ளையன். (2007). *தமிழன் பிறந்தகம் குமரிக் கண்டமே*. தமிழியம் வெளியீடு.
17. சுகி. சிவம். (2011). *அர்த்தமுள்ள வாழ்வு*. கற்பகம் புத்தகாலயம்.
18. சாமி. சிதம்பரனார். (2008). *எட்டுத் தொகையும் தமிழர் பண்பாடும்*. அறிவுப் பதிப்பகம்.
19. இரா. பழநிச்சாமி. (2005). *காவிய நாயகி*. ஆதவன் பதிப்பகம்.
20. எம். நாராயண வேலுப்பிள்ளை. (1988). *தமிழ் வளர்த்த சான்றோர்கள்*. ஸ்ரீ நிலையம்.
21. வீ.சந்திரன். (2009). *முற்றுப்புள்ளி முடிவல்ல*. பூர்ணமா அச்சகம்.
22. கு. ஞானசம்பந்தன். (2008). *இன்றைய சிந்தனை*. விஜயா பதிப்பகம்.
23. ஞா. தேவநேயப் பாவாணர். (1966). *பண்டைத் தமிழ் நாகரிகமும் பண்பாடும்*. தமிழ்மண் பதிப்பகம்.
24. பி. இராமநாதன். (2014). *பன்னாட்டு அறிஞர்களின் பார்வையில் தமிழும் தமிழரும்*. தமிழ்மண் பதிப்பகம்.
25. பி.டி.சீனிவாச ஐயங்கார். (2013) *தமிழர் வரலாறு, கி.பி. 600 வரை*. தமிழ்மண் பதிப்பகம்.
26. மி. இராமநாதன். (2006). *தமிழ் நாகரிகமும் சிந்துவெளி நாகரிகமும்*. தமிழ்மண் பதிப்பகம்.
27. பினாங்கு பயனீட்டாளர் சங்கம். *நல்ல உணவும் ஊட்டச் சத்தும்*. பினாங்கு பயனீட்டாளர் சங்கம்.
28. க. அபிராமி. (2001). *தகவல் தொழில்நுட்பம்*. தமிழ்ப் புத்தகாலயம்.
29. கா. கலியபெருமாள். (1997). *உலகத் தமிழர் பண்பாட்டுக் களஞ்சியம்*. எமரல்ட் பிரிண்டிங்.
30. பா. இறையரசன். (1993). *தமிழர் நாகரிக வரலாறு*. பூம்புகார் பதிப்பகம்.
31. அ. தட்சிணாமூர்த்தி (1994). *தமிழர் நாகரிகமும் பண்பாடும்*. யாழ் வெளியீடு.
32. அ.மு. பரமசிவானந்தம். (1962). *சமுதாயமும் பண்பாடும்*. பாரி நிலையம்.
33. செ. சீனி நைனா முகம்மது. (2014). *புதிய தமிழ்ப்புணர்ச்சி விதிகள்*. உங்கள் குரல் வெளியீடு.
34. செ. சீனி நைனா முகம்மது. (2014). *தமிழ் இலக்கணம்*. உங்கள் குரல் வெளியீடு.
35. அ.கி. பரந்தாமனார் எம்.ஏ. *நல்ல தமிழ் எழுத வேண்டுமா?* அல்லி நிலையம்.
36. ந. நளினி. (2003). *வளரும் உள்ளம்*. தமிழ்ப் புத்தகாலயம்.
37. வ. உ. சிதம்பரம்பிள்ளை. (1986). *மனம் போல் வாழ்வு*. பாரி நிலையம்.
38. எஸ். சுந்தர சீனிவாசன். (2008). *ஆளுமை மேம்பாடு*. தாமரை பப்ளிகேஷன்.
39. கா. கலியபெருமாள். *இன்பத் தமிழின் இலக்கணப் பட்டறை*. கலையரசு எண்டர்பிரைஸ்.
40. கவிக்கோ அப்துல் ரகுமான். *ஆலாபனை*. நேஷ்னல் பப்ளிஷர்ஸ்.
41. முரசு நெடுமாறன். *மலேசியத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம்*. அருள்மதியம் பதிப்பகம்.

Dengan ini **SAYA BERJANJI** akan menjaga buku ini dengan baik dan bertanggungjawab atas kehilangannya serta mengembalikannya kepada pihak sekolah pada tarikh yang ditetapkan.

**Skim Pinjaman Buku Teks**

**Sekolah** ______________________________

| Tahun | Tingkatan | Nama Penerima | Tarikh Terima |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

**Nombor Perolehan:** ______________________________

**Tarikh Penerimaan:** ______________________________

**BUKU INI TIDAK BOLEH DIJUAL**